ஆதீன வெளியீட்டு எண் : 567

உ

சிவமயம்

மகாலட்சுமி

ENCYCLOPEDIA OF MAHALAKSHMI IN TEMPLES, AGAMAS, PURANAS, SILPA SASTRAS, MANTRAS, YANTRAS, POOJAS AND ICONOGRAPHY



திருவாவடுதுறை ஆதீனம்

S. Gowri Shankaran. M.A

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

வெளியீட்டு எண் : 567

விலை : ரூ. 600.00

விஜயதசமி விழா மலர்

மகாலட்சுமி

[Encyclopaedia of Mahalakshmi in Temples,
Agamas, Puranas, Mantras, Yantras,
Poojas, Silpa sastras and Iconography]

திருவள்ளுவர் ஆண்டு - 2052
மெய்கண்டார் ஆண்டு - 798

பிலவ ஆண்டு புரட்டாசி 29 ஆம் நாள்
15 - 10 - 2021,
வெள்ளிக்கிழமை.

உரிமை பதிவு
வெளியீடு எண் : 567
முதற்பதிப்பு : 2007
மறுபதிப்பு : 2021

விலை ரூ : 600.00



THIRUVAVADUTHURAI ADHEENAM SARASWATHI MAHAL LIBRARY & RESEARCH CENTRE
THIRUVAVADUTHURAI - 609 803.
TAMIL NADU - SOUTH INDIA.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மகாலட்சுமி

[Encyclopaedia of Mahalakshmi in Temples,
Agamas, Puranas, Mantras, Yantras, Poojas,
Silpa Sastras and Iconography]

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

24-ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்களின் அருளாட்சியில் வெளியிடப்பெறுவது.

* * *

எழுத்து / தொகுப்பாசிரியர்

"ஆகம சிற்பக் களஞ்சியக் கலைமணி"

திருவிடைமருதூர். **S. நாராயணசுவாமி** M.A.,(Philo),M.A.,(His).,M.Ed.,Dip in Sanskrit,

ஆராய்ச்சியாளர் - நுண்கலைத்துறை

திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதிமகால் நூல் நிலையம் மற்றும் ஆய்வு மையம்

* * *

திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால்
நூல்நிலையம் மற்றும் ஆய்வுமையம்
திருவாவடுதுறை - 609 803
செல் : 9487713042 / 8610108853

15 - 10 - 2021

உ

Sivamayam

BIBLIOGRAPHICAL DATA

1. Title of the book : **MAHA LAKSHMI**

2. Editor : **S.NARAYANASWAMY,**
M.A.,M.A.,M.Ed.,Dip.in.Sanskrit,

3. Publisher : Thiruvavaduthurai Adheenam
Saraswathi Mahal Library & Research
Centre, Thiruvavaduthurai - 609 803.
Cell : 8610108853 / 9487713042

4. Publication No : 567

5. Price : Rs. 600.00

6. Photos and Line drawings : 403

7. Subject : Religion (Agama- Slipa - Pooja & Fine Arts)

8. Languages : Tamil, Sanskrit & English

9. Number of Pages : 32 + 512 = 544

10. Edition : 2nd Edition - 2021

11. Number of Copies : 1000 Copies

12. Date of Publication : 15 - 10 - 2021

13. Paper used : 18.0

14. Size of the Book : 1/4 Demmy Size.

15. Printing type used : Offset printing.

16. Binding : Section Binding.

17. Printer : Sri Namasivayamoorthy Achagam
Thiruvavaduthurai. ☎: 04364 - 233021

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆதீனம் குருமுதல்வர் அருள்வரலாற்றுச் சுருக்கம்

உலகம் ஓர் குலம்; உலகு அனைத்தும் இன்புறவேண்டும் என்ற பரந்த மனம் படைத்தது ஆசாரியப் பரம்பரை. திருக்கயிலையில் உண்டாகிய இப்பரம்பரை காலம் பல கடந்து இடையறாது இந்நாள் வரை வளர்ந்து வருகிறது. கயிலைப் பரம்பரையின் மெய்கண்ட சந்தான ஆசாரியர்களில் ஸ்ரீஉமாபதி சிவாசாரியரிடம் உபதேசம் பெற்ற ஸ்ரீ அருணமச்சிவாயரிடம் தீட்சை பெற்றவர் ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர். அவரிடம் சிவஞான அபிஷேகமும், ஆசாரிய பரம்பரையைப் பாதுகாத்துவர திருஆணையும் பெற்று, திருவாவடுதுறையில் ஆதீனத்தைத் தோற்றுவித்த முதற்பெரும் குருமூர்த்திகள் ஸ்ரீநமசிவாயமூர்த்திகள்.

இவர்கள் சோழ மண்டலத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள மூவலூரில் பரம்பரைச் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர்கள். இவர்களது பிள்ளைத் திருநாமம் வைத்தியநாதன் என்பது. இளம் பிராயத்தில் இவர்கள் தம் பெற்றோருடன் புள்ளிருக்கு வேளூரில் (வைத்தீஸ்வரன்கோயில்) ஸ்ரீவைத்தியநாதப் பெருமானை வழிபட்டுத் திருவருளில் ஒன்றிய சிந்தையினராக மனமுருகி நின்றபோது, பெருமானே ஒரு சிவாசாரியர் திருமேனி தாங்கி வந்து சிவலிங்கத் திருமேனி ஒன்றினைத் தந்தருளிய பேறுடையவர்கள்.

தல யாத்திரையாகத் தம் அடியார் திருக்கூட்டத்துடன் மூவலூர் சேர்ந்த ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர், சிறிய பெருந்தகையாராக விளங்கிய வைத்தியநாதரைக் கண்டார்கள். சிவஞானப் பேற்றிற்கு உரிய குறிகளையும் திருவருட் குறிப்பையும் உணர்ந்து, பெற்றோர் இசைவுடன் பிள்ளையைத் தம்முடன் அழைத்துக்கொண்டு திருவாவடுதுறையை அடைந்தார்கள்.

அங்கு ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர் அப்பிள்ளைக்கு ஞானதீக்கை புரிந்து தமது ஞானாச்சாரியாரின் திருப்பெயரினை நினைத்து போற்றி நமச்சிவாயம் என தீட்சாநாமம் சாத்தி, குரு பரம்பரையில் தாம் பெற்ற சிவஞான உபதேசத்தை அருளிச் சிவானந்த அனுபவம் கைவருமாறு அநுக்கிரகம் செய்தார்கள். குருமரபில் தாம் பெற்ற ஸ்ரீஉமாபதி சிவாசாரியர் பூஜை செய்த ஸ்ரீஞான மாநடராசப் பெருமானையும், தம்முடைய ஆன்மார்த்த மூர்த்தியையும் பூஜித்து வரும் அதிகாரத்தையும் வழங்கினார்கள். தாம் வீற்றிருந்த இடத்தில் வரை கீறி அமைக்கப்பெற்ற அறையுள் அமர்ந்து சைவ சித்தாந்த மரபு தழைக்க சிவஞானோபதேசம் செய்துவர ஆணையருளி, தாம் திருமறைக் காட்டிற்குச் சென்றருளினார்கள்.

ஸ்ரீநமச்சிவாய தேசிக மூர்த்திகள் தம் ஞானாசிரியர் திருவாணையின் வண்ணம் அவர் வகுத்த அறையிலிருந்து, வரும் பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞான உபதேசம் அருளி சுத்தாத்துவித சைவ சித்தாந்த பரிபாலனம் செய்து வந்தார்கள்.

இவ்வண்ணம் ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக வீற்றிருந்து சுத்தாத்வித சைவ சித்தாந்த நன்மரபு தழைக்கச் செய்த ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகள், தங்கள் குரு சந்தானம் வளர்ந்தோங்கி வர, அம்பலவாண தேசிகருக்கு ஞானபிஷேகம் செய்து துவிதீய ஆசாரியராக அமைத்து, ஒரு தை மாதம்

அசுவதி நன்னாளில் சித்தாந்த சுத்தாத்வித முக்தி அடைந்தருளினார்கள். ஆதீனக் குருமுதல்வர் ஞான சமாதித் திருக்கோயிலில் நாள்தோறும் இரு காலம் பூசைகள் நடைபெற்று வருகின்றன. மாதந்தோறும் அசுவதி நட்சத்திரத்தில் குருமூர்த்திகளின் தோத்திரப் பனுவல்கள் பாராயணம் செய்யப்படுகின்றன.

பிரதி வருடம் தை மாதம் அசுவதி நன்னாளில் (மகரத்தலைநாள்) ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் குருபூஜை வழிபாடுகள் 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மேலும் ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் திருமேனியானது மூவலூர் (அவதார இல்லம்), திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், விக்கிரமசிங்கபுரம் சிவந்தியப்பர் கோயில், திருநெல்வேலி சந்தி விநாயகர் கோயில், சுசீந்திரம் ஈசான்ய மடம் காசி கண்ணப்ப சாமி மடம் ஆகிய தலங்களில் பிரதிட்டை செய்யப் பெற்று, பூசையும் நடைபெறுகின்றன. தை அசுவதி நன்னாளில் ஷெ தலங்களில் சிறப்பு ஆராதனைகளும் மாகேசுவர பூசைகளும் நடைபெறுகின்றன.

மேலும் திருவாவடுதுறையில் நிகழும் (தை-அசுவதி) குருபூசை பத்து நாட்களில் சிவாச்சாரியார்கள், சைவத்தமிழறிஞர்கள், சித்தாந்தச் செந்நெறியாளர்கள், திருமுறை இசை அறிஞர்கள், கோயில் கலைஞர்கள் முதலானோர்க்கு விருது வழங்கிச் சிறப்பிக்கப்பெறுகிறது. 5 -ஆம் திருநாளில் தமிழ் மூதறிஞர் ஒருவர்க்குச் சிறப்பும் (மகா வித்துவான் நினைவுப் பரிசு), குருபூசை நன்னாளில் சித்தாந்த சைவப் பணியில் நூறு ஆண்டுகளையும் கடந்து வளர்ந்து வரும் சித்தாந்த சபைக்குச் "சித்தாந்த சுடர் நிலையம்" எனும் விருதினையும் வழங்கியருளுகின்றார்கள்.

இவ்வாறாக ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் வழிவழி வருகின்ற சிவஞான உபதேச, அபிஷேக பரம்பரையில், இந்நாளில் இவ்வாதீனத்து 24-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சித்ராசன சிவஞான பீடத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்து வருகின்றார்கள்.



உ
சிவமயம்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குரு நமச்சிவாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

– மாபாடியகாரர்

ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்.



திருவாவடுதுறை ஆதீனம் 24ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குருபரம்பரை விளக்கம்

சீகண்ட பரமசிவம்

திருநந்தித் தேவர்

சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர்

சத்தியஞான தரிசினிகள்
பரஞ்சோதி மாமுனிவர்
மெய்கண்ட தேவ நாயனார்
அருள் நந்தி சிவாச்சாரியர்
மறை ஞானசம்பந்த சிவாச்சாரியர்
உமாபதி சிவாச்சாரியர்
அருணமச்சிவாயர்
சித்தர் சிவப்பிரகாசர்

1.	ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் (திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர்)	1360 -1625
2.	ஸ்ரீ மறைஞான தேசிகர்	
3.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	
4.	ஸ்ரீ உருத்திரகோடி தேசிகர்	
5.	ஸ்ரீ வேலப்ப தேசிகர்	
6.	ஸ்ரீ குமாரசுவாமி தேசிகர்	
7.	ஸ்ரீ (பின்) குமாரசுவாமி தேசிகர்	
8.	ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்	1625 - 1658
9.	ஸ்ரீ இராமலிங்க தேசிகர்	1658 - 1678
10.	ஸ்ரீ வேலப்ப தேசிகர்	1678 - 1700
11.	ஸ்ரீ (பின்) வேலப்ப தேசிகர்	1700 - 1730
12.	ஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர்	1730 - 1770
13.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1770 - 1789
14.	ஸ்ரீ (வேளூர்) சுப்பிரமணிய தேசிகர்	1789 - 1845
15.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1845 - 1869
16.	ஸ்ரீ (மேலகரம்) சுப்பிரமணிய தேசிகர்	1869 - 1888
17.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1888 - 1920
18.	ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்	1920 - 1922
19.	ஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்	1922 - 1937
20.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	1937 - 1951
21.	ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்	13.4.1951 முதல் 23.9.1967
22.	ஸ்ரீ அம்பலவாண தேசிகர்	23.9.1967 முதல் 07.04.1983
23.	ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர்	07.4.1983 முதல் 22.11.2012

24. ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 22.11.2012 முதல் இவ்வாதீன ஞானபீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றார்கள்.

பொருளடக்கம்

வ. எண்.		ப. எண்.
1.	எடுத்தாண்ட நூல்கள்	XIII
2.	முன்னுரை	XV
3.	ஆலய அமைப்பும், பரிவாரமூர்த்திகளில் மகாலட்சுமி வழிபாடும்	1
4.	ஆலயங்களில் விளங்கும் விமானங்கள் மற்றும் மண்டபங்களின் சிறப்பு	30
5.	திருப்பாற்கடலில் திருமகள் தோற்றம்	66
6.	திருமகள் சிவபூசைச் செய்த திருத்தலங்கள்	71
7.	மங்களம் அருளும் மகாலட்சுமி ஆலயங்கள்	75
8.	சிவாகமங்களில் மகாலட்சுமி	92
9.	உத்தரகாமிக மகாதந்திரத்தில் லட்சுமி தானவிதி	95
10.	பூர்வ காரணாகமத்தில் லட்சுமி ஸ்தாபனவிதி (கிரந்தமூலபாடம்)	98
11.	பூர்வ காரணாகமத்தில் லட்சுமி ஸ்தாபன விதி (கிரந்த மூலத்திற்குத் தமிழ்)	102
12.	மகாலட்சுமியின் ரூபத்யானங்கள்	105
13.	மூர்த்தித் தியானத்தில் அஷ்டலட்சுமிகள்	128
14.	வேறு வகையில் அஷ்டலட்சுமிகளின் தியானங்கள்	137
15.	அஷ்டாதசபுஜ மகாலட்சுமியின் தோற்றம்	141
16.	அஷ்ட லட்சுமிகளின் உண்மைப் பொருள் (தத்துவம்)	147
17.	அன்னைக்குரிய முத்திரைகள், ஆயுதங்கள், வாகனங்கள் (பொது)	158
18.	வைணவ ஆலயங்களில் மகாலட்சுமியின் திருப்பெயர்கள்	182
19.	மகாலட்சுமி விரும்பி விளங்கும் விருட்சங்கள்	188
20.	Tulasi the symbol of devotion	199
21.	Garudan - Iconography	202
22.	ஷோடச மகாலட்சுமி பூஜையில் ஆதி மகாலட்சுமி பூஜையும் - குபேர பூஜையும்	206
23.	திருமகளும் மங்களப் பொருள்களும்	231
24.	திருமகளின் நூற்குறிப்புகளும் சிந்தனைகளும்	241
25.	Mahalakshmi - Bhudevi in Indian Iconography	273
26.	வேதங்களிலும் புராணங்களிலும் காணும் மகாலட்சுமி துதிகளின் தொகுப்பான ஸ்ரீஸூக்தம் (மூலம் - தேவநாகரி)	278

வ. எண். ப. எண்.

27. ஸ்ரீ ஸூக்தமும் விளக்கமும் 286

28. தேவி ஸூக்தத்தில் அஷ்டலட்சுமிகள் 304

29. **Maha Lakshmi's Bounty** (மகாலட்சுமியின் தயாள குணம்) 306

30. தசமகா வித்யைகளில் ஸ்ரீகமலாத்மிகாவித்யா 315

31. ஸ்ரீகமலாத்மிகா / மகாலட்சுமி ஆவரண பூஜை 323

32. ஸ்ரீ மகாலட்சுமி மகாமந்த்ர ஜபவிதானம் 327

33. மகாலட்சுமி மந்திரங்கள் 331

34. ஷோடச மகாலட்சுமி – தியானம், யந்திரம், மந்திரம் (திதி நித்யா தேவியர்கள்) 345

35. யந்திர உபாசனை 361

36. கிராமத்தில் வழிபடப்பெறும் செல்லியம்மன் மகாலட்சுமியே 383

37. **Lakshmi Iconography** 387

38. மகாலட்சுமி கவசமும் விளக்கமும் 400

39. விஷ்வசார தந்திரத்தில் கமலாத்மிகா கவசம் 405

40. மகாலட்சுமி அஷ்டகம் 408

41. கோலாப்பூரில் லட்சுமி ஸ்தோத்ரம்/அஷ்டகம் 410

42. மகாலட்சுமி அஷ்டோத்தர சதநாமாவளி 419

43. மகாலட்சுமி அஷ்டோத்தர சதநாமாவளி விளக்கம் 421

44. மகாலட்சுமி திரிசதி நாமாவளி 428

45. மகாலட்சுமி ஸஹஸ்ர நாமாவளி 436

46. திருமகளைப் போற்றும் திருப்பனுவல்கள் 453

47. மகாலட்சுமி பஞ்சகம் 462

48. அருணகிரி வாக்கில் மகாலட்சுமி 467

49. திருமகள் அந்தாதி 472

50. பாரதியார் பாடல்களில் மகாலட்சுமி 488

51. சிவ பஞ்சாட்சரம் 496

52. பில்வாஷ்டகம் 499

53. ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்ரம் 503

எடுத்தாண்ட நூல்கள்

1. திருமுறைகள்
2. சிவத்தலமஞ்சரி
3. சிவத்திருமேனிகள்
4. கவின் மிகு கலைகள்
5. மகோற்சவ விளக்கம்
6. சிற்பச் செந்நூல்
7. தஞ்சாவூர்
8. நமது ஆலயங்களும் மூர்த்திகளும்
9. 2வது உலகத் தமிழ்மாநாடு கையேடு
10. கலைக்களஞ்சியம்
11. வாழ்வியற் களஞ்சியம்
12. சரசுவதி
13. இலிங்கோத்பவர்
14. கலியாணசுந்தரர்
15. மகாசிவசக்தி
16. சிவாலயத் திருமேனிகள்
17. தெய்வத் திருமேனிகள்
18. மகா சரசுவதி
19. காமிகாகமம்
20. காரணாகமம்
21. பிரதிமாலட்சணம்
22. படிமத் திருக்கோலங்கள்
23. சிவாலய பிரதிஷ்டாவிதி
24. பரார்த்த பூஜை விதி
25. குமுதம் பக்தி ஸ்பெஷல்
26. தினமலர் பக்தி மலர்
27. ஆதீன மெய்கண்டார் இதழ்கள்
28. வேதமந்திரங்கள்
29. நினைத்ததை நடத்திவைக்கும் யந்திரங்கள்
30. பாரதியார் கவிதைகள்
31. அரம்பையீசுவரர்
32. ஐஸ்வர்ய மகாலட்சுமி
33. ஸ்ரீ மகாலாட்சுமி
34. விமானேஸ்வரர்
35. ஸ்ரீ சூக்தம்
36. ஸகல காரிய ஸித்திக்கும் ஸ்ரீலட்சுமி ஸஹஸ்ரநாமஸ்தோத்ரம்
37. ஸ்ரீ வித்யா ஸர்வ தேவதா ஆவரணபூஜா
38. ஸ்ரீ தசமகா வித்யா
39. மாந்திரிக வசிய யந்திர தகடு
40. மந்திர மகார்ணவம்
41. மந்திர மகோததி
42. ஸ்ரீ சண்டி ஹிருதயம்
43. விஷ்ணு பாமாலை
44. திருத்தலப் பெருமை
45. தேவியும் - அருணகிரியாரும்
46. திருவாரூர்ப் புராணம்
47. ஸ்ரீ காசி மகாத்மியம்
48. மங்கை ஆலயமலர் - 1995
49. தினமணி - வெள்ளி மணி 2004-05
50. பூஜாவிதானம்
51. கோயிற்களஞ்சியம்
52. ஆலய நிர்மாண பிம்பலக்ஷண சிற்பநூல்
53. வைபவ லட்சுமி
54. ஐஸ்வர்ய லட்சுமி
55. மரபுக் கட்டடக்கலை
56. படிமக் கோடுகள்
57. மங்களம் அருளும் ஸ்ரீமகாலட்சுமி
58. கோபுர தரிசனம் - ஜனவரி 2006
59. திருமகளந்தாதி
60. ஸ்ரீ சுந்தரப்பெருமாள் ஆலய சம்ரோக்ஷணமலர்
61. திராவிட சிற்ப ரகசியம்
62. அஷ்டலட்சுமியும் அனுபவ உண்மைகளும்
63. காக்கையர் சிற்பம்
64. பில்வாஷ்டகம்
65. சிவபஞ்சாட்சர தோத்திரம்
66. தெய்வம் பேசுகிறது இதழ்கள்
67. நவராத்திரி
68. சப்த சதி
69. தேவீமகாத்மியம்
70. மருந்தாகும் மூலிகைகள்
71. அஷ்டலட்சுமியும் அநுபவ உண்மைகளும்
72. வாழ்க்கையில் வெற்றி ஜோதிஷ மந்த்ரசாஸ்த்தர விஷயங்கள்....
73. உபாசன தெய்வங்கள் - மகாலட்சுமி
74. சிவபெருமான் கலைக்களஞ்சியம்
75. தமிழகத்துக் கோயில்கள்
76. ஆலய விக்ரக நிர்மாண ஆயாதி சிற்ப ரகசியம்...
77. Elements of Hindu Iconography Vol - IPart 1,2
78. Sacred Treas and Plants of India
79. Shri. Siva Vishnu Temple - Australia
80. Indian Iconography
81. Devi - The mother goddess An Introduction - Devdutt Pattanaik
82. South Indian Images

83. South Indian god & goddesses
84. Master pieces of early south Indian Bronzes
85. Art of South India
86. சக்தி மஞ்சரி
87. சிற்பச் செந்நூல்
88. ஓம் சக்தி
89. திருமாலீசர்
90. திருமாமகள் சக்திமஞ்சரி
91. ஸ்ரீ விமானேசுவரர்
92. வைணவத்தலங்கள்
93. N. இராமநாதசிவாச்சாரியார் கையெழுத்துப் பிரதி
94. அம்சுமத் பேதாகமம்
95. சில்பரத்ன சம்யோஜிதக்ரந்தே
96. ஹேமாத்ரிவ்ரதகண்டே
97. விஷ்ணு தர்மோத்தரம்
98. மதுரை கும்பாபிஷேக மலர்
99. ரூப மண்டனம்
100. சண்டீ கல்பம்
101. தேவீ புராணம்
102. துளசி மகாத்மியம்
103. பாஞ்சராத்ராகமம் - கிரியாபாதம்
104. நிருசிம்ஹப்ரசாதம்
105. விஸ்வகர்ம நிருசிம்ஹப்ரசாதம்
106. மயூகம்
107. பாஞ்சராத்ரம்
108. அதர்வண ரகசியம்
109. தெய்வம் பேசுகிறது டிசம்பர் 2001
110. Pratima Kosha
111. மங்களம் அருளும் ஸ்ரீமகாலெட்சுமி
112. கோபுர தரிசனம் - மாத இதழ்கள்
113. கணபதி
114. முருகன்
115. ஆடல்வல்லான்
116. ஸ்ரீமானசாரம்
117. Bronzes of South India
118. Devata Rupa Mala - Part II
119. Tanjore Art gallery postcarts
120. ஷோடசமகாலட்சுமி பூஜை
121. லட்சுமி கடாட்சம்
122. தேவீ ஸூக்தம்
123. ஸௌபாக்ய லட்சுமி உபநிஷத்
124. லட்சுமி சஹஸ்ர நாமஸ்தோத்ரம்
125. லட்சுமி த்ரிசதி ஸ்தோத்ரம்
126. சாரதா திலகம்
127. பிரபஞ்ச சாரம்
128. பிரபஞ்ச சார ஸங்க்ரஹம்
129. மந்த்ர கோசம்
130. திருப்புகழ்
131. பாரதியார் கவிதைகள் / ஸ்துதிகள்
132. திருக்கண்ணமங்கை ஸ்தோத்ரம்
133. மந்த்ர ஜப கல்ப மஞ்சரி
134. ஆகாச பைரவ கல்போக்த மந்த்ர சங்கிரஹா
135. ஸ்ரீ மகாலட்சுமி மந்த்ர கோசம்
136. ௸ நூலாசிரியர் கையெழுத்துப்பிரதிகள்
137. ஸ்ரீ தத்வநிதீ
138. சில்பரத்னம்
139. ஆகம அமிர்த வர்ஷினி
140. விஷ்வ சார தந்திரம்
141. மகாலட்சுமி அஷ்டகம்
142. மகாலட்சுமி தோத்ரம்
143. மச்சபுராணம்
144. திருப்பரங்குன்றம் தல வரலாறு
145. குமரேச சதகம்
146. அறப்பளீச்சர சதகம்
147. திருச்செங்கோட்டுப் புராணம்
148. மகாலட்சுமி பஞ்சகம்
149. ௸ ஆதீன சரசுவதிமகால் அச்சுப்புத்தகங்கள் கையெழுத்துப் பிரதிகள்
150. கனதாரா ஸ்தோத்ரம்
151. சக்தி பாமாலை
152. S.M. கணபதிஸ்தபதி - காஞ்சிபுரம் - இவரின் சிற்ப வரைகோட்டு படங்களின் தொகுப்பு
153. ருக்வேதம்
154. அம்சுமத்பேதாகமம்
155. மகாபாரதம் (3-168-3)
156. சதபாதப்ராம்மனா
157. விஷ்ணு புராணம்
158. ஜெயக்யசம்ஹிதா
159. லட்சுமி தந்திரம்
160. ஈஸ்வர சம்ஹிதா
161. விஷ்வக்சேனா சம்ஹிதா
162. லட்சுமி தந்திரம்
163. பரமேஸ்வர ஸம்ஹிதை
164. சனத்குமார ஸம்ஹிதை
165. சண்டி கல்பம்
166. சகல ஐஸ்வர்யங்களும் தரும் மகாலட்சுமி வழிபாடு

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முன்னுரை

"நாவுக்கு நாயகி நன்மணி பூணாரம்
பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாம்
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தாள்
ஆவுக்கு நாயகி அங்கமர்ந் தாளே"

"திருமூலர் – திருமந்திரம்"

சைவத்தையும் தமிழையும் போற்றுதல்:

மக்களின் வாழ்வு என்றும் மேலோங்கிச் சிறக்க நந்நெறியாகிய சிவநெறிப் பயனை விளைவிப்பது திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனமாகும். பல நூற்றாண்டுகள் கடந்தாலும் இன்று வரை சிவநெறியாகிய சைவ சமயத்தையும் தமிழையும் தமது இருகண்களாக போற்றியும் வளர்த்தும் வருகின்றது என்பதனைத் தமிழ் கூறும் நன்மக்கள் நன்கு அறிவர்.

பாடல் பெற்ற சிவத் திருக்கோயில்களையும் வைப்புத் தலங்களையும், திருவாசகத் தலங்களையும் கிராமத்தில் அருள் வழங்கும் பல கிராமக்கோயில்களையும் தன்னகத்தே கொண்டு, இன்று வரை பூசைகள், திருவிழாக்கள், திருப்பணிகள், குடமுழுக்குகள் யாவும் பாங்குற செய்து வருவது திருவாவடுதுறை ஆதீனமாகும்.

திருமரபு :

திருக்கயிலாய பரம்பரை என்றும் மெய்கண்ட சந்தான மரபு என்றும் பல நிலைகளில் போற்றப்படுகின்ற இவ்வாதீனம் கி.பி.14ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளால் ஸ்தாபிக்கப்பெற்று ஆல்போல் தழைத்து அருள் வழங்கும் திருநிலையமாக விளங்குகின்றது.

இந்தச் சிவஞான பரம்பரையில் வசோதாரைப் போல ஒன்றன் பின் ஒன்றாக வந்த அருளாளர்கள் (குருமகா சன்னிதானங்கள்) யாவரும் தத்தம் குருவானவர்களின் நல் உபதேசப்படி சிவஞான ஆட்சி செய்து வருகின்றனர்.

முன்னவர்களை வழிபடுதல் :

முன்னைப் பழமைக்கும் பழமையாகவும் புதுமைக்கும் புதுமையாகவும் விளங்கும் சைவ சமயப் பெருமையினை உலகறியச் செய்ய, சமயாச்சாரியார்கள், சந்தானாச் சாரியார்கள், நாயன்மார்கள், ஆதீனத்து அருளாளர்கள், திருக்கூட்டத்து அடியார் பெருமக்கள் தெய்வத் தமிழ் ஆன்றோர்கள் பலரது குருபூசை மற்றும் நினைவு தினங்களில் கருத்தரங்குகள் பல நிகழ்விப்பதையும் தெய்வப் பனுவல்களைப் பாராயணம் செய்விப்பதையும் அது சமயம் விழா மலர் (நூல்) வெளியிடுவதையும் தொன்று தொட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் நடத்தியருளுகின்றார்கள்.

ஆதீன சரசுவதிமகால் :

இவ்வாதீனத்திலிருந்து வெளியிடப்பெறும் பல்வகை நூல்கள் யாவும், ஞானக் கருவூலமாக விளங்கும் சரசுவதி மகால் நூல் நிலைய ஆய்வு மையம் வாயிலாக உருப்பெறுகின்றன. ஏனெனில் இந்நூலகத்தில் உள்ள ஓலைச் சுவடிகள், காகிதக் கையெழுத்துப் பிரதிகள், சாசனப் பட்டயங்கள் மற்றும் அச்சுப் புத்தகங்கள் யாவும் ஆதீனத்து மகாசன்னிதானங்களும், தம்பிரான்களும், ஆதீனத்துச் சிஷ்யர்களும் புலவர்களும் சேமித்துக் கொடுத்த ஞானப் பொக்கிஷமாகும்.

அவ்வகையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணையின் படி திருமுறைகள், சைவ சித்தாந்தச் சாத்திரங்கள், இலக்கணங்கள், பண்டாரச் சாத்திரங்கள், திருக்கோயில் வரலாறுகள், திருத்தலப்பனுவல்கள், புராணங்கள், ஆகம நூல்கள், பூஜா நூல்கள், அர்ச்சனை நூல்கள், வேத சிவாகம சிற்ப சாஸ்திர நுண்கலை நூல்கள் என பலவாறான நூல்கள், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில் ஞான நூல்களாக ஆதீனத் தடாகத்தில் இன்றும் மலர்ந்த வண்ணமாய் உள்ளன.

"மகாலட்சுமி" நூலில் :

(Emcyclopaedia of Maha Lakshmi in Temples - Agamar - Purianas - Silpa Sastras - Mantras - Yantras - Poojas and Iconography)

தன்னகத்தே இருக்கும் சகல செல்வங்களையும் எல்லோருக்கும் வழங்கும் "மகாலட்சுமி" துறைசையாதீனத் தடாகத்தில் 51 தலைப்புகளில் 100க்கும் மேற்பட்ட படங்களோடு விழாமலராக மலருகின்றாள்.

உள்ளுறையில் :

ஆலய அமைப்பில் பரிவாரமூர்த்திகளில் மகாலட்சுமி வழிபாடு என்ற தொடக்கத்தோடு இந்நூலில் :

1. திருமகளின் தோற்றம்
2. திருமகள் சிவ பூசைச் செய்த திருத்தலங்கள்
3. மங்களம் அருளும் மகாலட்சுமி ஆலயங்கள்
4. ஆகமங்களில் மகாலட்சுமி
5. ரூபத்யானங்கள்
6. தத்துவப்பொருள்
7. அன்னைக்குரிய முத்திரைகள் - ஆயுதங்கள் - வாகனங்கள்
8. திருவுருவ விளக்கம் (Iconography)
9. மகாலட்சுமியின் திருப்பெயர்கள்
10. இவள் வாசம் செய்யும் விருட்சங்கள் & மருத்துவக் குறிப்புகள்
11. துளசியின் சிறப்பு
12. கருடச் சிறப்பு
13. ஷோடச மகாலட்சுமி பற்றிய குறிப்பு & பூசை
14. திருமகளும் மங்களப் பொருட்களும்
15. நூற்குறிப்புகளும் சிந்தனைகளும்
16. மகாலட்சுமி துதிகள் (வேதங்களிலும் புராணங்களிலும்)
17. ஸுக்தங்கள்
18. கமலாத் மிகா பூஜா

19. மந்திர ஜப விதானம்

20. பல வித நலம் தரும் மந்திரங்கள்

21. யந்திர உபாசனை

22. கவசத் துதிகள்

23. அஷ்டகம் தோத்திரங்கள்

24. அஷ்டோத்தரம் – திரிசதி – சகஸ்ர நாமங்கள்

25. திருமகளைப் போற்றும் திருப்பனுவல்கள்

26. அருணகிரி வாக்கில்

27. திருமகளந்தாதி

28. பாரதியார் பாடலில் மகாலட்சுமி

29. சிவபஞ்சாட்சம் – பில்வாஷ்டகம் – கனகதாராஸ்தோத்தரம்

என்னும் பலவாறான 51 தலைப்புகள் இதில் அமைகின்றன. இதோடு இவளது பெருமை நிறைவடைவதில்லை. இன்னும் ஏராளமான பெருமை மிகு செய்திகள் நம் பாரத நாட்டில் விரவிக் கிடைக்கின்றன. இவளது பெருமையினை ஒரு நூலில் அடைத்தல் என்பது இயலாததாகும். நம் அறிவிற்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்டவள்.

மகா கயிலாயத்தில் :

மகா கயிலாயத்தில் அமைந்துள்ள சிவபெருமானின் கோயிலுக்கு எட்டுத் திசைகளிலும் எட்டு வாயில்கள் உள்ளன என்று சிவமகாபுராணம் கூறுகிறது. இவற்றில் கிழக்கு – மேற்கு – தெற்கு – வடக்கு ஆகிய திசைகளை நோக்கியுள்ள மகாவாயில்களுக்கு முறையே **ஸ்ரீ துவாரம், லட்சுமி துவாரம், வாருணித் துவாரம், கீர்த்தித் துவாரம்** என்ற பெயர்கள் வழங்குகின்றன. இதில் குறித்த **ஸ்ரீதுவாரம், லட்சுமி, வாருணி, கீர்த்தி** ஆகியவை மகாலட்சுமியின் பெயர்களாம்.

இவள் அஷ்டலட்சுமிகளாகவும், ஷோடச லட்சுமிகளாகவும், ஐஸ்வர்ய லட்சுமியாகவும், கஜலட்சுமியாகவும், தாயாராகவும், நாச்சியாரகவும் சிறப்பாக பேசப்படுகின்றாள். இவளது பூஜா முறையாக மகாலட்சுமி மந்திர கோசம் விரிவாகக் கூறுகிறது. மேலும் பல தலபுராணங்கள் இவளின் சிவபூசைச் சிறப்பினையும் வரம் பெற்ற நிகழ்வுகளையும் விரிவாகக் கூறுகின்றன. குறிப்பாக மங்கள நிகழ்ச்சிகள்

எதுவாயினும் வேத விற்பன்னர்கள் மற்றும் சிவாச்சாரியர்களால் முதன் முதலில் **ஸ்ரீ ஸுக்தம்** என்றதிலிருந்து தொடங்குவது, இன்றும் மரபாக இருந்து வருகின்றது.

சிவ வழிபாட்டில் மகாலட்சுமி :

சிவ வழிபாட்டில் மகாலட்சுமி வழிபாடு இணைந்துள்ளது. சிவாலய ஆவரணத்தின் வாயுமூலையில் இவளது திருமேனியினைக் காணலாம். மேலும் மனித வாழ்விற்கு இன்றியமையாத கல்வியாகிய கலைமகளையும் இவள் அருகில் பிரதிட்டை செய்திருப்பர்.

மகாலட்சுமி இருப்பிடமும் வழிபாடும் :

யாகசாலைகள், சிவாலயங்கள், வீடுகளின் நிலைவாயிற்படி – அரண்மனை நிலைவாயிற்படி – மற்றய இருப்பிடங்கள் – தானியக் கிடங்குகள் – தன அறைநிலைவாயிற்படிகள் முதலியவற்றில் **மகாலட்சுமியை** நிலைப்படுத்தி வணங்குகின்றனர். கஜலட்சுமியாக விளங்கும் திருமகளுக்கு வாயிலைத் திறக்கும் போதும், பூட்டும் போதும், மந்திரப் பூர்வமாகப் பூசை செய்யப்படுகின்றது.

சிவாலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் பிர்மோற்சவம், ஆகியவற்றிற்கு முன்பாகத் **தனபூசை** எனும் பெயரில் லட்சுமிபூசை நடைபெறுகிறது. குடமுழுக்கு சமயத்தில் விளங்கும் யாகசாலை நாற்புறமும் நான்கு வாயில்கள் உள்ளன (மூங்கிலினால் செய்யப்பட்டு இருக்கும்) இவை ஒவ்வொன்றின் மேலும் மகாலட்சமி தோரண சக்தியாக வீற்றிருக்கின்றாள். இவளுடைய வடிவங்களுக்கு **சாந்திலட்சுமி, லட்சுமி, பல லட்சுமி, ஆரோக்கிய லட்சுமி** என்ற பெயர்கள் வழங்குகின்றன. சிவபெருமானுக்கும் அம்பிகைக்கும் அமைக்கப்படும் வேள்விச் சாலைகளின் வடமேற்கு திக்கில் **மண்டலரூபலட்சுமி** (கலசத்தில்) யாகவும் அதன் மேற்குத் திக்கில் திக் பாலகியாகவும் பூசிக்கின்றனர்.

சோழர்கள் காலத்திய சிவாலயக் கற்றளிகள் எல்லாவற்றிலும் அஷ்ட பரிவாரங்களில் ஒருத்தியாக இத் திருமகளை அமைத்து வழிபட்டனர்.

ஒரு முறை லட்சுமி செய்த தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் பத்து கரங்களுடன் அவள் முன்னே தோன்றி நடனமாடினார். அந்த தாண்டவத்திற்கு **லட்சுமி தாண்டவம்** என்று பெயர்.

திருக்கோயில்களில் :

சிவபெருமான் நடனமாடும் போது திருமால் மத்தளம் வாசிக்கவும் (சங்கு ஊதுதலுமாக இருப்பார்) இவருடைய தேவியான திருமகள் கரதாளம் போட்டு மகிழ்வாள். இவள் உயிரையும் உணர்வையும் அளிப்பதால் திருப்பாற்கடலில் இவள் எழுந்தாள் என்பர். திருமாலுக்கு மனைவியாகவும், திருமால் மார்பிலும், திருமால் வலப் பாகத்திலும் திருமால் ஆலயங்களில் தாயாராகவும், நாச்சியாராகவும் விளங்குகின்றாள்.

மகாலட்சுமியானவள் தாமே வழிபட்ட சிவலிங்கங்கள் **மகாலட்சுமீசர்** என்று அழைக்கப்படுகின்றன. திருப்பனையூர், திருவாரூர், திருப்பத்தூர், காஞ்சீபுரம், திருநின்றியூர் முதலான அநேக தலங்களில் மகாலட்சுமி சிவவழிபாடு செய்து பேறு பெற்றதால் பெருமான் **லட்சுமிபுரீசுவரர்** என்று அழைக்கப்படுகிறார்.

சிவாலய வழிபாட்டிலும், ஆன்மார்த்த பூசை வழிபாட்டிலும் இவள் வழிபடப் பெறுகின்றாள். கணபதி, சரசுவதி, மகாலட்சுமி, நந்தி, பிருங்கி எனும் வரிசையில் ஒருமுறையும் – மகாகணபதி, லட்சமி சதாசிவர், அனந்தர், ஸ்ரீகண்டர், அம்பிகை, ஸ்கந்தர் எனும் வரிசையில் ஒரு முறையும் ஆக இரண்டு நிலைகளில் பூசிக்கின்றனர். ஆலய பூசைகளின் தொடக்கத்தில் செய்யப்படும் அனுக்ஞை சடங்குகளில் தட்டில் வைக்கப்படும் வெற்றிலைப்பாக்கை மகாலட்சுமியாகப் போற்றுகின்றனர்.

ஷி ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயத்தில் ஸ்ரீ மூகாம்பிகை விமானத்தைச் சுற்றி (ஸ்ரீ காசியில் விசுவநாதர் ஆலய விமானம் போல்) அஷ்டலட்சுமிகள் விளங்குகின்றன. மேலும் திருமங்கலக்குடி ஸ்ரீ பிராணநாதேஸ்வரர் ஆலய சுவாமி சந்நிதி முகமண்டபத்தின் சுவர் மாடத்தில் 3 அடி உயரத்தில் அமர்ந்த நிலையில் தெற்கில் சரசுவதியும் வடக்கில் மகாலட்சுமியும் விளங்குகின்றாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய ஆலயங்களில் அனுக்கன் வாயில்களான தென் வட புறங்களில் சரசுவதி லட்சுமி மேற்கு நோக்கி விளங்குகின்றனர். திருநாகேசுவரம் ஆலயத்தில் உள்ள கிரிகுஜாம்பிகை அம்மன் அருகில் (கருப்பக் கிரகத்தில்) லட்சுமியும் சரசுவதியும் வீற்றிருக்கின்றனர். திருவையாறு ஐயாறப்பர் ஆலயத்தில் லட்சுமி உலாத் திருமேனி உள்ளது.

மகாலட்சுமி சிவபெருமானின் தங்கையாகவும் போற்றப்படுகின்றாள் (சிவம் – மங்களம்) இவள் சிவனடியார்களுக்கு தானாகவே வந்து உதவுகின்றாள் என்று தமிழ்த்திருமுறை கூறுகிறது. சிவனாரின் வில்வமரத்தின் அடியில் நீங்காது வாசம் செய்கிறாள். இவள் சிவன் திருமால் ஆலயங்களில் வீற்றிருந்து வழிபடவரும் அடியார்களுக்கு அஷ்டலட்சுமிகளாக உருக்கொண்டு அஷ்ட ஐஸ்வர்யங்களையும் 16 பேறுகளையும் (பதினாறு செல்வங்கள்) தொடர்ந்து கொடுக்கின்றான்.

தமிழ் மறையான தேவாரப்பதிகங்களில் :

"திருஞான சம்பந்தப் பெருமான்" ஏறத்தாழ ஐம்பது இடங்களில் மகாலட்சுமியைப் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றார். இவற்றில் **திருமகள், பூமகள், அலராள், பங்கய மங்கை, பொன், மலராள், செய்யாள், தூமலராள், வானோர் சீர்** என்பன குறிப்பிடத்தக்கப் பெயர்களாம். சிவாலயங்களையும் தேவாரத்தை ஓதும் அடியவர் பெருமக்களையும் மகாலட்சுமி உடனிருந்து காக்கின்றாள், என்பது அவர் கருத்தாகும். சிவத்தலங்கள் மகாலட்சுமிதேவியின் இருப்பிடமாகவே சொல்லியிருப்பதும்

குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக – வேதாரண்யத்தை "**மலர் மகள்**" நிலவிய மறைவனம் என்று போற்றுகின்றார். திருமாலின் மார்பில் நீங்காது உறைவதைப் போலவே தேவாரத்தைப் பாடுபவர்களின் மார்பிலும், சிவனைத் தியானிப்பவர் மார்பிலும் உறைகின்றாள் என்கிறார்.

"அப்பரடிகள்" திருமகளைச் சிவபெருமான் தோற்றுவித்துத் திருமாலுக்கு அளித்தார் என்பதை "**செய்யவளை மாலுக்கீந்த சிவனவன்காண்**" என்று குறிக்கின்றார்.

திருமகள் சிவபூஜை செய்து கொண்டேயிருக்கின்றாள் என்பதை திருவாலங்காட்டுப் பதிகத்தில் "**செய்யாள் வழிபட நின்றார் தாமே**" என்கிறார். மேலும் சிவபெருமானின் திருவடிகளாகிய தாமரை மலரில் இலக்குமி நீங்காது உறைகிறாள். இதனைத் "**திருமகளுக்குச் செந்தாமரையாம் அடி**" என்றும் குறிக்கின்றார்.

"**சுந்தரமூர்த்தி சுவாமிகள்**" திருமகளை **திருமாமகள், செம்பொன், அலராள்** என்று பல திருப்பெயர்களால் குறிப்பதுடன் (திருச்சுழியல்) சிவபெருமானைப் போற்றி வழிபடுகின்றவர்களை அவள் (இலக்குமி) என்றும் பிரியாதிருக்கின்றாள் எனவும் தம் பதிகத்துள் குறிப்பிடுகிறார்.

நவராத்திரி நாளில் வழிபடப்படுபவள் :

புரட்டாசி மாத நவராத்திரியினை திருக்கோயில்களிலும், திருமடங்களிலும், கல்விச் சாலைகளிலும், அரண்மனைகளிலும், வீடுகளிலும் தங்களின் பாரம்பரிய பூசை முறைப்படி முதல் மூன்று நாட்களில் (1,2,3) மகா துர்க்கையாகவும், இரண்டாவது மூன்று நாட்களில் (4,5,6) மகாலட்சுமியாகவும், இறுதியான மூன்று நாட்களில் (7,8,9) மகாசரசுவதியாகவும் அலங்கரித்து பூசை செய்கிறார்கள். (6ஆம் நாளில் மூல நட்சத்திரத்தில் மகா சரசுவதியினை ஆவாஹனம் செய்வது திருவாவடுதுறை மடத்து சம்பிரதாயமாகும்) பத்தாம் நாளான தசமி நாளில் மூவரும் சிவபெருமானை வழிபடுவதால் அன்று சந்திர சேகர மூர்த்திக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகிறது.

சமண புத்த சமயங்களில் :

சமண புத்த சமயங்கள் அன்னையாகிய மகாலட்சுமியைப் பல்வேறு நிலைகளில் வைத்து வழிபடுகின்றனர்.

கடைக்கண்பார்வை :

"**அருளில்லாருக்கு அவ்வுலகு இல்லை**"

"**பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை**"

IIA

என்பதால் மகாலட்சுமியின் கடைக்கண் அருளினால் அவ்வுலகாகிய சிவபெருமானின் திருவருள் கிடைக்காது.

அஷ்ட ஐஸ்வர்யங்களைத் தரும் மகாலட்சுமி இவ்வுலகத்தவர்க்கு ஐஸ்வர்யங்களைக் கொடுக்கவில்லை என்றால் இவ்வுலகத்தோர் என்றும் சுகத்தை அனுபவிக்க முடியாது. மேலும் இவ்வாதீனத்து அடியார்குழாமில் சிறந்து விளங்கிய தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் இலக்குமி தோத்திரம் எனும் நூலை இயற்றியுள்ளார் என ஆதீன வரலாற்றில் அறிகிறோம்.

இதனால் அருளும் பொருளும் ஆகிய இவைகளைத் தரும் வண்ணம் தன்மை பொருந்திய மகாலட்சுமியின் கடைக்கண் பார்வை பட்டாலே போதும். ஆகவே தான், எல்லாப் பிரதானவாயில் நிலைகளில், மகாலட்சுமியை ஆவாஹனம் செய்தும், திருவுருவத்தைச் சமைத்தும் வைப்பதால் அவள் கடைக்கண் பார்வையால் வந்து அடி எடுத்து வருபவர்களின் மனக்கிலேசங்கள், கெட்ட எண்ணங்கள், விரும்பத் தகாத செயல்கள் யாவும் நடைபெறாமல் தடுத்து அவள் முன்சுருக்கும் பார்வையால் நல்லவைகளாக அமைகின்றன. எனவே எல்லோருக்கும் அவளின் திருக்கண்பார்வையால் சிவனருள் கிட்டி சிவானந்தப் பெருவாழ்வு அமைய வேண்டும் எனத் திருவுள்ளம் கொண்டருளும் குரு மகாசன்னிதானம் அவர்கள் அருளாட்சியில் "மகாலட்சுமி" யின் மேதாவிலாசத்தை நூல் வடிவில் இரண்டாம் பதிப்பாக உலாவரச் செய்தருளியுள்ளார்கள் என்பது உணரத்தக்கதாகும். இப்போது இவ்வாதீனத்தில் ஞானபீடத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் 24-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் ஞானாட்சியில் வெளியிட்டருளுகின்றார்கள் என்பது போற்றுவதற்குரியதாகும்.

செந்தமிழ்ச் சிவஞானக் களஞ்சியம் :

திருவாவடுதுறை ஆதீனச் செந்தமிழ்ச் சிவஞானப் பண்ணையின் ஞானக் களஞ்சியமாகத் திகழும் சரசுவதி மகால் நூல் நிலைய ஆய்வுமையத்தின் வாயிலாக மலர்கின்ற "திருக்கோயில்கள் - ஆகமங்கள் - புராணங்கள் - சில்பசாஸ்திரங்கள் - மந்திரங்கள் - யந்திரங்கள் - பூஜைகள்" மற்றும் உருவ வழிபாட்டின் உட்பொருள் விளக்கங்களோடு "மகாலட்சுமி" எனும் களஞ்சிய நூல் பவனி வருகின்றது. "ஸ்ரீ" ஞானத்திற்கு எல்லை வகுத்தல் முடியாது. காலத்திற்கேற்றவாறும், குரு மூர்த்திகளின் உபதேசப்படியும் அளவிலாப் பெருமைகளுள் (பிரபாவங்கள்) ஒரு சில துளிகளை தொகுத்து அமைக்கப்பட்ட இவ்வாய்வுக் களஞ்சிய நூலினை சமய நல்லுலகும் அறிஞர் உலகும் ஆய்ந்து தெளிந்து கொள்ளவும், மேலும் இவளின் அருளால் வரும் பதிப்புகளில் செம்மையுற உரிய கருத்துக்களையும் உணர்த்தி அடியேனை மேம்படுத்த விரும்புகின்றேன்.

குரு அருளால் வந்த தொடர்பு :

அடியேன் இவ்வாதீன சரசுவதிமகால் நூலகத்தில் 1983 ஆண்டு பணியினைத் தொடர்ந்தேன்.

அவ்வாண்டின் இறுதியில் சீர்காழியில் வேதத்யானம் செய்த ஒருவர், அடியேனுக்கு ஸ்ரீஸுக்தம் பாராயணம் எவ்வாறு செய்ய வேணும் என நெறிப்படுத்தினார். திருமடத்தில் 1985இல் சமயதீட்சையும் 2000 ஆவது ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம் விசேட தீட்சையோடு ஸ்படிகலிங்க பூசையும் பெற்று கிரமமாக செய்து வருகின்றேன். பூசையின் தொடக்கத்தில் ஸ்ரீ ஸுக்தம் பாராயணத்தைத் தொடர்ந்து திருமுறைகளையும் பாராயணம் செய்து வருகின்றேன்.

இவைகளைப் பெற்றவுடன் மனதிலும், உடம்பிலும் ஓர் உத்வேகம் எழுந்தது. குருவருளின் துணைக்கொண்டு ஷ மகாலட்சுமி நூற்பணி ஒருவாராக நிறைவெய்தியது.

மகாலட்சுமி (செல்வக் களஞ்சியம்) தயாரிக்கும் காலத்தில்:

இவ்வாதீனப் பன்மொழிப்புலவராக விளங்கிய காஞ்சிபுரம் சிவ. சதாசிவம் அவர்கள் நுட்பமான செய்திகளையும், அமைப்பு முறைகளையும் அடியேனுக்குப் பல காலங்களில் உணர்த்தியுள்ளார்கள். சென்னை சிவசுந்தரிக் கலைக்கூடத்தின் ஆசிரியர் திரு பூசை ஆட்சிலிங்கம் தயாரித்த சக்தி மஞ்சரி வரிசை நூல்கள் பெரிதும் இதற்கு உதவியாக அமைந்தன. மகாபலிபுரம் – கலைச் செம்மல் திரு. திருஞானம் அவர்கள் வரைந்து வெளியிட்ட படிமக்கோடுகள், மரபுக்கட்டடக் கலை நூல்களை அடியேனுக்கு மனம் உவந்து அளித்தார்கள். சீர்காழி திருக்கோலக்கா சிவஸ்ரீ. N. இராமநாதசிவாச்சாரியார் அவர்களும் ஆதீன சிவாகம வித்துவான் கல்லிடைக்குறிச்சி சிவஸ்ரீ.K. செல்லமணி பட்டர் அவர்கள் அவ்வப்போது நெறிப்படுத்தினார்கள். மேலும் திருவலஞ்சுழி சிற்பக்கலாக்ஷேத்ரம் உரிமையாளர்களில் ஒருவராகிய திரு. K. மோகன்ராஜ் ஸ்தபதி தமது நிறுவனத்தில் உள்ள நூல்களையும் போட்டோக்களையும் கொடுத்து உதவியுள்ளார்கள் மற்றும் சுவாமிமலை திரு. T. இராமலிங்கம் ஸ்தபதி, D. இராதாகிருஷ்ண ஸ்தபதி ஆகியோர் பல போட்டோக்களை அளித்து உதவினார்கள். இன்னும் பல நண்பர்கள் இந்நூலாக்கத்திற்கு உறுதுணையாய் விளங்கினர். இவர்களுக்கெல்லாம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் ஆசி என்றும் நிலைபெற வேண்டுகிறேன்.

திருவாவடுதுறை ஆதீனம் 24-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாட்சியின் மாட்சி

குருபூசைச் சிறப்பு :

24-ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள், 23-ஆவது குருமகா சந்நிதானத்தின் பத்துநாள் குருபூசையை சிறப்பாக செய்து, பத்தாம் நாள் குருபூசைத் திருநாளில் குருமூர்த்தத்திற்கு சிறப்பு அபிடேகமும் மாகேஸ்வர பூசையும் நடத்தப்பெற்றது. அன்றிரவு பட்டணப் பிரவேசமும், சிவஞானக் கொலுக்காட்சியும் அருளி அடியார்களுக்கு ஆசி வழங்கினார்கள்.

ஆண்டுதோறும் நடைபெறும் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் குருபூசை பத்து நாட்கள்

மிகச் சிறப்பாக நடத்தப்பெறுவதுடன் சொற்பொழிவு நூல் வெளியீடு, விருது வழங்கல் அருட்கொடைகள் ஆகியன சிறப்பாக நடத்தப் பெறுகிறது.

திருப்பணிகள் :

குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணையின் வண்ணம் ஆதீனத்திற்குச் சொந்தமான திருவீழிமிழலை, திருநல்லூர், ஆறுமுகனேரி, காலகம், மயிலாடுதுறை ஸ்ரீ ஐயாறப்பர் திருக்கோயில், திருக்கழுக்குன்றம் வெள்ளப்பந்தல் முதலிய சிவன் திருக்கோயில்களும், ஆதீனத்திற்குச் சொந்தமான கிராமக் கோயில்கள் சிதம்பரம் ஸ்ரீ மெய்கண்டார் திருக்கோயில், திருப்பெண்ணாகடம் ஸ்ரீ மெய்கண்டார் திருக்கோயில் என பல திருக்கோயில்கள் திருப்பணிகள் செய்யப்பெற்று கும்பாபிஷேகம் நடத்தப் பெற்றது.

மேலும் திருவீழிமிழலையில் உள்ள சூரியனார்கோயில் ஆதீனத்து இரண்டாவது குருமகா சந்நிதானம் குருமூர்த்தத் திருக்கோயில் திருப்பணி செய்யப் பெற்று கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றது. திருவாவடுதுறையில் 23-ஆவது குருமகாசந்நிதானம் அவர்களின் குருமூர்த்தம் கற்றளியாக உருவாக்கப் பெற்றது.

அன்னப்பன்பேட்டை ஸ்ரீ தாயுமானவர் ஆதீனத்தில் அமைந்துள்ள ஸ்ரீ தாயுமானவர் திருக்கோயில், அவ்ஆதீனத்து பத்தாவது குருமகா சந்நிதானம் குருமூர்த்தம் யாவும் திருப்பணி செய்யப்பெற்றது. புதிய கட்டடம் ஒன்றும் கட்டப்பெற்றுள்ளது.

மடாலயத் திருப்பணி :

திருவாவடுதுறை ஆதீனத்தின் தலைமை மடம் திருப்பணி பெரும் பொருட் செலவில் நடைபெற்று வருகிறது. ஆதீன மடாலயத்தில் நூதனமாக நூலகக் கட்டடம், அச்சுக்கூடம், மழலையர் பள்ளி யாவும் சிறப்பாக கட்டப் பெற்றுள்ளது.

திருத்தேர் திருப்பணி :

இவர்களுடைய அருளாட்சியில் திருவிடைமருதூர் திருக்கோயிலில் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்பிரமணியர், சண்டீசர் ஆகிய சுவாமிகளுக்கு புதிய திருத்தேர் செய்யப்பெற்றது. முன்புள்ள சுவாமி அம்பாள் திருத்தேர்களுடன் பஞ்ச ரத திருத்தேரோட்டம் நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி, குறுக்குத்துறை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு புதிய திருத்தேர் செய்யப்பெற்று தேரோட்டம் நடைபெற்று வருகிறது.

திருவிடைமருதூர் திருக்கோயிலில் அம்பாளுக்கு புதிய இரதம் செய்யப் பெற்றுள்ளது.

ஆவுடையார்கோயிலில் புதிய வெள்ளிரத திருப்பணி நடைபெறுகிறது.

அயல்நாட்டுப் பயணம் :

19-09-2014-ல் இங்கிலாந்தில் உள்ள சிவன் திருக்கோயிலில் நடைபெற்ற இரண்டாவது உலகத் திருமுறைப் பெருவிழாவிற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி ஆசியருளினார்கள். அங்கு திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சைவ சித்தாந்த ரத்தினம் என்னும் பட்டம் வழங்கி ஆசியருளினார்கள்.

20-12-2013-ல் மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயிற்சி நிறைவு பெற்ற மாணவர்களுக்கு சித்தாந்த ரத்தினம் எனும் பட்டம் வழங்கி ஆசியருளினார்கள். அப்போது பத்துமலை முருகப்பெருமான் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

திருமூலர் குருபூசையும் திருவள்ளுவர் குருபூசையும் :

ஆண்டுதோறும் திருமூலர் குருபூசை ஐப்பசி அசுபதியில் திருவாவடுதுறை ஸ்ரீ மாசிலாமணியீசர் திருக்கோயிலில் நடைபெறும். திருமந்திரம் முற்றோதல் நடைபெறும். இவர்களுடைய அருளாட்சி முதல் திருமூலர் குருபூசை நாளன்று சொற்பொழிவு, நூல் வெளியீடு, மாணவர்களுக்குப் பரிசு முதலியன வழங்கப் பெறுகிறது.

ஆண்டுதோறும் நடைபெறும் திருவள்ளுவர் குருபூசை (மாசி – உத்திரம்) நாளன்று திருக்குறள் முற்றோதல் சொற்பொழிவு. திருக்குறளில் வல்ல புலவர்க்குப் பொற்கிழி, விருது யாவும் வழங்கப் பெறுகிறது.

விருது வழங்கல் :

இவர்களுடைய அருளாட்சியில் தமிழறிஞர்கள், ஆகம சீலர்கள், சித்தாந்த வித்தகர்கள், கலைஞர்கள் என இதுவரை 100க்கு மேற்பட்ட தக்கவர்களுக்கு விருதுகள் மற்றும் பொற்கிழி வழங்கப் பெற்றுள்ளது.

அருட் கொடைகள் :

சுந்தரர் அவதரித்த 04.02.2015-ல் திருநாவலூரில் எழுப்பப் பெறும் கற்றளிக்கு ஒரு லட்சம் ரூபாய், 13.02.2015-ல் கள்ளிப்பாடி ஸ்ரீ தாயுமானவர் திருக்கோயில் திருப்பணிக்கு அருட்கொடை, 15.02.2015-ல் வடலூர் மேட்டுக்குப்பம் கோவை சிவப்பிரகாச தருமசாலைக்கு அருட்கொடை, 01.05.2015 சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவில் 11–ஆம் கால யாக சாலை பூஜைக்கு ஐந்து லட்சம் வழங்கியது.

தினமலர் நாளிதழ் ஒருங்கிணைப்பில் இயங்கி வரும் எண்ணங்களின் சங்கமம் என்னும் சமூக சேவை அமைப்பைச் சேர்ந்த பத்து சமூக சேவகர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம்)

வீதம் ரூ. 1,00,000/- (ஒரு லட்சம்) வழங்கி ஆசியருளுகின்றார்கள். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் பெற ஆண்டுதோறும் தை அசுபதி குருபூசை விழாவில் ஆதீன நிருவாகத்தில் விளங்கும் திருவிடைமருதூர் தி.ஆ.மேனிலைப் பள்ளியில் அரசு பொதுத் தேர்வில் பத்தாம் வகுப்பு பன்னிரண்டாம் வகுப்பில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு அருட்கொடையும் பரிசிலும் வழங்கியருளுதல். ஆதீன தலைமை மடத்திலும் ஆதீன திருக்கோயில்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் குழந்தைகள் கல்வியில் மேம்பட ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்கி ஆசியருளுதல். குருமகா சந்நிதானம் அவர்களை தரிசித்து ஆசி பெறும் அடியார்களுக்கு திருக்கை வழக்கம் என எண்ணற்ற அருட்கொடையை 24ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கியருகின்றார்கள்.

சைவ சித்தாந்த, திருமுறை நேர்முகப் பயிற்சி :

சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையங்கள் மேலும் விரிவாக்கம் செய்யப்பெற்று தமிழகத்தில் 88 மையங்களிலும் ஆந்திரா, கேரளா, கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் இலங்கை, மலேசியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சைவத் திருமுறை நேர்முகப் பயிற்சி வகுப்புகள் தமிழகத்தில் 88 மையங்களிலும், இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளிலும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

திருமுறையாசிரியர்கள் சந்தானாசாரியர் திருமேனிகள் பிரதிட்டை :

திருநல்லூர் ஸ்ரீ கல்யாண சுந்தரர் திருக்கோயிலில் திருமுறை ஆசிரியர்கள் சந்தானாசாரியர்கள் திருமேனிகள் பிரதிட்டை செய்யப் பெற்று பிரதிட்டாபிஷேகம் செய்யப் பெற்றுள்ளது.

சிவஞானசுவாமிகள் ஞானச் சமாதித் திருக்கோயில் :

11.02.2016-ல் திருவாவடுதுறை ஸ்ரீ மறைஞான தேசிகர் தபோவனத்தில் அமைந்துள்ள சிவஞானமுனிவரின் ஞானச் சமாதித் திருக்கோயில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் கற்றளியாக்கப் பெற்றது.

புதிய கட்டடங்கள் :

02.05.2016-ல் ஆதீனத்திற்குச் சொந்தமான திருச்செந்தூர் அருட்பணிக் கட்டளையில் பக்தர்கள் தங்குவதற்கான மூன்று அறைகள், நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திறந்து வைத்தருளினார்கள். 02.11.2016-ல் திருக்கழுக்குன்றத்தில் உள்ள ஆதீனக் கிளை மடத்தில் கட்டப்பெற்ற அம்பலவாணர் அரங்கத்தை அவர்கள் திறந்து வைத்தருளினார்கள். 01.11.2015-ல் சென்னை அரும்பாக்கம் ஆதீனக் கிளை மடத்தில் புதிய கட்டடம் கட்டப்பெற்று திருந்தருளப்பெற்றது. 14.07.2017-ல்

தலைமை மடத்து அலுவலகத்தில் புதிதாகக் கட்டப் பெற்ற கணினிமையம் திறந்தருளப் பெற்றது. 30.07.2017-ல் சுசீந்திரத்தில் உள்ள ஆதீனக் கிளை மடத்தில் புதிதாகக் கட்டப்பெற்ற அலுவலகம் திறந்தருளப்பெற்றது. 05.10.2017-ல் திருவிடைமருதூர் ஆதீன மேனிலைப் பள்ளியில் கும்பகோணம் சிட்டியூனியன் வங்கியின் சார்பில் முப்பது லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பெற்ற கட்டடம் திறந்தருளப்பெற்றது. மேலும் ஆதீன தலைமை மடத்தின் தென்புறத்தில் அடியார்கள் தங்குவதற்கான விடுதிக் கட்டடம் கட்டப்பெற்று வருகிறது. 01.10.2017 அன்று ஆதீன நிருவாகத்தில் உள்ள தியாகராஜபுரம் தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான கால்கோள் விழா நிகழ்த்தப்பெற்றது. 10.02.2016 நல்லூரில் வாகன பாதுகாப்புக் கட்டடம் திறந்தருளப்பெற்றது.

செங்கோல் ஆதீன கர்த்தர் நியமனம் :

பதினெட்டு சைவ ஆதீனங்களில் செங்கோல் ஆதீனமும் ஒன்றாகும். அவ்வாதீனத்தில் 102- ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கல்யாணசுந்தர சத்திய ஞான தேசிகர் அவர்கள் 18.01.2016 சுத்தாத்விதமுத்தியடைந்ததை அடுத்து துறைசையாதீனத்து ஸ்ரீமத் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் அவர்களை 103 - ஆவது குருமகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்திய ஞான பரமாசாரிய சுவாமிகள் எனும் தீட்சா நாமத்துடன் எழுந்தருளச் செய்தார்கள்.

தீட்சையருவல்

குருமகா சந்நிதானம் அவர்கள் ஆண்டுதோறும் மாசி மகா சிவராத்திரி நாளிலும் கார்த்திகை நான்கு சோமவார நாட்களிலும் பக்தர்களுக்கு சமய விசேட தீட்சை ஆதீன தலைமை மடத்தில் வழங்கி வருகின்றார்கள்.

கல்விப்பணி :

17.04.2013-ல் முத்தூர் கிராமத்தில் உள்ள தொடக்கப்பள்ளியின் நிருவாகி குருமகா சந்நிதானம் அவர்களிடம் ஆதீன நிருவாகத்திற்குச் சமர்ப்பித்தார்கள். குருமகா சந்நிதானம் அவர்கள் அப்பள்ளியை ஏற்று புதிய கட்டடம் கட்ட கால்கோள் செய்துள்ளார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாட்சியில் நல்லூர் திருக்கோயிலுக்கு தங்கமுலாம் பூசிய படிமப்பாதமும், திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்க சுவாமிக்கு தங்க வில்வ மாலையும் அன்பர்கள் உபயமாக வழங்கப்பெற்றது.

06.12.2018-ல் :

ஆதீனத்திற்குச் சொந்தமான திருமாந்துறை ஸ்ரீ அட்சயநாத சுவாமி திருக்கோயிலில் உள்ள சந்திர தீர்த்த கிணற்றில் ஆடி மாதம் அமாவாசை தினத்தில் பொங்கி வரும் கங்கையில் ஸ்ரீலஸ்ரீ குருமகா

சந்நிதானம் அவர்கள் புனித நீராடி தரிசனம் செய்து ஆலய வழிபாடு செய்யும் எல்லோரையும் நீராடச் செய்யும் அருட்பிரசாதம் அருளினார்கள். தொடர்ந்து ஆண்டுதோறும் இந்நிகழ்வு ஆலயத்தில் நிகழ்கின்றது.

மதுரை ஆதீனத்திற்கு துறைசை ஆதீனத் தம்பிரான் சுவாமிகளை இளைய பட்டமாக எழுந்தருளச் செய்தல் :

இவ்வாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அருளாட்சியில் ஆதீன முனிபுங்கவர் திருக்கூட்டத்தில் 35 ஆண்டுகளுக்கு மேல் தம்பிரானாக விளங்கிய ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகளை மதுரை ஆதீனம் 292ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் தமது ஆதீனத்தின் இளைய பட்டத்திற்கு ஷ தம்பிரானை நியமனம் செய்ய திருவுள்ளம் கொண்டார்கள். அதனை ஏற்று 07.06.2019-ல் ஷ தம்பிரான் சுவாமிகள் இளையபட்டமாக எழுந்தருளச் செய்து ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் எனும் தீட்சா நாமம் சூட்டி, மதுரை ஆதீனமும் துறைசை குருமகா சந்நிதானம் அவர்களும் ஒருங்கே அமைந்து ஆசீர்வதித்தார்கள். இந்நிகழ்ச்சி இவ்வாதீன வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும். மதுரை ஆதீனம் சிவப்பேறு அடைந்தபிறகு 23.08.2021 நாளில் 293ஆவது குருமகா சந்நிதானமாக மதுரை ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் ஏற்றருளினர்கள்.

அன்னப்பன்பேட்டை கும்பாபிஷேகம் :

11.09.2019 அன்னப்பன் பேட்டை ஸ்ரீ கைலாச நாதர் சுவாமி திருக்கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்திலும் 2, 3, 4 காலங்களில் யாகசாலை தரிசனமும், “சிவாலய வழிபாட்டு முறைகள்” எனும் நூலினை வெளியிட்டும், கும்பாபிஷேக கல்வெட்டினையும் திறந்தருளி அன்பர்கள் யாவர்க்கும் அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

கொரோனா நிவாரண நிதி :

20.04.2020 - ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் தமிழக முதலமைச்சரின் கொரோனா நிவாரண நிதிக்காக ஆதீனம் சார்பில் ரூ. 12,00,000/-க்கான காசோலையினை மயிலாடுதுறை வருவாய் கோட்ட அலுவலர் அவர்களிடம் வழங்கினார்கள். மேலும் கொரோனா காலத்தில் ஆதீனத் தலைமை மடம் மற்றும் ஆதீனக் கோயில்களில் பணி ஆற்றும் சிப்பந்திகள் யாவருக்கும் நிவாரணப் பொருள்களை வழங்கியருளினார்கள்.

24.07.2021 மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் தரிசனம் :

அண்மையில் புதிய மாவட்டமாக விளங்கும் மயிலாடுதுறையின் முதல் ஆட்சியர் (கலைக்டர்) பெறுப்பேற்ற திருமதி ஆர். லலிதா ஐ.ஏ.எஸ்., அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை தரிசித்து பொன்னாடை, நினைவுப்பரிசு, ஆதீன வெளியீடுகள் முதலியன பெற்றார்கள்.

ஆதீனத்தில் மணி மண்டபம் நிர்மானித்தல் :

இவ்வாதீனத்தில் (நூதனமாக) தென்னக கலை அம்சத்துடன் கூடிய மணி மண்டபத்தினை காண்போர் வியக்கும் வண்ணம் நிர்மானித்து 03.03.2021 நன்னாளில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திறந்தருளினார்கள். மிக உயரமாக உள்ள இந்த மணிமண்டபத்தை திருவாவடுதுறை எல்லையிலுருந்தே காணலாம். தினந்தோறும் பகல் மற்றும் இரவில் ஒவ்வொரு மணிக்கும் கண்டாமணி ஒலிக்கும்.

21.08.2021

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆதினம் சார்பில் ரூ. 15,000,00/-க்கான காசோலையினை ஆதீனத்து ஸ்ரீமத் திருச்சிற்றம்பலத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மற்றும் ஆதீனக்காரியஸ்தர்கள் மூலமாக கொரோனா நிதியினை இரண்டாம் முறையாக தமிழக முதல்வர் மாண்புமிகு. மு. க. ஸ்டாலின் அவர்களிடம் சேர்ப்பித்து அருளினார்கள்.

24ஆவது குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியில் வெளியிடப்பட்ட நூல்கள் :

1. 23-ஆவது பட்டம் ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக மூர்த்திகள் அருள் வரலாறு, 2. விநாயகர் தோத்திரப்பாக்கள், 3. உமாபதி சிவாசாரியர் திரட்டியருளிய தேவார அருள்முறை திரட்டு, 4. ஞான உலகம், 5. கணபதி, 6. திருமந்திரம் 1,2,3 உரை, 7. திருவீழிமிழலை திருத்தல வரலாறு, 8. விதியை வெல்வது எப்படி?, 9. சுலோகபஞ்சக விஷயம், 10. திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகளும் தோத்திர பாக்களும், 11. மெய்கண்டார் சித்தாந்தம், 12. சிவஞானபோத ஆய்வுக் களஞ்சியம், 13. திருவாவடுதுறை திருத்தல வரலாறு, 14. குருபரம்பரை விளக்கம், 15. மகா பைரவர், 16. 4ம் திருமுறை, 17. திருமந்திரம் (மூலம்), 18. குருவருட் கொழுந்து, 19. தாயுமானசுவாமிகள் ஆதீனம் கும்பாபிஷேக மலர், 20. சிவஞான போதமும் பன்னிரு திருமுறையும், 21. தாயுமானவர் அருள்நூல் கட்டுரைகள், 22. சைவ சித்தாந்த வினாடிவினா?, 23. சைவ அநுட்டான விதி, 24. ஸ்ரீ சந்தி விநாயக் திருக்கோயில் திருத்தல வரலாறு, 25. 5ம் திருமுறை, 26. பூப்பிள்ளை அட்டவணை, 27. ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது, 28. திருமண விழா மலர், 29. சிவ வழிபாட்டு மலர், 30. சிவலிங்கம், 31. திருக்கழுக்குன்றம் – அச்சிறுபாக்கம் திருத்தலப் பதிகங்கள், 32. விநாயகர் மகிமை, 33. திருவாசகம் மூலம், 34. அம்பலத்தாடும் அலகில் சோதியன், 35. மகாமகமும் குடந்தை நகரச் சிறப்பும், 36. 6ம் திருமுறை, 37. சிவபுராணம் – உரை, 38. புண்ணியம் நல்கும் கோபூஜை, 39. திருமூலர் திருமந்திரம், 5 – 6 தந்திரங்கள், 40. சிவன் கோயிலில் வழிபடுவது எப்படி ?, 41. விநாயகர் அகவல் (மூலம் – உரை), 42. விநாயகர் அகவலும் பதவுரையும், 43. மயிலாடுதுறை ஸ்ரீ ஐயாறப்பர் திருக்கோயில் தலவரலாறு, 44. 11ம் திருமுறையில் விநாயகர் தோத்திரங்கள், 45. விநாயகர் மகிமை, 46. சித்தாந்தப் பிரகாசிகை, 47. திருவாவடுதுறை தலச்சிறப்பும் ஆதீன அருள் வரலாறும், 48. சுந்தரர் தேவாரம் (7ம் திருமுறை), 49.

தேவாரம் 3ம் திருமுறை, 50. தெய்வத் திருமேனிகள், 51. திருமந்திரம் 9ம் தந்திரம், 52. திருவாலங்காடு ஸ்ரீ வடாரண்யேஸ்வரர் திருக்கோயில் தலவரலாறு, 53. நான், 54. சூரியனார் கோயில் தலவரலாறு, 55. ஸ்ரீ தாயுமான சுவாமிகள அருளிய திருப்பாடல் திரட்டு, 56. திருமந்திர அருளமுது, 57. திருமூலர் திருமந்திரம் 8ம் தந்திரம், 58. திருவாசகம் மூலம், 59. சிவபுராணம் - உரையுடன், 60. பிரதோஷ மகிமை, 61. தேவாரம் (இரண்டாம் திருமுறை), 62. பார்த்திப பூசா விதி, 63. திருமந்திர வைத்தியப் பகுதி, 64. திருவிடைமருதூர் தல வரலாறு, 65. மயிலாடுதுறை திருத்தலவரலாறு, 66. காவேரி புராணம், 67. குருவருள், 68. திருத்தல திருமுறைத் திரட்டு, 69. அம்பலத்தாடும் அலகில் சோதியன், 70. திருவேகம்பரந்தாதி, 71. திருவாவடுதுறை ஆதீனத் திருக்கோயில்கள், 72. செந்தமிழ் தெய்வம் முருகன், 73. தமிழ் வளர்க்கும் திருவாவடுதுறை ஆதீனம், 74. திருப்பெருந்துறை தலவரலாறு, 75. விநாயகர் வழிபாடு, 76. பொருநையின் பெருமை, 77. முருகன் 4ம் பதிப்பு, 78. ஆடல் வல்லான், 79. பதினொராந்திருமுறை, 80. திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி, 81. மகா பைரவர் 5ம் பதிப்பு, 82. சிவாலய வழிபாடும் தினசரி பாராயணமும், 83. திருமந்திர முன்னுரை, 84. தெய்வத்திருமேனிகள் 7ம் பதிப்பு, 85. சிவஞானபோதத் திறவு, 85. சைவசித்தாந்தத்தில் உலகம், 86. பாணாபுரம் தலவரலாறும் சிவலிங்கமும், 87. திருநீலக்குடி திருத்தலவரலாறு, 88. மங்களம் அருளும் மகாகாளி, 89. திருவாவடுதுறை ஆதீன ஞானக்கொடை, 90. திருஎதிர்கொள்பாடி திருத்தல வரலாறு, 91. குருவருட் செல்வம் (மணி விழா), 92. திருவிருத்தங்கள், 93. கந்தர் சஷ்டி கவசம் (உரையுடன்), 94. திருவள்ளுவநாயனாரும் பெரியபுராணமும், 95. நவாக்கரி சக்கரம், 96. பெரியபுராணம் (12 திருமுறை), 97. முத்திபஞ்சாக்கர மாலை ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் மாலை, 98. ஆதிசைவர் பெருமையுயும் பிரதிஷ்டா மூர்த்திகளின் காயத்ரீ மந்திரங்களும், 99. கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம், 100. சித்தாந்தக்கட்டளை, 101. மகாலட்சுமி முதலான நூல்களும் சிறுகையடக்க இலவச வெளியீடுகளும், சிறு படங்கள், வருடத்திற்குரிய காலண்டர்களும் வெளியிட்டருளுவதனை சைவ நல்லுலகம் நன்கறியும்.

மகாலட்சுமி மீண்டும் துறைசையில் பவனி வருகின்றாள் :

சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர செந்தமிழ்ப் பரிபாலனம் செய்தருளும் இவ்வாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் திருநோக்கால் பொலிவு பெற்றுத் திகழும் ஆதீனத்தின் சிவஞானக் களஞ்சியமாம் சரசுவதி மகால் நூல் நிலைய ஆய்வு மையத்தின் வாயிலாக ஆதீனத்தடாகத்தில் மலரும் கலைக்களஞ்சிய வரிசையில் - கோயில்கள் - ஆகமங்கள் - புராணங்கள் - மந்திரங்கள் - யந்திரங்கள் - பூசைகள் - சிறபங்கள் மற்றும் உருவ வழிபாட்டின் உட்பொருளை தன்னகத்தே கொண்டு பவனி வரும் **"மகாலட்சுமி"** நுண்கலை நூலினை (Encyclopaedia of Mahalakshmi in Temples - Agamas - Puranas - Mantras - Yantras - Poojas - Silpa and Iconography) சிவஞானக் செங்கோலோச்சும் **"திருவாவடுதுறை ஆதீனம் 24ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்"** சிவஞான அருட்செல்வங்களோடு பொருட் செல்வமும் யாவரும் குறைவின்றி பெற்று, வாழ்வில் சிறந்தோங்க இந்நூலினை இவ்விழா வைபவத்தில் வெளியிட்டருளுகின்றார்கள்.

குருமூர்த்திகளின் திருவுள்ளக் குறிப்பினை உணர்த்தும, திருவடிகளை போற்றியும் "மகாலட்சுமி" மலரினை யாவரும் இந்நாளில் பெற்று, "இவளது" திருக்கண் பார்வையில் எல்லாச் செல்வங்களோடு யாவரும் சத்பாத்திரர்களாக விளங்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

குருமூர்த்திகளின் திருவடிகள் போற்றி :

திருவருளும் குருவருளும இயக்கிட கருவியாய் நிற்கும் அடியேனால் எழுதித் தொகுப்பாக்கம் பெற்ற இந்நூல் அனைவருக்கும் மெய்மை பூசனை விளைவிக்க சகல ஆன்மாக்களின் ஞானாசிரியராக விளங்கியருளும் இவ்வாதீனத்து 24ஆவது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்** திருவடிகளையும், ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் திருவடிக் கமலங்களையும் என்சிரமேற்கொண்டு என்றும் மனம் - மொழி - மெய்களினால் சிந்தித்து வந்தித்து போற்றுகின்றேன். சுபம்.

வளர்க துறைசையாதீனம் !
மகாலட்சுமி திருவடிகளே சரணம்!
குருமூர்த்திகளின் திருவடிகளே சரணம்!

இங்ஙனம்

நூல் தொகுப்பாசிரியர்
"ஆகம சிற்பக்களஞ்சியக் கலைமணி"
S. நாராயணசுவாமி, M.A.,(Philo).,M.A.,(His).,
M.Ed.,Dip in Sanskrit.,
நுண்கலைத்துறை - திருவாவடுதுறை ஆதீனம்,
சரசுவதி மகால் நூல்நிலைய ஆய்வு மையம்,
திருவாவடுதுறை - 609803.

தேதி : 16 - 09 - 2021
வீடு :
1/1 வடக்கு வீதி,
திருவிடைமருதூர் - 612 104.
செல் : 94866 48450
9597804730



மகாலட்சுமி

உ

சிவமயம்

மகாலட்சுமி

[Encyclopaedia of Maha Lakshmi in Temples - Agamas - Puranas - Silpa sastras - Mantras - Yantras - Poojas and Iconography]

ஆலய அமைப்பும், பரிவார மூர்த்திகளில் மகாலட்சுமி வழிபாடும்



சிவமே எல்லாமும் :

சிவபெருமானே முழுமுதற் பரம்பொருளாக விளங்கும் கடவுள் ஆவார். ''சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை'' என்ற திருமந்திரவாக்கு நமக்கு இதனைத் தெளிவுபடுத்தும். ஈசன், சர்வேஸ்வரன், மகேஸ்வரன், பரமேஸ்வரன், சதாசிவன் எனும் எண்ணற்ற திருப்பெயர்கள் யாவும் சிவபெருமான் ஒருவரையே குறிப்பதாகும். இறைவனாகிய சிவபெருமான் எங்கும் நீக்கமற நின்று நமக்கு என்றென்றும் திருவருள் பாலித்து வருகின்றார். மாய இருளில் கட்டுண்டு உழலும் உயிர்கள் எல்லாம் மேன்மை நிலையினை அடையும் பொருட்டுப் பல்வேறு திருவுருவங்களின் வாயிலாகத் திருக்கோயிலினுள் நின்று நிலவி என்றும் அருள்பாலித்து வருகின்றார். ஆனால், ஞானிகள் இறைவனின் நிலையினைப் போற்றும் போது ரூபம் என்றும், அரூபம் என்றும், ரூபாரூபம் என்றும் மூன்று நிலைகளை நமக்கு உணர்த்துகின்றனர். மேற்சொன்ன இம் மூன்று நிலைகளிலும் அருள்பாலித்தருளும் இறைவனார் திருக்கோயில்களில் பலநிலைகளில் அமைந்து விளங்குகின்றார்.

''பசு'' தனது உடல் முழுவதும் பாலினைக் கொண்டுள்ளது. ஆனால் ''மடி'' என்ற ஓர் இடத்தின் மூலமாகத்தான் அப்பாலினை நாம் பெறமுடிகிறது. அதுபோல இறைவனாகிய சிவபெருமானின் திருவருள் எல்லா இடங்களிலும் பரவியிருந்தாலும் திருக்கோயில் என்ற இடத்தின் மூலமாகத்தான் எப்போதும் அந்த அருள் கிடைக்கின்றது.

ஆலயம் :

ஆலயமாவது வித்யாலயம், மடாலயம், தேவாலயம் என மூன்று வகைப்படும். ''வித்யாலயமாவது'' இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலிய நூல்களையும் சகல சாத்திரங்களையும் கற்கும் இடமாகும். இறைவனது குணங்களையும் அவனது மகிமைகளையும், அவரை வழிபடும் முறைகளையும், வழிபாடு செய்வதால் பெறப்படுகின்ற பயன்களையும் அறியாதவர்கள் அவற்றை அறிந்துகொண்டு வாழ்க்கைப்பயனைப் பெறுவதற்கு இடமாக அமைந்துள்ளதுதான் ''வித்யாலயமாகும்''

''மடாலயமாவது'' - ஞானிகளும் முனிபுங்கவர்களும் குருமூர்த்திகளும் தங்கி இருந்து தம்பால் வரும் மாணாக்கர்களுக்கும் அடியவர்களுக்கும் உண்மையான ஞானக் கல்வியினையும் சைவ சமயத்தின் மேன்மையினையும், திருக்கோயில் வழிபாட்டுடன் கூடிய நான்கு வகை மார்க்கங்களையும் போதிப்பதற்குரிய இடமாகும்.

''தேவாலயமாவது'' - ஆன்மாக்கள் வழிபட்டு உய்தற்பொருட்டு மகாதேவன் பல்வேறு திருக்கோலங்களில் எழுந்தருளியிருக்கும் இடமாம். ''ஆ'' - பசு (உயிர்), ''லயம்'' - ஒடுங்குதல் (லயமாதல்) உயிர்கள் எல்லாம் ஒடுங்குவதற்குரிய இடம் ஆலயமாகும். இதனைக் கோயில் என்றும் கூறுவர். ''கோ'' என்றால் இறைவன் (அரசன், தலைவன், இறைவன்) ''இல்'' என்றால் தங்குமிடம். அதாவது இறைவன் தங்குமிடம் கோயிலாகும்.

நம் முன்னோர்கள் இறைவழிபாட்டினால் உயிர்கள் மேன்மையடைய முடியும் என்ற கருத்தினை வலியுறுத்தும் பொருட்டுத் திருக்கோயிலை ஊரின் நடுவே அமைத்து அனைவரும் வழிபடச் செய்தனர். இப்போது காணும் இத் திருக்கோயில்கள் யாவும் ஆகமங்களையொட்டி நிர்மாணம் செய்யப்பட்டவைகளாகும். எந்த ஆகமத்தையொட்டி ஒரு ஆலயம் அமைக்கப்பட்டதோ அந்த ஆகம விதிகளைப் பின்பற்றி அக்கோயில்களில் நித்திய நைமித்திய பூசை முறைகள் நிகழ்த்தப்பெறும். இவ்வாலயங்கள் யாவும் தொடக்க காலத்தில் எவ்வாறெல்லாம் இருந்தன என்பதனை முதற்கண் அறிதல் வேண்டும்:

சிந்து சமவெளிக் காலம் :

சுமார் 6000 ஆண்டுகளுக்குமுன் சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் சிறந்த நாகரிகத்தை உடையவர்களாகவும் சைவசமயச் சார்புடையவர்களாகவும் வாழ்ந்தனர். (சிவ வழிபாடு தொடங்கியதற்குக் கால வரையறை கூறமுடியாது. எனினும் 20,000 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது என சரித்திர வல்லுனர்கள் கூறுகின்றனர்) இப்பகுதியில் அகழாய்வு மேற்கொண்டதின் பயனாக 600க்கும் மேற்பட்ட சிவலிங்கத் திருமேனிகளும், யோகநிலையில் சிவன் திருவுருவம், நந்தி, சூலம் ஆகியனவும் கிடைக்கப்பெற்றன.

தொடக்க நிலை :

தொடக்க காலத்தில் மக்கள் தமது வாழ்க்கையோடு இயற்கையினை மறவாது ஞாயிறு (சூரியன்), திங்கள் (சந்திரன்) மரம் போன்ற இயற்கைப் பொருள்களைத் தெய்வமாக வழிபட்டனர். குறிப்பாக மக்கள் வழிபட்டுவந்த மரங்கள் யாவும் காலத்தால் முதிர்ந்து பட்டுப்போய் கிளைகள் எல்லாம் நீங்கி அடிமரம் மட்டும் எஞ்சி நின்றபோதும் தெய்வமாகவே எண்ணிப் போற்றி வழிபட்டனர். இத்தகைய அடிமரம் கந்தழி எனப்பட்டது. இத் திருவுருவமே சிவலிங்கத் திருமேனியின் தோற்றத்திற்கு அடிப்படையாகும்.

இறைஉருவம் :

மாலை நேரத்தில் மலைச் சிகரத்தினின்று அருவி வழிந்தோட, அதன் பின்னே செவ்வானம் மிளிர, அதனிடை நின்ற பிறையைக்கண்டு மக்கள் தொழுதனர். மேலும் இயற்கையாக அமைந்த மலைச் சிகரத்தைச் சிவனுடைய தலையாகவும், அருவியைத் தலை மேல் உள்ள கங்கையாகவும், செவ்வானப்பரப்பை அவிர்சடையாகவும், பிறையைச் சடைமேல் வைத்த பிறையாகவும் கொண்டு சிவனுக்கு வடிவம் கொடுத்தனர். இவ்வாறாக இயற்கைத் தோற்றத்திலிருந்துதான் சிவனுக்கு வடிவம் தோன்றியது என்ற கருத்தும் நிலவுகிறது. பின்னர் காலம் செல்லச்செல்ல மக்கள் தத்தமது மனநிலைக் கேற்ப மண், கல், உலோகம் இவற்றால் இறைவனின் உருவத்தினை அமைத்து வழிபடலாயினர்.

சிவலிங்க வடிவத்தினையே முதல் வடிவமாகப் போற்றி வழிபட்டு வந்த மக்கள் காலப்போக்கில் வேதாகம சிற்பசாத்திர வழிகளில் சொல்லப்பட்ட பல்வேறு நிலைகளில் (உருவங்கள்) இருந்துஅருள்பாலிக்கும் இறைவனை மண், மரம், கல், உலோகம், ஸ்படிகம், நவரத்தினக் கற்கள் முதலிய பொருள்களால் எண்ணற்ற திருக்கோலங்களில் அமைத்து திருக்கோயில்களில் வழிபடலாயினர். ஆனால் சிவவழிபாடு என்ற முறை உலகெங்கிலும் காணப்பட்டாலும், சிவனுக்குரிய ஆலயத்தின் கற்பக்ருஹத்தில் உள்ள சிவலிங்கம் மற்றும் மூர்த்திகள் சூக்ஷ்கம மூர்த்திகளாகும் கற்பக்ருஹத்தின் மேலே அமைந்திருக்கும் விமானம் அடித்தளம் முதல் ஸ்தூபி வரை உள்ளது ஸ்வாமியினுடைய ஸ்தூல ரூபமாகும். அதாவது உபான வர்க்கம் பாதமாகவும், ஜகதி குமுதம் முதலிய அதிஷ்ட்டான வர்க்கங்கள் கால்களாகவும், கபோதக வியாழ வர்க்கங்கள் சுவாமியின் வயிறாகவும், கண்டம் கழுத்தாகவும் சிகரம் முகமாகவும், ஸ்தூபி சிகையாகவும் ஆக விமான கோபுரங்கள் ஸ்வாமியினுடைய நின்ற ரூபமாகக் காட்சியளிக்கிறது. எண்ணற்ற திருக்கோலங்களைத் தன்னகத்தே கொண்ட திருக்கோயில்கள் யாவும் தமிழகத்தில்தான் இன்றும் நின்று நிலவுகின்றன. இத் தமிழகத்தின் திருக்கோயில்கள் எப்போது தோன்றின? அதன் மூலம் என்ன? தமிழகத்திற்கே உரிய கோயிற்கலையின் சிறப்பு என்ன? என்று பலவாறாக சிந்திக்க முற்படும்போது பல உண்மைகள் வெளிப்படுகின்றன.

திருக்கோயிலின் முந்தையநிலை :

''செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் இவை இல்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திர சித்தன் (மகேந்திர பல்லவன் - திருநாவுக்கரசர் காலத்தவன்) அமைந்த கோயில் இது'' என்னும் கல்வெட்டு மண்டகப்பட்டு என்னும் இடத்துக் கோயிலிற் காணப்படுகிறது. இதன் காலம் கி.பி. 615-630 ஆகும். இக்கல்வெட்டால் அறியத்தக்க செய்திகளாவன.

1. மகேந்திரன் காலத்திற்கு முன் தமிழகத்தில் கற்கோயில்கள் இல்லை. இருந்த கோயில்கள் யாவும் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் இவற்றால் ஆனவை.

2. மகேந்திரன் காலத்திற்கு முன்னரே தமிழர் கோயில் கட்டத் தெரிந்திருந்தனர். ஆயினும் அவையாவும் மண், மரம், முதலியவற்றாலாக்கப்பட்டு அழியத்தக்கனவாயின.

3. இங்ஙனம் அழியத்தக்க பொருள்களால் அமைந்த கோயில்களையே மகேந்திரன் கருங்கற்கள் கொண்டு அமைத்தனன்.

தரையும் சுவர்களும் செங்கற்களால் ஆனவை. மேற் கூரை மரத்தால் ஆனது. அங்கங்கு இணைப்புக்காக ஆணிகள் பயன்படுத்தப்பட்டன. இங்ஙனம் இயன்ற கோயில்களை கேரளாவில் காணலாம். இங்ஙனம் கோயில்களை அமைப்பதில் தமிழர் பண்பட்டிராவிடில் திடீரென கி.பி.7ஆம் நூற்றாண்டிலிருந்து பல கோயில்கள் தமிழ் நாட்டில் தோன்றிவிட்டன எனல் பொருளற்றதாய் விடும்.

விமானங்கள் தூயது, கலப்பு, பெருங்கலப்பு என மூவகைப்படும். கல், செங்கல், மரம் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டே அமைக்கும் விமானம் ''தூயவிமானம்'' எனப்படும்.

கல், சுண்ணாம்பு என்னும் இரண்டு பொருளைக் கொண்டு அமைவது கலப்பு விமானம் ஆகும்.

பல பொருள்களால் அமைவது ''பெருங்கலப்பு விமானம்'' ஆகும். இது கட்டடக் கலைநூற் கூற்றாகும். இதனால் பண்டைக் காலத்திற் கோயில்கள் இருந்தமையும் விமானங்களின் உண்மையையும் அறியலாம்.

தமிழகத்தில் மகேந்திரன் காலத்திற்கு முன்னரேயே கோயில்கள் இருந்தமையைக் கல்வெட்டுகளால் அறியலாம். திருக்கழுக்குன்றத்துச் சிவபெருமானுக்குக் ''கந்த சிஷ்ய பல்லவன்'' (கி.பி. 436-460) நிலம் விட்டதாகவும், அதனை ''நரசிம்மவர்மன்'' தொடர்ந்து நடத்தியதாகவும் ஆதித்த சோழன் கல்வெட்டு கூறுகிறது. ''தென்னவனாய் உலகாண்ட கோச் செங்கணான்'' (கி.பி. 450-500) திருவக்கரையில் பெருமானுக்கு ஒரு கோயில் கட்டியிருந்தான். அதிராசேந்திரன் அதனைக் கல்லால் புதுப்பித்தான்; செப்பியன் மாதேவியார் திருவக்கரைக் கோயிலைக் கல்லால் புதுப்பித்தார்; திருக்கோடிக்கா சிவாலயத்தின் செங்கல் விமானத்தையும் கருங்கல் விமானமாக அமைத்தார் என்ற செய்தியும் அக்கல் வெட்டால் அறியக் கிடைக்கின்றது.

சங்க காலத்துக் கோயில்கள் :

பண்டைத் தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்திலே வீரர் வணக்கத்திற்குரிய கோயில்கள் பல இருந்தன. முருகன், திருமால், காடுகிழாள் முதலிய தெய்வங்கட்குக் கோயில்கள் இருந்தன ''ஆலமர் செல்வற்கு நீல நாகம் நல்கிய கலிங்கத்தை, ஆய்வேள் அளித்தனன்'' என்று புறநானூறு புகலுகின்றது. இதனால் அக்காலத்தில் கோயில்களும், கடவுளாரின் உருவச் சிலைகளும் இருந்தமை நன்கு அறியலாம். கி.பி. 2-ஆம் நூற்றாண்டினதாகிய சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கோயில்களைப் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன.

பல்வேறு கோயில்கள் :

திருக்கோயில்கள். பெருங்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், கரக்கோயில், தூங்கானைமாடம் எனத் திருமுறைகளில் குறிக்கப்படுகின்றன. பொதுத்தன்மையில் தேவாலயம் என்றும், மிச்ராலயம் என்றும், சங்கீர்ணாலயம் என்றும் மூன்று வகைகளாகப் பிரிப்பர். முதன்முதலில் இயற்கையை வழிபட்டமக்கள் பின் இயற்கையழகும் அமைதியும் நிறைந்த இடத்தில் இறைவனது திருவுருவத்தினை அமைத்து வழிபடத் தொடங்கினர். சோலைகளிலும், மரநிழலிலும், குகையிலும் இறைவனது திருவுருவத்தை அமைத்து வழிபடத் துவங்கி, பின்னர் காலப்போக்கில் சிறு சிறு கோயில்களைக் கட்டினர். மனித உடலிலுள்ள தத்துவங்களுக்கு ஏற்பப் புறச்சின்னமாக அமைந்ததுதான் திருக்கோயில் ஆகமங்களின் துணைக் கொண்டு கோயிலைச் சுற்றி மதில் எடுத்து ஒருபுறம் வாயிலமைத்து அங்குக் கோபுரத்தையும் அமைத்தனர்.

கோபுரங்கள் யாவும் காலப்போக்கில் மூன்று நிலைகள், ஐந்து நிலைகள், ஏழு நிலைகள், ஒன்பது நிலைகள், பதினோரு நிலைகள், பதின்மூன்று நிலைகள் கொண்டனவாக அமைக்கப்பட்டன. கோபுரத்தை அடுத்துப் பலிபீடமும், அதற்கு அடுத்துக் கொடிக்கம்பமும், இறைவனின் வாகனமாக நந்தியும் காணப்படும். கருவறை மூலமூர்த்தி எழுந்தருளும் இடமாகும். திருக்கோயில்களில் நிகழும் அபிஷேகமும், அலங்காரம் நைவேத்தியம் முதலியனவும் திருவிழாக்களும் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன.

★ குறிப்பு : ''தமிழகத்துக் கோயில்கள்'' - டாக்டர். மா. இராசமாணிக்கம்.

கட்டடக்கலை : (கி.மு. 2500- கி.பி.300)

கட்டடக்கலையில் இந்திய நாடு தனிப்புகழ் பெற்று விளங்குகிறது. சிந்துவெளி நாகரிகத்தின் நகரங்களான, ஹரப்பா மொகஞ்சதாரோ, உலோகுஞ் சதாரோ, தகஞ்சோதாரோ, அலிமுராத்து, பாண்டிவாகி, அம்ரி போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்களின் அமைப்பு பண்டைக்கால மக்களின் கட்டடக்கலை அறிவை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

இந்தியக் கோயிற் பிரிவுகள் :

சிற்ப சாத்திரங்களின்படி இந்தியக் கோயில்களின் அமைப்பு முறையினை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை நாகரம், வேசரம், திராவிடம் என்பன. ''நாகரம்'' என்னும் அமைப்பு வட இந்தியக் கோயில்களில் குறிப்பாக விந்தியமலையின் வடக்குப் பகுதிகளில் காணப்படும். விந்திய மலையிலிருந்து கிருஷ்ணா ஆறு முடிய உள்ள பகுதிகளில் காணப்படும் கோயில்களின் அமைப்பு ''வேசரம்'' எனப்படும். கிருஷ்ணா ஆற்றிலிருந்து தெற்கில் காணப்படும் கோயிலமைப்பு ''திராவிடம்'' எனப்படும். திராவிடர்களின் கட்டடக் கலைக் கூறுபாடுகளும் வட இந்தியக் கோயிற் கட்டடக்கலைக் கூறுபாடுகளும் இணைந்ததே வேசரம் என்னும் அமைப்பு.

வேசரக் கலை அமைப்பு கி.பி.11 ஆம் நூற்றாண்டிலிருந்தே பெருமளவில் வளர்ந்தது. கோயில் அமைப்பு முறையில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் பெரும்பாலான அளவில் ஒரே அமைப்பு முறையையே இந்தியக் கோயில்கள் பெற்றுத் திகழ்கின்றன. நாகர வகைக் கோயில்கள் அடிமுதல் முடிவரை நாற்கட்ட அமைப்பைக் கொண்டனவாகவும், திராவிட வகைக் கோயில்கள் எண்கோண அமைப்பைக் கொண்டனவாகவும் வேசர வகைக் கோயில்கள் வட்ட அமைப்பைக் கொண்டனவாகவும் இருக்கும்.

திராவிடக் கலைப்பாணிக் கோயில்கள் :

திராவிடக் கலைப்பாணிக் கோயில்கள் சதுரமான கருவறையையும் அதனைச்சுற்றி வலம் வரும் திருச்சுற்றையும் கொண்டிலங்கும். கூம்பு வடிவ விமான அமைப்பு கீழிருந்து மேலாகக் கூம்பிச் செல்லும்.



ஆலயம் என்பது ஸ்வாமி கிடந்த நிலையாகும். கற்பக்ருஹம் ஆனது சிரசாகவும் அந்தராளம் முகமாகவும் சுகாசனமானது கழுத்தாகவும் தோள்களானது அர்த்தமண்டபமாகவும் மஹா மண்டபமானது வயிறாகவும் பிராகாரமானது கால்களாகவும் கோபுரமானது ஸ்வாமியுன் பாதமாகவும் இந்த மாதிரி ஸ்வாமியின் தேகத்தின் படி தேவாலயம் நிர்மானிக்கப்படுகிறது. ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியும் ஸ்வாமியின் அங்கங்களாகும். ஆகையால் ஆலயத்தின் எல்லா பகுதியும் ஆராதிக்கப்பட வேண்டியதாகும்.

1A

இவ்விமானங்கள் பல தளங்களைப் பெற்று விளங்கும் கூடு அமைப்பும், சாலை அமைப்பும் தளங்களில் காணப்படும். கழுத்து, தலை, முடி ஆகிய மூன்று உறுப்புகளும் விமானத்தில் காணப்படும். உருவ அமைப்பின் அடிப்படையில் விமானங்கள் ''விருத்த விமானம்'' ''சகுதவிமானம்'', ''அறுகோண விமானம்'', ''எண்கோணவிமானம்'', ''தூங்கானைமாடவிமானம்'', ''சத்தி நீளவிமானம்'' என ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிற்காலத் தென்னிந்தியக் கோயில்கள் தூண்மண்டபங்களையும், தூண்கள் கொண்ட சுற்றுப்பாதைகளையும் நுழைவாயிலில் கோபுரத்தையும் கொண்டு விளங்குகின்றன.

பல்லவர்காலக் கோயில்கள் :

கோயில்களின் தொன்மைமுறை பல்லவர்களுடைய காலத்திலிருந்துதான் காணப்படுகின்றன. பல்லவர் காலக் கோயில்களைக் குடைவரைக் கோயில்களென்றும், ஒற்றைக் கோயில்களென்றும், கட்டடக் கோயில்கள் என்றும் மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவைகளைக் குடைவித்த கோயில்களென்றும், செதுக்குவித்த கோயில்களென்றும், கட்டுவித்த கோயில்களென்றும் கூறலாம்.

பல்லவர்காலக் கோயில்களில் மிகவும் தொன்மையானவை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்தவை. இவன் காலத்தில் மண்டகப்பட்டு என்ற ஊரில் திருமால், நான்முகன், சிவன் ஆகிய மூவருக்கும் குடைவரைக் கோயில் குடைவரைக் கோயில் ஒன்று எடுக்கப்பெற்றது. அக்கோயிலை மரமின்றி; சுதையின்றி, உலோகமின்றி, செங்கலின்றித் தோற்றுவித்ததாக அங்குள்ள கல்வெட்டொன்றில் மகேந்திரவர்மன் குறிப்பிடுகிறான். இவனது காலத்தில் பெரும்பாலான குடைவரைக் கோயில்களில் வாயில் காப்போர் சிற்பங்கள் சிற்பங்கள் மட்டும் உள்ளன. திருச்சியிலுள்ள மகேந்திரவர்மனின் குடைவரைக் கோயிலில் கங்காதாரரின் சிற்பம் மிகச் சிறப்புடையது.

பல்லவ மன்னர்கள் குடைவரைக் கோயில்களை எடுத்தோடன்றிக் குன்றுகளைச் செதுக்கி பஞ்சபாண்டவ ரதங்களும், கொற்றவைக்கான குடிசை வடிவிலுள்ள கோயில்களையும், உருவாக்கினர். அவை மிகப்புகழ் வாய்ந்தவையாகும்.

இராசசிம்ம பல்லவன் காலத்தில் அமைக்கப்பட்ட மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில் உயர்ந்த விமானத்தையும் பலநிலைகளையும், திருச்சுற்றினையும் கொண்டு விளங்குவதோடு முழுவதும் கருங்கல்லால் அமைந்த திருக்கோயிலாகும். இத் திருக்கோயிலின் கருவறைப் பகுதியில் இலிங்கத்திற்குரிய இடமும், அதன் பின்புறச் சுவரில் (கருவறைச் சுவர்) சோமாஸ் கந்தர் திருவுருவ அமைப்பும் காணப்படுகின்றன.

மேலும் பல்லவர் காலக் கோயில்களிலேயே சிற்ப அழகுடன் மிகப்பெரிய கோயில் என்று கருதப்படுவது காஞ்சீபுரத்திலுள்ள கைலாச நாதர் கோயிலாகும். பல்லவர்காலக் கோயில்கள், கருங்கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பெற்றவை. செங்கற்களால் கட்டப்பெற்ற கோயில்களை கி.பி.8-ஆம் நூற்றாண்டிற்கு முன் காணமுடியவில்லை. கருங்கற் கோயில்களுள் இன்று நிலைத்திருப்பது கி.பி.7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கூரம் கோயிலாகும். இப்போது அக்கோயில் அடிப்பகுதி மட்டும் எஞ்சியுள்ளதனைக் காணலாம்.

சோழர்காலக் கோயில்கள் :

சோழர்களுடைய ஆட்சிக் காலத்தைத் தமிழகக் கோயில் வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம். விஜயாலயன் ஆட்சி முதல் முதலாம் இராசராசன் ஆட்சி வரை கோயிற் கட்டடக்கலை வரலாறு குறிப்பிடத்தக்கதாகவுள்ளது. பல்லவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கோயிற்கட்டுமானப் பணிகள்

★ தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி எட்டு

காண்போர் வியக்கும் வண்ணம் அழகும், கம்பீரமும் கொண்டு விளங்கும் கோயில்களும், கருங்கற்களே இல்லாத இடங்களில் கருங்கற்களினூடே செங்கற்களையும் கொண்டு வானளாவிய கோயில்களும் கட்டப்பட்டன.

சோழர்காலக் கோயில்கள் கி.பி.9, 10 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டவையாகும். இக் கோயில்களில் விளங்கும் சுதைச் சிற்பங்கள் யாவும் புராண இதிகாசச் செய்திகளை உணர்த்துவனவாக அமைந்து விளங்குகின்றன.

சோழர் காலத்திய திருக்கோயில்கள் பல இருப்பினும் தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், சிதம்பரம் திருப்புறம்பியம் கோயில்கள், கும்பகோணம் நாகேஸ்வரன் கோயில் மற்றும் திருவண்ணாமலை, திருவாரூர்க் கோயில்களில் அமைந்துள்ள கோபுரங்களும், விமானங்களும், சிற்பங்களும் சோழர்காலக் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

இரண்டாம் குலோத்துங்கள் காலத்திலிருந்துதான் கோயிலின் நான்கு புறங்களிலும் கோபுரங்கள் எடுக்கும் மரபு தொடங்கியது. சோழர்களுக்குப் பின்னர் விஜயநகர மன்னர்களும், நாயக்கமன்னர்களும் கோபுரங்களையும், மண்டபங்களையும், மண்டபத் தூண்களில் சிற்பங்களையும், நேர்த்தியாக அமைத்தனர் எனலாம்.

சிற்பக்கலை :

மனிதன் கண்ட கலைகளுள் மிகச்சிறந்த கலை சிற்பக்கலை ஆகும். இது காண்பவரின் மனத்தில் அமைதி, மகிழ்ச்சி, வியப்பு இம் மூன்றையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இக்கலை வளர்ந்து வருகிறது. முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்கலை தோன்றியதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

திருக்கோயில்களில் காணும் சிற்பங்கள் யாவும் காலத்தால் அழியாத கல், உலோகம் ஆகியவற்றால் செய்யப்பட்டன. இன்றும் வழிபடுவனவாக அவைகள் விளங்குகின்றன. மேலும் இவைகள் நமது முன்னோர்களின் நினைவுச் சின்னங்களாகவும் வாழ்க்கையின் வளத்தைக் காட்டுவனவாகவும் உள்ளன.

பயன்படு பொருட்கள்:

சிற்பங்கள் பொதுவாக கட்டடக்கலையுடன் (கோயிற்கட்டடக்கலை) தொடர்புடையனவாகும். ஏனெனில் இவ்விரு கலைக்கும் ஒரே மூலப் பொருள்கள்தாம் பயன்படுகின்றன. கண்ணால் கண்ட உருவங்களையோ கற்பனையான உருவங்களையோ வடிவமைத்துச் செய்வது சிற்பம் எனப்படும். கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை மெழுகு முதலான பொருட்கள் சிற்பம் செய்ய ஏற்றவை என்று பிங்கல நிகண்டு கூறுகிறது. இது தவிர, வெண்கலம், பொன், வெள்ளி, செம்பு முதலிய பிற உலோகங்களாலும் சிற்பங்கள் தயாரிக்கப்படுகின்றன.

சிற்ப வகைகள் :

சிற்பங்களின் வடிவமைப்பைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். முன் பின் வடிவழகோடு அமைக்கும் சிற்பம் முழுவடிவச் சிற்பம் என்றும் முன்புறம் மட்டும் காட்டும் சிற்பங்களை புடைப்புச் சிற்பம் என்றும் பிரிப்பர். திருக்கோயில்களின் முதன்மைத் தேய்வத் திருமேனிகளும் உற்சவ மூர்த்திகளும் முழுவடிவச் சிற்பங்களாக அமைப்பர்.

★ கல் (கருங்கல்) மரக்கல் பளிங்குக்கல் இவைகளாலான சிற்பங்கள் வழிபாட்டுக்குரியன. தந்தத்தினால் இறைத் திருவுருவங்களைச் செய்தாலும் அதனை வழிபடுவதில்லை. காட்சிப் பொருளாகவே கருதுவார்.


வடக்கு
சண்டிகேஸ்வரர்
பிரம்மா
விஷ்ணுதுர்க்கை
கிழக்கு
சிவன்
மேற்கு
லிங்கோத்பவம்
விநாயகர்
தக்ஷிணாமூர்த்தி
தெற்கு

சிவன் கருவறை கோஷ்ட்ட விக்ரகம் (பொது)


வடக்கு
பிரம்மி
துர்க்கை
மேற்கு
அம்மன்
வைஷ்ணவி
கிழக்கு
மாகேஸ்வரி
கணபதி
தெற்கு

அம்மன் கருவறை கோஷ்ட்ட விக்ரகம் (பொது)

தேவகோஷ்டங்களிலும் கோயிற் சுவர்ளிலும் அமைக்கப்படும் சிற்பங்கள் யாவும் படைப்புச் சிற்பங்களாக அமைப்பர். மாமல்லபுரத்து பகீரதன் தவத்தைக் காட்டும் சிற்பம், திருச்சி மலைக்கோட்டை கங்காதரர் சிற்பம் ஆகியவை பெரிய அளவினவான புடைப்புச் சிற்பங்களாகத் திகழ்கின்றன.

மூன்று பிரிவு :

இத்தகைய புடைப்புச் சிற்பங்களை உயர் புடைப்புச் சிற்பங்கள் என்றும், தாழ்புடைப்புச் சிற்பங்கள் (தூண்களின் காணும் மெல்லிய சிற்பங்கள்) என்றும் கூறுவர். மேலும் புடைப்புச் சிற்பத்தின் வடிவம் செதுக்கப்படும் பொருளின் மேற்பரப்பினும் உயரமாக பிதுங்கி நிற்கும். மேற்பரப்பைக் குடைந்து, வடிவம் அதனினும் தாழ்ந்து இருக்கும்படியாக அமைக்கப்படும். சிற்பம் குடைவுச் சிற்பம் எனப்படும்.

அளவு :

சிற்பங்களின் அளவு முறையானது ஏழுதாளம், எட்டுதாளம். ஒன்பது தாளம் என்ற முறையில் அமைக்கப்படும். சிற்பிகள் இறை வடிவங்களையும், ஏனைய உயிர்களையும், கற்பனைக் காட்சிகளையும் படைத்தாலும் இந்திய சிற்ப அமைப்பில் இறைவடிவங்கட்கே முதன்மை அளிக்கப்படுகிறது.

இறை உருவ அமைதிகள் :

சிற்பிகளும், அறிஞர்களும் பரம்பொருளாகிய இறைத் திருவுருவங்களை அமைக்கும்போது ''உருவம்'', ''அருவம்'', ''அருவுருவம்'' என்ற மூன்று நிலைகளில் அடக்கினார்கள். தலை, உடம்பு முதலான எல்லா அவயவங்களுடன் கண்களுக்குக் காணப்படுவது உருவம் என்றும், கண்களுக்குப் புலப்படாதது அருவம் என்றும், இரண்டும் கலந்தது அருவுருவம் என்றும் கூறுவர். மேலும் சிற்பங்களை இருத்தும் நிலையினை சலம், அசலம், சலாசலம் என்று மூவகைப்படுத்துவர். (சலம் -நிறுவப்பட்ட இடத்திலிருந்து அசைக்கக் கூடியது. அசலம் - நகர்த்த இயலாதது. சலாசலம் - இடம் விட்டு இடம் மாற்றக் கூடிய படிமங்களை மாற்றக் கூடாது என்னும் நோக்கில் நிறுவினால் அவை சலாசலம் எனப்படும்).

சிற்பங்களின் தோற்ற அமைப்பினை வைத்து ''அமைதி தோற்றம்'' (தட்சிணாமூர்த்தி), அச்சம் அகற்றி அருள் தரும் தோற்றம்'' ஆபரணங்களையும் ஆயுதங்களையும் தாங்கி நின்று காத்தருளும் முத்திரையினைக் காட்டும் சிற்பம். (- ஆறுமுகப் பெருமான்) ''அச்சுறுத்தும் தோற்றம்'' (மகிடாசுரமர்த்தனி, காலாரி மூர்த்தி திருவுருவங்கள்). இவை தவிர ஒருவரின் உருவத்தை உள்ளது உள்ளவாறு இயற்கையாகக் காட்டும் சிற்பங்களும் (கோனேரிராசபுரம், ஆனாங்கூர்கோயில்கள்) உண்டு.

இருகலைகள் :

திருக்கோயில்கள் யாவும் சிற்பக்கலையினையும், ஆடற்கலையினையும் தன்னகத்தே கொண்டு விளங்குவனவாகும். சிற்பங்கள் எல்லாம் நின்றாலும். அமர்ந்தாலும். கிடந்தாலும் வேறெந்த அமைதியில் தோன்றினாலும் பெரும்பாலும் ஆடற்கலை இலக்கணத்தையொட்டி அமைந்தனவாகும். சிற்பங்களைப் பொருத்த மட்டில் 1. கை அமைதிகள் 2. இருக்கை அமைததிகள், உடலின் வளைவமைதிகள், ஆகிய மூன்றும் ''ஆங்கிகா அபிநயம்'' எனப்படும். சிற்ப வடிவங்களையும் வழிபடு படிமங்களையும் அவ்வற்றிற்குரிய ஆடைகள், அணிகலன்கள், தலைக்கோலங்கள், ஆயுதங்கள் ஆகியவற்றைச் சேர்த்துச் செப்பம் செய்தல் ''அகார்ய அபிநயம்'' எனப்படும். உள்ளத்து உணர்வுகளைப் புருவம், கண், உதடு ஆகிய மூன்றில் மூலம் வெளிப்படுமாறு அமைப்பது ''சாத்வீக அபிநயம்'' எனப்படும்.

★ புள்ளமங்கை திருஆலந்துறை மகாதேவர் கோயில் மகாதேவர் கோயில் - குடைவுச் சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.


மேற்கு
கிழக்கு
தெற்கு
வடக்கு
சிவன்
விநாயகன்
சரஸ்வதி
பசுபதி
கௌரி

சிவனாலயம் 32 பரிவாரங்கள்


மேற்கு
கணபதி
புவனேஸ்வரி
தெற்கு
பத்ரகாளி
வடக்கு
சப்தமாதர்கள்
வீரபத்ரன்
மஹிஷாசுர மர்த்தினி
சாமுண்டி
க்ஷேத்ர பாலர்
கிழக்கு

பத்ரகாளி 8 பரிவாரங்கள்

இவ்வகையில் அமைக்கப்பட்ட சிற்பங்கள் ஒவ்வொன்றையும் சோழர்கள் தொடாத இடமே இல்லை என்று கூறலாம். பல்லவர்களைப் போலவே பெரியனவும் சிறியனவுமாகிய சிற்பங்களையும், நுண்ணிய வேலைப்பாடமைந்த சிற்பங்களையும் அமைத்து, தமிழகத் திருக்கோயில் கட்டடக்கலையையும் சிற்ப அழகினையும் உலகறியச் செய்த பெருமை சோழர்களைச் சார்ந்ததாகும்.

சிவவழிபாட்டுத் தொன்மை :

சிவாலயங்களின் கருவறையில் இலிங்கமே காணப்படும். இலிங்க வடிவினை அருஉருவ நிலையில் வைத்துப் போற்றுவர். இலிங்க வழிபாடு எப்பொழுது தோன்றியது என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன சர் ஜான். மார்ஷல் சிந்துவெளி நாகரிகம் நிலவிய இடங்களில் இலிங்கங்கள் பலவற்றைக் கண்டு பிடித்தார். டாக்டர். ஆர்.சி. பண்டர்கார் குறிப்பிடும் போது - ஆரியர்கள் இலிங்க வழிபாட்டை நாடோடி மக்களிடமிருந்து பெற்றனர் என்பார். எனவே இலிங்க வழிபாடு ஆரியருக்கும் மிகப்பழமையானது எனலாம். ஆய்வு செய்யும் பெரியோர்கள் 20,000 ஆண்டுகளுக்கு முன்னமே சிவவழிபாடு இருந்து வந்தது என்கின்றனர்.

சிவாலய அமைப்பு :

காரணாகமம் பிராகாரலட்சண விதிப்படி நிர்ணயம் செய்த தண்டக் சர்வதோபத்ரம் முதலிய கிராமங்களின் நடுப்பாகமாகிய ''பிரம்ம பதத்தில்'' திருக்கோயில்களை அமைத்திடல் வேண்டும். இந்த ஆலயங்கள் 2 முதல் 5 வரை சுற்றுப் பிரகாரங்களுடனும், நான்கு கோபுர வாயில்களுடனும், நடுவில் விமானங்களுடனும் அமைத்தல் வேண்டும் எனச் சைவாகமங்கள் விரிவாகக் கூறுகின்றன.

பூ பரிட்சை :

(முன்பு கூறியது போல) கர்ஷணம் (உழவு) செய்தல், சங்கு ஸ்தாபித்தல், வாஸ்து பதம் செய்து பூசித்தல் முதலிய சோதனைகளைச் செய்த பின்னர் ஆலயம் கட்டுதல் வேண்டும்.

சல்யோத்தாரம் :

திருக்கோயில் கட்ட நியமித்துள்ள பூமியை 25 அடி ஆழம் வெட்டி மண்ணை அப்புறப்படுத்திவிட்டு, ஓடு, கல், மயிர், எலும்பு முதலிய அசுபத்தைத் தரும்பொருள்களை நீக்கி நல்ல சுத்தமான மணலால் நிரப்புதல் வேண்டும். இவை 4 தண்டம் என அளவு காணப்படுகிறது.

இஷ்டிகாஸ்தாபனம் :

இதற்கு ஆத்யேஷடிகாஸ்தாபனம் என்று பெயர் (கால்கோல் விழா). நான்கு செங்கற்களைப் பூஜை, ஹோமம் முதலியன செய்து குறிப்பிட்ட ஸ்தாபனம் செய்ய வேண்டும்.

கர்ப்ப நியாசம் :

திருக்கோயிலின் மூல மூர்த்தி வைக்கும் இடத்திலும், கோபுரங்களில் கால்கள் நிறுத்து மிடத்திலும், சபைகள், மடங்களின் ஈசான்ய பாகத்திலும் விமானங்களில் ஸ்தூபியின் அடிப்பாகத்திலும் கர்ப்ப நியாசம் வேண்டும்.

தங்கம், வெள்ளி, செம்பு முதலியவைகளில் ஏதாவதொன்றால், நல்ல கனமுள்ள தகட்டால் 25 அறைகள் கொண்டதாக, ஒரு முழம் அல்லது அரை முழ அளவில் ஒரு பேழை செய்து அதில் நவரத்தினங்களும், தங்கம் முதலிய உலோகங்களும், ஹரிதாரம், வீரம், பூரம், ரசம் முதலிய தாதுப்பொருள்களும், எல்லா வகைத் தானியங்களும், 8 வகை மிருத்திகை (மண்)களும், ஓஷதிகளும், மற்றும் அஷ்டமங்கலக் குறிப்புகளைக் காட்டும் அடையாள சாமான்களும் வைத்து ஆகமங்களில் கூறியபடி பூஜை செய்து ஸ்தாபித்தல் வேண்டும்.

★ குறிப்பு : கை அமைதிகளின் (கர அமைதிகள்) பல்வேறு நிலையினை தட்சிணாமூர்த்தி முதற்பாகத்தில் காண்க. ஆதீன வெளியீடு எண் : 384

உபபீடம் அமைத்தல் :

குறிப்பிட்ட இடத்தில் திருக்கோயிலின் பிராசாதம், ஹஸ்தம் என்ற அளவையினால் 20-30-50 அளவுள்ள அகல நீளமுள்ள உத்தம பிராசாதம். 10-12-16 ஹஸ்த அளவுள்ளது மத்யம பிராசாதமாகும். 7-8-9 ஹஸ்தம் கொண்டது அதம பிராசாதமாகும். அப்படி (அளவு) நிர்ணயம் செய்த பிராசாதத்தின் அடிப்பரப்பை 25 பாகம் செய்து சம பங்கு கர்ப்பக் கிருகமும், 16 பங்கு சுற்றுச்சுவர் கனமும் உள்ளதாக அமைக்க வேண்டும். லிங்கத்தின் அளவைக் கொண்டு பிராசாதம் அமைக்கும் முறையில் மகா லிங்கத்தின் சுற்றளவு 3 கொண்டது பீடமாகும். அந்த பீடத்தின் அளவு 3 பங்கு கொண்டது கர்ப்பக் கிருக அகலமாகும்.

கர்ப்பக் கிருக அளவில் 3-ல் ஒரு பங்கு சுற்றுச் சுவராகும். அப்படி நிர்ணயம் செய்த கர்ப்ப கிருஹ அளவை 8 பாகம் செய்து, ஒரு பங்கு சேர்த்துக் கொண்டு உப பீடம் அமைக்க வேண்டும். உப பீடத்தின் உயரமும், அகலத்தின் 8-ல் ஒரு பாகமாக இருத்தல் வேண்டும். இந்த உபபீடம் ஸ்ரீகரம், லலிதம், பத்ரம் என மூன்று வகைப்படும்.


மேற்கு
சப்தமாதா
அகஸ்த்தியர்
பிரகஸ்பதி
துர்கா
சரஸ்வதி
நிருதி
விதி
பிரமா
தெற்கு
சுப்ரமணியர்
நாரதர்
வடக்கு
மஹாலக்ஷ்மி
அதிதி
பாஸ்கரன்
சந்திரன்
கிழக்கு

சுப்பிரமணியஸ்வாமி ஆலயம் பதினாறு பரிவாரம் குமாரதந்திரம்

அதிஷ்டானம் அல்லது பிராசாதம் :

அதிஷ்டானம், மசூரகம், விஸ்வதாரம், திருதாலகம் என்ற பெயர்கள் ஒரே பொருளுள்ளவைகளாகும். இது உபபீடத்தின் மேல், மேலே விமானத்தின் கீழ்பாகம் வியாளம் என்ற வர்க்கம் வரையுள்ளது.

இந்த அதிஷ்டானங்கள் சதுரமாகவும், விருத்தமாகவும், கோணங்களாகவும் இருக்கலாம். அதிஷ்டானம், பாதபந்தம் என்ற இரண்டு வகையாகக் காணப்படுகின்றது.

''பாதபந்தம்'' - என்ற வர்க்கம் பாதபந்தம், பத்மகம், பத்ம புஷ்கலம், பத்மாஸ்ம என்ற 4 பகுப்புகளுடன் கூடியது.

''பிரதிபந்தம்'' - என்ற வர்க்கம் பிரதிபந்தம், பிதிக்கிரமம், ப்ரகீர்ணகம், பிரதிசுந்தரம் என்ற நால்வகையாகும்.

ஆக எட்டு (8) பேதமுடையன அதிஷ்டான அமைப்புக்களாகும்.

காமிகாகமத்தில்:

காமிகாகமத்தில் - இந்த அதிஷ்டான வர்க்கம் பற்றிப் பல வேறு விதமான பஞ்சரங்களும், கர்ண கூடங்களும், கோஷ்டங்களும், முக சாலைகளும், உபரி சாலைகளும் காணப்படுகின்றன. இந்த அதிஷ்டானம் 5,8,12,16 என்ற கோஷ்டங்கள் என்ற அமைப்பில் காணப்படுகின்றது. சாதாரணமாக 8 கோஷ்டங்கள் உள்ள திருக்கோயில்களே அதிகமாக உள்ளன. முன் வாசலின் இரண்டு பக்கத்திலுமுள்ள கோஷ்டங்களில் துவார பாலகர்களும், ''தென்புறமுள்ள கோஷ்டங்களில்'' நிருத்த கணபதி, தட்சிணாமூர்த்தி, மேற்கு கோஷ்டத்தில் விஷ்ணு அல்லது இலிங்கோத்பவரும், வடக்கு கோஷ்ட மாடத்தில் பிரம்மா, துர்க்கையும், கோஷ்ட தேவதா மூர்த்திகளாகப் பிரதிட்டை செய்தல் வேண்டும். இந்த கோஷ்டத் திருமேனிகளின் லட்சணங்கள் பல நிலைகளில் வைத்து பூசிக்கப்படுகிறது. மேலும் தென் கோஷ்டத்தில் விநாயகர் விளங்குவார். அவருக்குப் பக்கத்தில்6 துர்வாசர் அல்லது, அகத்தியர் அல்லது ததீசி அல்லது புலத்தியர் அல்லது வசிஷ்டர், ஆகியோரில் எவராவது ஒரு ரிஷியின் திருமேனி பிரதிட்டை செய்யப்படும். சிலர் புலத்தியர் ரிஷிக்குப் பதிலாக கௌதமரைச் சொல்வர். இவர்கள் பஞ்ச ரிஷிகள் ஆவார்கள். இந்த ரிஷிகள் சிவனாரின் பஞ்ச முகத்திலிருந்து தோன்றியவர்கள். இவர்களின் வழியாக வந்தவர்கள் சிவாச்சாரியர்கள் ஆவார்கள்.

அர்த்த மண்டபம் :

இது கர்ப்பக் கிருகத்தின் முன்பக்கம் கருவரையின் பாதியளவாகவாவது / சரியளவாகவாவது அமைக்கலாம்.

மகாமண்டபங்கள் முதலியன :

அதற்கு வெளியில் மகா மண்டபம் அல்லது வேத மண்டபம். இது 4,2 ஸ்தம்பங்களுடன் கூடியதாக இருக்கலாம். இதற்கு வெளியில் உள்ளது ஸ்நபன மண்டபம். அதற்கு வெளியில் உள்ளவை விருஷப மண்டபம். அடுத்து நிருத்த மண்டபம். அதற்கு வெளியில் கோபுரத்துவாரமும் அமைத்தல், சாஸ்திர சம்மதம் ஆகும். மகா மண்டபத்திற்கு வெளியில் உள்ள மண்டபங்கள் 16,32,64,96,100 காவல்களுடன் கூடியதாகவும் சிற்ப சாத்திரங்கள் கூறுகின்றன.

அந்த மண்டபங்கள் நந்தியாவர்த்தம் 4 கால்கள், ஸ்ரீ பிரதிஷ்டிதம் 16 கால்கள், வீராஸனம் 20 ஸ்தம்பங்கள், ஜயபத்ரம் 32 தூண்கள், ஸ்ரீயாவர்த்தம் 36கால்கள், மாணிபத்ரகம் 64 கால்கள், விசாலம் 100 கால்கள் என்ற பெயர் உடையதாகும். மண்டபங்கள் எல்லாம் பிராசாத உயரத்திற்குக் குறைவாக இருக்கக்கூடாது. மேலும் பல மண்டபங்களை சிற்ப நூல்களில் காணலாம்.


கற்பக்ருஹம்
அர்த்த மண்டபம்
அந்தராளம்
மஹாமண்டபம்

இரண்டு நிலைகள் கொண்ட விமானத்துடன் கூடிய மண்டபங்கள்



கற்பக்ருஹம் அந்தராளம் அர்த்தமண்டபம் அந்தராளம் மஹாமண்டபம்
சோபானமண்டபம் பக்கத்தோற்றம்

தேவகோஷ்டங்களில் அமையும் திருமேனிகள் :

கிழக்கு பார்த்த சிவாலயத்தில் : முறையே 1. கணபதி, 2. தட்சிணாமூர்த்தி, 3. விஷ்ணு அல்லது இலிங்கோத்பவர், 4. பிரமன், 5. துர்க்கை முதலிய மூர்த்திகள் பிரதிட்டை செய்தல் வேண்டும்.

கணபதி ஆலயத்தில் : மேலே சொன்னபடியாகிலும் அல்லது முறையே 1. நிர்தன கணபதி, 2. தக்ஷிணகணபதி, 3. விஷ்ணு கணபதி, 4. பிரமகணபதி, 5. துர்க்கை முதலிய மூர்த்திகளை பிரதிட்டை செய்தல் வேண்டும்.

முருகன் ஆலயத்தில் : முதலில் சொன்னபடியாகிலும் அல்லது முறையே 1. கணபதி, 2. சுப்பிரமணியம், 3. ஸ்கந்தர், 4. குகன், 5. துர்க்கை முதலிய மூர்த்திகளை பிரதிட்டை செய்தல் வேண்டும்.

விஷ்ணு (திருமால்) ஆலயத்தில் முறையே 1. விஷ்ணு, 2. கணபதி, 3. நரசிம்மமூர்த்தி, 4. சீனிவாசப் பெருமாள், 5. பரமபதமூர்த்தி, 6. துர்க்கை முதலிய மூர்த்திகள்ள பிரதிட்டை செய்தல் வேண்டும் அல்லது 1. கணபதி, 2. லெட்சுமி, 3. நாராயணமூர்த்தி, 4. நரசிம்மமூர்த்தி, 5. துர்க்கை முதலிய மூர்த்திகளை பிரதிட்டை செய்தல் வேண்டும்.

5. விஷ்ணு ஆலயத்தில் விளங்கும் தாயார் சன்னிதிகளில் அஷ்டலட்சுமிகளைப் பிரதிட்டை செய்தல் வேண்டும்.

6. சிவாலயத்தில் விளங்கும் அம்பாள் ஆலயத்தில் அல்லது தனி அம்பாள் ஆலயத்தில் 1. கணபதி, 2. சாமுண்டி, அல்லது கௌமாரி, 3. வைஷ்ணவி, 4. பிராமணி, 5. துர்க்கை, இம்மூர்த்திகளை பிரதிட்டை செய்தல் வேண்டும்.

7. மற்ற ஆலயங்களுக்கு சிவாலயத்தில் இருக்கின்ற பிரதிட்டைப்படி செய்தல் வேண்டும்.

சிவபெருமானுக்கு அஷ்டபரிவாரங்கள்:

சிவபெருமானுக்கு எண்ணற்ற தேவர்கள் பரிவார மூர்த்திகளாக எழுந்தருளியிருந்து பணி புரிகின்றனர். இவர்கள் அனைவரையும் ஒன்றாக எழுந்தருளவைத்து ஆலயங்களில் வழிபட இயலாது. எனவே, எண்மரை மட்டும் தேர்ந்தெடுத்து ஆலயங்களில் எழுந்தருள வைத்து வழிபடுகின்றோம்.

இவர்கள் சூரியன், சப்தமாதர், விநாயகர், முருகன், அம்பிகை, சண்டேசுவரர், பைரவர், நந்தி ஆகிய எ்ண்மராவர். இவர்களுக்குச் சிவாலயத்தின் எட்டு திக்கிலும் சிற்றாலயங்களில் அமைத்து வழிபடுகிறோம். இவர்கள் ''அஷ்டபரிவாரங்கள்'' என்று அழைக்கப்படுகின்றனர்.

சோழர்கள் கட்டிய அனேக ஆலயங்களில் இந்த எண்மருக்கும் தனிச்சிற்றாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைப் பல ஆலயக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

காலப்போக்கில் இவர்களுக்குத் தனி ஆலயங்களை அமைக்கும் வழக்கம் கைவிடப்பட்டது. பதிலாக, கருவறையைச் சுற்றி அமையும் திருமாளிகைப் பத்தி மண்டபத்திலேயே உரிய திசைகளில் இவர்கள் நிலைப்படுத்தப்பட்டனர்.

சிவபெருமானுடன் அஷ்ட பரிவாரங்களை வழிபடுவது அனைத்துத் தேவர்களையும் வழிபட்ட பலனைத் தருவதாகும்.

அஷ்ட பரிவாரங்களைப் பூஜாபத்ததி நூல்கள் பல வகையாகக் கூறுகின்றன. இதில் விநாயகர், சூரியன், அம்பிகை, சண்டேசர், பைரவர் ஆகிய ஐவர் மட்டும் நிலையாக மாறாது உள்ளனர். மற்ற மூவர் பெயர் மட்டும் இடத்திற்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளது.

★ **குறிப்பு :** ''ஆலயவிக்ரக நிர்மாண ஆயாதி சிற்ப ரகசியம்'' பக்கம் 43,44,45 ஆதீன வெளியீடாகிய ''சோமாஸ்கந்தர்'' நூலில் ''திருக்கோயில் அமைப்பு'' பற்றி பக்கம் 23.34 வரை விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சோழ மண்டலத்திலுள்ள அனேக சிவாலயங்களில் சூரியன், சப்தமாதர், கணபதி, சுப்பிரமணியர், மகாலட்சுமி, சண்டீசர், பைரவர், சந்திரன் ஆகிய எண்மரும் அஷ்ட பரிவாரங்களாக அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.


ஸ்தூபி 1
சிகரம் 2½
கண்டம 1
பிரஸ்த்தரம் 1
கர்ணகூடம் 2
பிரஸ்த்தரம் 1¼
கர்ணகூடம் 2½
பிரஸ்த்தரம் 1½
கர்ணகூடம் 3
பிரஸ்த்தரம் 1-3/4
கர்ணகூடம் 3½
பிரஸ்த்தரம் 2
மொத்தம் 23
ஸ்தம்பம் 2
கல்காரம்
மொத்த உயரம்
கால்புறவாய்
அகலத்தில்
1 பங்கு
அதிஷ்டானம் 1
உபபீடம் 2

ஐந்து தள கோபுரம் முன் தோற்றம்

விமானம் :

பிராசாதம், விமானம், கோபுரம், மேரு என்ற பெயர்களால் அழைக்கப்பெறும். இது திராவிட, நாகர, வேசரம், என்ற மூன்று வகையாக 96 பேதங்களில் காணப்படுகிறது.

கழுத்து முதல் வட்ட வடிவமானது வேசரம், கழுத்தடி முதல் எட்டு பட்டையானது திராவிடம், எல்லாமும் சமசதுர வடிவம் நாகரம் எனப்படும். கைலாசம், மந்தரம், நளிநகம், ப்ரலீநகம் என்றெல்லாம் பல பேதங்களுடன் காணப்படுகின்றன.

★ குறிப்பு : சிவமஞ்சரி - பூசை. ஆட்சிலிங்கம்.

பிராகாரங்கள் :

அதிஷ்டானத்தைச் சுற்றியுள்ளது, அந்தர்ஹாரம். அதற்கு வெளியில் உள்ளது மத்யஹாரம். அதற்கு வெளியே மர்யாதி. அதன் வெளியில் மகாமர்யாதி என்று பெயர்.

அந்தர்ஹாரம் ஒரு தண்ட அளவும், மத்யஹாரமாகிய இரண்டாம் பிரகாரம் 2 தண்ட அளவும், மர்யாதி என்ற 3-வது பிராகாரம் 4 தண்ட அளவும், மகாமர்யாதி 7 தண்ட அளவுள்ளதாகவுமிருத்தல் வேண்டும்.

மகாமர்யாதிக்கு வெளியில் 4 கோபுர வாயில்கள் இருத்தல் வேண்டும். இரண்டாவது பிரகாரத்தில் அக்னி மூலையில் பாக சாலையும், ஈசானத்தில் யாகசாலையும், கிழக்கு ஈசான மத்தியில் கிணறும், கிழக்கு தென்கிழக்கு மத்தியில் வாத்தியசாலையும், மற்றும் சுற்றுப்புரங்களில் ஆயுத மண்டபம், புஷ்ப மண்டபம் முதலியனவும், குபேர திசையில் சயன ஸ்தானமும் இருத்தல் வேண்டும்.

பரிவார தேவதைகள் :

கோபுரத்தின் தெற்கே சூரியனும், அதற்குத் தெற்கே பாகசாலையும், தெற்குத்திக்கில் உமையவளும், சிறிது நிருதியை ஒட்டி மேற்கே சோமாஸ்கந்தரும், அதற்குத் தெற்கே விநாயகரும், மேற்குத் திக்கில் ஸ்கந்தரும், வாயுவில் லட்சுமியும், அதற்குக் கிழக்கே சண்டிகையும், வடக்கே மகிஷாசுரமர்த்தினியும், ஈசான உத்ர திக்கு மத்தியில் நடராஜப் பெருமானும், அதற்கு மேற்கே சந்திர சேகர மூர்த்தியும், வடக்கே கௌரீ ஆலயமும், நடேசரின் ஈசானத்தில் சயனாலயமும், கோபுரத்தின் வடக்கே க்ஷேத்திர பாலரும், அதற்கு வடக்கே யாகஸ்தானமும், இறைவன் திருமுன்னே இடப தேவரும், அதற்கு வெளியில் பலிபீடமும் அமைக்க வேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது. மேலும் விமானங்களில் உள்ள தேவர்களின் விவரமும் 2,3 பிராகாரங்களில் உள்ள தேவதைகளின் ஸ்தான நிர்ணயங்களும் கூறப்படுகின்றன.

ஏனைய திருமேனிகளின் பிரதிட்டை :

மேலும் அநேக திருமேனிகள் கோஷ்டம், ஆவரணம், திருமாளிகைப் பத்தி, கோபுரம், விமானம் மற்றும் மண்டபங்களில் கற்சிலைகளாகவோ, உலோகத்திலாகவோ, கதையினாலோ அல்லது ஓவியத்தினாலோ அமைக்கின்றன. அவைகள்,

கணபதி வடிவங்கள், முருகன் வடிவங்கள், சிவனாரின் 64 ரூபங்கள், சக்தியின் வடிவங்கள், சண்டேசுவரரின் பல திருமேனிகள், துர்க்கையின் வடிவங்கள், தட்சிணா மூர்த்தியில் உள்ள வடிவங்கள், இலிங்கோத்பவரில் பல திருமேனிகள், பிரம்மத் திருமேனிகள், மற்றும் சமயாச்சாரியர்கள், சந்தானச்சாரியர்கள், ரிஷிகள், சப்தமாதர்கள் விஷ்ணு படிமங்கள், 63 நாயன்மார்கள், அர்ந்த்தநாரி ரூபங்கள், பஞ்ச லிங்கங்கள், பஞ்ச பூதங்கள் பூசித்த லிங்கங்கள், 108 லிங்கங்கள், 1008 லிங்கங்கள், முகலிங்கங்களில் பல, இலக்குமி, சரஸ்வதி, ஜேஷ்டாதேவி, தலவிருட்சம், மிருகங்கள் மற்றும் உயிர்கள் பூசித்த லிங்கங்கள், அம்பிகை பூசித்த லிங்கங்கள், அரசர்கள் (சேர, சோழ, பாண்டிய) லிங்கங்கள், மானுட லிங்கங்கள், சுயம்பு லிங்கங்கள், பாணலிங்கங்கள், பைரவர், 64 பைரவர்கள், 64 யோகினிகள், வேதங்கள் பூசித்த லிங்கங்கள், இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி, டிண்டி, முண்டி, துவார சக்திகள், பலி பீடம், நந்தி, நந்தியின் பல்வேறு நிலைப்படிமங்கள், அஷ்டதிக் பாலகர்கள், அஷ்ட நாகங்கள், சதாசிவர், மகாசதாசிவர், ஈசானாதி முதலியோர், மகேசர், ருத்திரன், அஜர், ஏகபாதர், அகிர்புத்னர், விருபாட்சர், ரேவதர், ஹரர், பகுருபர், த்ரியம்பகர், சுரேச்வரர், ஜயந்தர், அபராஜிதர், மிருத்யுஞ்சயர், கிரணாட்சர், ஸ்ரீகண்டர், வித்யேசர்கள், அநந்தர், திரிமூர்த்தி, சூக்ஷ்மர்மர், சிவோத்தமர், சிகண்டி, ஏகநேத்ரர், அஷ்ட மூர்த்திகள், சர்வர், பீமர், பசுபதி, பவர், ஐயனார், பிரம்ம பிரதிகாரார்கள், அசுவினி தேவர்கள், அஷ்ட வசுக்கள், நாகதேவன், சாத்யர்கள், அசுரர்கள், அப்சரஸ்க்ள, பிசாசர்கள், வேதாளர்கள், சப்தரிஷிகள், பஞ்சரிஷிகள், சிவாசனம், கோமாதா, காமதேனு, கர்பக விருட்சம், ஸ்ரீ சக்கரம், சிதம்பரச் சக்கரம், மேரு, சதருத்திரர்கள் மற்றும் அரசர்களின் படிமம், அரசி படிமம், திருப்பணி செய்தோர் படிமம், சிற்பியின் படிமம் ஆகிய பல்வேறு திருமேனிகளும், படிமங்களும் பிரதிட்டை செய்யப்படுகின்றன.



விமானேசுவரர்



ஆலயங்களின் கோபுரங்கள், நிலைகள், (வாயில்) மற்றும் விமானங்களில் உமாமகேஸ்வரர், மகாலட்சுமி திருவுருவங்களை இன்றும் காணலாம். இது வழிபடும் அன்பர்களுக்கு சிவனருளால் மகாலட்சுமியின் மங்கலங்களைப் பெறுவதற்காக.

இவைகள் தல புராணங்கள் அடிப்படையிலும் ஆகம நியதிப்படியும் சிற்பிகளின் யுக்திப் படியும், வழிவழியாக வரும் சில அற்புதங்களின் படியும் கூட்டியும் குறைத்தும், காலத்திற்கு ஏற்ப நிலவுதலாகும்.

திருமேனிகளின் அளவு முறைகள் :

தச தாளப்படிமங்கள் : உத்தம தச தாளம் : பிரமன், விஷ்ணு, மகேசுவரன், அர்த்தநாரீஸ்வரர், தத்தாத்திரேயர், புத்தர், அருகன், (ஆர்ஹதர்), வாசுதேவன், சாயுஜ்யம் பெற்ற அடியார் படிமங்கள்.

மத்திம தச தாளம் : உமை, லட்சுமி, சரசுவதி, துர்க்கை, பூதேவி, ஜேஷ்டா, சப்தமாதர், இராமன், சாரூப்யம் பெற்ற அடியார் படிமங்கள்.

அதம தச தாளம் : இந்திரன், அக்னி, வருணன், அசுவினிதேவர், ஸ்கந்தன், வீரபத்திரன், க்ஷேத்திர பாலகர், ஈசானன், சாஸ்தா, சூரியன், சந்திரன், யமன், வாயு, சண்டேசுவரர், துவாதச ஆதித்யர், ஏகாதச ருத்திரர், மகரிஷிகள், பிருகு, மார்க்கண்டேயர், ஆர்யன், லட்சுமணன், சாமிப்யம் பெற்ற அடியார் படிமங்கள்

நவ தாளப்படிமங்கள் : உத்தம சவ தாளம் : தேவர்களும் அவர்தம் தேவியர்களும், அஷ்டமூர்த்திகள், அஷ்டவசுக்கள், லோக பாலகர்கள், நிருதி, மகாகோடி, குபேரன், மன்மதன், நாகேந்திரன், கருடன், வசிஷ்ட்டன், விசுவாமித்திரர், பார்கவன், குரு, சுக்கிரன், சனி, ராகு, செவ்வாய், சாலோக்யம் பெற்ற அடியார் படிமங்கள்.

மத்திம நவ தாளம் : அஸ்திரமூர்த்திகள், யக்ஷர்கள், அப்ஸரசுகள், மருத்கணங்கள், வித்யாதரகணங்கள்.

அதம நவ தாளம் : அசுரர்கள், சித்தர்கள், கந்தருவர்கள், பித்ருக்கள்

அஷ்டதாள படிமங்கள் : மனிதப்படிமங்கள், காஸ்யபர், பிருகு, ஆழ்வார்கள்.

சப்த தாளப் படிமங்கள் : மனித வடிவங்கள், ரிஷிகள், மத்திம சப்ததாளம் – அகத்தியர், அனுமான்

ஷட்தாளப் படிமங்கள் : குள்ளர்கள்

பஞ்சதாளப் படிமங்கள் : உத்தமபஞ்சதாளத்தில் – விநாயகர், பாலஸ்கந்தர், வாமனமூர்த்தி, மத்திம தச தாளத்தில் – பூதங்கள், அதம தசதாளத்தில் – பாலகிருஷ்ணன்

சதுஸ்தாளப் படிமங்கள் : பாலர், வானரங்கள்

திரிதாளப் படிமங்கள் : கின்னரர், கிம்புருடர்

துவிதாளப் படிமங்கள் : மச்சவதார மூர்த்தம்

ஏகதாளப் படிமங்கள் : ஆமை, முட்டைகூர்மாவதாரம், கபந்தங்கள் (தலையில்லா முண்டங்கள்)

சகளத் திருமேனியில் பொது இலக்கணம் :

படிமங்கள் தெய்வக்களையோடு விளங்க நான்கு சிறந்த அம்சங்களைச் சிற்பிகள் கருத்திற் கொண்டு கடவுட் படிமங்களை இயற்றுதல் வேண்டும். அவை முறையே உடல், முகம், கண், மூக்கு, நான்கினைப் பற்றியதாகும்.

உடல் :

அவயங்கள் உருண்டு திரண்டு, நீண்டும், அகன்றும், முழுமையான வளர்ச்சியுடையதாயும், சதைப்பற்றுடையதாயும் அமைதல் வேண்டும்.

முகம்:

சிருங்கார ரசமும், சாந்த பாவமும், அழகும் முழுமையும் கொண்டு மலர்ச்சியுடையதாய் முகம் விளங்க வேண்டும்.

கண் :

அகன்று, நீண்டு மலர் போன்று, கண்கள் அமைதல் வேண்டும்.

மூக்கு :

நேரியதாயும் எடுப்பாகவும் மூக்கு அமைதல் வேண்டும்.

இந்நான்கு கூறுகளும் ஒரு படிமத்தில் செம்மையாக அமையின் அது வியத்தகு அழகுப் படிமமாக விளங்கும்.

மத்திம தசதாளத்தில் அமையும் பெண்மானம் படிமத்தில் காணும் உறுப்புக்களும் சாயல்களும் :

உறுப்புகள்		**சாயல்கள்**
1. சுருண்ட தலைமுடி	-	வண்டுக்கூட்டம், கூந்தற்பனை
2. தலைப்பின்னல்	-	கரும்பாம்பு - வண்டுகளின் வரிசை
3. நெற்றி	-	பிறை - அட்டமிப்பிறை
4. புருவம்	-	வில்
5. கண்கள்	-	குவளைமலர், தாமரை, அம்பு, வேல், கெண்டை மீன்.
6. மூக்கு	-	எள்ளுப்பூ
7. மூக்குப்புடை	-	பாகல் விதை
8. முகம்	-	முழுமதி, மலர்ந்ததாமரை, முட்டை வடிவம், எள்ளின் வடிவம், மாங்காய் வடிவம்.
9. காது	-	சங்கு, கத்தரி, விதை நீங்கிய (மொச்சை) தோலுறை
10. உதடு	-	கோவைப்பழம் (நிறம்)
11. பல்	-	முத்து, முல்லையரும்பு
12. முகவாய்	-	முத்துச்சிப்பி
13. கழுத்து	-	வலம்புரிச்சங்கு, கழுகு
14. மேற்கையும் முன் கையும் சேர்ந்தால்	-	பனங்கிழங்கு, பசுவின்வால், பனை
15. கைவிரல்	-	களிற்றுமீன், காந்தள் மலர்
16. நகம்	-	கிளிமூக்கு, பிறைமதி
17. ஸ்தனம்	-	பூச்செண்டு, நீர்க்குமிழி, குறும்பை, சொற்கோட்டான் காய், தாமரைமொக்கு, இளநீர், யானை மத்தகம், செப்பு
18. உடல்	-	சிங்கமும்
19. முலைக்கண்	-	நவமணி
20. வயிறு	-	ஆலிலை
21. நாபி	-	நீர்ச்சுழி
22. வயிற்றின் மடிப்பு	-	அலை
23. இடுப்பு	-	துடி, வச்சிரப்படை
24. நிரம்பம் (அல்குல்)	-	அரசிலை, பாம்பின் படம்
25. ஜானம் (புட்டம், குண்டி)	-	மணல்மேடு
26. தொடை	-	வாழைத்தண்டு, யானைத்துதிக்கை
27. முழங்கால்	-	நண்டு
28. சணைக்கால்	-	விரால்மீன், அம்பறாத்தூணி
29. பாதம்	-	ஆமை
30. கால்விரல்	-	அட்டை


ஸ்தூபி 1
சிகரம் 2½
கண்டம் 1
பிரஸ்த்தரம் 1
கர்ணகூடம் 2
பிரஸ்த்தரம் 1¼
கர்ணகூடம் 2½
பிரஸ்த்தரம் 1½
கர்ணகூடம் 3
பிரஸ்த்தரம் 1-3/4
கர்ணகூடம் 3½
பிரஸ்த்தரம் 2
மொத்தம் 23
ஸ்தம்பம் 2
கல்காரம் மொத்த உயரம் கால்புறவாய் அகலத்தில் 1 பங்கு
அதிஷ்டானம் 1
உபபீடம் 2

ஐந்து தள கோபுரம் பக்கத் தோற்றம்

சிவனும் திருமாலும் :

சைவர்களால் கோயில் என்று கொண்டாடப்படும் சிதம்பரம், நடராசர் ஆலயத்துள் கோவிந்தராசப் பெருமாள் பள்ளி கொண்டிருப்பதைக் காண்கிறோம். இது நடு நாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகும். இங்குத் திருமால் குலசேகர ஆழ்வாருக்கு இராமபிரானாகக் காட்சியளித்தார். அதனால் அவர் இங்கு அருளிச் செய்த பாசுரத்துள் இராமாயணக் கதை முழுவதும் வரும்படிப் பாடியுள்ளார். இதையொட்டி இப்பாசுரம் குலசேகர ராமாயணம் என்று அழைக்கப்படுகின்றது.

சோழநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று உத்தமர் கோயிலாகும். இது திவ்யப் பிரபந்தத்துள் கரம்பனூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இது திருச்சிக்கு அருகில் உள்ளது. இங்குள்ள திருமால் உத்தமர் என்று அழைக்கப்படுகின்றார்.

"மகேஸ்வரி"



"மகாலட்சுமி"

நன்றி:- (South Indian Art Centre, T. Ramalingam, Stapathy - Swamimalai.)

இதனுற் திருமால் சந்நிதிக்கு வலது புறம் பிச்சாண்டார் என்ற சிவாலயமும், இடது புறம் தசரதேசுவரர் என்ற சிவாலயமும் உள்ளன. சிவாலயப் பரிவார தேவர்கள் அனைவரும் இங்கு எழுந்தருளியுள்ளனர். பிச்சாண்டேசுவரர் சௌந்தர நாயகிக்குக் கொடியேற்றிப் பெருந்திருவிழாவும் கொண்டாடப்படுகின்றது. இங்கு பிரம்மா - சரஸ்வதிக்குத் தனிச் சந்நிதிகள் இருப்பதால் இதனை மும்மூர்த்தித் தலம் என்றும் குறிக்கின்றனர்.

பாண்டிய நாட்டுத் திருப்பதியான திருக்கோட்டியூர் வைணவ வரலாற்றில் தனியிடம் பெற்ற திருத்தலம். இங்குள்ள திருமாலின் திருப்பெயர் உரகமெல்லணையான் என்பதாகும். மூன்றடுக்காக அமைந்த இந்தத் திருக்கோயிலின் முதல் அடுக்கிலுள்ள திருமாமணி மண்டபத்துள் சிவபெருமான் சரபேசுவரராகக் காட்சியளிக்கின்றார். இவர் சுயம்பு மூர்த்தியாவார்.

பாண்டிய நாட்டுத் திருப்பதியான அழகர் மலையில் சுந்தராஜப் பெருமான் என்னும் அழகர் கோயில் உள்ளது. இதில் ஈசானபாகத்தில் சிவபெருமான் பைரவ மூர்த்தியாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். இந்தத் திருப்பதியில் விபூதி பிரசாதமாக அளிக்கப்படுகிறது.

பாண்டிய நாட்டுத் திருப்பதியான குறுங்குடியில் திருமால் நிற்றல் இருத்தல், கிடத்தல் ஆகிய கோலம்

சிவனின் கட்டளைப்படி :

சிவனருளால் உலகினை வழிநடத்தத் தோற்றுவிக்கப்பட்ட ஆதிமூர்த்திகள். பிரம்மா, திருமால், உருத்திரர், மகேசர், சதாசிவர் என்னும் ஐவராவர். இவர்களில் உலகிலுள்ள உயிர்களைக் காக்கும் கடவுளாகத் திருமால் திகழ்கின்றார்.

உலகப் படைப்பின் தொடக்கத்தில் இவருக்கு ஆதிசிவனால் காத்தல் தொழிலும், பஞ்சாயுதங்களும் இரமா முதலிய தேவியர்களும் பரமபதமும், திருப்பாற்கடலும் அளிக்கப்பட்டன.

இவர் உலகினைக் காக்கவும், தீயசக்திகளான அசுரர்களை அழிக்கவும், அன்பர்களுக்கு அருளவும் அனேக அவதாரங்கள் எடுத்தார். அந்த அந்த அவதாரங்களில் சிவபெருமானை ஆராதனை செய்து அருள் பெற்றார்.

ஆதி மும்மூர்த்திகளில் ஒருவரான திருமால் அதியுன்னத வீரமூர்த்தியாவர். உலகில் தீய சக்திகளான அசுரர்களை அழித்துத் தர்மத்தை நிலை நாட்டுகின்றார். அதே சமயம் சிவபெருமானை ஆராதனை செய்து மகா தபசியாகத் திகழ்கின்றார். திருமாலின் அவதாரமான கண்ணன் தனது சிவயோக பாவனையால் சிவபெருமானாகவே இருந்ததாக மகாபாரதம் கூறுகிறது.

சிவவழிபாட்டில் திருமாலையும் சேர்த்தே வழிபடுகின்றோம். திருமாலை உமாதேவியின் புருஷ ரூபமென்றே சைவர்கள் குறிக்கின்றார்கள். சைவர்கள் போற்றும் ஏழு குருமார்களில் ஒருவராகத் திருமால் திகழ்கின்றார்.

திருமால், தேவவடிவத்துடனும், அவதாரக் கோலங்களிலும் சிவவழிபாடு செய்ததை அனேகபுராணங்களும் இதிகாசங்களும் சிறப்புடன் கூறுகின்றன.

சிவாலயங்களில் திருமால் :

சைவமும் வைணவமும் இந்நாளில் இரண்டு பெரிய பிரிவுகளாக இருந்தபோதிலும் சைவர்கள் திருமாலைச் சிவாலயத்துள் வைத்துச் சிறப்புடன் வழிபடுகின்றனர். குறைந்தபட்சம் சிவாலயத்துள் கருவறையின் மேற்குக் கோட்டத்திலாவது திருமாலை எழுந்தரள வைத்து வழிபடுகின்றனர்.

ஆயிரக்கணக்கானச் சிவாலயங்களில் கருவறை மேற்குக் கோட்டத்தில் திருமாலைக் காண்கிறோம். இங்குத் திருமால் சங்கு சக்கரம் அபய முத்திரை, ஊரு முத்திரைகளைத் தாங்கி நின்றவாறு காட்சியளிக்கின்றார்.

சிவதலங்களில் கருவறைமேற்குக் கோட்டத்தில் அண்ணாமலையாரை (லிங்கோற்பவரை) அமைத்து அவருக்கு நேர் எதிரில் திருமாலை அமைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்தில் மேற்குப் பிராகாரத்தில் வேறு கோபாலர் ராதா ருக்மணி தேவியரோடு எழுந்தருளியிருப்பதைக் காணலாம்.

சிவ தலங்களில் சிவாலயத்திற்குள்ளேயே திருமாலின் ஆலயம் உரிய பரிவாரங்களுடன் அமைந்திருப்பதைக் காண்கிறோம். இவற்றில் சில ஆழ்வாராதிகளால் மங்களாசாசனம் செய்யப்பெற்றவையாகும்.

கருவறைக் கோட்டங்களிலும் தனிச்சந்நிதிகளிலும் அமைப்பதைத் தவிர ஸ்ரீவிமானங்களிலும் கோபுரங்களிலும் திருமாலின் திருவுருவம் இடம் பெற்றுள்ளதை காண்கிறோம். இவற்றின் மேற்கு நோக்கிய பகுதிகளில் திருமால் தசாவதாரங்கள், கண்ணனின் பலலீலைகளான காளிங்க நர்த்தனம். கோபிகை வஸ்திர அபகரணம், மலையைக் குடையாகப் பிடித்து ஆநிரை காத்தல், முதலியனவும் ராமாயணக் காட்சிகளுடம் இடம் பெறுகின்றன.

திருமாலின் திருவுருவங்கள் மட்டுமின்றி அவரது பரிவாரங்களான கருடன், அனுமன், ஜாம்பவான், சுக்ரீவன் முதலான பலருடைய திருவுருவங்கள் அமைத்துள்ளதையும் காண்கிறோம்.

சிவபெருமானின் மேற்கு நோக்கிய முகம் சத்யோஜாதம் எனப்படும். இது வீரமும், நளினமும் கலந்த முகமாகும். இந்த முகத்திலிருந்தே திருமால் ஆதியில் தோன்றினார். இதையொட்டிய கருவறையின் மேற்குக் கோட்டத்தில் திருமால் எழுந்தருளி வைக்கப்பட்டு வணங்கப்படுகின்றார். இதையொட்டி திருமால் மேலை ஆழ்வார், மேலைப் பெருமாள் எனப்பலவாறு அழைக்கப்படுகின்றார்.

புகழ்பெற்ற பல சிவாலயங்களுக்குள் திருமால் ஆலயம் தனிச்சிறப்புடனும் உரிய பரிவாரங்களுடனும் அமைந்திருக்கக் காண்கிறோம். அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம். இவற்றில் சிலவற்றை வைணவ ஆகம முறைப்படி வைணவ அர்ச்சகர்களே பூசிக்கின்றனர்.

திருத்தலம்		**திருமாலின் பெயர்**
திருவோத்தூர்	-	ஆதிகேசவர்
கச்சி ஏகம்பம்	-	நிலாத்துண்டப் பெருமாள்
திருச்செங்கோடு	-	ஆதிகேசவப் பெருமாள்
சிதம்பரம்	-	தில்லை கோவிந்தராசர்
சிக்கல்	-	கோலவாமனர் (சுயமாதவர்)
திருநணா (பவானி)	-	ஆதிகேசவர்
திருநாவலூர்	-	வரதராசர்
திருநெல்வேலி	-	நெல்லை கோவிந்தராசர்
பழனம்	-	வேணுகோபாலர்
பாண்டிக்கொடுமுடி	-	வீரநாராயணப் பெருமாள்
திருப்பத்தூர்	-	யோகநாராயணர்
திருவக்கரை	-	வரதராசர்
சுசீந்தரம்	-	அமரபுஜங்கப் பெருமாள்
இராமேசுவரம்	-	பள்ளிக்கொண்ட பெருமாள்
கண்டாச்சிபுரம்	-	இராமர்
மயிலைவெள்ளீச்சரம்	-	உலகளந்த பெருமாள்

திருமால் சிவலிங்கமானது :

குற்றாலத்தில் இருந்த திருமால் வடிவை அகத்தியர் சிவலிங்கமாக மாற்றினார் என்று அவ்வூர்த்தல புராணம் கூறுகின்றது. அப்படியில்லாமல், திருமால் சிவமந்திரங்களைக்கேட்டு மனம் உருகித்தானே சிவலிங்கமாகி விட்டதைக் காஞ்சிபுரத்தில் காண்கிறோம்.

காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையத்தின் மேற்கில் அமைந்திருப்பது திருமேற்றளீசுவரர் ஆலயம் ஆகும். இது திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற பதியாகும். இந்த ஆலயத்துள் மற்றொரு ஆலயமும் உள்ளது. அதில் ஓதவுருகீசர் என்ற பெயரில் சிவலிங்கமாகச் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். அவருக்கு முன்பாகத் திருமாலின் திருவடிகள் உள்ளன. காஞ்சிபுராணத்தின்படி, இங்குத் திருமால், வேதத்திலுள்ள உருத்திரமந்திரங்களை ஓதக் கேட்டு உருகித்தானே சிவலிங்க வடிவமாகிவிட்டார் என்று கூறப்படுகின்றது. மேலும் திருமால், திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப்பாடல்களைக் கேட்டு உருகிச் சிவலிங்க வடிவம் பெற்றார் என்றும் கூறுவர். இக்கோயிலுக்கு நேர் எதிரில் திருஞானசம்பந்தர் ஆலயம் உள்ளது.


சிவலிங்கத்திலிருந்து சிவபெருமான்
திருமாலாக வெளிப்படுதல்
நன்மங்கலம், ஏகாம்பரேசுவரர் ஆலயம்

சிவபெருமான் திருமாலாகக் காட்சியளித்தல்:

குற்றாலத்திலும், காஞ்சிபுரத்திலும் திருமால் சிவலிங்கமானதைப் புராணக் கதைகள் கூறுகின்றன. இதற்கு மாறாகச் சிவலிங்கம் திருமாலாகத் திருவுருவம் தாங்கி அருள் பாலித்ததையும் காண்கிறோம். அது நடைபெற்ற இடம் காஞ்சிபுரத்தை அடுத்துள்ள திருப்பாற்கடல் ஆகும்.

சென்னை - பெங்களூர் சாலையில் காஞ்சிபுரத்திற்கு மேற்கில் உள்ள காவேரிப்பாகத்திலிருந்து 3கி.மீ. தொலைவில் திருப்பாற்கடல் என்னும் சிற்றூர் உள்ளது. இங்குச் சிவன் திருமால் வடிவம் கொண்டு நிற்குமிடம் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் ஆலயமாகத் திகழ்கிறது. மூலத்தானத்தில் ஆவுடையாமீது (உருத்திர பாகத்திற்குப் பதிலாக) திருமால் நின்றுள்ளார்.

இதற்கான காரணம் வருமாறு :

தென்னாட்டில் ஒரு வைணவ அன்பர் இருந்தார். அவர் திருமால் ஆலயம் சென்று திருமாலைத் தரிசித்த பிறகே உணவு உண்பது வழக்கம். ஒருநாள் அவர் இப்பகுதிக்கு வந்தார். அவர் தரிசிக்கத் திருமால் ஆலயம் இங்கே இல்லை. எனவே, அவர் உணவு உட்கொள்ளாது இருந்தார். நான்கு நாட்களாயின. திருமாலைத் தரிசிக்க முடியாததால் நான்கு நாளும் அவர் உணவு உண்ணவில்லை. அவருடைய பக்தியை மெச்சிய சிவபெருமான் அவருக்கு அருள்புரிய எண்ணினார். வயோதிக வடிவம் தாங்கி வைணவ அன்பரிடம் சென்று, ஐயா, தங்களுக்கு உணவு நேரம் ஆகிவிட்டது அருகில் திருமாலின் ஆலயம் உள்ளது. அதைத் தரிசிக்கலாம் வாருங்கள் என்றார். அவர் ஐயா அது சிவாலயம் அங்கு நான் வரமாட்டேன் என்றார்.

அப்போது பெரியவர், அது திருமால் ஆலயமே என்னுடன் வாருங்கள் என்று வற்புறுத்தினார் அவருடைய வற்புறுத்தலால் வைணவ அன்பர் அந்தக் கோயிலுக்குள் வந்தார். அங்கு ஆவுடையாரின் மீது திருமால் நிற்பதைக் கண்டு அதிசயித்தார். அப்போது உடன் வந்தவர் மறைந்து விட்டார். அந்த அன்பர் சிவனும், திருமாலும் ஒருவரே என்பதை உணர்ந்து கொண்டார்.

அன்று முதல் இங்குச் சிவபெருமான் திருமாலின் வடிவிலேயே காட்சியளித்துக் கொண்டிருக்கின்றார்.

சிவ வழிபாட்டில் மகாலட்சுமி :

சிவவழிபாட்டுடன் மகாலட்சுமி வழிபாடு இணைந்தேயுள்ளது சிவாலயங்கள், யாகசாலைகள், முதலியவற்றின் வாயில்களின் மீது மகாலட்சுமியை நிலைப்படுத்தி வணங்குகின்றனர் கஜலட்சுமியாக விளங்கும் அந்தத் திருமகளுக்கு வாயிலைத் திறக்கும்போதும் பூட்டும் போதும் மந்திரபூர்வமாகப் பூசை செய்யப்படுகிறது.

சிவாலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகம், பெருந்திருவிழா ஆகியவற்றிற்கு முன்பாகத் தனபூசை எனும் பெயரில் லட்சுமி பூசை நடத்தப்படுகிறது.

சிவாலய குடமுழுக்கு விழாவில் அமைக்கப்படும் யாகசாலைக்கு நாற்புறமும் நான்கு வாயில்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றின் மேலும் மகாலட்சுமி தோரண சக்தியாக வீற்றிருக்கிறாள். இவளுடைய வடிவங்களுக்கு சாந்திலட்சுமி, பூதிலட்சுமி, பலலட்சுமி, ஆரோக்ய லட்சுமி என்ற பெயர்கள் வழங்குகின்றன. மேலும் சிவபெருமானுக்கு அமைக்கப்படும் வேள்விச் சாலைகளின் வடமேற்குதிக்கில் மகாலட்சுமியைக் கலசத்தில் எழுந்தருளி வைத்து பூசிக்கின்றனர். இவளுக்கு மண்டலரூபலட்சுமி என்பது பெயர்.

அம்பிகைக்கு அமைக்கப்படும் வேள்விச் சாலைகளில் லட்சுமியை வடமேற்கு திக்கில் மண்டல ரூபலட்சுமியாகவும் தென்மேற்கு முனையில் (வான மண்டலத்தைக் காக்கும்) ஊர்த்துவ திக்பாலகியாகவும் பூசிக்கின்றனர்.

பொதுவாக வழிபாட்டில் யாகசாலைகளே மகாலட்சுமியின் வடிவம் என்பதால் விநாயகர், சுப்பிரமணியர், முதலியோருக்கு அமைக்கப்படும் வேள்விச்சாலைகளிலும் வடமேற்கு முனையில் அவளை மண்டபரூபலட்சுமி எனும் பெயரில் எழுந்தருளி வைத்துப் பூசிக்கின்றனர்.

சோழர்கள் தாங்கள் அமைத்த சிவாலயங்களில் பெருமானுக்குரிய அஷ்டபரிவாரங்களில் ஒருத்தியாக மகாலட்சுமியை அமைத்து வழிபட்டனர். தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் அமைந்துள்ள அனே சோழர்காலச் சிவாலயங்களில் பிராகாரத்தின் வடமேற்கு முனையில் தனிச்சந்தியில் கிழக்கு நோக்கி அமர்ந்துள்ள கஜலட்சுமியைக் காண்கிறோம்.

கதையால் அமைத்து வண்ணம் தீட்டியுள்ள இந்த கஜலட்சுமி வடிவங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

ஒருமுறை லட்சுமி செய்த தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் பத்துக்கரங்களுடன் அவள் முன்னே தோன்றி நடனமாடினார். அந்தத் தாண்டவம் லட்சுமி தாண்டவம் என்றழைக்கப்படுகிறது. இதனை திருப்புத்தூர் புராணம் விரிவாக கூறுகிறது. இவ்வூரில் திருமகள் சிறப்புடன் சிவனை வழிபட்டதால் அவள் பெயரால் ஆலயம் ஸ்ரீ தளி என்றும், ஊர் திருப்புத்தூர் என்றும், திருக்குளம் ஸ்ரீதளி லட்சுமி தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகின்றன.

திருமகள் அனேக தலங்களில் சிவனை வழிபட்டுப் பேறுபெற்றாள். அத்தலங்களில் அவள் அமைத்த தீர்த்தங்கள் அவள் பெயரால் லட்சுமி தீர்த்தம் என்றழைக்கப்படுகின்றன. திருப்புத்தூர், பனையூர், திருவாரூர் (கமலாலயம்) திருநின்றியூர் முதலிய தலங்களில் லட்சுமி தீர்த்தங்கள் உள்ளன. இராமேசுவரத்திலுள்ள இராமநாதர் ஆலயத்தில் லட்சுமி தீர்த்தம் பெரிய திருக்குளமாக உள்ளது. இதில் தெப்போற்சவம் நடைபெறுகிறது. இதன் கரையில் லட்சுமி தேவியின் ஆலயம் உள்ளது.

★ ''திருமாமகள்'' - சக்தி மஞ்சரி - 11, பூசை. ஆட்சிலிங்கம்.

சிவபெருமான் நடமாடும் போது திருமால் மத்தளம் வாசிக்கின்றனர். அவருடைய தேவியான திருமகள் கரதாளம் போட்டு மகிழ்கின்றாள். கீழ்வேளூர் எனும் தலத்திலுள்ள நடராசர் தாண்டவத் தொகுப்பில் கரதாளமிடும் மகாலட்சுமியைக் காண்கிறோம்.

மகாலட்சுமி அமைத்து வழிபட்ட சிவலிங்கங்கள் மகாலட்சுமீசர் என்றழைக்கப்படுகின்றன. திருப்பனையூர், திருவாரூர், திருப்புத்தூர், காஞ்சீபுரம், திருநின்றியூர், முதலான அனேக தலங்களில் லட்சுமி அமைத்த லிங்கங்கள் உள்ளன. மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள திருநின்றியூர் எனும் தலத்தில் லட்சுமி சிவவழிபாடு செய்து பேறு பெற்றதால் பெருமான் லட்சுமிபுரீசுவரர் என்றழைக்கப்படுகிறார். திருவிராமேசுவரம் எனும் தலத்தில் லட்சுமி தேவியும் அவளுக்கு முன்பாக அவள் வழிபட்ட லிங்கமும் உள்ளன.

திருமகள் வழிபட்டுப்பேறு பெற்ற தலமாதலின் திருவாரூர் கமலாலயம் என்று அழைக்கப்படுகிறது. இங்குள்ள திருக்குளம் திருமகளின் வடிவமாக இருப்பதால் அதுவும் கமலாலயம் என்றே அழைக்கப்படுகிறது. இங்கு தியாகராஜர் வீற்றிருக்கும் கொலுமண்டபத்திற்குப் பின்னுள்ள கருவறையை லட்சுமிவாசம் என்று அழைக்கின்றனர்.

திருமகள் சிவனடியார்களுக்கு அருள்புரிவதில் விருப்பமுடன் இருக்கிறாள் என்று தமிழ் வேதமாகிய தேவாரம் திருப்பத் திரும்பக் கூறுகிறது.

சிவாலய வழிபாட்டில் மட்டுமின்றி சிவ பூஜா துரந்தரர்கள் செய்யும் ஆத்மார்த்த வழிபாட்டிலும் மகாலட்சுமி சிறப்புடன் வழிபடப்படுகிறாள். கணபதி சரஸ்வதி, மகாலட்சுமி, நந்தி, பிருங்கி, எனும் வரிசையில் ஒருமுறையும் மகாகணபதி, லட்சுமி, சதாசிவர், அனந்தர், ஸ்ரீகண்டர், அம்பிகை, ஸ்கந்தர், எனும் வரிசையில் ஒரு முறையும் ஆக இரண்டு நிலைகளில் பூசிக்கின்றனர். இதில் முதலில் குறிப்பிட்ட லட்சுமி தோரணவாயில் லட்சுமியாகவும், இரண்டாவது குறிப்பிடப்படும் லட்சுமி ஞானஐஸ்வர்யலட்சுமியாகவும் விளங்குகிறாள்.

கங்கைகொண்ட சோழபுரம், தஞ்சாவூர் முதலிய சோழர்கலைக் கோயில்களில் அணுக்கன் வாயிலுக்கு வடபுறம் சரஸ்வதியும் தென்புறம் லட்சுமியும் மேற்கு நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளனர்.

காஞ்சீபுரம் கயிலாயநாதர் ஆலயத்தின் பிராகாரத்தில் வடக்கில் லட்சுமியும் அவளுக்கு நேர் எதிரே தெற்கில் அகத்தியரும் அமைக்கப்பட்டுள்ளனர்.

பூஜைகளின் தொடக்கத்தில் செய்யப்படும் அனுக்ஞை சடங்ககளில் தட்டில் வைக்கப்படும் வெற்றிலைப்பாக்கை மகாலட்சுமியாகப் போற்றுகின்றனர்.

திருநாகேச்சுரம் தனி அம்பிகை ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் கிரிகுசாம்பிகையின் இருபுறமும் லட்சுமியும் சரஸ்வதியும் வீற்றிருக்கின்றனர்.

திருவையாற்று ஐயாறப்பர் ஆலயத்தில் லட்சமி தேவியின் உலாத் திருமேனி உள்ளது. வெள்ளிக்கிழமைதோறும் இத்திருமேனி அலங்கரிக்கப்பட்டு உட்பிரகாரத்தில் உலாவரச் செய்யப்படுகிறது. இத்தகைய திருமகள் விழா வேறு சிவாலயங்களில் இல்லை.

திருமகள் வழிபாட்டில் பறவைகளும், விலங்குகளும் :

திருமகள் செல்வம் கொழிக்கும் இடங்களில் வீற்றிருப்பதைப் போலவே சில பறவைகளிலும் விலங்குகளிலும் வீற்றிருக்கின்றாள். அவற்றைப் பூசிப்பதால் அவளும் மகிழ்கின்றாள்.

திருமகள் வழிபாட்டில் யானைகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. யானைகளின் பெயரால் கஜலட்சுமி என்று அழைக்கப்படுகிறாள். அவள் பாற்கடலிலிருந்த வெளிப்பட்டதும் திசையானைகள் எட்டும் தமது மனைவியரான பெண்யானைகளுடன் வந்து அவளுக்கு மங்கல நீராட்டின என்று புராணங்கள் கூறுகின்றன.

பல்லவர்கள் அமைத்துள்ள குடைவரைக் கோயில்கள் பலவற்றில் யானைகள் நீரை முகந்து நீராட்ட, தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைக் காண்கிறோம். வேத மந்திரமான ஸ்ரீ சூக்தம் அவள் யானைகளின் பிளிறல்களைக் கேட்டு மகிழ்வதாகக் கூறுகிறது.

பசுக்களின் (ப்ருஷ்ட) பின் பகுதியில் திருமகள் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. அதன் பின் புறத்தைமஞ்சள் பூசி கங்குமமிட்டு பூசிக்கின்றனர். பசுவை கோலட்சமி என்றும் அழைக்கின்றனர். புதுமனையில் புகும்போது அவ்வீட்டுக்குள் லட்சுமிதேவி முதலில் செல்லும் ஐதீகமாக கன்றுடன் கூடிய பசு வீட்டுகரிய எஜமானுக்கு முன்னே அழைத்துச் செல்லப்படுகிறது. பசுக்கூட்டங்களுக்கு நடுவே திருமகள் வீற்றிருக்கின்றாள் என்று சதகநூல்கள் குறிக்கின்றன. பசுக்களின் கோமயத்தையும், கோஜலத்தையும் இடமாகக் கொண்டிருக்கிறாள். இதையொட்டி லட்சுமி கடாட்சம் பெருக சாணத்தால் மெழுகும் வழக்கம் தோன்றியது.

வடநாட்டில் லட்சுமிதேவி ஆந்தையின்மீது பவனி வருபவளாகக் குறிக்கப்படுகிறாள். அவள் உருவத்துடன் ஆந்தையின் உருவத்தையும் எழுதி வழிபடுகின்றனர்.

அவள் ஒரு சமயம் கற்க முனிவனின் சாபத்தால் கோட்டானாகப் பிறந்தாள். அவளிட்ட முட்டைகளில் இருந்து குதிரைகள் பிறந்ததாக கூறப்படுகிறது.

ஒரு சமயம் ரேவந்தன் என்னும் அரசன் ஏறிவந்த குதிரையின் அழகைக் கண்டு திருமகள் லயித்திருந்தாள். அருகிலிருந்த விஷ்ணு கோபம் கொண்டு அவளைப் பூமியில் குதிரையாகப் பிறக்கும்படி சாபம் அளித்தார். அவள், காளிந்தி, மானசா, எனும் நதிகளுக்கிடையே இருந்த பிரதேசத்தில் பெண்குதிரையாகப் பிறந்து வளர்ந்து வந்தாள். விஷ்ணு ஆண்குதிரையாக மாறி அவளிடம் இன்பம் நுகர்ந்தார். அப்போது பிறந்தமகன் ஏகவீரன் எனப்புகழ் பெற்றான். இவன் பெருமைகளைத் தேவி பாகவதம் சிறப்புடன் கூறுகிறது.

இலக்குமியை மான் வடிவில் போற்றுகின்றனர். இதையொட்டி மானுக்கு ஹரிணி என்ற பெயர் வழங்குகிறது. மான் செல்வத்தின் அடையாளமாகும். இதையொட்டி செல்வர்களுக்கு ஸ்ரீமான் என்ற அடைமொழி வழங்குகிறது. ஒரு சமயம் கண்ணுமுனிவரின் சாபத்தால் மான் வடிவை அடைந்தாள். பல இடங்களில் திரிந்தபின் திருமால் யோகமூர்த்தியாக இருக்கும் பர்ணகசாலைப் பக்கம் வந்தாள். அவளைக் கண்ட திருமால் முன்னை நினைவுடன் அன்பு கொண்டு பார்த்தார். கருவுற்ற அவள் வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியில் குழந்தையை இட்டு மறைந்தாள். வேடர்கள் அக்குழந்தையை எடுத்து வளர்த்தனர். வள்ளி எனும் பெயரில் வளர்ந்த அப்பெண் தவம் செய்து முருகனை மணந்தாள்.

திருமகளைப் பொன் மயிலாகவும் போற்றுகின்றனர். மயிலாப்பூர் கேசவப் பெருமாள் ஆலயத்தில் திருமகளுக்கு மயூரவல்லி எனும் பெயர் வழங்குகிறது.

இப்படி திருமகள் யானை, மான், பசு, ஆந்தை, மயில் பலவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளதைப் புராணங்களால் அறியமுடிகிறது.

கயிலாயத்திலும் ஆலயத்திலும் :

மகா கயிலாயத்தில் அமைந்துள்ள சிவபெருமானின் கோயிலுக்கு எட்டு திசைகளிலும் எட்டுவாயில்கள் உள்ளன என்று சிவமகாபுராணம் கூறுகிறது. இவற்றில் நான்கு பெரும் திக்குகளான கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கியுள்ள மகாவாயில்களுக்கு முறையே ஸ்ரீதுவாரம். லட்சுமித்துவாரம் வாருணித்துவாரம், கீர்த்தித்துவாரம் என்ற பெயர்கள் வழங்குகின்றன. இதில் குறித்த ஸ்ரீ லட்சுமி வாருணி, கீர்த்தி, ஆகியவை மகாலட்சுமியின் பல்வேறு பெயர்களாகும்.

சிவாலயங்களில் தினசரிப் பூஜையின் தொடக்கத்தில் செய்யப்படும் துவாரபூஜையில் வாயிற்படியின் மீதுள்ள மகாலட்சுமிக்குச் சிறப்புடன் பூஜை செய்யப்படுகிறது. குடமுழுக்கு விழாவின் போது அமைக்கப்படும் யாகசாலையின் நாற்புறவாயில்களின் மீதும் மகாலட்சுமியுடன் விநாயகர், சரஸ்வதி, ஆகியோரையும் அமைத்துச் சிறப்பான பூசைகள் செய்யப்படுகின்றன.

செட்டிநாட்டுப் பகுதியில் அமைந்துள்ள வீடுகளில் திருநிலையை (நிலைப்படியை) மிகுந்த வேலைப்பாடுகளுடன் அமைத்துள்ளனர். அதன் மேற்பகுதியில் கஜலட்சுமி உருவம் மிகுந்த கலைச்சிறப்புடன் திகழ்கிறது. கஜலட்சுமியுடன் இருபுறமும் கவரி வீசும் பெண்கள் ஆலவட்டம் வீசும் பெண்கள், ஆகியோரையும் அமைத்துள்ளனர்.

மகாலட்சுமி விரதங்கள்:

அன்பர்கள் தெய்வங்களின் அருளைப் பெற அந்தத் தெய்வங்களுக்குரிய விரதங்களையும் நோன்புகளையும் கடைப்பிடிக்கின்றனர். இவ்வகையில் லட்சுமிதேவியைப் போற்றும் வகையில் அனேக விரதங்கள் நோற்கப்படுகின்றன. இவற்றில் முதன்மை பெற்றது வரலட்சுமி விரதமாகும். இது ஆடி மாத வளர்பிறை வெள்ளிக்கிழமை நோற்கப்படுகிறது. இதில் கலசத்தில் மகாலட்சுமியின் நாற்கரமுள்ள உருவத்தை எழுதி பூஜை செய்கின்றனர். இவ்விரதத்தை நிறைந்த ஆயுளும், சௌபாக்கியமும், நீடிய செல்வமும் வேண்டிப் பெண்கள் நோற்கின்றனர். சித்ரநேமி என்பவன் இதைக் கடைபிடித்து எல்லாவிதமான சித்திகளையும் பெற்றான் என்றும் நோன்புக் கதைகள் கூறுகின்றன.

ஆவணி மாத வளர்பிறை அஷ்டமியும் லட்சுமி விரதத்திற்குரிய காலமாகும். ஆவணி வளர்பிறை பஞ்சமிக்கு மகாலட்சுமி பஞ்சமி என்று பெயர். அன்று தொடங்கி அஷ்டமி வரை நான்கு நாட்கள் வழிபடுவது மகாலட்சுமி நோன்பாகும். கார்த்திகை மாத பஞ்சமியை ஸ்ரீ பஞ்சமி என்று அழைத்து அன்று லட்சுமி பூஜை செய்கின்றனர்.

ஐப்பசி மாத பௌர்ணமியில் மகாலட்சுமியை வழிபட செல்வம் பெருகும். ஐப்பசி அமாவாசையன்று (தீபாவளிக்கு அடுத்தநாள்) மகாலட்சுமி பூஜை செய்யப்படுகிறது. புரட்டாசி மாத வளர்பிறை அஷ்டமி முதல் தேய்பிறை அஷ்டமி வரை 16 நாட்கள் விரதமிருந்து மகாலட்சுமியை வழிபடுவது சோடசலட்சுமி விரதமாகும். இதனால் 16 செல்வங்களையும் நிறைவாகப் பெற்று வாழலாம் என்று நம்புகின்றனர்.



தனலக்ஷ்மி

ஆலயங்களில் விளங்கும் விமானங்கள் மற்றும் மண்டபங்களின் சிறப்பு

(மகாலட்சுமியின் திருமேனியானது சுதையினாலும் கற்சிற்பமாகவும், ஓவியமாகவும், விமானங்கள் மற்றும் மண்டபத் தூண்களில் இன்றும் காணலாம்)

ஆலயங்களில் கருவறையின் மீது அமையும் ஸ்ரீ விமானத்தின் அங்கங்களான கோஷ்டங்கள், கூடங்கள், சாலைகள், பஞ்சரங்கள், மூலைகள், கிரீவங்கள் முதலானவற்றில் பிரம்மா, தென்முகக் கடவுள், திருமால் அட்டதிக்குப் பாலகர்கள், அட்ட பைரவர்கள் முதலான தெய்வ வடிவங்ள் அமைக்கப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றன. இவற்றிற்குத் தனிப் பூசையோ சிறப்பு அபிஷேக ஆராதனைகளோ நடத்துவதில்லை.

சில தலங்களிலுள்ள ஸ்ரீ விமானத்தில் வீற்றிருக்கும் சிறப்பும் தெய்வங்களுக்குத் தினப்பூசையும் சிறப்பு நாட்களில் சிறப்பு வழிபாடும் செய்யப்பட்டு வந்தது. காலப்போக்கில் கைவிடப்பட்டன என்பதைக் கல்வெட்டுகளாலும் செவிவழிச் செய்திகளாலும் அறிகிறோம்.

நடைமுறையில் சீர்காழி, கருப்பறியலூர் (தலைஞாயிறு) அம்பர். திருப்புறம்பியம் முதலிய தலங்களில் ஸ்ரீவிமானத்திலுள்ள சட்டநாத சுவாமிக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. திருவீழிமிழலையில் தோணியப்பர். குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் செல்வப் பிரானான உமாமகேசர். திருத்துறையூரில் இடபாரூடர் முதலிய ஸ்ரீவிமானத்து மூர்த்தங்களுக்கு நடைபெற்று வந்த வழிபாடுகள் நாளடைவில் நின்றுவிட்டன என்றாலும், இம்மூர்த்தங்கள் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றன. இவற்றைப் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து காணலாம்.

குடந்தைக் கீழ்க்கோட்டத்துச் செல்வபிரான் :

குடந்தைக் கீழ்க்கோட்டம் என்னும் தேவாரத்தலம் இந்நாளில் நாகநாதசுவாமி ஆலயம் என்றழைக்கப்படுகிறது. இக்கோயில் ஸ்ரீவிமானத்தில் சிவபெருமான் உமாதேவியாருடன் (உமாமகேசுவர மூர்த்தியாக) பெரிய திருவுருவில் எழுந்தருளியுள்ளார். இவரைச் சுற்றிலும் பெரிய அழகான திருவாசி உள்ளது. கருங்கல்லால் கலையழகு நிரம்பியதாக அமைக்கப்பட்டுள்ள இத்திருவுருவம் கண்ணையும், கருத்தையும் கவர்கின்றது.

இப்பெருமானுக்குச் ''செல்வப்பிரான்'' என்பது பெயராகும். முன்னாளில் இப்பெருமானுக்குத் தினசரி பூசைகள் நடந்து வந்துள்ளன. இவருக்கு முன்பாக நின்று பூசை செய்யும் வகையில் மேடையிருந்ததை அங்கே நிற்கும் நான்கு கல்தூண்களால் அறிய முடிகிறது.

★ இப்பகுதி முழுவதும் ஆதாரம் : ''-ஸ்ரீ விமானேசுவரர்'' (சிவமஞ்சரியின் 35வது மலர்) - 2003. பக்கம் 1219 - 1245 முடிய. ஆசிரியர் பூசை. ஆட்சிலிங்கம் நன்றி.

TEMPLE BUILDING IS A FORM OF GOD


TAMILNADU
KERALA
GUJARAT
KALINGA


Stupi (Kalasa)
Mahanasi Nose
Kshudranasi Eye
Shikharam
Galam
Prastaram
Paadam
Adhishtanam
Upapeetam
Hair lock
Face
Neck
Shoulder
Arms
Leg and thigh
Feet
Standard
at Ground level

TEMPLE AS HUMAN FORM

இராஜராஜ சோழனின் மகனான உடையார் இராஜேந்திரசோழன், செல்வப்பிரானுடைய பூசைக்காக நிலம் அளித்ததை இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

திருநாவுக்கரசுப்பெருமான் இத்தலத்தில் அருளிய ''சொன்மலிந்த'' எனத் தொடங்கும் பதிகத்தின் ஆறாம்பாடல் இப்பெருமானின் அழகைப் போற்றுவதாக உள்ளது. ''திருக்குடந்தை மான்மியம்'' எனும் நூலில் ''உமாபாகர்'' ஸ்ரீ விமானத்தில் எழுந்தருளிய வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

ஒரு சமயம் தேவர்கள் எல்லோரும் சிவபெருமானிடம் சென்று அவருடைய பெருங்கூத்தைக் காட்டியருளுமாகு வேண்டினர். சிவபெருமான், நீங்கள் பூவுலகில் குடந்தை நாகேசுவரத்தில் சென்று கூடியிருங்கள். நாம் அங்கு வந்து உமக்கு எமது நடனத்தைக் காட்டுவோம் என்றார். தேவர்கள் நாகேசுவரத்தை அடைந்து புனிதப்புனல்களில் மூழ்கிச் சிவபூசை செய்து களித்திருந்தனர். மார்கழி மாதத் திருவாதிரை நாளில் சிவபெருமான் உமாதேவியுடன் பொன்மயமான விமானத்தில் கயிலையிலிருந்து குடந்தை நாகநாதத்தை அடைந்து தேவர்களுக்குக் காட்சியளித்த பின்னர் ஆனந்த நடனமாடி ஸ்ரீ விமானத்தில் உமையுடன் எழுந்தருளினார். இதுவே விமானங்களில் பெரிய திருவுருவமாகும்.

ஸ்ரீ விமானங்கள்:

மானம் என்றால் அளவு. விமானம் என்பதற்கு மேலான அளவு என்பது பொருள். ஞானிகள் தங்களுடைய அனுபவங்களால் அறியப்பட்ட அளவுகளைக் கொண்டு மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இறைவழிபாட்டிற்கென அமைக்கப்பட்ட கட்டிடங்களே விமானங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் இறையம்சம் காரணமாக ''ஸ்ரீ'' எனும் அடைமொழியுடன் ''ஸ்ரீ விமானங்கள்'' என்று அழைக்கப்படுகின்றன.

ஸ்ரீ விமானத்தின் கிரீவப் (கழுத்து) பகுதியில் நான்கு திசைகளையும் நோக்கியவாறு இறைவனின் நால்வகை நிலைகளை உணர்த்தும் திருவுருவங்களை அமைத்துள்ளனர். இவை இட வலமாக குமாரர், பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் என்னும் நான்கு திருமேனிகளாகும்.

சிவாகமங்களில் ஸ்ரீ விமானங்களின் ஏழு வகையான அமைப்புகள் குறிக்கப்பட்டுள்ளன. இவை 1. விஜயம், 2.ஸ்ரீ போகம், 3. ஸ்ரீ விலாசம், 4. ஸ்கந்த காந்தம், 5. ஸ்ரீகரம், 6. ஹஸ்தி பிருஷ்டம், 7. கேசரம் எனப்படும்.

தினசரி பூசையில் விமானத்தின் அடிப்பகுதியிலிருந்து உச்சிக்கலசம் வரையுள்ள பகுதிகளின் பெயர்கள் வரிசையாகக் கூறப்பட்டு பூசை செய்ய வேண்டுமென்று பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன. இதன்படி ஸ்ரீவிமானத்தின் அங்கங்களாகக் கீழிருந்து அதிஷ்டானம், உபபீடம், கமலம், பட்டிகை, கால்கள், கோட்டம், கும்பபஞ்சரம், மகரதோரணம், கபோதவரி, தளம், நிலை, கிரீவம், சிகரம், கலசம் என்று உச்சிவரை கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ விமானங்கள், கல்வெட்டுக்களில் மூலஸ்தானங்கள் என்று குறிக்கப்பட்டுள்ளன. இதையொட்டி கருவறையில் வீற்றிருக்கும் பெருமானை ஸ்ரீமூலஸ்தானத்துப் பரமசாமி. ஸ்ரீமூலஸ்தானத்துப் பரமேட்டிகள் போன்ற பெயர்களால் அழைக்கின்றனர். தேவாரத்துள், திருவாரூர், சிதம்பரம் முதலிய தலங்களிலுள்ள மூலஸ்தானங்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மூலஸ்தானங்களை ஸ்ரீதளி, கருப்பக்கிருகம், கருவறை, எனப்பல பெயர்களால் அழைக்கின்றனர்.

சில ஸ்ரீவிமானங்கள் மனிதர்களால் அமைக்கப்படாமல் தேவர்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்திரன் தனது உலகத்திலிருந்து இந்திர விமானத்தைக் கொண்டு வந்து மதுரையில் சோமசுந்தரருக்கு அமைத்தான் என்று கடம்பவன புராணமும் திருவிளையாடற் புராணமும் கூறுகின்றன. திருமால் விண்ணகத்திலிருந்து விமானத்தைக் கொண்டு வந்து திருவீழிமிழலையில் அமைத்தார் என்று தேஜினீவன தலபுராணம் கூறுகின்றது. இந்த விண்ணிழி விமானம் தேவாரத்துள் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ விமானமாகிய கருவறை, தாயின் கருப்பத்தைப் போன்றது. அதனால் காற்று வசதியும், இயற்கை வெளிச்சமும் தேவையில்லை என்ற கருத்து நிலவுகிறது. இதையொட்டி இதில் ஜன்னல்கள அமைக்கப்படுவதில்லை. இக்கருத்துக்கு மாறாக பெண்ணாகடம் பிரளய காலேச்சரம், காஞ்சி ஜ்வரஹரேச்சரம் முதலிய ஆலயங்களில் கருவறைக் கோட்டங்களில் ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் காற்று வசதியும் வெளிச்சமும் கருவறைக்குள் உள்ளன. அத்துடன் நாற்புறங்களில் இருந்தும் பெருமானைத் தரிசிக்க முடிகிறது.

சதுர் முகலிங்கங்களுக்கு அமையும் ஸ்ரீ விமானங்களுக்கு நான்கு புறமும் வாயில் அமைக்கப்படுகிறது. இதனை சர்வோபத்ராலயம், சதுர்முகாலயம் என்று அழைக்கின்றனர். திருவதிகையில் சதுர்முகாலயம் இருந்ததைக் கல்வெட்டால் அறிகிறோம். அக்கோயில் அழிவுற்ற பிறகு அங்கிருந்த நான்குமுக லிங்கத்தைப் பெயர்ந்து வந்து வீரட்டகாசர் ஆலயப்பிராகார்த்தில் நிலைப்படுத்தியுள்ளனர்.

ஆதிநாளில் ஸ்ரீ விமானங்கள் ஒற்றைத் தளங்களையே கொண்டிருந்தன. பின்னர் தளங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது. சோழர்கள் தஞ்சாவூர்-பெரியாவுடையார் கோயில். திரிபுவனம் கம்பஹரேசுவரம், தாராசுரம் - ஐராவதேசம், கங்கை கொண்ட சோழபுரம் - சோழீச்சுவரம் முதலிய ஆலயங்களில் அதிக அளவு அடுக்குகளைக் கொண்ட ஸ்ரீ விமானங்களை அமைத்து மகிழ்ந்தனர்.

பின்னாளில் பழையபடியே கருவறை மீது அமையும் விமானத்தை இரண்டு அல்லது மூன்று அடுக்குகளுடன் அமைத்து விட்டு வாயிலின் மீது அமையும் கோபுரங்களைப் பெரியதாகக் கட்டத் தொடங்கினர். விஜயநகர மன்னர்கள் அளவால் பெரிய கோபுரங்களை அமைத்து ஆலயங்களுக்குப் பெருமை சேர்த்தனர்.

பவனி வரும் விமானங்கள் :

பெருந்திருவிழாக்களின் ஓர் அங்கமாகச் சிவபெருமான் வீதிகளில் தேரில் பவனி வருகின்றார். பெருமான் கருவறையான ஸ்ரீ விமானத்துடன் சேர்ந்து வீதிகளில் பவனிவருவதை உணர்த்துவதே திருத்தேர்விழா என்று கூறுவர். மேலும் பெருமான் பவனி வருவதற்கென பலவகையான விமானங்களும் உள்ளன. இவை நான்கு (எட்டு பன்னிரண்டு/முப்பத்திரண்டு/அறுபத்துநான்கு) கால்களும் அதன்மீது சதுரம் அல்லது எண்பட்டையான கூம்புவடிவக் கூரையுடன், உச்சியில் கலசங்களையும் கொண்டுள்ளன. இவற்றின் அமைப்பையொட்டி இவைகளுக்கு இந்திர விமானம். பவழக்கால் விமானம். அஸ்தமானகிரி விமானம், உதயகிரி விமானம் என்றும், செய்யப்பட்ட கொருட்களை யொட்டி கண்ணாடி விமானம், தங்க விமானம், ருத்ராட்ச விமானம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. விமானங்களில் மலர்மாலை ஏந்திய கந்தர்வர்கள் பெரிய பூக்கள், கிளிகள், மூலைகளில் இடபம், அதிகாரநந்தி, பீடத்தைச சுற்றிலும் தும்புரு, நாரதர் பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலிய திருஉருவங்கள் இடம் பெற்றுள்ளன. கபாலீசுவரர் ஆலயத்தில் வெள்ளியால் செய்யப்பட்ட இந்திர விமானம் உள்ளது. ராமேஸ்வரத்தில் தங்க விமானத்தில் சுவாமி பவனி வருகிறார்.

திருவீழிமிழலை
ஸ்ரீ வீழிநாதர் திருக்கோயில்
வெளவால்றெத்தி மண்டபம்

ஸ்ரீ மண்டபங்கள் : ஆலயத்தின் முக்கியமான அங்கங்களாகத் திகழ்பவை மண்டபங்களாகும். கருவறைக்கு முன்னுள்ள கட்டிடம் அர்த்த மண்டபம் என்றும், அதையடுத்து விசாலமாக அமைந்த பகுதி மகாமண்டபம் என்றும் அழைக்கப்படுகின்றன. அனைத்து சிவாலயங்களிலும் குறைந்தபட்சம் இந்த இருமண்டபங்கள் இருக்கின்றன.

கலியாண மண்டபம்.




STUPI
SIKHARAM
GREEVAM
KAPOTAM
PANCHARAM
KARNA KOODU
VARI
VARIMANAM
KODUNGAI
UTTIRAM
PODIGAI
PALAGAI
KAMALAM
KUMBAM
TADI
KALASAM
KAMBAM or First Tala
PADMA BANDAM
KAL
VARI
VARIMANAM
KAPOTAM
ADHISHTANAM
KANDAM
KUMUDAM
PADMAM
UPANAM
UPAPITHAM



சித்ர கண்டக்கால் சுண்டுபாதம் (பக்கத் தோற்றம்)

ஆகமங்கள், சிவாலயங்களில் இருக்க வேண்டிய பலவகையான மண்டபங்களைக் குறிப்பிடுகின்றன. அவை அனைத்தையும் அமைக்க முடியாவிட்டாலும் அவற்றில் சிலவற்றையாவது அமைத்துள்ளனர்.

''மண்டுதல்'' என்றால் நிறைந்திருத்தல் என்பது பொருள் அன்பர்கள் நிறைந்துநின்று தொழுமிடமாகவும் வேத, திருமுறை ஒலிகளும இன்னிசைக் கருவிகளின் இனிய ஓசைகளும் நிறைந்திருக்கும் இடமாக இருப்பதாலும் இவை ''மண்டபங்கள்'' என்று அழைக்கப்படுகின்றன என்பர்.

மண்டபங்களுக்கு, அவற்றில் நடைபெறும் நிகழ்ச்சிகளையொட்டி அலங்கார மண்டபம், அபிஷேக மண்டபம், வாத்திய மண்டபம் என்றும், எழுந்தருளும் காலத்தை ஒட்டி, பௌர்ணமி மண்டபம், அமாவாசை மண்டபம், கிருத்திகை மண்டபம் என்றும் கால்களின் எண்ணிக்கையையொட்டி நான்கு கால், எட்டு கால்.... நூற்றுக் கால், ஆயிரங்கால் மண்டபங்கள் என்றும் அதைக்கட்டிய மன்னர்களின் பெயரால் இராஜநாராயணன் மண்டபம். இராஜேந்திர சோழ மண்டபம் என்றும் பலவாறு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

சில மண்டபங்கள் தேர் போன்று பக்கவாட்டில் சக்கரங்களுடன், அதை இழுக்கும் குதிரை, யானை ஆகியவற்றையும் கொண்டுள்ளன.

மண்டபங்களின் தூண்களில் கண்ணைக் கவரும் சிற்பங்கள் கதைப்போக்கில் அமைக்கப்பட்டுள்ளன. மண்டப விதானங்களில் தாமரை மலர், நவக்கிரகங்கள், விசுவத்தேவர்கள், அஷ்டசத்திகள் ராசிகள், அட்டதிக் பாலகர்கள் முதலிய திருவுருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பெரிய பெரிய பூக்கள், தல வரலாற்றுக் காட்சிகள், புராணக் காட்சிகள் ஆகியனவும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருப்பதையும் காணலாம்.

சில தலங்களில், மண்டபத் தூண்களில் அமைந்துள்ள தெய்வ உருவங்கள் அளப்பறிய சக்தி பெற்றுள்ளன. அவற்றிற்குத் தினசரி வழிபாடு செய்யப்படுவதுடன் பிரார்த்தனை செய்து கொண்டு காணிக்கைகளும் செலுத்தப்படுகின்றன.

முன்னாளில் ஊர் வழக்குகள், கோயில் வழக்குகள் முதலியவற்றைக் கோயில் மண்டபங்களிலேயே கூடியிருந்து விசாரித்து தீர்ப்பு வழங்கப்பட்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்வகையில் இவை அறங்கூறும் அம்பலங்களாகவுமிருந்து வந்துள்ளன. திருவெண்ணை நல்லூரில் ''வழக்குவென்ற அம்பலம்'' எனும் பெயரில் மண்டபம் இருப்பதைக் காண்கிறோம். இப்படிப் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுத் திருக்கோயிலின் முக்கியமான அங்கமாகத் திகழும் மண்டபங்களைப் பற்றிய செய்திகள் இப்பகுதியில் விவரிக்கப்படுகின்றன.

பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க, அன்னநடை மடவாளான உமையோடு வீற்றிருக்கும் சிவபெருமான் அன்பர்களுக்குச் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்தருளுகின்றார்.

ஆகமங்களில் மண்டபங்கள்:

சிவாகமங்களிலும் அதையொட்டி எழுந்த பூஜாபத்ததி நூல்களிலும் அனேக வகையான மண்டபங்கள் சொல்லப்பட்டுள்ளன. சிறப்பு வழிபாடுகளில் தீபாராதனையின்போது சொல்லப்படும் ஆசீர்வாதத்தில் அனேக மண்டபங்களின் பெயர்கள் வரிசையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவை 1. ஸ்நபன மண்டபம், 2. கேய மண்டபம், 3. வாத்ய மண்டபம், 4. முக மண்டபம், 5. சோபான மண்டபம், 6. கோபுரத்துவாரசாலா மண்டபம் 7. ஆஸ்தான மண்டபம், 8. யாகசாலை மண்டபம் 9. புஷ்ப மண்டபம், 10. பூஜா மண்டபம், 11. விஜய மண்டபம், 12. பிரதட்சண மண்டபம், 13. உத்யான மண்டபம், 14. ஸ்ரீவல்லி மண்டபம், 15. ஸ்ரீசூர்ண மண்டபம், 16. கிருஷ்ணகந்த மண்டபம், 17. ஜலக்கிரீடா மண்டபம், 18. அறுபத்து நான்கு கால் மண்டபம், 19. நூற்றுக் கால் மண்டபம், 20. ஆயிரங்கால் மண்டபம், 21. கந்த மண்டபம்,



முகமண்டபம் - திருவீழிமிழலை

22. சுவர்ண மண்டபம், 23. அபிஷேக மண்டபம், 24. அலங்கார மண்டபம், 25. வசந்த மண்டபம், 26. உபசார மண்டபம், 27. டோளோஹார (ஊஞ்சல்) மண்டபம், 28. அத்யயனமண்டபம், 29. ஆகம மண்டபம், 30. புராண மண்டபம், 31. தீக்ஷா மண்டபம், 32. வீணா மண்டபம், 33. துவஜாரோகண மண்டபம், 34. ரதாரோகண மண்டபம் என்பனவாகும். மேலும், மன்னர்களின் அன்பினாலும் ஆதரவினாலும் அனேக விதமான மண்டபங்கள் கட்டப்பட்டன. இவற்றிற்கு அவற்றின் உபயோகத்தை யொட்டி பல்வேறு பெயர்கள் வழங்குகின்றன. இவற்றின் விளக்கங்களை இங்குக் காணலாம்.

ஸ்நபன மண்டபம்:

நாள் வழிபாட்டிற்காகப் புனிதநீரை ஆறு. குளம் முதலியவற்றிலிருந்து எடுத்துவந்து பூரணகும்பத்தில் நிறைத்து நித்தியாக்கினியுடன் வழிபடும் இடம் ஸ்நபன மண்டபமாகம். இது பூரணகும்ப (நீர்) வடிவில் இறைவனை வழிபடுமிடமாகும்.

கேய மண்டபம் :

கேயம் என்பதற்கு வாய்ப்பாட்டு (அ) கீதம்பாடுதல் என்பது பொருள். இறைவனின் புகழை இன்னிசையுடன் பாடும் மண்டபம் கேய மண்டபம் எனப்பட்டது.

வாத்ய மண்டபம் :

தினமும் வழிபாட்டின்போது மங்கள வாத்தியங்கள் முழங்கப்படும். வாத்திய ஒலிகளால் தேவர்கள் மகிழ்ந்து அங்கு கூடுகின்றனர் என்று புராணங்களும் ஆகமங்களும் கூறுகின்றன. வாத்யங்களை (இசைக் கருவிகளை) அதற்குரிய கலைஞர்கள் வீற்றிருந்து இசைக்குமிடமே வாத்ய மண்டபம் ஆகும்.

திருக்கழுக்குன்றம் பக்தவத்ஸலர் ஆலயத்தில் சர்வவாத்ய மண்டபம் உள்ளது. இதில் பெருந்திருவிழாவின் போது அனைத்து விதமான வாத்யங்களும் இசைக்கப்பட்டு வந்தன.

முக மண்டபம் :

ஆலயத்தின் முகப்பில் இருக்கும் மண்டபம், முக மண்டபம் எனப்படும். சுவாமி புறப்படும் முன் இந்த இடத்திலிருந்து கட்டியம் கூறப்படும்.

சோபான மண்டபம் :

இது இறைவனுக்குப் பக்தர்கள் மங்கல மொழிகளைக் கூறி, தமது விருப்பங்களை நிறைவேற்றித் தருமாறு கேட்கும் மண்டபமாகும். மங்கலமொழிகளை வடமொழியில் சோபானம் என்பர். சோபானத்தின் போது பாடப்படும் பாடல்கள் தனி இசையுடன் உள்ளன.

கோபுரத் துவாரசாலா மண்டபம் :

கோபுரத்திற்கு முன்பாக அதனுடன் இணைந்த நிலையில் இருப்பதுடன் அன்பர்கள் கூடி நின்று கோபூஜை, கஜபூஜை இவற்றைக் காணுமிடமாகும்.

ஆஸ்தான மண்டபம் :

இறைவன் மகாராஜாவாகக் கொலுவீற்றிருந்து, அன்பர்களின் பலவகையான உபசாரங்களை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு அருள்புரியுமிடமாகும். இதனைக் கொலு மண்டபம், தர்பார் மண்டபம் எனவும் அழைப்பர். தியாகராஜருக்கு முன்னுள்ள மண்டபம் தர்பார் மண்டபமாகும்.

சிதம்பரம் : திருசுற்று மாளிகை



மண்டபத் தோற்றம்

யாகசாலா மண்டபம் :

தினமும் இறைவனை அக்னி வடிவில் வழிபடும் இடமே யாகசாலா மண்டபம் ஆகும். இது ஆலயத்தின் வடகிழக்கு முனையில் மேற்கு நோக்கியவாறு அமையும். தினமும் வேள்வி செய்ய முடியாத நிலையில் பெருந்திருவிழாவின் பத்துநாட்களிலும் இங்கு வேள்வி செய்யப்பட்டு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகிறது. தென்னகத்திலுள்ள பெரும்பான்மையான ஆலயங்களில் யாகசாலை மண்டபம் உள்ளது.

புஷ்ப மண்டபம் :

நந்தவனத்திலிருந்து மலர்களைப் பறித்து வந்து சுத்தம் செய்து மாலைகளாகக் கட்டுமிடமே புஷ்ப மண்டபமாகும். பெரியபுராணத்தில் இம்மண்டபம் ''திருப்பூமண்டபம்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. சிலர் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட மண்டபம் என்றும் கூறுவர்.

பூஜா மண்டபம் :

இது சிவாசார்யர்கள் ஆத்மலிங்க பூஜை செய்வதற்கும், உடையவரை எழுந்தருளி வைத்து பூஜை செய்வதற்கும் உரிய இடமாகும்.

விஜய மண்டபம் :

இது சிவபெருமானின் வீரவெற்றிகளை அன்பர்களுக்கு எடுத்துக் கூறும் இடமாகும். இதிலிருந்து கொண்டு பெருமானுக்கு வெற்றி உண்டாகுக என்று வாழ்த்துக்களைக் கூறுவர்.

பிரதட்சண மண்டபம் :

அன்பர்கள் வெய்யில், மழையால் துன்புறாமல் ஆலயத்தை வலம்வர அமைந்தவை பிரதட்சண மண்டபங்களாகும். இதில் ஆங்காங்கு தெய்வத் திருவுருவங்கள் அமைத்து வழிபடப்படுகின்றன.

உத்யான மண்டபம் :

உத்யானம் என்பது அழகிய பூஞ்சோலையாகும். பூஞ்சோலைக்கு நடுவில் பெருமான் குளிர்ச்சியையும் பல்வேறு பூக்களின் நறுமணத்தையும் அனுபவித்தவாறு வீற்றிருக்குமிடமாகும்.

ஸ்ரீவல்லி மண்டபம் :

வல்லி என்பதற்கு கொடி என்பது பொருள் முல்லை, மல்லிகை, சண்பகம், கொகுடி முதலான பூங்கொடிகள் சூழ்ந்து படர்ந்துள்ள, மனதிற்கு இனிமையான மண்டபமே வல்லி மண்டபமாகும்.

ஸ்ரீசூர்ண மண்டபம் :

இது இறைவன் பொன்வண்ணமான வாசனை கொண்ட பொடிகளை உடலில் பூசிக்கொண்டும் பன்னீரைத் தெளித்துக் கொண்டும் மகிழ்ச்சியில் திளைக்கும் இடமாகும். இங்கு உரலும் உலக்கையும் இருக்கும் கோரைக் கிழங்க, கிச்சிலிக் கிழங்கு முதலான வாசனைப் பொருட்களை அன்பர்கள் இதில் இட்டு இடிப்பர். இதனைத் தமிழ் இலக்கியங்கள் பொற்சுண்ணமிடித்தல் என்று கூறுகின்றன. பெருந்திருவிழாவின் ஓர் அங்கமாக இதில் ஸ்ரீ சூர்ணோற்சவம் நடைபெறுகிறது.

கிருஷ்ணகந்த மண்டபம் :

கிருஷ்ணகந்தம் என்பது கருஞ்சாந்து ஆகும். சந்தனச் சருகுகளுடன் நறுமணப் பொருட்களை இட்டு எரித்த கரியுடன் புனுகு. சவ்வாது, குங்குமப்பூ ஆகியவற்றைக் குழைத்து இதனைத் தயாரிக்கின்றனர். திருவாரூர்ப் பெருமானுக்கு பதினெட்டு மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட கிருஷ்ணகந்தம் அணிவிப்பது தனிச் சிறப்புடன் போற்றப்படுகிறது.



உலகப்புகழ் பெற்ற வௌவால் நெத்தி மண்டபம் (ஏ) கல்யாண மண்டபம் திருவீழிமிழலை

ஜலக்கிரீடா மண்டபம் :

இது ஜலத்தில் மத்தியில் மேடை அமைத்து இறைவனை இருத்தி வழிபடும் இடமாகம். இத்தகைய மண்டபம் வசந்த மண்டபம் எனும் பெயரில் சுசீந்திரத்தில் உள்ளது.

அறுபத்துநான்கு கால் மண்டபம்

நூற்றுக்கால் மண்டபம்

ஆயிரங்கால் மண்டபம்

சுகந்த மண்டபம் :

கந்தம் என்பது வாசனைப் பொருட்களைக் கலந்து அரைத்த விழுதாகும். சந்தனம், கோரோசனை முதலியவற்றைச் சந்தனக்கல்லில் இட்டு பன்னீர்விட்டு அரைத்துத் தயாரிக்கப்பட்டதாகும். சுவாமிக்கு மெல்லிய ஆடை அணிவித்து, கந்தக் குழம்பால் அபிஷேகம் செய்து, மருக்கொழுந்து, ஷெண்பகம், மல்லி, முல்லை மலர்களால் அலங்கரித்து வழிபடுவர். இதற்குரிய மண்டபம் கந்த மண்டபம், கந்தகுடி மண்டபம் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றது. இதனை பூஞ்சோலைகளுக்கு நடுவே அமைப்பர். இதன் நாற்புறமும் தூபக்கால்கள் அமைக்கப்பட்டு அதில் நறுமணப் பொருட்களை இட்டுப் புகைக்கின்றனர்.

சுவர்ண மண்டபம் :

பொன்னால் செய்யப்பட்டு நவமணிகளால் இழைக்கப்பட்டு முத்துமாலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இடமே சுவர்ண மண்டபமாகும். இந்த இடத்தில் சுவாமியை அமர்த்தி தங்கக் கவசம் அணிவித்து, நவமணிகள் இழைத்த ஆபரணங்களால் அலங்கரித்து தீபாராதனை செய்வர். பொற்காசுகள், பொன்னால் செய்யப்பட்ட பூக்கள் இவற்றால் சுவர்ணாபிஷேகமும் செய்வர்.

அபிஷேக மண்டபம் :

இது பால், பன்னீர், பஞ்சகவ்யம், இளநீர், பழரசங்கள் முதலிய பொருட்களால் இறைவனை நீராட்டுமிடமாகம். இதன் நடுவில் அபிஷேக மேடையும் இதிலிருந்து நீர் வெளியேறக் கோமுகமும் அமைக்கப்பட்டிருக்கும். பெரிய அபிஷேகப் பாத்திரங்களை இங்கு வைத்திருப்பர்.

அலங்கார மண்டபம் :

திருவிழா நாட்களில் சிவபெருமானையும் பரிவார தேவர்களையும் அபிஷேகம் செய்து அணிமணி ஆபரணங்களாலும் வண்ண மலர்மாலைகளாலும் அலங்கரித்துப் பெரிய அளவில் தீபாராதனை செய்வர். இதனை ஏராளமான அன்பர்கள் கண்டுகளிப்பர். இதன் பிறகே சுவாமி வீதியுலா காண்பார். இதற்கெனப் பெரிய அளவில் அமைக்கப்பட்ட மண்டபமாதலின் இது அலங்கார மண்டபம் என்றழைக்கப்படுகின்றது.

இது பெரும்பாலும் ஆலயத்தின் தென்மேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு சற்று உயரமான அளவில் விசாலமாக அமைக்கப்படும். திருவண்ணாமலை, அச்சிறுபாக்கம், திருமழிசை, வேலூர் முதலிய தலங்களில் அமைந்துள்ள அலங்கார மண்டபங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இந்த மண்டபத்தின் மேற்குப் பகுதியில் உயரமான மேடையமைத்து அதன்மீது உலா மூர்த்திகளை எழுந்தருளச் செய்கின்றனர். இது அன்பர்களும், பக்தர்களும் இறைவனைத் தடையின்றிக் கண்ணாரக் கண்டுகளிக்க ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையிலுள்ள அலங்கார மண்பத்தில் விதானத்திலும் சுவர்களிலும் தல புராண வரலாற்றை விளக்கும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

திருக்கழுக்குன்றம் பக்தவத்சலேசுவரர் ஆலயத்தில் வெளிப்பிரகாரத்தின் தென்மேற்கு முனையில் பெரிய அளவிலான அலங்கார மண்டபமும், அதனுள் சுவாமி எழுந்தருள்வதற்கான பீடமும் உள்ளன. இந்த பீடம் ஆமை தாங்குவதுபோல் அமைக்கப்பட்டுள்ளதால், இதனை ஆமை மண்டபம் என்றழைக்கின்றனர்.

சில தலங்களில் அலங்கார மண்டபத்திலேயே சுவாமியின் திருக்கல்யாண வைபவமும் நடப்பதால் இம்மண்டபத்தைக் கல்யாண மண்டபம் என்றும் அழைக்கின்றனர். வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயக் கல்யாண மண்டபம் உலகப்புகழ் பெற்றதாகும்.

வசந்த மண்டபம் :

இது ஆலயத்தின் வடகிழக்குப் பகுதியில் தென்றல்வீசும் வகையில் தெற்கு நோக்கிக் கட்டப்பட்ட விசாலமான மண்டபமாகும். வசந்த காலத்தில் பெருமான் தனது பரிவாரங்களுடன் இங்கே எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார். அனைத்து தியாகராஜத் தலங்களிலும் வசந்த மண்டபம் தனிச் சிறப்புடன் அமைந்துள்ளது.

உபசார மண்டபம் :

சுவாமியை உயர்ந்த பீடத்தில் அமர்த்தி, பாத்தியம், அர்க்கியம், ஆசமனம் முதலானவற்றை அளித்து பழங்கள் பட்சணங்களைப் படைத்து, கவரி, விசிறி, ஆலவட்டம் முதலியவற்றால் வீசி மந்திரங்களால் உபசரிக்கின்ற இடமே உபசார மண்டபம் ஆகும். உபசாரம் செய்த பிறகு பெரிய தீபாராதனை செய்யப்படும்.

ஊஞ்சல் மண்டபம் :

நித்திய பூசையின் ஓர் அங்கம், பெருமானை ஊஞ்சலில் அமர்த்திப் பாடி ஆலம் சுற்றுவதாகும். இதனைத் தமிழில் பொற்றாப்பு என்பர். ஆலயங்களில் வசந்த மண்டபத்திலேயே ஊஞ்சல் அமைந்திருக்கிறது. இதில் பெருமானையும், உமாதேவியையும் அமர்த்தி ஊஞ்சலாட்டுவர். தொண்டை நாட்டு தியாகராஜத் தலங்கள் மூன்றிலும் அம்பிகை சந்நிதிக்கு நேர் எதிரில் விழாக்காலங்களில் தியாகராஜர் ஊஞ்சல் விழாக்காணும் மண்டபங்கள் உள்ளன. வாசுதேவநல்லூர் அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை திங்கட்கிழமைகளில் ஊஞ்சலாட்டுதல் சிறப்பாக நடத்தப்படுகிறது. இதற்கென மேடை மீது ஊஞ்சல் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. திருப்பெருந்துறையில் ஊஞ்சல் மண்டபம் உள்ளது. இதில் விழா நாட்களில் மணிவாசகர் எழுந்தருள்கின்றார்.

அத்தியயன மண்டபம் :

வேதவித்துக்கள் அமர்ந்து வேதம் ஓதவும், மாணவர்களுக்கு ஓதுவிக்கவும் உரிய இடம் அத்தியயன மண்டபம் ஆகும். சுவாமி உலா வரும்போது இங்கு இருந்தவாறு அந்தணர்கள் வேத மந்திரங்களிலுள்ள வாழ்த்துக்களைக் கூறுவர். ஆலயங்களில் அத்தியயன பட்டர் வீற்றிருந்து வேதம் ஓதும் இடமாகும்.

ஆகம மண்டபம் :

சிவபெருமானால் அருளப்பட்ட இருபத்தெட்டு ஆகமங்களைச் சிவாசாரியார்கள் அமர்ந்து ஓதுவதற்கும், மாணவர்களுக்குக் கற்பிக்கவும் உள்ள மண்டபம் ஆகம மண்டபமாகும். ஆகமங்களிலுள்ள சில பகுதிகளையாவது தினமும் பாராயணம் செய்ய வேண்டும். விருத்தாசலத்தில் ஆகம மண்டபம் இருபத்தெட்டு லிங்கங்களுடன் ஆகமக் கோயிலாகவே திகழ்கிறது.

புராண மண்டபம் :

மகாபுராணங்களாகிய பதினெட்டு புராணங்களையும் தல புராணங்களையும் மக்களுக்கு விளக்கிக் கூறும் மண்டபங்கள் புராண மண்டபங்களாகும். இவை மக்கள அமர்ந்து கேட்கத்தக்க வகையில் விசாலமாகவும், காற்றோட்டமாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

தலபுராணங்களை அரங்கேற்றுவதற்காக அமைக்கப்பட்ட மண்டபங்களும் புராண மண்டபங்கள் என்று அழைக்கப்பட்டன.

தீக்ஷா மண்டபம் :

சிவநெறியாளர்களுக்குத் தீட்சை பெறுவது முக்கியமானதாகும். தீட்சை பெற்றவர்களே கோயில் சிவவழிபாடு செய்யும் உரிமை உடையவர்கள் ஆவர். அம்முறையில் ஆலயங்களில் சிவதீட்சை அளிப்பதற்கென மண்டபங்கள் இருந்தன.

இதன் நடுவில் மேடையின்மீது வண்ணப்பொடிகளால் வரையப்பட்ட தீட்சா மண்டலங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இது இறைவனை மண்டல (வண்ணக்கோல) வடிவில் வழிபடுமிடமாகும்.

(திருப்பெருந்துறை) ஆவுடையார் கோயிலில் மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் தீட்சை செய்து வைத்த மண்டபம் உள்ளது.

வீணா மண்டபம் :

சிவபெருமான் வீணா கானப்பிரியன் அவன் உருத்திர வீணையை வாசித்து மகிழ்கின்றான். ஸ்ரீ கயிலாயத்தில் வீணா மண்டபம் உள்ளது. இதிலுள்ள வீணை தன்னைத் தானே மீட்டி சாமகானத்தைப் பொழிந்து கொண்டேயிருக்கின்றது. இதையொட்டி ஆலயங்களிலும் வீணாமண்டபம் அமைக்கப்படுகிறது. ஆவுடையார் கோயிலில் முன்னாளில் தினமும் வீணா மண்டபத்தில் வீணை வாசிக்கப்பட்டதென்று கூறுகின்றனர்.

துவஜாரோகன மண்டபம் :

பெருந்திருவிழாக்களின் முக்கியமான நிகழ்ச்சி விழாவின் தொடக்கத்தில் கொடியேற்றுவதும், விழா முடிந்த பின் அதை இறக்குவதுமாகும். கொடியேற்றும்போதும் இறக்கும்போதும் கொடி மரத்திற்கு முன்பாகப் பஞ்சமூர்த்திகளும், சூல தேவரும் எழுந்தருள்கின்றனர். அவர்கள் எழுந்தருளும் இடமே துவஜாரோகண மண்டபம் எனப்படுகிறது. சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் பெரிய அளவிலான துவஜா ரோகண மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தூணில், கொற்றவன்குடி உமாபதி சிவாச்சார்யார் கொடிக்கவிபாடி, சிதம்பரம் ஆலயத்தில் கொடியேற்றியதை விளக்கும் புடைப்புச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் கொடிமரத்தைச் சுற்றிலும் பெரிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பெரிய அளவில் மகேசுவர வடிவங்கள் தூண்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபம் கம்பத்தடி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இது உலகப் புகழ்பெற்றதாகும்.

ரதாரோகண மண்டபம் (தேர்முட்டு மண்டபம்) :

பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சி பெருமான் தேரில் உலா வருதலாகும். இது கருவறையே சக்கரங்கொண்டு வீதிகளில் பவனி வருவதற்கு ஒப்பானதாகும். சுவாமியைத் தேரின் மீது ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் உள்ள மண்டபம் தேர்முட்டு மண்டபம் என்றழைக்கப்படுகிறது. இது ஆலயத்திற்கு வெளியே நேர் நிற்குமிடத்தில் இருப்பதாகும். தேரின் தட்டு அளவுக்கு உயரமாக அமைக்கப்பட்ட மேடைமீது இந்த மண்டபம் அமைகிறது. இதன்மீது ஒற்றைக் கலசம் கொண்ட விமானம் அமைந்துள்ளது. இங்கு ஏறிச் செல்லப் படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சிதம்பரம், திருவாரூர் முதலிய அனேக தலங்களில் தேர்முட்டு மண்டபங்கள் உள்ளன. பஞ்சமூர்த்திகளுக்காக ஐந்து தேர்கள் உள்ள இடங்களில் ஐந்து தேர்முட்டு மண்டபங்களும் அமைந்துள்ளன.

ஆகமங்களில் சொல்லப்படாவிட்டாலும் நடைமுறையில் இன்னும் அனேக மண்டபங்கள் ஆலயங்களில் இருக்கின்றன. அவற்றுள் சிலவற்றைத் தொடர்ந்து காணலாம்.



கொடும்பாளூர் - மூவர் கோயில்

நந்தி மண்டபம் :

சிவாலயங்களில் கருவறைக்கு நேர் எதிரில் பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றை அடுத்து பெரிய நந்திதேவர் எழுந்தருளியிருப்பார். இவருக்குப் பெரும்பான்மையான கோயில்கள் ஒற்றைக் கலசம் கொண்ட விமானத்துடன் நான்குகால் மண்டபம் அமைந்திருக்கும். இது நந்தி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இதில் ''காளைமாட்டின்'' வடிவில் நந்திதேவர் எழுந்தருளி உள்ளார்.

சிதம்பரத்தில் நடராசர் சந்நிதிக்கு முன்பாகவும், மூலஸ்தானநாதர் சந்நிதிக்கு முன்பாகவும் வெளிப்பிராகாரத்தில் பெரிய சுதை நந்திகள் அமைந்திருப்பதைக் காணலாம். இவை நீள்சதுர மண்டபமாகவும் சபாஹார விமானத்துடன் ஐந்து கலசங்கள் கொண்டதாகவும் உள்ளன.

தாராசுரம் முதலிய சில தலங்களில் நந்திக்கு எண்கோண மண்டபம் அமைந்துள்ளதையும் காண்கிறோம்.

எண்ணெய்க் காப்பு மண்டபம் :

வாசனைத் திரவியங்களால் மணமூட்டப்பட் எண்ணெயை உடலில் தேய்த்து, அது ஊறிய பிறகு சிகைக்காய், உழைமண் முதலியவற்றைத் தேய்த்து எண்ணெய்ப்பசை நீங்கக் குளிப்பதே எண்ணெய்க்குளியலாகும்.

பிறந்தநாள், தீபாவளி முதலான நாட்களில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது உடல் தூய்மையையும், மனத்தூய்மையையும் அளிக்கிறது. பெண்கள் வெள்ளிக்கிழமைகளிலும், ஆண்கள் சனிக் கிழமைகளிலும் குழந்தைகள் புதன்கிழமைகளிலும் எண்ணெய்க் குளியல் செய்தால் நன்மையுண்டாகும்.

ஆலயங்களில் மூலத்திருமேனிகளான விக்கிரங்களுக்குத் தினமும் எண்ணெய்க் காப்பிடுவர்.

சிறப்பு நாட்களில் உற்சவ மூர்த்திகளுக்கும் எண்ணெய்க் காப்பு இடப்படும். திருவாரூரில் தியாகேசப் பெருமான் எண்ணெய்க்காப்பு கொண்டருள்வதற்கென்று தனிமண்டபம் உள்ளது. இதனை எண்ணெய்க் காப்பு மண்டபம் என்று அழைக்கின்றனர். இதனருகில் எண்ணெய் சேகரிப்பதற்கென எண்ணெய்க் கொப்பரை இருக்கிறது. இதனையொத்ததாகத் திருநள்ளாறு தர்ப்பாரண்யேசுவரர் ஆலயத்திலும் தியாகராசர் எண்ணெய்க்காப்பு மண்டபம் உள்ளது.

வானமாமலையில் பெருமாளுக்குச் சிறப்பு நாட்களில் எண்ணெய்க்காப்பு நடத்தப்படும். குடம் குடமாகத் திருமஞ்சனம் செய்யப்படும் நல்லெண்ணெய் ஒரு வாய்க்கால் வழியாக ஓடி தனியே கிணற்றில் சேகரிக்கப்படுகிறது. நோய்தீர்க்கும் மருந்தாக இதனை அன்பர்கள் வாங்கிப் பயன்படுத்துகின்றனர்.

வேந்தன்பட்டி என்னும் தலத்தில் நந்தியம் பெருமானுக்கு குடம்குடமாக நெய் அபிஷேகம் செய்யப்படுகிறது. இந்த நெய்யும் தனியிடத்தில் சேகரிக்கப்பட்டு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

பக்த காட்சி மண்டபம் :

பெரிய சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாயின் இறுதியில் கோயிற் பணியாளர்கள் ஒரு பெரிய மண்டபத்தில் மங்கலப் பொருட்களை ஏந்தி மங்கல வாழ்த்துகளைக் கூறிக்கொண்டு நிற்கச் சிவபெருமான் அலங்காரத்துடன் நடனமாடியவாறே அவர்களை மும்முறை வலம் வந்து அருளும் கோலமே பக்தகாட்சி வைபவம் எனப்படும். பக்தகாட்சி அருளிய பின் விழா முடிவுற்றதை உணர்த்தும் வகையில் பெருமான் யதாஸ்தானத்தை அடைவார். இவ்விழாவில் பக்தர்கள் வீற்றிருக்கும் மண்டபமே பக்தகாட்சி மண்டபம் என்றழைக்கப்படுகிறது.

திருவாரூரில் பக்தகாட்சி மண்டபம் சிறப்புடன் அமைந்துள்ளது. வசந்தகால விழாவின் இறுதிநாளில் பக்தகாட்சி உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. அன்று இந்த மண்டபம் அலங்கரிக்கப்பட்டு பொலிவுடன் விளங்க, தியாகராசர் வசந்த மண்டபத்திலிருந்து புறப்பட்டு நடனமாடியவாறே இதனை மும்முறை வலம் வந்து பூங்கோயிலான தமது சன்னதியை அடைகின்றார்.



நீராழி மண்டபம் :

சுற்றிலும் நீரால் சூழப்பட்ட மண்டபங்கள் நீராழி மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பெரும்பாலும் திருக்குளங்களின் நடுவில் அமைந்திருக்கும் மண்டபங்களே நீராழி மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. தெப்போற்சவத்தின்போது மட்டும் சிவபெருமான் உமாதேவியுடன் இதனுள் எழுந்தருள்வது வழக்கம். இதன் மீது ஒற்றைக் கலசத்துடன் பல அடுக்குகளைக் கொண்ட விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மயிலை கபாலீசுவரர் கோயில், வைத்தீசுவரன் கோயில் முதலான திருக்கோயில்களின் குளங்களுக்கு மத்தியில் கண்ணைக் கவரும் நீராழி மண்டபங்களைக் காணலாம்.

திருவாரூர் கமலாலயத் திருக்குளத்தின் மையத்தில் இருந்த இத்தகைய மண்டபம் பல்வேறு திருப்பணிகளைப் பெற்றுத் தனி சிவன் கோயிலாகவே மாறி நடுவணநாத சுவாமி கோயில் என்றழைக்கப்படுகிறது. குளங்களின் மத்தியில் மட்டுமின்றி ஆறுகளின் மத்தியிலும் நீராழி மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காவிரியின் நடுவில் அனேக மண்டபங்கள் அமைக்கப்பட்டிருப்பதையும் அதில் இறைவன் எழுந்தருளி வசந்த விழா காண்பதுடன் தீர்த்தமும் அளிக்கின்றார்.

கருவறையைச் சுற்றி நீராழியை அமைத்து அதன்மீது மண்டபம் கட்டியுள்ளதையும் காண்கிறோம்.

தட்டம் சுற்றி மண்டபம் :

திருவிழாவில் பெருமான் வீதிகளில் வலம் வந்ததும், ஆசாரியர்கள், இசைக்கலைஞர்கள் அவரை வலம் வருவர். இறுதியில் கோயிற் பெண்களான தேவரடியார்கள் முக வீணையை வாசித்துக்கொண்டு தீபமேந்திய தட்டுகளை ஏந்தி வலம் வருவர். இதனை தட்டம் சுற்றி மண்டபம் என அழைப்பர். பெரும்பாலும் இது ஆலயத்திற்கு எதிரில் பதினாறு கால்களுடன் அமைக்கப்படுவதாகும்.

பரணி மண்டபம் :

இது சிவபெருமான் செய்த வீரச்செயல்களை விவரித்துக் கூறும் மண்டபமாகும். பரணிபாடுதல் வீரனின் ஒப்பற்ற வீரத்தைப் புகழ்ந்து பாடுவதாகும். வைராவிகள் எனப்படும் வீரச் சேவையாளர்கள் இதனைப் பாடுவர்.

தீபாலங்கார மண்டபம் :

இதில் மண்டபத்தின் மூன்று சுவர்களிலும் முக்கோண வடிவிலான எண்ணற்ற மாடங்களை அமைத்து அதில் அகல் விளக்குகளைப் பொருத்துவர். இந்த தீபாலங்காரத்திற்கு நடுவில் பெருமானை எழுந்தருளுவித்து உபசாரங்களைச் செய்வர். அச்சிறுபாக்கத்தில் ஆட்சீசுவரர் ஆலயத்திற்கு எதிரில் ஆலயத்தை நோக்கியவாறு தீபாலங்கார மண்டபம் உள்ளது.

திருமாளிகைப்பத்தி மண்டபம் :

கருவறை, மகாமண்டபம் ஆகியவற்றைச் சுற்றிலும் விசாலமான இடத்தை விட்டு விட்டு நான்குபுறமும் (வாயில் நீங்கலாக) மேடை அமைத்து அதன் மீது மண்டபம் அமைப்பர். இந்த மேடை திருமாளிகைப் பத்தி என்றும், அந்த மண்டபம் திருமாளிகைப் பத்தி மண்டபம் என்றும் அழைக்கப்படும். ஆதியில் இது பக்தர்கள் அமர்ந்து தியானம் புரிய அமைக்கப்பட்டதாகும். காலப்போக்கில் இந்த மேடையில் அஷ்ட பரிவாரங்களான சூரியன், சந்திரன், பைரவர், சப்தமாதர்கள், விநாயகர், முருகன், மகாலட்சுமி ஆகியோரை அமைத்துவிட்டனர்.

அர்த்த மண்டபம் :

கருவறைக்கு முன்பாக, அதில் பாதியளவுள்ள மண்டபம் அமைகிறது. இதனை அர்த்த மண்டபம் என்பர். தமிழில் உள்நாழி எனப்படும். இதில் நித்யோத்சவ மூர்த்தியும், போகசக்தி அம்பிகையும் எழுந்தருளி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

மகா மண்டபம் :

சிவாலயங்களில் கருவறைக்கு முன்பாக அர்த்த மண்டபமும் அதற்கும் முன்பாக விசாலமான பெரிய மண்டபமும் அமைகின்றன. இதுவே மகா மண்டபம் ஆகும். இதனுள் வடபகுதியில் (கிழக்கு மேற்காக) மேடை அமைக்கப்பட்டு அதில் வரிசையாக உற்சவமூர்த்திகள் எழுந்தருளி வைக்கப்படுகின்றனர்.



தாராசுரம் - ராஜகம்பீரன் மண்டபத்தூண்கள்



தாராசுரம் மண்டப யாளித்தூண்கள்

நவாப் மண்டபம் :

இசுலாமிய அரசர்கள் அன்பின் மிகுதியால் சிவாலயங்களில் மண்டபங்களை அமைத்துத் தந்துள்ளனர். இவை நவாப் மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. திருத்தணியில் நவாப் வாத்திய மண்டபம் இருக்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன்புவரை இசுலாமியர் இங்கே பூசையின்போது ''நகார்'' (முரசு) வாசிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

பிராகார மண்டபம் :

ஆலயத்தைச் சுற்றிவரும் வகையில் பிராகாரங்கள் அமைந்துள்ளன. பெரும்பான்மையான பிராகாரங்கள் திறந்த வெளிப் பிராகாரமாகவே உள்ளன. சில தலங்களில் மட்டும் அன்பர்கள் வெய்யில் மழையால் துன்புறாமல் வலம்வர பிராகாரத்தில் மண்டபங்கள் அமைக்கப்படுகின்றன. உலகத்திலேயே நீளமான மண்டபத்துடன் கூடிய பிராகாரம் இராமேசுவரத்தில் உள்ளது.

ருத்ரபாத மண்டபம் :

உருத்திர மூர்த்தியின் பாதத்திற்கு நான்குகால் மண்டபம் அமைத்திருப்பதை உருத்திரத் தலங்களில் காண்கிறோம். திருவண்ணாமலையில் கிரிவலப் பாதையில் ஆங்காங்கும், திருக்கழுக்குன்றத்தில் சிறிய மலையின் மீதும் உருத்திரபாதம் நாலுகால் மண்டபத்துடன் அமைந்துள்ளன.

முக்தி மண்டபம் :

இதில் அமர்ந்து பஞ்சாட்சர ஜபம் செய்தால் மோட்சம் பெறுவது உறுதி என்று புராணங்கள் கூறுகின்றன. இத்தகைய முக்தி மண்டபம், நாகப்பட்டினம், திருவையாறு, காசி (வாரணாசி) ஆகிய இடங்களில் மட்டுமே உள்ளது. திருவையாற்றில் இந்த மண்டபம், தட்சிணாமூர்த்தி சந்நிதியில் அமைந்துள்ளது. மண்டபத்தில் அமர்ந்து அன்பர்கள் ஜெபம் செய்கின்றனர். இந்த மண்டபத்தின் பெருமைகளைத் திருவையாற்றுத் த்லபுராணம் தனிச்சிறப்புடன் விவரிக்கின்றது. இதனை ஜெபேச மண்டபம் எனவும் வழங்குகின்றனர்.

மன்னர்கள் பெயரால் அமைந்தவை:

மாமன்னர்களும், அவர்களுடைய அதிகாரிகளும் பிரதிநிதிகளும் மிகுந்த சிவபக்தியால் சிவாலயங்களில் மண்டபங்களை அமைத்தனர். அவை அவர்கள் பெயரால் அழைக்கப்படுகின்றன. திருவாரூரில் சோழ மன்னனில் படைத்தலைவனாக இருந்த இராஜநாராயணன் பெயரால் பெரிய கொலுமண்டபம் உள்ளது. திருவக்கரையில் கண்டார் சூரியன் என்பவன் அமைத்த ''கண்டார் சூரியன் மண்டபம்'' என்னும் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. திருப்பெருந்துறையில் அச்சுத பூபாலன் என்பவன் கட்டிய மண்டபம் ''அச்சுத பூபால மண்டபம்'' என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறது. இந்நாளில் இதனை தியாகராஜர் மண்டபம் என அழைக்கின்றனர்.

தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்தில் முன்னுள்ள மண்டபம் தேர் வடிவில் உள்ளது. இதனை அமைத்தவன் இரண்டாம் ராஜராஜனாவான். இவனுடைய விருதுப் பெயர்களில் ஒன்றான ''இராஜகம்பீரன்'' என்ற பெயரால் இம்மண்டபம் இராஜகம்பீர மண்டப்ம் என்றழைக்கப்படுகிறது. திருப்புகலூரில் ''நரலோகவீரன்'' என்பவன் அமைத்த நரலோக வீரன் மண்டபம் உள்ளது. இப்படி அனேக தலங்களில் மன்னர்களாலும் அரசப் பிரதிநிதிகளாலும் அமைக்கப்பட்ட மண்டபங்கள் இருப்பதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

தீர்த்தவாரி மண்டபம் :

சிவபெருமான் பரிவாரங்களுடன் குளம், ஆறு முதலியவற்றிற்கு எழுந்தருளி சிறப்பு நாட்களில் தீர்த்தம் கொடுத்தருளுவார். அந்த வேளையில் சுவாமி தங்கவும் அபிஷேகம் முதலியன கொள்ளவும் அமைக்கப்படும் மண்டபங்கள் தீர்த்தவாரி மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. காவிரி, தாமிரபரணி முதலிய அனேக



திருச்செங்கோடு மண்டபத் தூண்கள்



திருவரங்கம் மண்டபத்தூண்கள்

4

ஆறுகளின் கரைகளில் தீர்த்தவாரி மண்டபங்களைக் காண்கிறோம். தில்லையில் சிவகங்கைத் தீர்த்தக்கரையிலும், திருவண்ணாமலையில் அக்னி தீர்த்தக் கரையிலும் தீர்த்தவாரி மண்டபங்கள் உள்ளன.

துலாபார மண்டபம் :

அன்பர்கள் தங்கள் விருப்பம் நிறைவேற வேண்டிக்கொண்டு துலாபாரம் அளிக்கின்றனர். துலாபார தானம் என்பது, பொன், மணி, தானியங்கள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைத் தன் எடைக்கு எடை கொடுப்பதாகும். இதற்கென அமையும் மண்டபம் துலாபார மண்டபம் எனப்படும். இதன் நடுவில் பெரிய தராசு நிறுவப்பட்டிருக்கும். ஒரு தட்டில் அன்பர்கள் அமர்ந்து கொள்ள எதிர்த்தட்டில் தானப்பொருளையிடுவர். அன்பர்களின் நிறைக்கு பொருட்களை எடையிட்டு ஆலயத்திற்கு அளிப்பர். கேரளாவிலுள்ள அனேக ஆலயங்களில் துலாபார மண்டபம் உள்ளது. கும்பகோணம் மகாமக் குளக்கரையில் கோவிந்த தீட்சிதர் துலாபார தானம் செய்த மண்டபம் உள்ளது.

சொக்கட்டான் மண்டபம் :

தமிழகத்து விளையாட்டுக்களில் ஒன்று சொக்கட்டான் ஆகும். இருவர் அல்லது நால்வர் ஆடும் ஆட்டமாகும். இதற்கென கூட்டல்குறி அமைப்பில் கட்டங்களை வரைந்து அதில் காய்களை வைத்து ஆடுவர். இந்தக் கட்டம் போலத் தாழ்வாரமும் நான்கு புறமும் உயரமான மேடையும் கொண்டதாக சொக்கட்டான் மண்டபம் அமைகிறது. ஒரு சில ஆலுயங்களில் மட்டும் சொக்கட்டான் மண்டபம் உள்ளது. உமையும், சிவனும் சொக்கட்டான் ஆடி மகிழ்வதாகப் புராணங்கள் குறிக்கின்றன. சிவபெருமானுக்குச் சதுரங்க (சொக்கட்டான்) வல்லபர் என்ற பெயர் வழங்குகிறது. திருவையாறு ஐயாறப்பர் சந்நிதியில் சொக்கட்டான் மண்டபம் உள்ளது.

நிருத்த மண்டபம் :

பெருமானுக்கு முன்பாக ஆடல் மகளிர் நிருத்தத்தின் அடவுகளை ஆடிக்காட்டும் மண்டபம் நிருத்த மண்டபம் எனப்பட்டது. தில்லை சிற்றம்பலத்தின் முன்புறம் பெரிய நிருத்த மண்டபம் உள்ளது.

நாட்டிய மண்டபம் :

சிவபெருமான் கண்டு களிக்கும் வண்ணம் ஆடல் மகளிர் குறவஞ்சி, கூடலிழைத்தல் முதலான நாட்டியங்களை நிகழ்த்தும் இடமாகும்.

சங்கு மண்டபம் :

தெய்வீக மங்கலச் சின்னங்களில் ஒன்று சங்காகும். தானியங்களைப் பரப்பி, அதன்மீது 108 அல்லது 1008 சங்குகளை வரிசையாக அடுக்கி, அதில் நீரைவார்த்து, மாவிலை தர்ப்பை ஆகியவற்றை இட்டு, இரண்டு காலங்களுக்குக் குறையாமல் ஹோமங்கள் ஜபங்கள் செய்து, இறைவனுக்கு அந்தச் சங்கு நீரால் அபிஷேகம் செய்கின்றனர். இதற்காக சங்குகளை அடுக்கும் மண்டபம் சங்கு மண்டபம் என்றழைக்கப்படும்.

சிவ பூசைகளில் ஒரு அங்கமாக லட்சுமி பூசை எனப்படும் தனபூசை செய்யப்படும். இதில் லட்சுமியின் திருவுருவத்திற்குப் பதிலாக வலம்புரிச் சங்கை வைத்து பூஜிப்பர். இந்தச் சங்கு வைக்கப்படும் மண்டபமும் சங்கு மண்டபம் என்று அழைக்கப்படுகிறது.

சில ஆலயங்களில் அதிகாலை நேரத்தை உணர்த்த துறவிகள் வெண் சங்குகளை ஊதும் வழக்கம் இருந்தது. இவர்களிலிருந்து சங்கை முழக்கும் மண்டபமும் சங்கு மண்டபம் என்றழைக்கப்பட்டது.

திருக்கழுக்குன்றத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறக்கும் சங்குகளைச் சேமித்து வைத்துள்ளனர். இதுவும் சங்கு மண்டபம் என்றழைக்கப்படுகிறது.

வலம்புரி மண்டபம் :

இப்பெயரால் சீர்காழி சிவாலயத்தில் மூன்றாம் பிராகாரத்தில் ஒரு மண்டபம் உள்ளது. இது வைரவத்தானமாகும். இதில் நடுவில் ஊஞ்சலையும், சுற்றிலும் அமைத்துள்ள உள்மாடங்கள் எட்டிலும் எட்டு வைரவ மூர்த்திகளையும் அமைத்துள்ளனர்.

அமாவாசை - கிருத்திகை மண்டபம் :

அமாவாசைதோறும் இறைவனை எழுந்தருளி வைத்து உச்சி வேளையில் அபிஷேகம் செய்து உபசாரம் செய்யுமிடமாகும். திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் அமாவாசை மண்டபம் உள்ளது.

கிருத்திகைதோறும் பெருமானை மாலையில் எழுந்தருள வைத்து தீபாராதனை செய்து வழிபடுமிடமாகும். திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் கிருத்திகை மண்டபம் உள்ளது.

தேர்வடிவிலான மண்டபங்கள் :

ஆலயங்களில் அமைந்துள்ள சில மண்டபங்கள் தேர்வடிவில் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இவற்றிற்குப் பெரிய சக்கரங்கள் இருபுறமும் அமைந்துள்ளன. இவற்றை இழுத்துச் செல்லும் வகையில் யானை, குதிரை உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. குடந்தை நாகேசுவரத்திலுள்ள நடராஜர் சபை, சிதம்பரம் பாண்டிநாயகம் சந்நிதி, நிருத்தசபை, தாராசுரம் முக மண்டபம் ஆகியன தேர்மண்டபங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இவை வானுலகிலிருந்து வந்து பூவுலகில் நிலைபெற்றன என்று மக்கள் நம்புகின்றனர்.

சூரியன் வழிபட்ட தலமான குடந்தை நாகேசுவரசுவாமி ஆலயத்திலுள்ள தேர்ச்சக்கரத்தில் பன்னிரண்டு சூரியர்களும் அமைக்கப்பட்டுள்ளனர்.

வெளவால் நெத்தி மண்டபம் :

இது மண்டபத்திற்கு அதன் தள அமைப்பை ஒட்டி வந்த பேராகும். இதில் தூண்களை அமைத்து அதன் மீது உத்திரங்களை இட்டபின், கருங்கல்லைப் பரப்பிச் சமதளமாக அமைக்காமல், செங்கல் சுண்ணாம்பு கொண்டு யானையின் முதுகு போன்று வளைந்த கூரையாக அமைத்துள்ளனர். இது வெளவால் நெற்றி போன்ற முகட்டைப் பெற்றிருப்பதால் இப்பெயர் பெற்றதென்பர். சோழ மண்டலத்திலுள்ள அனேக ஆலயங்களில் இந்த வளைந்த கூரை அமைப்பைக் கொண்ட மண்டபங்களைக் காண்கிறோம். கூரையின் உச்சிப்பகுதியில் வரிசையாக கலசங்கள் அமைகின்றன.

இன்னும் அனேக பெயர்களில் மண்டபங்கள் உள்ளன. அன்பர்கள் தல வரலாறுகளிலும், மகாபுராணங்களிலும் அவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

சபைகள்/ மண்டபங்கள் :

மண்டபங்களுக்கு சபைகள், அம்பலங்கள் என்ற பெயர்களும் வழங்கிவருகின்றன. தில்லை சிற்றம்பலத்திலுள்ள சோமாஸ்கந்தர் மண்டபம்-தேவசபை என்றும், பெருமான் நின்றாடும் கருவறை - சிற்சபை என்றும், அதற்கு முன்னுள்ள மண்டபம் கனகசபை என்றும், கொடிமரத்திற்கு எதிரிலுள்ள தேர்வடிவிலான மண்டபம்-நிருத்தசபை என்றும், ஆயிரங்கால் மண்டபம்-ராஜசபை என்றும் அழைக்கப்படுகின்றன.

தூண்களின் எண்ணிக்கை அடிப்படையில் மண்டபங்கள் :

ஆலயங்களிலுள்ள மண்டபங்கள் பலவற்றிற்கு அவற்றைத் தாங்கும் கால்களின் எண்ணிக்கையை ஒட்டிப் பெயர்கள் அமைகின்றன. அவற்றுள் சில.




BODIAL
CHATHURASRAM
POOMUNAI
ETTUPATTAM
POOMUNAI
CHATHURAM
POOMUNAI
ETTUPATTAM
NAGABANTHAM
CHATHURASRAM
ASWAPADAM

CHITHRAKANTA STAMBAM

சித்ரகண்ட ஸ்தம்பம்



ANIVOTTISTHAMBAM

அனிவொட்டி ஸ்தம்பம்

ஒற்றைக் கால் மண்டபம் :

பெரும்பாலும் மண்டபங்கள் குறைந்த பட்சம் இரண்டு கால்களையாவது கொண்டிருக்கும். மாறாக சிதம்பரத்தில் மூன்று பக்கம் சுவர்களை ஆதாரமாக வைத்து ஒற்றைக்காலை நிறுத்தி மண்டபம் அமைத்துள்ளனர். மக்கள் இதனை ஒற்றைக்கால் மண்டபம் என அழைக்கின்றனர். இது துர்க்கை சந்நிதியில் உள்ளது.

மூன்றுகால் முக்கோண மண்டபம் :

இத்தகைய அபூர்வமான மண்டபம் சென்னை மயிலாப்பூர் திருக்களத்தின் வடமேற்கு முனையில் உள்ளது. இது மூத்தாளாகிய ஜேஷ்டாதேவிக்கு அமைக்கப்பட்டதாகும்.

நான்கு கால் மண்டபம் :

அதிக அளவில் உள்ளவை இவ்வகை மண்டபங்களே. ஊஞ்சல் மண்டபம், நந்தி மண்டபம் முதலிய எண்ணற்ற மண்டபங்கள் இத்தகையனவாகும்.

ஆறுகால் மண்டபம் :

ஆறுகால்களைக் கொண்ட மண்டபங்களை முக மண்டபங்களாகவே காணமுடிகிறது. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இத்தகைய ஆறுகால் மண்டபங்கள் இருக்கின்றன. பாண்டிய நாட்டுத் தலங்களிலுள்ள அனேக ஆலயங்களின் முகமண்டபங்கள் ஆறுகால்கள் கொண்டுள்ளன.

எட்டுக்கால் மண்டபம் :

சில ஆலயங்களில் நந்தியம் பெருமானுக்கு எண்கோணத்தில் எட்டுக் கால்களைக் கொண்ட மண்டபம் உள்ளது. திருப்பனந்தாளில் எட்டுக்கால்களைக் கொண்ட அஷ்டசக்தி மண்டபம் உள்ளது. இதன் ஒவ்வொரு காலிலும் ஒவ்வொரு சக்தியின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

பதினாறுக்கால் மண்டபம் :

நல்வாழ்வுக்கு அடிப்படையானவை பதினாறு செல்வங்களாகும். பதினாறு செல்வங்களையும் இறைவன் அருள்வதைக் குறிப்பாக உணர்த்த பதினாறு கால்களுள்ள மண்டபம் அமைக்கப்படுகின்றது. மயிலாப்பூர், திருமுல்லைவாயில், காஞ்சி ஏகாம்பரம் முதலிய தலங்களில் ஆலயத்திற்கு முன்பாக பதினாறு கால் மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது. பெருந்திருவிழாவில் சுவாமி வீதி புறப்பாட்டுக்கு முன்பாக இம்மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் காட்சி நல்குவர். வீதியுலா முடிந்ததும் இதனுள் எழுந்தருளி பரிவேட பூசை நடத்தப்பட்ட பின் சுவாமி ஆலயத்திற்கு எழுந்தருள்வர்.

திருவான்மியூரில் பங்குனி மாதம் நடைபெறும். பெருந்திருவிழாவின் பத்தாம் நாள் இரவில் தியாகேசர் பதினாறுகால் மண்டபத்தைச் சுற்றி நடனம் ஆடிய படியே வான்மீகி மகரிஷிக்குக் காட்சி கொடுக்கும் ஐதீகவிழா நடைபெறுகிறது.

பதினெட்டுக் கால் மண்டபம் :

தில்லை சிற்றம்பலத்தின் முன்புறமுள்ள கனகசபை பதினெட்டு புராணங்களைக் குறிக்கும் பதினெட்டுக் கால்களைக் கொண்டதாகும். இதனைப் பதினெண் புராண மண்டபம் என்கின்றனர்.

இருபத்தெட்டுக் கால் மண்டபம் :

ஆதியில் சிவபெருமான் இருபத்தெட்டு ஆகமங்களை உமாதேவியருக்கு உபதேசித்தார். இவையே சைவ சமயத்திற்கு ஆதார நூல்களாகும். இருபத்தெட்டுக் கால்களைக் கொண்ட மண்டபம் ஆகம மண்டபம் என்று அழைக்கப்படும். திருமாணிக்குழியில் இத்தகைய ஆகம மண்டபம் இருக்கிறது.

அறுபத்துநான்கு கால் மண்டபம் :

அறுபத்துநான்கு கலைகளைக் குறிக்கும் வகையில் அறுபத்துநான்கு கால் மண்டபம் அமைக்கப்படுகிறதென்பர். அம்பிகை ஆலயங்களில் அமையும் அறுபத்துநான்கு கால் மண்டபங்கள் அறுபத்துநான்கு யோகினிகளைக் குறிக்கும் என்பர். திருப்பெருந்துறை ஆன்மநாத சுவாமி ஆலயத்தின் முன்புறம் அறுபத்துநான்கு கால்களைக் கொண்ட பெரிய மண்டபம் உள்ளது. (இதனை மக்கள் ஆயிரங்கால் மண்டபம் என்றழைக்கின்றர்)

நூற்றுக்கால் மண்டபம் :

பெரிய ஆலயங்களில் நூற்றுக்கால் மண்டபங்களைக் காண்கிறோம். இவை நூறு உருத்திரர்களையும் கால்களாகக் கொண்ட மகா உருத்திர மண்டபம் என்பர். திருவக்கரை, திருப்புலிவனம், காஞ்சிபுரம் முதலிய தலங்களில் நூற்றுக்கால் மண்டபங்கள் உள்ளன.

திருவையாற்றிலுள்ள நூற்றுக்கால் மண்டபம் இந்நாளில் தண்டபாணிக் கோயிலாகத் திகழ்கிறது.

4A



தேர் வடிவிலான மண்டபம்
உதவி தமிழ்நாடு தொல்லியல் துறை

ஆயிரங்கால் மண்டபம் :

ஆயிரங்கால்களைக் கொண்ட மண்டபங்கள் திருவாரூர் திருவண்ணாமலை, சிதம்பரம் முதலிய தலங்களில் உள்ளன. சிதம்பரம் நடராசர் ஆலயத்திலுள்ள ஆயிரங்கால் மண்டபம் ''ராஜசபை'' என்றழைக்கப்படுகிறது. இங்கு மார்கழி திருவாதிரை, ஆனித்திருமஞ்சனம் ஆகிய நாட்களில் நடராசரை எழுந்தருளி வைத்து மகா அபிஷேகமும் லட்சார்ச்சனையும் நடைபெறுகின்றன. இங்கிருந்து நடனமாடியபடியே நடராசரும் சிவகாமியும் சிற்சபைக்கு எழுந்தருள்கின்றனர்.

திருவாரூரில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் ''வசந்த மண்டபம்'' என்று அழைக்கப்படுகிறது. சிறப்பு அபிஷேகங்களை ஏற்றுக்கொண்டு தியாகராஜர் வசந்த காலப் பெருவிழாவின்போது இதில் கொலுவீற்றிருந்து காட்சியளிக்கிறார். இந்த மண்டபத்தைப் புராணங்கள் ''தேவாசிரியம்'' என்றழைக்கின்றன. இதற்கு தேவர்கள் விரும்பிப் பூசிக்குமிடம் என்பது பொருள். தேவாச்ரயம் தமிழில் தேவாசிரியம் ஆகியது. ஆச்ரயம் என்றால் சரணம் அடைதல், பூசித்தல் எனப் பொருள்.

ஸ்ரீ விமானத்தில் விளங்கும் சிறப்புமிகு திருவடிவங்கள் :

பொதுவாக அனைத்து ஆலயங்களிலும் ஸ்ரீ விமானத்தின் கிழக்கில் உமாமகேசரும் தெற்கில் (தக்ஷிணாமூர்த்தியும்) மேற்கில் திருமாலும் , வடக்கில் பிரம்மதேவனும் அமைக்கப்படுகின்றனர். ஸ்ரீ விமானங்களின் அடுக்குகளும் அகலங்களும் கூடும்போது மூர்த்திகளின் அவதாரங்களும் அவர்கள் தொடர்புடைய புராணங்களை விளக்கும்திருவுருவங்களும் அமைக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக விமானம் ஒரு தளமாக இருக்கும்போது அதன் மேற்குப்பக்கத்தில் திருமால் ஸ்ரீதேவி பூதேவியுடன் அமைக்கப் படுகின்றார். தளங்களும் அங்கங்களும் விரிவாகும்போது, திருமாலின் தசாவதாரங்கள், கிருஷ்ணனின் லீலைகள், மகாபாரதக் காட்சிகள் இராமாயணக் காட்சிகள் முதலியன இடம் பெறுகின்றன.

இவ்வாறே ஒற்றைத் தள விமானத்தின் தெற்குப் பகுதியில் ஆலமர் செல்வனான தட்சிணாமூர்த்தி அமைக்கப்படுகிறார். இப்பகுதி விரிவடையும்போது வீணாதர தட்சிணாமூர்த்தி, காமதகனர், யோக தட்சிணாமூர்த்தி முதலிய தட்சிணாமூர்த்தி வடிவங்களும், சிவ பெருமானின் தெற்குமுகமான அகோர முகத்திலிருந்து தோன்றிய உக்கிர வடிவங்களான கால சம்ஹாரர், கஜ சம்ஹாரர் முதலிய திருவடிவங்களும் அமைக்கப்படுகின்றன.

இவ்வாறு அமைக்கப்படுவது பொதுவானதாகும். மாறாகச் சில சிறப்புமிக்க திருவுருவங்கள் ஸ்ரீவிமானங்களில் அமைந்துள்ளதையும் காண்கிறோம். இந்த அமைப்பு கலைஞரின் ஆழ்ந்த புலமை. கோயிலை அமைத்தவரின் விருப்பம், அருட்காட்சி பெற்றவர்களின் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்டனவாகும். இவை அந்தந்த தலங்களுக்கே உரியதாகும். பிற ஆலயங்களில் இவற்றைக் காண்பது அரிது. எடுத்துக்காட்டாக, திருஒற்றியூர் ஸ்ரீவிமானத்தில் தட்சிணாமூர்த்திக்குப் பதிலாக லகுளீச மூர்த்தியும், திருமழிசை விமானத்தில், அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் தொகையடியார்களும். சோழர்கள் அமைத்த ஸ்ரீ விமானங்களின் மேற்குக் கோட்டத்தில் யோகநரசிம்மரும், கழுகுமலையில் மிருதங்கம் வாசிக்கும் சிவபெருமானும் இருக்கின்றனர். இத்தகைய அருமைமிக்க மூர்த்தங்கள் சிலவற்றை இங்கே அறிந்து மகிழலாம்.

ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயம்
தஞ்சை - விமானம்



ஸ்ரீ ஐராவதேஸ்வரர் ஆலயம்
தாராசுரம் - கருவறை விமானத்துடன்
(பின்பகுதி)



திருவரங்கம் மண்டபத்தூண்கள்

திருவரங்கம் மண்டபத்தூண்கள்



விமானமும் யோகத்தானமும் :-

(திருவாவடுதுறை ஆதீனத்திற்குச்
சொந்தமான ஸ்ரீ வீழி நாதர்
திருக்கோயில்)


பரமஆகாசம்
கபால வாசல்
சக்தி (காற்று ஆகாசத்துக்கும்
உள்ள இடைவெளி
நாகதம் (காற்று)
பூரகம் (அக்னி)
ாதிஷ்டானம். (நீர்)
கபால வாசல்
மகாநாசி
கண்டம்
சிம்மாசனம்
உபபீடம்
ஆதாரபீடம்
சந்தனக்கல்
விமானத் தேவர்கள்
சிவலிங்க பீடம்
வெள்ளிஆமை
தங்கஆமை

ஸ்ரீ விமானத்தில் அறுபத்து மூவர் :

சென்னைக்கு மேற்கே திருத்தணிகை செல்லும் சாலையில் அமைந்துள்ள தலம் திருமழிசை ஆகும். இங்குள்ள ஒத்தாண்டேசுவரர் ஆலய ஸ்ரீவிமானம் கஜப்பிருஷ்ட வடிவமானது. இந்த ஸ்ரீவிமானத்தின் கிரீவப்பகுதியில் சோமாஸ்கந்தரும் அவரைத் தொடர்ந்து வலமாக சுந்தரமூர்த்திகள் தொடங்கி சேக்கிழார்வரை அறுபத்து மூன்று நாயன்மார்களும் தொகையடியார்களும் அமைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய காட்சி வேறெந்த ஸ்ரீவிமானத்திலும் காணக் கிடைக்கவில்லை.

நரசிம்மர்

மிருதங்கள் வாசிக்கும் சிவன் :

வீணைமீட்டும் நிலையில் தென்முகக் கடவுளாகவும், பிட்சாடன மூர்த்தியாகவும் சிவபெருமான் பல இடங்களில் ஸ்ரீ விமானத்தில் இருக்க, அபூர்வமாக மிருதங்கம் வாசிக்கும் தட்சிணாமூர்த்தியின் வடிவம் கழுகுமலை ஸ்ரீவிமானத்தில் மட்டுமே உள்ளது.

யோக நரசிம்மர் :

சோழர்கள் அமைத்த அனேக சிவாலயங்களின் ஸ்ரீ விமானத்தின் மேற்குப் பகுதியில் யோக நரசிம்மரை அமைத்துள்ளனர். திரிபுரமெரித்த சிவபெருமானின் கரத்தில் அம்பாகத் திகழ்ந்த திருமால் உக்ர நரசிம்மராக இருக்கின்றார். இதை உணர்த்தவே சிவாலயங்களின் விமான மேற்குக் கோட்டங்களில் நரசிம்மர் அமைக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.


ஸ்தூபி 1½
சிகரம் 4½
கண்டம் 2
வேதியல் 1
பிரஸ்தரம் 2
கர்ணகூடம் 5
பிரஸ்த்தரம் 3
ஸ்தம்பவர்கம் 6
அதிஷ்டானம் 3

இரண்டு தள விமானம்

திருப்பெருந்துறை(ஆவுடையார் கோயில்)
மண்டபத்தூண்

காலமும் கலையும் வளரவளர ஸ்ரீ விமானங்கள் பல்வேறு வளர்ச்சிகளை அடைந்து அழகாக அமைக்கப்பட்டன. ஆதியில் சதுரம், வட்டம், நீள்வட்டம், நீள்சதுரம் ஆகிய அடிப்படைகளின் மீது சுவர்களும் வாயிலும் வைத்து அதன் மீது விமானங்கள்அமைக்கப்பட்டன. காலம் செல்லச்செல்ல சதுரமான அடிப்படைமீது வட்டம், எண்பட்டை, அறுகோணம் முதலிய விமானங்கள் அமைக்கப்பட்டன. சதுரமான தளங்களின்மீது அமையும் விமானங்களின் கிரீவம் வட்டமாகவும், எண்பட்டையாகவும் அமைக்கப்பட்டன. இவை மிஸ்ரஜாதி (கலப்படமான) விமானங்கள் என்று அழைக்கப்படுகின்றன. நடைமுறையில் நாம் காணும் சில விமானங்களைப் பற்றிய செய்திகளைச் சுருக்கமாகக் காணலாம்.

சதுர அடிப்படை மீதான சதுரவிமானம் :

சதுரமான அடிப்படையைக் கொண்ட ஸ்ரீ விமானங்களே அதிக அளவில் உள்ளன. இவற்றைச் சிற்ப நூல்கள் நாகரவிமானமென்று கூறுகின்றன. இவை அடி முதல் நுனிவரை சதுரமான அமைப்பையே கொண்டவைகளாகும்.

சதுர அடிப்படை மீது வட்டமாக அமைந்தவை :

இவை சதுரமான அடிப்படையின்மீது சதுர வடிவில் சுவர்கள் கட்டப்பட்டு தளமிடப்படுகிறது. அதன்மீது வட்டவடிவில் கிரீவமும், அதன் மீது குவியும் வட்டமான சிகரமும், அதன் மீது ஒற்றைக் கலசமும் அமைகின்றன. சோழ மண்டலத்திலுள்ள அனேக ஆலயங்கள் இத்தகையனவேயாகும்.


தூங்கானை மடம்


சாலஹார விமானம்


சதுர விமானம்

சதுரமான அடுக்குகளும் வட்டமான கிரீவமும் கொண்டவை:

இவ்வகை விமானங்களில் சதுரமான அடுக்குகளின் மீது வட்டமான கிரீவமும் அதன்மீது குவியும் வட்டம் அல்லது எண்பட்டை வடிவில் சிகரமும் அமைகிறது. சிகரத்தில் கோடிப்பாளைகளும் நான்கு திசைகளை நோக்கியவாறு நாசித்தலைகளும் அமைகின்றன. இதனை காலீசுவரர் ஆலயம் முதலியவற்றில் காணலாம்.

வட்ட அடிப்படை மீதான வட்டவிமானம் :

வட்டவடிவ விமானங்களைச் சிற்ப நூல்கள் திராவிட விமானம் என்றழைக்கின்றன. இவற்றின் வட்டவடிவ விமானங்களும் வட்ட அடிப்படையைப் போலவே சுவர்களும் வட்ட வடிவில் அமைக்கப்படுகின்றன. அதன் மீது விமானங்களும் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டன.

வட்டமான அடித்தளத்தைக் கொண்ட கோயில்கள் தென்னகத்தில் இல்லை. கேரளாவில் இத்தகைய சிவாலயங்களை அதிகம் காணலாம்.

குமரி மாவட்டத்திலுள்ள பன்றிக்கோடு மகாதேவர் கோயில் இரண்டடுக்கு வட்ட வடிவ விமானத்தைக் கொண்டதாகும்.

★ மேலும் அறிய : ''அருள்மிகு விமான விளக்கம்''-(மகுடாகமம்)- விமானத்தின் பெயர், சுவாமியின் (லிங்கம்) பெயர், சக்தியின் பெயர் என விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இதனை திருவிடைமருதூர் (ஆதீன வெளியீடு, ப.எண்:79) கும்பாபிஷேக மலரில் காண்க.

நீள் சதுர அடிப்படை மீது அமைந்தவை :

நீள்சதுரமான (செவ்வக) அடிப்படையின் மீது கட்டப்பட்ட விமானங்கள் பலவகைப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை சாலஹார விமானம். சபாஹார விமானம் என்பனவாகும்.

வட்ட விமானம் படம் உதவி தமிழ்நாடு தொல்லியல் துறை

சாலஹார விமானம் :

இவை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடுக்குகளும் உச்சியில் வண்டிக் கூரை போன்ற வளைந்த கூரையும், அதன்மீது வரிசையாக மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒற்றைப்படை எண்ணிக்கையில் கலசங்களும் கூரையின் இருபுறமும் பெரிய பிரபைகளுடன் கூடிய மகாநாசியையும் கொண்டுள்ளன. அடுக்குகளில் சாலை, கும்பம், பஞ்சரம் ஆகிய அமைப்புகளும் அவற்றின் இடையிடையே தெய்வ உருவங்களும் இடபம். சிம்மம் போன்ற உருவங்களும் இடம் பெறுகின்றன. சிவாலயங்களில் அம்பிகை சந்நிதியின் மீது இத்தகைய விமானங்களே அமைக்கப்படுகின்றன.

சபாஹார விமானம்:

நீண்ட சதுரத்தின் மீது செம்மைப்படுத்திய நாற்புறமும் சரிவான கூரையைக் கொண்ட ஸ்ரீவிமானங்கள் சபாஹார விமானங்களென்று அழைக்கப்படுகின்றன இவற்றின் உச்சியில் வரிசையாக கலசங்கள் அமைகின்றன. பெரும்பாலும் நடராசர் சந்நிதி மீதே இத்தகைய விமானங்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றில் பஞ்சரம் கூடு. கீர்த்திமுகம் போன்றவைகளோ தெய்வத் திருவுருவங்களோ இடம் பெறுவதில்லை.

நீள்வட்ட வடிவம் கொண்டவை :

நீள்வட்ட வடிவிலான சிவாலயம் ஒன்றே ஒன்றுதான் தமிழகத்தில் உள்ளது. காஞ்சீபுரத்திலுள்ள ஜுரஹரேசுவரர் ஆலயமே இத்தகையதாகும். இதன் அடித்தளம் தொடங்கி சுவர்கள் விமானம் உச்சியான கபாலக்கல் வரை நீள்வட்டமாகவே அமைந்துள்ளன. உச்சியில் மூன்று கலசங்கள் உள்ளன.

அரைவட்டமும் சதுரமும் இணைந்தவை :

இக்கோயில்களைச் சிற்ப நூல்கள். தூங்கானை மாடக் கோயில்கள் என்று அழைக்கின்றன. வடமொழியில் இதனை அஸ்திப்பிருஷ்டம் எனக் குறிப்பர். தொண்டை மண்டலத்திலுள்ள திருவொற்றியூர் படம் பக்கநாதர், திருக்கழுக்குன்றம் - பக்தவத்சலர் திருவலிதாயம் (பாடி) வல்லீசுவரர், திருமுல்லைவாயில் - மாசிலாமணீசுவரர், நடுநாட்டிலுள்ள பெண்ணாகடம் (பிரளயகாலேசர்) முதலிய ஆலயங்கள் இத்தகையவை ஆகும்.

இவற்றின் அடித்தளம் சதுரமும் அரைவட்டமும் கூடி லாடம் போல் ∩ அமைந்ததாகும். இதன் மீது கட்டிடமும் மேற்கூரையும் அடித்தளத்தைப் போலவே அமைகின்றன. கிரீவத்திற்கு மேலுள்ள சிகரத்தை வட்டமாக அமைத்து முன்புறத்தில் பெரிய கீர்த்தி முகத்தை அமைத்துள்ளனர். கீர்த்தி முகத்தின் மையத்தில் சிவனும் உமையும் வீற்றிருக்கின்றனர்.

ஆதியில் எளிய வகையில் அமைந்திருந்த ஆலயங்கள் கலைஞர்களின் கைவண்ணத்தில் பல்வேறு புதுமைகளைப் பெற்றன. கலைஞர்களின் உள்ளத்தில் வீற்றிருந்து செம்மையாக இவற்றை விளக்கமுறச் செய்து வருபவன் சிவபெருமானே என்பது ஞானிகளின் கருத்தாகும்.

இந்நாளின் பலநாடுகளில் உள்ள கலைப் பணிகளைப் பின்பற்றியும் தென்னிந்திய மரபுகளுக்கு மாறாமலும் புதிய விமானங்கள் கட்டப்படுகின்றன.

கருங்கல்லால் அமைந்த ஸ்ரீவிமானங்கள்

ஆதியில் ஸ்ரீவிமானங்கள் மண்ணாலான சுவர்களின் மீது மரத்தால் கட்டப்பட்டன. பல்லவர்கள் காலத்திற்குப் பிறகு ஸ்ரீவிமானங்கள் கருங்கல்லால் அமைக்கப்பட்டன. சோழர்கள் அனேக ஸ்ரீவிமானங்களை அடி முதல் கலசம் வரை கருங்கல்லால் அமைத்தனர். காஞ்சீபுரத்திலுள்ள சொக்கீசர், கணியூர் சோசீசர், தஞ்சைப் பிரகதீசுவரர், குடந்தை நாகேசுவரம், திருஒற்றியூர் படம்பக்கநாதர், திருவானைக்காவல் ஜம்புகேசுவரர் முதலான அனேக ஆலயங்கள் முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்டவைகளாகும்.



கொக்கீசர் கோயில் - காஞ்சிபுரம்

அடிமுதல் நுனிவரை முழுவதுமாக கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள கலைச்சிறப்பு மிக்க மிகப்பெரிய விமானம் தஞ்சைப் பெரியகோயில் விமானமாகும். இதன் உச்சியில் அமைந்துள்ள சிகரம் எண்பது டன் எடையுடையதாகும். உச்சியில் நான்கு மூலைகளிலும் அமைக்கப்பட்டுள்ள நந்திகள் ஒவ்வொன்றும் கருங்கல்லால் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டுள்ளன.

திரிபுவனம் கம்பகரேசுவரர் ஆலயம், கங்கை கொண்ட சோழபுரம் சோழீசுவரர் ஆலயம், தாராசுரம் ஐராவதீசுவரர் ஆலயம் முதலானவையும் கருங்கல்லால் கட்டப்பட்டு மேலே சுதையால் அழ்குபடுத்தப்பட்டுள்ளன. இவை சோழர் கலைத்திறனுக்கும் கட்டிடக்கலைக்கும் எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன.

ஆலயங்களுக்கு ஆதியில் ''தளி'' என்ற பெயர் வழங்கி வந்தது. கருங்கல்லால் கட்டப்பட்ட பின்னரும் திருவாரூரில் உள்ள ஒரு ஆலயம் ''ஆரூர் பறவையுண் மண்டளி'' என்று அழைக்கப்பட்டதை தேவாரத்தால் அறிகிறோம்.

ஆலயங்கள் மண்ணால் கட்டப்பட்டிருந்த போது மண்தளி என்று அழைக்கப்பட்டன. பின்னாளில் அவை கருங்கல்லால் மாற்றிக் கட்டப்பட்டபோது கற்றளி என்று பெயர் பெற்றன. கோயில்களைக் கருங்கல்லால் அமைக்கும் பணியில் ஈடுபட்ட ஒருவர் தன்னை சுற்றளிப்பிச்சன் என்று அழைத்துக் கொண்டதைத் திருவாவடுதுறைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

மகா சிவபக்தரான கண்டராதித்த சோழரின் மனைவி செம்பியன்மாதேவியார் அனேக ஆலயங்களைக் கற்றளியாக மாற்றினார். அவர் நல்லம் (கோனேரி ராஜபுரம்) உமாமகேசுவரர் ஆலயத்தின் ஸ்ரீவிமானத்தை கற்றளியாக மாற்றியதுடன் தன் கணவர் சிவபூசை செய்யும் கோலத்தையும் அதில் பொறித்து வைத்துள்ளதைக் காண்கிறோம். இதனை இக்கோயிலிலுள்ள ஸ்வஸ்திஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவ டிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார்...தம்முடையார் ஸ்ரீ கண்டராதித் தேவர் திருநாமத்தால் திருநல்லமுடையாருக்கு திருக்கற்றளி எழுந்தருளிவித்து திருக்கற்றளியிலே திருநல்லம் உடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுந்தருளிவைத்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் இவர் எனும் கல்வெட்டால் அறிகிறோம். கல்வெட்டின் கீழ் சிவலிங்கத்தைத் தொழுபவராகக் கண்டராதித்தரின் திருஉருவமும் அமைக்கப்பட்டுள்ளது.

கற்றளியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை கற்றளி மகாதேவர், கற்றளி பட்டாரகர், கற்றளி ஆழ்வார் என்பன போன்ற பெயர்களால் அழைத்தனர்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் நகரத்தார்கள் (நாட்டுக்கோட்டை செட்டியார்கள்) அனேக செங்கல்லான ஆலயங்களை கற்கோயில்களாக மாற்றிச் சைவப் பணி செய்துள்ளனர். காளையார் கோயில்,



ஒன்பது விமான நிலையம்



ஸ்ரீ கம்பஹரேஸ்வரர் ஆலயம்

திருபுவனம் கருவறை விமானம்- முன்மண்படம்
தென்பகுதி



சிதம்பரம் பொற்கோயில்
நன்றி-தமிழ்நாடு தொல்லியல் துறை

நகரத்தார்களின் ஒன்பது கோயில்கள், திருவாடானை முதலிய அனேக ஆலயங்கள், செட்டிநாட்டுக் கலைஞர்களின் கல்லைப் பேசவைக்கும் அரிய கலைத் திறனுக்குச் சான்றாக அமைந்துள்ளன.

சுந்தரர் அவதரித்த திருத்தலமான திருநாவலூரில் அமைந்திருக்கும் ஆலயம் திருத்தொண்டீச்சரம் என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றது. இதனை முதலாம் பராந்தகனின் மகனான இராஜாதித்தன் கற்கோயிலாக மாற்றி இராஜாதித்தேசுவரம் என்று பெயர் சூட்டினான். என்றாலும் கல்வெட்டுக்களில் பழைய பெயரையும் சேர்த்து திருத்தொண்டீச்சரமான இராஜாதித் -தேசுவரம் என்று குறித்துள்ளான்.

தங்கவிமானங்கள்:

ஆதியில் விமானத்தின் மேற்கூரை மரத்தால் அமைக்கப்பட்டிருந்தன. இந்தக் கூரையை மழை வெய்யில் முதலானவற்றிலிருந்து காக்க அதன் மீது உலாகத் தகடுகளைப் போர்த்தினர். பின்னாளில் ஸ்ரீவிமானத்தின் மேல்தளங்கள் கருங்கல்லாலும், கதையாலும் அமைக்கப்பட்டபோதும் அவற்றின் மீதும் நுண்மையாக கலைநுணுக்கத்துடன் செய்யப்பட்ட உலோகத் தகடுகள் போர்த்தப்பட்டன. மாமன்னர்கள் ஸ்ரீவிமானங்களை பொன்னால் மெழுகினர். மூன்றாம் கலோத்துங்கன், காஞ்சி ஏகாம்பரேசம், மதுரை ஆலவாய் ஆலயம், தாராசுரம் ராஜராஜேஸ்வரம், திருவாரூர் வன்மீகநாதர் ஆலயம் ஆகியவற்றை பொன்மயமாக்கினான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. திருவீழிமிழலை ஆலயத்தை விஜயராஜேந்திர தேவரின் அணுக்கியார் பல்லவன் பட்டாளி நங்கை என்பவர் பொன்னால் வேய்ந்தார் என்று அவ்வூர்க்கல்வெட்டு கூறுகின்றது. இன்னும் அனேக ஆலயங்கள் பொன்னால் மெழுகப்பட்டதை வரலாறு கூறுகிறது. காலப்போக்கில் இவை அந்நியர் படையெடுப்புக்களாலும் இயற்கை சீற்றத்தாலும் அழிந்தன. என்றாலும் தொடர்ந்து வந்த மன்னர்களும் அன்பர்களும் பழையவற்றை பதுக்கியதுடன் சில விமானங்களை பொன்னால் பொதிந்தனர்.

மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் ஆட்சிக் காலத்தில் நரலோக வீரன் எனும் சிற்றரசன் தில்லை சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்ததுடன் அனேக திருப்பணிகளைச் செய்தான். இதையொட்டி அவன் பொற்கோயில் தம்பிரான் என்று அழைக்கப்படுகிறான். இப்போது தில்லையில் பொன்தகடுகளால் பொதியப்பட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீவிமானம் இவனுடைய திருப்பணியேயாகும். திருவரங்கத்திலுள்ள பிரணவாகார பொன்விமானமும் சோழர் கலைப் பணியேயாகும்.

19-20 ஆம் நூற்றாண்டுகளில் அனேக தங்கவிமானங்கள் அமைக்கப்பட்டன. புதுவை மணக்குளவிநாயகர், பழனி தண்டாயுதபாணி, காஞ்சீபுரம் காமாட்சியம்மன் முதலான ஆலயங்களின் ஸ்ரீவிமானங்களின் மீது அண்மைக்காலத்தில் தங்கத்தகடுகள் அமைக்கப்பட்டு விமானங்கள் பொலிவுடன் விளங்குகின்றன.

காசியிலுள்ள, ஸ்ரீவிசுவநாதர் ஆலயத்தை இராஜா மான்சிங் பொன்னால் அமைத்துள்ளார்.

தேர்வடிவிலான ஸ்ரீ விமானங்கள்:

புராணங்களில் வானத்தில் பறக்கும் தேர்களைப் பற்றிய அனேக குறிப்புகளைக் காண்கிறோம். இவை புஷ்பக விமானம், கந்தர்வ விமானம், தேவ விமானம் எனப் பலவாகும். தேவேந்திரன் தனது புஷ்பக விமானமான தேவை பூமியில் கொண்டுவந்து ஆலயமாக அமைத்தான் என்று, மேலைக்கடம்பூர் தலபுராணம் கூறுகின்றது. இங்குள்ள ஸ்ரீவிமானம் தேர்வடிவில் உள்ளது. இத்தகைய ஆலயங்களைச் சிற்பநூலார் கரக்கோயில் என்று அழைக்கின்றனர்.

மேலைக்கடம்பூர் அமிர்தகடேசர் ஆலயத்தில் ஸ்ரீவிமானத்தின் இருபுறமும் இரண்டு சக்கரங்கள் வீதம் நான்கு சக்கரங்கள் உள்ளன. தேரை இழுக்கும் வகையில் இரண்டு கலைச்சிறப்பு மிக்க குதிரைச் சிற்பங்களும் உள்ளன. விமானத்தின் அடிப்படை நடுப்பகுதி, மேல் தளங்கள் ஆகிய மூன்று பகுதிகளும் மிகமிக நுண்மையான கலை வேலைப்பாடுகளுடன் திகழ்கின்றன. 32 யாளிகள் தாங்குவது போல் அமைக்கப்பட்டுள்ளதும் இதன் தனிச் சிறப்பாகும்.

கடம்பூரில் மட்டுமே ஸ்ரீவிமானம் தேர்வடிவில் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். குடந்தை நாகநாத சுவாமி ஆலயத்தில் நடராசர் சந்நிதி சென்னை நங்கநல்லூர்

அர்த்தநாரீசுவரர் ஆலய துர்க்கை சந்நிதி முதலிய சந்நிதிகள் தேர் வடிவில் அமைந்துள்ளன. தேர் வடிவில் அமைந்துள்ள மண்டபங்களில் அமைந்துள்ள சக்கரங்களும், அதன் ஆரக்கால்களும் இழுத்துச் செல்லும் நேர்த்தியான குதிரைகளும் தென்னிந்திய சிற்பக்கலைஞர்களின் அதியற்புதமான கலைப்படைப்புக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

மாதிரிக் கோயில்களாம் / மாமல்லபுரத்து ஐவகைக் கோயில் :



மாமல்லபுரத்து ஐவகைக் கோயில்கள்

மாமல்லபுரத்தில் - இந்நாளில் பஞ்சபாண்டவர் இரதங்கள் என்றழைக்கப்படும் ஐந்து கோயில்களைக் கொண்ட தொகுதி இருக்கிறது. இதில் சதுர அடிப்படையில் அமைந்தவை மூன்றும், நீள்சதுர அடிப்படை கொண்டது ஒன்றும், தூங்கானை மாட வடிவம் கொண்டது ஒன்றும் ஆகும். இதிலுள்ள முதல் சதுரக் கோயிலின் மேற்கூரை குடிசை அமைப்பிலானது. இது துர்க்கைக்கென அமைக்கப்பட்டதாகும். இரண்டாவது சதுர அமைப்புக் கோயிலின் மீதுள்ள விமானம் நாற்கோண வடிவானது. இது முருகப் பெருமானுக்குரியது. மூன்றாவதான கோயிலின் மேற்கூரை எண்பட்டை சிகரத்தைக் கொண்டதாகும். இது சிவபெருமானுக்குரிய ஆலயமாகும். நீள் சதுரமான அடிப்படை கொண்ட கோயிலின் மேற்கூரை வண்டிக்கூரை போன்றது. இது திருமாலுக்குரிய ஆலயமாகும். ஐந்தாவதான தூங்கானை மாடக் கோயில் விநாயகருக்கு உரியதாகும். இவை அந்நாளில் அமைக்கப்பட்ட ஆலயங்களுக்கான மாதிரிக் கோயில்களாகும்.



மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்



தாராசுரம், படிகளுடன் முன்மண்டபம்

திருப்பாற்கடலில் திருமகள் தோற்றம்



ஆதிமூலபரம்பொருள் உலகத்தைத் தோற்றுவித்தபோதே படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல், ஆகிய ஐந்தொழிலையும் தொடர்ந்து செய்து வரபிரம்மா, விஷ்ணு, மகேசன், சதாசிவன், உருத்திரன் ஆகிய ஐவரைப் படைத்தளித்தது. அவர்களுக்குத் தேவியராக முறையே சரஸ்வதி, ரமா, உருத்திராணி, மகேஸ்வரி, மனோன்மணி ஆகியோரும் படைத்து அளிக்கப்பட்டனர்.

இதில் காத்தல் கடவுளாக விளங்கும் திருமாலின் (விஷ்ணு) தேவியான ரமா செல்வத்தின் அதிபதியாகத் திகழ்கிறாள். இவள் பல்வேறு சமயங்களில் பல்வேறு அவதாரங்களை எடுத்து அன்பர்களுக்கு அருள்புரிந்துள்ளாள்.

ஒரு சமயம் பாற்கடல் அரசனுக்கு மகளாகத் தோன்றி வளர்ந்தாள். தேவர்கள் பாற்கடலைக்கடைந்த போது அதிலிருந்து ஐராவதம், காமதேனு, கற்பக விருட்சம், தேவமாதர்கள் முதலியோர் வெளிவந்த பிறகு லட்சுமி அவதரித்தாள். அவள் திருமாலை விரும்பித் திருமணம் செய்து கொண்டாள். அன்று முதல் திருமால் லட்சுமி நாராயணனாகப் போற்றப்படுகின்றார்.

மகாலட்சுமி அனந்தபோகன், சகரன், சோழன், முதலான அரசர்களுக்கும், ப்ருகு, கபிலர், நக்னஜிக் முதலிய ரிஷிகளுக்கும் பல்வேறு சமயங்களில் திருமகளாகத் தோன்றித் திருமாலை மணந்துக் காண்டாள் என்றாலும் அவள் பாற்கடலுக்கு மகளாகத் தோன்றித் திருமாலை மணந்த வரலாறே பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

இந்த வரலாற்றின்படி துருவாச முனிவர் இந்திரனுக்கு லட்சுமியின் பிரசாதமான மாலையைத் தர அவன் அதை அலட்சியமாக வாங்கியதால் கோபித்து அவனுடைய செல்வம் அழியட்டும் என்று சாபமிடுகிறார். அதனால் அவனும் தேவர்களும் வறிஞர்களாய் திரிகின்றனர்.

அதே சமயம் ப்ருகுமுனிவரின் சாபத்தால் லட்சமிதேவியும் திருமாலிடம் கோபித்துக் கொண்டு பிரிந்துசென்று பாற்கடல் அரசனுக்கு மகளாகப் பிறந்து வளர்கிறாள்.

நெடுங்காலத்திற்குப் பிறகு தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது அவள் வெளிப்பட்டு திருமாலை அடைகிறாள். அவளுடன் பிறந்த பொருள்களைக் கொண்டு தேவர்களும் இந்திரனும் பழைய சுகபோகங்களைப் பெறுகின்றனர். இக்கதையே பாகவதம், சிவ மகாபுராணம் பாரதம் முதலிய தொன்னூல்களில் குறிக்கப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சியின் விளக்கத்தைக் கீழே காணலாம்.

நான்காவது மனுவின் காலத்தில் திருமால் விகுண்டை என்பவளுக்கு மகனாகப் பிறந்தார். அதனால் அவருக்கு வைகுண்டன் என்பது பெயராயிற்று. அப்பொழுது திருமகள் நளினி என்ற பெயரில் தோன்றி வளர்ந்து அவரை மணந்தாள். அவள் திருமாலிடம் அவருடைய பெயரால் ஒரு பட்டினத்தை உண்டாக்குமாறு வேண்டினாள். அவர் ஸ்ரீ வைகுண்டம் என்ற உலகத்தை நிர்மாணித்து அதில் நளினியாகிய திருமகளுடன் எழுந்தருளியிருந்தார்.

ஒரு சமயம் ஒரு கந்தர்வப் பெண் தனது யாழுடன் வைகுண்டம் சென்றாள். அங்கு வீற்றிருக்கும் மகாலட்சுமியைத் தரிசித்து அவளுடைய ஒப்பற்ற அழகைப் பலவாறு புகழ்ந்து துதித்துப் பாடினாள். அதைக் கேட்டு மகிழ்ந்த மகாலட்சுமி தன் கூந்தலில் சூட்டியிருந்த மணம் பொருந்திய மாலையை எடுத்து அவளுக்குப் பரிசாக அளித்தாள்.

அவள், அதனை மகிழ்வுடன் வாங்கித் தனது வீணையில் சுற்றிக் கொண்டாள். பிறகு வணங்கி விடைபெற்றுத் தனது கந்தர்வ உலகத்திற்குச் சென்று கொண்டிருந்தாள். வழியில் துருவாச முனிவர் எதிரே வந்தார். கந்தர்வப் பெண் அவரைப் பணிந்து வணங்கி இசைபாடினாள். அதனால் மகிழ்ந்த முனிவன் அவளை வாழ்த்தினார். அவளைச் சுற்றி தெய்வீக நறுமணம் கமழ்வதை உணர்ந்து பெண்ணே! இந்த நறுமணம் எங்கிருந்து வீசுகிறது என்றார்.

கந்தர்வப் பெண் அவரை மீண்டும பணிந்து தவத்தில் மேன்மை மிக்கவரே! நான் வைகுண்டம் சென்று திருமகளைத் தரிசித்து இசையால் அவளைப் புகழ்ந்து பாடினேன். மகிழ்ந்த தேவி தனது கூந்தலில் சூயிருந்த மாலையை எனக்களித்தாள். நான் தெய்வமாகப் போற்றும் இந்த வீணைக்கு அதனைச் சூட்டினேன். அம்மாலையே மணம் வீசுகின்றது என்றாள்.

பின்பு, வீணையிலிருந்த மாலையை எடுத்து அவரிடம்கொடுத்து இதனை அடையத்தக்கவர் நீங்களே ஆதலின் அதனை ஏற்றருள வேண்டும் என்று கூறி அவரிடம் அளித்துவிட்டு தன்னுலகம் சென்றாள்.

மாலையைக் கையில் வாங்கிய துருவாச முனிவர் திருமகளை நேரில் கண்டு ஆசிபெற்றதாகவே கருதி இன்பமடைந்தார்.

பிறகு அவர் வான்வழியில் பயணத்தைத் தொடர்ந்தார். அவ்வேளையில் இந்திரன் தனது ஐராவதத்தில் அவ்வழியாக பவனி வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்ட துருவாசருக்குத் திருமகளின் பிரசாதமான அந்த மாலையை அவனுக்கு அளிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. அவனிடம் இந்திரனேஐஸ்வர்யத்தின் அதிபதியான திருமகளின் பிரசாதம் என்னிடமுள்ளது. அதனைப் பெறுவாய் என்று கூறி அந்த மாலையை அவனிடம் நீட்டினார்.

அவனோ அவரைக் கண்டதும் யானையை விட்டிறங்கி வணங்கவில்லை. அவர் கொடுத்த மாலையையும் அலட்சியமாக இடது கையிலிருந்த அங்குசத்தால் வாங்கி யானையின் மத்தகத்தின் மீது வைத்தான். மாலையின் மலர்களில் இருந்த வண்டுகள் மத்தகத்தில் மொய்க்கவே யானைக்கு அரிப்பு ஏற்பட்டது. அதைத் தணிக்க அது மாலையைத் துதிக்கையால் பற்றியிழுத்துக் கீழே போட்டுக்காலால் மிதித்தது.

இதனைக் கண்ட உருத்திர ரிஷியாகிய துருவாச முனிவர் கடுங்கோபம் கொண்டார். ஏ ஆணவம் படைத்தவனே? காமதேனு, கற்பகவிருட்சம், ஐராவதம் முதலியவை உன்னிடம் உள்ளதால் தானே இப்படிச் செருக்கடைந்தாய். இனி, அவை உனக்கு இல்லாது ஒழியட்டும் என்று சாபமிட்டார். அவனுடைய ஐராவதத்தையும் காட்டானையாகும்படிச் சபித்தார்.

முனிவரின் வாக்கு சற்றும் பொய்க்காது அல்லவா? இந்திரச் செல்வங்களான காமதேனு. கற்பக மரம் யாவும் நொடியில் பாற்கடலில் மூழ்கி மறைந்தன. வைகுண்டத்திலிருந்த திருமகளும் பாற்கடலில் மூழ்கினாள். அங்கு அவள் பாதாளத்தில் நாகர்குல அரசனுக்கு மகளாகப் பிறந்தாள். அவளைத் திசையானைகள் எட்டும் அன்புடன் போற்றி வளர்த்தன.

இந்திரன் தனது தவறை உணர்ந்தான். முனிவரின் காலில் அடியேற்ற மரம்போல் வீழ்ந்து மன்னிக்குமாறு பலமுறை வேண்டினான். முனிவன் உரிய காலத்தில் அவை கிடைக்கட்டும் என்று கூறி அவனைத் தேற்றிவிட்டுத் தன் வழியே சென்றுவிட்டார்.

திருமகளின் பிரசாதத்தை இகழ்ந்ததால் தேவர்களுக்குப் பெருத்த துன்பம் உண்டாயிற்று. அவர்கள் செல்வமற்று வறிஞர்களாய் கடுந்துன்பத்தில் உழன்று வாடிவருந்தினர். இருக்கும் வறுமையும் தொல்லையும் போதாதென்று அடிக்கடி அசுரர்கள் அவர்கள் மீது படையெடுத்து வந்து ஓயாது துன்புறுத்தினர்.

கடும் தொல்லைகளை அனுபவித்த தேவர்கள் பிரமதேவனைச் சரணடைந்து தங்களைக் காக்குமாறு வேண்டினர். பிரமன் அவர்களைத் திருமாலிடம் அழைத்துச் சென்று அவர்களுடைய குறைகளைத் தீர்க்குமாறு வேண்டினார். திருமால் தேவர்களிடம் நீங்கள் பாற்கடலைக் கடைந்து அமுதத்தைப் பெற்று அருந்தினால் மரணத்தையும், துன்பத்தையும் வென்று வாழலாம். ஆனால் அது அவ்வளவு எளிதல்ல. மேலும் உங்களால் பாற்கடலைத் தனியே கடையவும் முடியாது உங்களுக்கு உதவ அசுரர்களையும் துணைக்கு அழைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

அசுரர்களைத் துணைக்கழைத்தால் கிடைக்கும் அமுதத்தில் அவர்களுக்கும் பங்கு தரவேண்டுமென்பதால் தேவர்கள் அதற்குத் தயங்கினர் என்றாலும் நிலைமையைக் கருதி அவர்களையும் சேர்த்துக் கொண்டனர்.

மந்திர மலையைக் கடைவதற்குரிய மத்தாகத் தேர்ந்தெடுத்தனர். அதனைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு வருவதற்குள் சோர்ந்து மயங்கி வீழ்ந்து விட்டனர். திருமால் கருடனை ஏவி மலையை எடுத்து வந்து பாற்கடலில் இடும்படிச் செய்தார் பெரும்பாம்பாகிய வாசுகியைக் கடையும் கயிறாக இருக்க வேண்டினர். அவனும் இசைந்தான்.

ஒரு நல்லவேளையில் மந்திரமலையை மத்தாகவும் வாசுகியைப் பாம்பாகவும் சோமனைத் தறியாகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடையக் கூடினர்.

அப்பொழுது தேவர்கள் தலைப்புறத்திலும அசுரர்கள் வால்புறத்திலும் நின்றனர். அசுரர்கள் தேவர்களிடம் நாங்கள் வேதம் பயின்று மேன்மை பெற்றவர்கள் பாம்பின் வாலைப்பிடிப்பது எங்களுக்கு இழிவானது. எனவே நீங்கள் வால்பக்கம் பிடித்திழுங்கள். நாங்கள் தலைப்பக்கம் பற்றியிழுக்கிறோம் என்றனர். அதன்படியே தேவர்கள் இடம்மாறி நின்றதுடன் அசுரர்களிடம் நீங்கள் வால்புறம் இருப்பது உங்கள் வலிமைக்கு இழுக்கு. ஆகவே தலைப்புறமே பிடித்துக்கொள்ளுங்கள் என்று வஞ்சப் புகழ்ச்சியினால் அவர்களை மயக்கினர்.

குறித்த வேளையில் பாற்கடலைக் கடையத் தொடங்கினர். உறுதியான ஆதாரம் இல்லாததால் மந்திரமலை சரியாக நிற்காமல் நழுவி வீழ்ந்து பாற்கடல் சேற்றில் சிக்கிக்கொண்டது. திருமால் ஒரு பெரிய ஆமையாக உருவம் எடுத்து மந்திரமலையை தூக்கித் தன் முதுகில் தாங்கினார். இப்போது கடைவதும் எளிதாயிற்று. ஓராயிரம் ஆண்டுகள் கழிந்தன.

அவர்கள் மிருத்யுஞ்ஜெயனான சிவபெருமானைத் துதியாமலும் அவருடைய அனுமதியைப் பெறாமலும் கடைந்ததால் கடலிலிருந்து ஆலம் என்ற கொடிய விஷம் பொங்கியது. அதேசமயம் மலையில் கட்டி ஓயாது இழுக்கப்பட்டதால் நாகராஜனான வாசுகி (பாம்பும்) உடல்வலி பொறுக்கமாட்டாது கொடியகாளம் என்ற தன்னுடைய விஷத்தைக் கக்கியது. இந்த இரண்டு விஷமும் பொங்கிப் பெருகி உலகினைச் சுற்றி வளைத்தன. பிரமன் பாதாளத்தில் மறைந்து கொண்டான். விஷ வேகத்தால் தலைப்பக்கம் நின்ற அசுரர்களின் உடல் வெந்து தீய்ந்து கோரமாகிவிட்டது. தேவர்களோ திசை புரியாது செய்வது அறியாது மயங்கிச் சிதறி ஓடினர்.

திருமால் இந்த விஷத்தை எதிர்கொள்வேன் என்று கூறி முன்வந்தார். விஷம் முத்துபோன்ற வெள்ளை நிறமாய் இருந்த திருமாலை நீலமணி போல மாற்றி மூர்ச்சை அடையும்படிச் செய்துவிட்டது.

இறுதியில் அனைவரும் சிவபெருமானிடத்தில் சரண்புகுந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். அவர் அருகிலிருந்த உமையவளைப் பார்த்தார். அவள் அவருடைய உள்ளத்தில் தோன்றிய கருத்தை உணர்ந்து அவர்களைக் காக்குமாறு கூறினாள்.

சிவபெருமான் தனது அணுக்கத் தோண்டரான சுந்தரரை நோக்கி அவ்விஷத்தைப் பற்றி வருக என்றார். சுந்தரர் அந்த விஷத்தைத் திரட்டி உருட்டி ஒரு நாவற்கனிபோல ஆக்கி பரமேசுவரனிடத்தில் அளித்தார், பெருமான் உடனே அவ்விஷத்தை வாயிலிட்டு விழுங்கினார். பக்கத்திலிருந்த உமாதேவியார் அந்த விஷம் அவருடைய கண்டத்திலேயே நிலைத்திருக்கும்படி செய்தாள். தேவர்களும் அசுரர்களும் சிவபெருமானைப் போற்றி வாழ்த்தினர். அவரிடம் அனுமதிபெற்று முன்போலவே பாற்கடலைக் கடையத் தொடங்கினர்.

பாற்கடலிலிருந்து முதல் வெளிப்பாடாக ஐராவதம் என்ற வெள்ளை யானை தோன்றியது. அதனை தேவேந்திரன் எடுத்துக்கொண்டான். அடுத்து ஒவ்வொன்றாக காமதேனு, உச்சைசிரவஸ் என்ற குதிரை கற்பகமரம், சிந்தாமணி, இரத்தினங்கள், அறுபதினாயிரம், தேவமாதர்கள், சந்திரன், வாருணி, மூதேவி முதலான பலரும் பலபொருட்களும் தோன்றின.

பின்னர் இவர்கள் யாவருக்கும் இளையவளாக புன்னகை தவழும் அதரங்களும் அகன்ற விசாலமான கண்களும் செந்தளிர்மேனியும் கருங்கூந்தலும் கொண்டவளாய் மார்பில் முத்து மாலைகளை அணிந்து பொற்கொடி போன்ற திருமேனி பொலிய திருமகள் தோன்றினாள். அவள் பிறக்கும் போதே மணமாலையைக் கையில் ஏந்தியவளாக எல்லையற்ற அழகுடன் விளங்கினாள். அனைவரும் அவளது எழில் நலம் கண்டு வியந்து போற்றினர்.

அவளுக்கு கங்கை, யமுனை முதலான புண்ணிய தீர்த்தங்கள் புனித நீரை வழங்கின. நவரத்தினங்கள் இழைத்த பொற்கலசத்தால் திசையானைகள் நீரைப் பொழிந்தன. படைப்புக்கடவுளான பிரமன் சிறப்பும் மேன்மையும் பொருந்திய பல அரிய ஆபரணங்களை வழங்கினான். பூமிதேவி மிகுந்த நறுமணம் மிக்க பொருள்களை அளித்தாள். வானம் சித்திரவேலைப்பாடுகளைக் கொண்ட பட்டாடைகளை அளித்தது. சரஸ்வதி நட்சத்திரங்களை மாலையாகக் கோர்த்து அணிவித்தாள். வானம் சித்திரவேலைப்பாடுகளைக் கொண்ட பட்டாடைகளை அளித்தது. சரஸ்வதி நட்சத்திரங்களை மாலையாகக் கோர்த்து அணிவித்தாள். வருணன் வைஜெயந்தி என்ற மாலையை அணிவித்தான். நாகர்கள் குருவிந்த மணியாலான நெற்றிச் சுட்டியையும் பொன்னாலாகிய மகர குண்டலங்களையும் அளித்தனர்.

மகரிஷிகள் கடல் முழக்கம் போல் வேதமந்திரங்கள் ஓதினர். சித்தர்கள் பல்லாண்டு பாடினர். கந்தவர்கள் யாழினைமீட்டி அமுதகானம் இசைத்தனர். அப்சரஸ்களும் தேவமாதர்களும் பொன்மயில் போன்று ஆடி மகிழ்வித்தனர்.

பாற்கடல் தந்த பாவையான மகாலட்சமி கருநெய்தல் பூவாலான மாலையைத் தனது சிவந்த தாமரை மலர்கள் போன்ற கைகளில் ஏந்தி நின்றாள். அப்பொழுது பிரமன், அவளிடம் உங்களுக்குப் பிரியமானவரை நீங்களே தேர்ந்தெடுத்து மணந்து கொள்ளுங்கள் என்றான்.

லட்சமிதேவி அங்குள்ள பலரையும் நோக்கிய பிறகு அழகில் ஒப்பற்றவராகிய திருமாலின் தோளில் மணமாலையை அணிவித்தாள். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். தேவதுந்துபிகள் முழங்கின. திருமகள் திருமால் திருமணம் சிறப்பாக முடிந்தது.

மீண்டும் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அதிலிருந்து தன்வந்திரி என்ற தேவ வைத்தியன் அமுத கலசத்துடன் தோன்றினான். அவனளித்த அமுதத்தைத் தேவர்கள் உண்டு சிறப்பெய்தினர்.

பாகவதம் முதலிய நூல்களில் இந்த வரலாறு சிறப்புடன் கூறப்படுகின்றது.

திருமகள் தோன்றிய வரலாற்றைப் புராணங்கள் பலவாறு கூறுகின்றன. ஒரு புராணத்தின்படி திருமால் ஒரு சமயம் யோகத்தில் வீற்றிருந்தார். அவர் மனதில் செல்வம், வீரம், சாதுர்யம் முதலான குணங்கள் நிறைந்த பெண்ணை

நினைத்தார். அவருடைய நெற்றியிலிருந்து ஒரு தங்கத் தாமரை வெளிப்பட்டது. சிறிது நேரத்தில் அது இளமங்கை ஆனது. அவளுடைய பேரழகையும் அறிவாற்றலையும் கண்டு வியந்து மகாலட்சமி என்று பெயரிட்டு, அவளைத் தனது தேவியாக்கிக் கொண்டார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

வேறொரு புராணத்தின்படி ஒரு சமயம் பாதாளத்திலிருந்த அனந்தபோகன் எனும் பாம்பரசன் யோகத்தில் இருந்தான். அவன் கண்களில் இருந்து மின்னல் போன்ற ஒளி தோன்றி திரண்டு ஓர் பெண்ணானது. அப்பெண்ணை அவன் போற்றி வளர்த்தான். அவளுக்கு அனந்தா, அனந்தலட்சமி என்பன பெயர்களாயின. பின்னாளில் பாற்கடலைக் கடைந்தபோது அவள் காமதேனு, கற்பகவிருட்சம், ஐராவதம் முதலியவற்றுடன் வெளிப்பட்டாள். திருமாலைக் கண்டு மகிழ்ந்து மாலையிட்டு அவருக்குத் தேவியானாள் என்று கூறப்பட்டுள்ளது.



திருமகள் சிவபூசைச் செய்த திருத்தலங்கள்

திருமகளாகிய மகாலட்சுமி, திருமாலுடன் நீங்காது இருக்கவும் அழகிய புதல்வரைப் பெறவும் இன்னும் பலகாரணங்களுக்காகவும் அநேக இடங்களில் சிவபூசை செய்தாள். அவள் சிவபூசை செய்த தலங்கள் திருமகள்விலாசம் என்றே போற்றப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

திருவாரூர் கமலாலயம்

கமலமாகிய தாமரைமலரில் வாழும் திருவாகிய மகாலட்சுமி சிவனைப் பூசித்த தலங்களில் முதன்மை பெற்றது திருவாரூர் ஆகும். இதனால் இவ்வூருக்குக் கமலாலயம் என்பது பெயராயிற்று. இங்கு அவள் அமைத்த தீர்த்தம் கமலாலயம் என்ற பெயரில் 30 ஏக்கர் பரப்புள்ள பெரிய குளமாக விளங்குகின்றது. இதனையொட்டி இத்தலத்திற்கு கமலாலயம். கமலபுரம், கமலை, ஸ்ரீபுரம் எனப் பல பெயர்கள் வழங்குகின்றன.

இங்குள்ள தியாகராஜர் ஆலயக் கருவறை ஸ்ரீலட்சுமிவாசம் என்றே அழைக்கப்படுகின்றது. இங்குத் திருமகள் வழிபட்டுப் பேறுபெற்றதைத் தல புராணம் பின்வருமாறு கூறுகின்றது. பாற்கடலில் பிறந்த பாவையாகிய லட்சுமி வருணராசனின் மகளாக வளர்ந்தாள். அவள் திருமாலைக் கணவனாக அடைய எண்ணி இங்கே வந்து தவம் செய்தாள். சிவபெருமான் அந்தவரத்தை அருளினார். அதன்படியே அவள் திருமாலை மணந்து கொண்டாள். கமலையார் பூசிக்கப்பட்டதால் இத்தலம் கமலாலயம் என்று அழைக்கப்படுகின்றது.

திருநின்றியூர்:

திருமகள் பூசித்த தலங்களில் சிறப்பு மிக்கது திருநின்றவூராகும். திருவாகிய மகாலட்சுமி நிரந்தரமாகத் தங்கிப் பூசித்தகாரணத்தால் இவ்வூர் திருநின்றவூர் என்றழைக்கப்பட்டது. இங்கு மகாலட்சுமி பூசித்ததால் சிவபெருமான் மகாலட்சுமிபுரீசுவரர் என்றும் அம்பிகை உலகநாயகி என்றும் அழைக்கப்படுகின்றனர். திருமகள் திருநின்றியூரில் நீங்காது நின்று பூசைசெய்வதைத் தேவாரத்துள் ''செந்தண் மாமலர் திருமகள் மருவும் திருநின்றியூர்'' என்று குறிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ வாஞ்சியம்

ஒரு சமயம் திருமகளுக்கும் திருமாலுக்கும் இடையே ஒரு விவாதம் ஏற்பட்டு அது வாய்ச்சண்டையாக முடிந்தது. அதனால் திருமகளுக்கு மிக்க மனவருத்தம் உண்டாயிற்று. அவள் திருப்பாற்கடலை விட்டு நீங்கி ஒருவரும் அறியாமல் பிருகு முனிவரின் ஆசிரமத்தினை அடைந்து அவருடைய பெண்ணாக வளர்ந்து வந்தாள். திருமகளைப் பிரிந்து வாடிய திருமால் அவளைப் பல இடங்களில் தேடிச் சோர்ந்தார்.

இறுதியில் நாரதர் சொற்படி சந்தனவனமான வாஞ்சியம் என்னும் தலத்தை அடைந்து சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். அவருடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவர் முன்னே தோன்றினார். திருமால் அவரை பணிந்து மீண்டும் தமக்குத் திருமகளை அளித்தருள வேண்டும் வேண்டி நின்றார்.

திருமாலின் விருப்பப்படி சிவபெருமான் தேவர்களைக் கொண்டு பிருகுமுனிவரின் ஆசிரமத்தில் வளரும் திருமகளை அழைத்துவந்து அவருக்குத் திருமணம் செய்து வைத்தார். ஸ்ரீயாகியத்திருமகளை வாஞ்சித்துத் திருமால் தவம் செய்த இடம் ஸ்ரீவாஞ்சியம் ஆனது. ஸ்ரீவாஞ்சியம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தலமாகும்.

காஞ்சிபுரம் காயரோகணம்

காஞ்சீபுரத்தில் பார்வதி, இலக்குமி, சரஸ்வதி, துர்க்கை, காளி ஆகிய அனைவரும் தனித்தனியே சிவவழிபாடு செய்துள்ளனர். உமாதேவி பூசித்த தலம் ஏகாம்பரநாதர் ஆலயமாகும். துர்க்கையும் சரஸ்வதியும் சிவவழிபாடு செய்த தலம் கச்சபேசுவரர் ஆலயமாகும். மகாலட்சுமி பூசித்ததலம் காஞ்சீபுரத்தின் தென்பகுதியில் வேசுவதியாற்றின் கரையில் அமைந்துள்ள காயரோகணசுவாமி ஆலயமாகும்.

இங்கு ஆலயத்தின் வடக்குப் பிரகாரத்தில் தெற்கு நோக்கியவாறு மகாலட்சமி சந்நிதி அமைந்துள்ளது. இங்குள்ள தீர்த்தம் தாயார் குளம் என்று அழைக்கப்படுகின்றது. தாயார் என்பது லட்சுமிக்கு உரிய பெயர்களில் ஒன்றாகும்.

கொருக்கை

கொருக்கை என்பது அட்டவீரட்டத் தலங்களில் ஒன்றாகும். இங்கு யோகத்தில் வீற்றிருந்த சிவபெருமான் மீது மன்மதன் மோகமயமான பூங்கணைகளை எய்தான். அதனால் சினமுற்ற சிவபெருமான் அவனைத் தனது நெற்றிக் கண்ணால் எரித்து அழித்தார். மகாலட்சுமி தனது மானச மைந்தனான மன்மதன் எரியுண்டதைக் கேட்டு வருந்தினாள். சிவனின் கோபம் தணியவேண்டி இத்தலத்தில் சிவலிங்கத்தை வைத்து வழிபாடு செய்தாள். அவளுக்காகவும், ரதிக்காகவும் இரங்கிச் சிவபெருமான் மன்மதனை உயிர்ப்பித்தார். இத்தலத்தில் இலட்சுமி அமைத்து வழிபட்டலிங்கம் இலட்சமீஸ்வரர் என்ற பெயரில் உள்ளது.

மேலும் ஒரு சமயம் திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்தபோது திருமகள் அதனைக் கண்டு அஞ்சினாள். அவளுக்கு அளவற்ற நடுக்கமும் பயமும் உண்டாகியது. அவள் இத்தலத்து இறைவனைத் தஞ்சமடைந்தாள். சிவபெருமான் சரபப்பட்சியாக வெளிப்பட்டு நரசிம்மத்தை அடக்கித் திருமகளுக்கும் தேவர்களுக்கும் உண்டான நடுக்கத்தை நீக்கினார். அதனால் இங்கு வழிபடுபவர் மனவலிமையைப் பெறுவர் என்று நம்புகின்றனர்.

வைகல் மாடக்கோயில்

திருஞானசம்பந்தரின் பாடல்பெற்ற தலமான ''வைகல்'' திருமகள் வழிபட்டுப் பேறுபெற்ற திருத்தலமாகும். இறைவர் வைகல் நாதர். இறைவி கொம்பியல் கோதை, திருமகள் இங்கு ஷெண்பக மலர்கொண்டு ஷெண்பக வனத்தில் வீற்றிருக்கும் பெருமானைப் பூசித்துள்ளாள்.

திருப்பனையூர்

திருமகள் பூசித்த தலங்களில் ஒன்று திருப்பனையூர் ஆகும். இங்கு பிரகாரத்தில் லட்சுமி தேவிக்கான சிறிய ஆலயம் உள்ளது. இறைவர் பனங்காடர், அழகியநாதர், இறைவி பெரியநாயகி, தீர்த்தம் லட்சுமி தீர்த்தம், இவ்வூர் நன்னிலத்திற்கு அருகில் உள்ளதாகும்.

சைவநெறிக்கிரியைகளில் திருமகள்

சிவபூஜா துரந்தரர்கள் நாள் வழிபாட்டில் சிவபெருமானுடன் திருமகளையும் சேர்த்தே வழிபடுகின்றனர். பூஜாமண்டலத்தில் கங்கை, யமுனை, விநாயகருடன் லட்சுமி, சரஸ்வதி ஆகியோரும் வழிபடப்படுவதைக் காணலாம். சிவாலங்களில் ஒவ்வொரு வாயிலின் மீதும் கஜலட்சுமி அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். காலையில் கதவைத் திறக்கும்போது கொடுங்கையிலுள்ள இந்த மகாலட்சுமியுடன் சரஸ்வதியும், விநாயகரும் பூசிக்கப்படுகின்றனர். கும்பாபிஷேகம், பவித்ரோத்சவம் முதலிய வேளைகளில் அமைக்கப்படும். யாக சாலைகளின் வாயிலின் மீது விநாயகர் லட்சுமி சரஸ்வதி ஆகியோரும் உரிய மந்திரங்களால் வழிபடப்படுகின்றனர்.

திருவிராமேசுவரத்து மகாலட்சுமி லிங்கம்

திருமால் இராவண சங்காரத்தின் பொருட்டு இராமபிரானாக அவதரித்தபோது, அவருடன் மகாலட்சுமி சீதையாக அவதரித்தாள். இராவணனைக் கொன்ற பாவம் தீர இராமர் சிவலிங்க வழிபாடு செய்ய நினைத்தபோது அவள் மணலால் சிவலிங்கம் அமைத்துத் தந்தாள். இராமபிரான் வழிபட்டச் சிவலிங்கம் ராமநாதர் என்று வழங்கப்படுவது போலவே சீதை வழிபட்டச் சிவலிங்கம் சீதேசுவரர் என்றழைக்கப்படுகின்றது. பல இடங்களில் சீதை சிவபூசை செய்திருந்தாலும் மன்னார்கடிக்குக் கிழக்கில் அமைந்துள்ள இராமேசுவரத்தில் செய்த வழிபாடு, தனிச்சிறப்பிடம் பெறுகின்றது. இங்குள்ள இராமநாதர் ஆலயப் பிரகாரத்தின் வடமேற்கு முனையில் பெரிய வடிவில் கஜலட்சுமி எழுந்தருளியுள்ளாள். அவளுக்கு முன்புறம் அழகிய சிவலிங்கமாக சீதேசுவரர் அமைந்துள்ளார். சீதை தனது அவதாரம் முடிந்தபிறகும் மகாலட்சுமியாக இத்தலத்தில் ஓயாது சிவபூசை செய்கின்றாள் என்று நம்புகின்றனர். இப்படி மகாலட்சுமியுடன் சிவலிங்கத்தையும் சேர்த்துக் காண்பது அபூர்வ நிலையாகும்.

திரு ஐயாற்று மகாலட்சுமி

வழக்கமாகச் சிவாலயங்களில் உட்பிரகார வடமேற்கு முனையில் திருமாளிகைப் பத்தியிலேயே லட்சுமிதேவிக்கு சந்நிதி அமைப்பது வழக்கம். ஆனால் காவிரிக்கோட்டமான திருவையாறு ஐயாறப்பர் ஆலயத்தில் மகாலட்சுமிக்குத் தனி சிற்றாலயம் மூன்று கலசங்கள் கொண்ட சாலஹார விமானத்துடன் அமைந்திருப்பதைக் காண்கிறோம். இதில் அவள் பெரிய திருவுருவில் விளங்குகின்றாள். இவளுக்குப் பக்கத்தில் சரஸ்வதி தேவியும் எழுந்தருளியுள்ளாள். இந்த சிற்றாலயத்தின் முன் மண்டபம் நீட்டப்பட்டு துர்க்கை மண்டபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆதலின் துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் ஒரு சேர தரிசிக்க முடிகிறது.

சிவாலயங்களில் வெள்ளிக்கிழமை தோறும் பராசக்தி அம்மனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து பிராகாரத்தில் வலம்வரச் செய்வது வழக்கம். என்றாலும் இந்தக் கோயிலில் வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமி பவனிவந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். இத்தகைய காட்சியை வேறெங்கும் காணமுடியவில்லை.

லட்சுமி சந்நிதிக்கு நேர்எதிரில் மகாலட்சுமி தீர்த்தம் என்னும் கிணறு அமைந்துள்ளது. இதன் நீரே ஐயாறப்பரின் அபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

லட்சுமியின் மகுடலிங்கம்

குபேரனின் தலையில் விளங்கும் கிரீடத்தின் முகப்பில் மகாலட்சுமி விளங்குகிறாள். இது குபேரன் செல்வத்தின் அதிபதியாகத் திகழ்வதன் அடையாளமாகும். இது போன்றே மகாலட்சுமி ஓயாது சிவபூசை செய்வதை உணர்த்த அவளுடைய திருமுடியின் முன்புறம் சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை மகாலட்சுமித்தலமான கோல் காப்பூரில் காணலாம். இங்கு மூலத்தானத்தில் உள்ள மகாலட்சுமி வில், கேடயம், வில்வப்பழம் ஆகியவற்றை ஏந்தியுள்ளாள். திருமுடியில் அழகிய லிங்கம் அமைந்துள்ளது. இதுவே மகுடலிங்கமாகும்.

வில்வ நிலையம்

வில்வ மரங்களை சிவவாசம் என்று கூறுவர். சிவபெருமான் வில்வ மரத்தை நீங்காது இருக்கின்றார். அதனடியில் மகாலட்சுமியும் வாசம் புரிகிறாள். லட்சுமியை ''வில்வ நிலையாயை நம'' என்று தோத்திர நூல்கள் கூறுகின்றன.

தீபலட்சுமி

சிவாலயங்களில் தீபாராதனையின் போது காட்டப்படும் வெண்சாமரம், பத்மதீபம் முதலியவற்றிற்கு அதி தேவதை மகாலட்சுமி தேவியாவாள். சிவாலயங்களில் விளக்கேந்தி நிற்கும் பெண்களைத் தீப லட்சுமிகள் என்று அழைக்கின்றனர்.

அஷ்டலட்சுமி வழிபட்ட தலங்கள்

மகாலட்சுமி தேவி, தனலட்சுமி, தான்யலட்சுமி, தைரியலட்சுமி, வீரலட்சுமி, வித்யாலட்சுமி, கீர்த்திலட்சுமி, விஜயலட்சுமி, ராஜ்யலட்சுமி என்ற எட்டுப் பெயர்களில் திகழ்கின்றாள். இந்த எட்டு வடிவங்களுடன் முறையே திருவாரூர், ஸ்ரீவாஞ்சியம், வைகல், திருக்கோழம்பம், திருநின்றியூர், மாயூரம், திருமருகல், திருப்புகலூர் என்ற எட்டு ஊர்களில் சென்று சிவ பூஜை செய்தாள். இத்தலங்களுக்குச் சென்றுச் சிவனை வழிபடுபவர்களுக்கு அஷ்டலட்சுமிகளின் அருள் நிறைவாகக் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும்.

மேலும் சிவாலயங்களிலுள்ள அம்பிகை சந்நிதியின் தூண்களில் அஷ்டலட்சுமிகளை அமைக்கின்றனர். இதனால் இவை அஷ்டலட்சுமி மண்டபங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இராமேசுவரம், திருவண்ணாமலை முதலிய இடங்களில் இதனைக் காணலாம்.

லட்சுமி தாண்டவம்

சிவபெருமான் பல அடியவர்களுக்காகத் தனது ஆடற்கோலத்தை நிகழ்த்தி அருளியதைப் போலவே திருப்புத்தூரில் லட்சுமிக் காணவும் நிகழ்த்தினார். இதனால் இதற்கு லட்சுமி தாண்டவம் என்பது பெயராயிற்று. இது ஆதியில் கௌரிதேவி காண ஆடியதாதலின் கௌரிதாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது.

இந்தத் தலத்திலுள்ள அனைத்தும் லட்சுமியோடு தொடர்புடையதாக விளங்குகின்றன. ஆலயம் ஸ்ரீதளி என்றும் இங்கு சிவனாடிய தாண்டவம் லட்சுமிதாண்டவம் என்றும் தீர்த்தம் ஸ்ரீ தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகின்றன. இத்தலத்தில் சிவபெருமான் கௌரிதேவிக்காகவும், லட்சுமி தேவிக்காகவும் ஆடிய தாண்டவத்தின் பெருமைகளைத் தலபுராணம் தனிச்சிறப்புடன் குறிக்கின்றது. இன்னும் பல தலங்களை வழிபட்டாள் திருமகள்.

அருள்மிகு ஸ்ரீ மகாலெக்ஷ்மி

மங்களம் அருளும் மகாலட்சுமி ஆலயங்கள்



வைணவ சமயத்தின் தனிப்பெரும் தலைமைத் தெய்வமான மகாவிஷ்ணுவின் தேவியாக மகாலட்சுமி விளங்குகின்றாள். முதல் நிலையில் அவருடைய மார்பைவிட்டு என்றும் நீங்காதவளாக வீற்றிருக்கின்றாள். இதையொட்டி நின்வலமார்பில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டே என்று அவள் வாழ்த்தப்படுகிறாள். இதனால் திருமாலை திருமறுமார்பன் திருவாழ்மார்பன் எனப்பலவாறு அழைக்கின்றனர்.

இரண்டாவது வகையில் ஸ்ரீதேவி, பூதேவி என்ற பெயர்களில் அவருடைய இருபுறங்களிலும் காட்சியளிக்கிறாள். வலதுபுறத்திலுள்ள ஸ்ரீதேவி தலையில் கிரீடம் தரித்து காதுகளில் பொன்தோடும் குண்டலங்களும் விளங்க மார்பில் கச்சை அணிந்து இடதுகரத்தில் தாமரை மலரைத் தாங்கி வலது கரத்தைத் தொங்கவிட்டவாறு காட்சியளிக்கின்றாள்.

இடப்புறத்திலுள்ள பூதேவி தலையில் சடாமகுடம் தாங்கி காதுகளில் குழையும் தளிரும் அணிந்துள்ளாள். கச்சையற்ற மார்புடன் வலதுகரத்தில் நீலோற்பலமலர் ஏந்தி இடது கரத்தைத் தொங்கவிட்டவாறு உள்ளாள். இவ்விரு வடிவங்களையும் உபயநாச்சிமார்கள் (இரு பெரும் தேவியர்) என்று அழைக்கின்றனர். இவர்களைப் பொதுவாக நின்ற நிலையிலேயே அமைக்கின்றனர். திருவரங்கம் முதலிய ஓரிரு தலங்களில் இவர்கள் அமர்ந்தவாறும் காட்சியளிக்கின்றனர்.

மூன்றாம் நிலையில் அவள் ஆலயத்தின் தென்மேற்கு முனையில் கிழக்கு நோக்கியவாறு தனிச் சிற்றாலயத்தில் எழுந்தருள்கின்றாள். மேற்கரங்களில் தாமரை மலர்களை ஏந்தி முன்னிருகரங்களில் அபய வரத முத்திரைகளைத் தாங்கி தாமரை மலரில் பத்மாசனமிட்டு அமர்ந்தவாறு காட்சியளிக்கிறாள். இவளைப் பொதுவாகத் தாயார் என்றும் இவளுடைய ஆலயத்தைத் தாயார் சந்நிதி என்றும் அழைக்கின்றனர். இந்த தனி ஆலயத்துள் அவள் மலவ (கல்)த் திருமேனியாகவும், உலா (உலோக)த் திருமேனியாகவும் வீற்றிருக்கின்றாள். இவளுக்கு ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு சிறப்புப் பெயர் வழங்குகிறது.

திருவரங்கத்தில் அரங்கநாயகி, திருவிடைந்தையில் அகிலவல்லி, நாச்சியார் கோயிலில் வஞ்சுளவல்லி, திருவல்லிக்கேணியில் வேதவல்லி என்று தலங்கள் தோறும் பல்வேறு பெயர்கள் அழைக்கப்படுகின்றாள்.

இவள் தனது சந்நிதியை விட்டு வெளியே வருவதில்லை. திருவீதியுலா காண்பதில்லை. எனவே படி தாண்டாப்பத்தினி என்று அழைக்கின்றனர். பங்குனி உத்திரத்தில் தாயாருக்கும் பெருமாளுக்கும் நடைபெறும் திருமணம் தாயார் சந்நிதியில் வைத்தே நடைபெறுகிறது. திருமணத்திற்குப் பிறகு இருவரும் ஒரே ஆசனத்தில் அமர்ந்து பக்தர்களுக்குக் காட்சியளிக்கின்றனர்.

★ குறிப்பு : இந்நூலின் இடையிடையே வைணவ ஆலய மகாலட்சுமி/தாயார் இடம் பெறுகின்றன.

ஆதியில் அனைத்து சாத்திரங்களையும் பெருமாள் திருமகளுக்கே உபதேசித்தார். அவள் வழியாகவே ஞானப்பயிர் செழித்து வளர்ந்து வந்துள்ளது. என்று சமய நூல்கள் கூறுகின்றன. இவ்வகையில் பெருமானின் முதன்மை சிஷ்யையாகவும் ஆச்சார்ய பரம்பரையின் முதல் தலைவியாகவும் போற்றப்படுகிறாள். திருமாலின் அருள் மகாலட்சுமி வழியாகவே பக்தனை வந்தடைகிறது என்று நம்பப்படுகிறது.

ஸ்ரீதேவி-பூதேவி உடனாய மாதவப்பெருமாள்

ஸ்ரீதேவி - பூதேவி

மகாகணபதி, விக்னர், விநாயகர் என்னும் பெயரில் இரட்டைப் பிள்ளையாராக வீற்றிருப்பதைப் போலவே ஆதியில் மகாலட்சுமியும் ஸ்ரீலட்சுமி என்னும் இரண்டு வடிவுடன் திருமாலை அடைந்து அவருக்குத் தேவியானாள். இதில் ஒரு கூறு பூமியின் வளத்தைப் பெருக்கியது. இதையொட்டி அவள் பூதேவி எனப்பட்டாள். மற்றோர் கூறு பூமியில் விளைந்த பொருட்களுக்கும் வாணிபத்திற்கும் அதிபதியானாள். இந்நிலையில் அவள் ஸ்ரீதேவி எனப்பட்டாள். தென்னகத்து திருமால் கோயில்களில் திருமால் ஸ்ரீதேவி பூதேவியுடன் காட்சியளிக்கிறார். இவர்களைப் பூ மடந்தை புவிமடந்தை எனவும் அழைக்கின்றனர்.

காலப்போக்கில் இலக்கியங்களில் ஸ்ரீயும் லட்சுமியும் ஒருவரே என்பதாக சித்தரிக்கப்பட்டு விட்டது. மகாபாரதம் சாந்திபர்வத்தில் ஸ்ரீயானவள் தானே லட்சுமியுமாவாள் என்று கூறப்பட்டுள்ளது. காலப்போக்கில் ஆலயங்களிலும் பூதேவியின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. பூதேவிக்குப் பதிலாக அவளுடைய அம்சமாகப் பிறந்த சூடிக்கொடுத்த நாச்சியரான ஆண்டாள் அந்த இடத்தைப் பெற்றாள். ஆலயங்களில் கருவறையின் வலப்புறம் ஸ்ரீயான லட்சுமிக்கும் இடப்புறம் ஆண்டாள் நாச்சியாருக்கும் தநி சிற்றாலயங்கள் அமைக்கப்பட்டன. வலப்புறம் அமையும் மகாலட்சுமி சந்நிதியில் அவள் தாயார் எனும் பெயரில் மேற்கரங்களில் தாமரை மலர்களையும் முன்கரங்களில் அபயவரதமுத்திரைகளையும் தாங்கி தாமரை மலரில் பத்மாசனத்தில் வீற்றிருக்கின்றாள். இடப்புறத்திலுள்ள சந்நிதியில் ஆண்டாள். வலதுகரத்தில் மலரேந்தி இடது கரத்தைத் தொங்கவிட்ட வண்ணம் நின்றவாறு காட்சியளிக்கிறாள். (சில தலங்களில் இந்த அமைப்பு மாறியுள்ளது). லட்சுமி தலையில் கிரீடம் தரித்துள்ளாள். ஆண்டாள் கூந்தலைச் சாய்வான கொண்டையாக முடிந்துள்ளாள்.

திருமகள், பல மன்னர்களின் வேண்டுகோளையேற்று அவர்களுக்கு மகளாகத் தோன்றி வளர்ந்து திருமாலைக் கணவனாக அடைந்தாள். திருமலையை ஆண்ட ஆகாசாராஜன், சோழ அரசனான சுமதிராஜன் முதலிய அனேகருக்கு அவள் திருமகளாகத் தோன்றி திருமாலை மணந்ததைப் புராணங்கள் கூறுகின்றன.

திருமகளின், மற்றோர் கூறான பூதேவி மார்க்கண்டேயர், முதலிய அனேகருக்கு மகளாகத் தோன்றித் திருமாலை அடைந்தாள். மார்க்கண்டேயர் திருமாலுக்கு அவளை மணம் செய்து கொடுத்து அருள் பெற்ற கோலத்தை விண்ணகர் ஒப்பிலியப்பன் கோயில், திருவதிகை சரநாராயணப் பெருமாள் கோயில் முதலியவற்றில் காணலாம். இத்தலங்களில் நடுவில் திருமால் சங்கு சக்கரம், அபய ஊருமுத்திரைகளைத் தாங்கி நிற்கின்றார். வலப்புறம் பூதேவி நிற்கின்றாள். இடதுபுறம மண்டியிட்டு வணங்கும் கோலத்தில் மார்க்கண்டேய ரிஷி உள்ளார்.

திருமால் வராக மூர்த்தியாகக் கோலங்கொண்டருளும் தலங்களில் அவள் அகிலவல்லி, பூமிப்பிராட்டியார் என்ற பெயரில் தனிக்கோயிலில் வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றாள்.

எல்லா தலங்களிலும் உலாதிருமேனியாக விளங்கும் திருமாலின் இருபுறமும் ஸ்ரீ தேவியும் பூ தேவியும் எழுந்தருளியிருக்கக் காண்கிறோம்.

தசாவதாரங்களில் மகாலட்சுமி

திருமால் அன்பர்களைக் காத்து அருள்புரிய அனேக அவதாரங்கள் எடுத்துள்ளார். அவற்றில் பத்து முதன்மை பெற்றதாகும். இவை மச்சம் (மீன்), கூர்மம் (ஆமை), வராகம் (பன்றி), சிம்மம் (நரசிம்மம்), வாமனர், பரசுராமன், தசரதராமன், பலராமன், கிருஷ்ணன், கல்வி (ஹயக்ரீவர்) என்பனவாகும். இவற்றில் ஒன்பது அவதாரங்கள் நிகழ்ந்துவிட்டன. பத்தாவதான கல்கி அவதாரம் நிகழவில்லை என்றாலும் அன்பர்கள் அதையும் உருவமாக அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

இவற்றில் மீன், ஆமை, அவதாரங்கள், அவசரமாக எடுத்து முடிக்கப்பட்டதாகும். இவற்றில் மகாலட்சுமி அவருக்குத் தேவியாகச் செல்லவில்லை. சிலபுராணங்களின்படி அவர் ஆமை அவதாரம் செய்து மலையைத் தாங்கியதாலேயே தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைய முடிந்தது. அவ்வேளையில் பாற்கடலிலிருந்து லட்சுமி தோன்றினாள். திருமால் ஆமை வடிவை நீக்கி அழகிய கோலத்துடன் சென்று அவளை மணந்துகொண்டார் என்று சொல்லப்பட்டுள்ளது.

மூன்றாவது அவதாரமான பன்றி அவதாரத்தில் அவர் கடலுக்கு அடியில் சென்று அங்கே ஒளித்து வைக்கப்பட்டிருந்த திருமகளின் மற்றோர் கூறானபூ மடந்தையை மேலே கொண்டுவந்தார். அவரைப் பூவராகம் என்று போற்றுகின்றனர். அந்நிலையில் அவள் மார்பில் வாழும் திருமகள் அகில வல்லி என்று அழைக்கப்படுகிறாள். சிவ ஆலயங்களில் திருமகளை மடிமீது கொண்டுள்ள லட்சுமிவராகரையும், சிலதலங்களில் புவிமகளை மடிமீது கொண்டுள்ள லட்சுமிவராகரையும் காண்கிறோம். ஆதிவராக க்ஷேத்திரமான ஸ்ரீ முஷ்ணத்தில் வராகமூர்த்தி இருபெரும் தேவியருடன் காட்சியளிக்கின்றார்.

நான்காவது அவதாரமான நரசிம்ம அவதாரத்தில் அவர் இரணியனின் குடலைப் பிடுங்கி மாலையாக அணிந்தும் இரத்தத்தைக் குடித்தும் பெரிய அட்டகாசம் புரிந்தார். அவருடைய கோபக்கனல் எல்லோரையும் வருத்தியது. தேவர்கள் அவருடைய உக்ரமயமான கோபத்தை எளிதில் தணிக்கும் ஆற்றல் மகாலட்சுமிக்கே உண்டு என்பதால் அவளைப் பணிந்து அவரிடம் செல்லுமாறு கூறினர். அவள் அவரை அணுகி கோபத்தை மாற்றினாள். பிறகு திருமால் அவளைத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டு லட்சுமி நரசிம்மனாக அனைவருக்கும் அருள்புரிந்தார். இதையொட்டி நரசிம்மர் மாலோலன் என்று அழைக்கப்படுகிறார்.

நரசிம்மர் யோக நரசிம்மராகக் காட்சிதரும்போது அவருடைய மார்பில் அவள் யோக லட்சுமியாகவும் உக்ரவடிவில் விளங்கும் போது வீர லட்சுமியாகவும் சாந்தவடிவில் விளங்கும் போது சாந்தலட்சுமியாவும் வீற்றிருக்கின்றாள் என்று ஒரு தனிப்பாடல் கூறுகிறது.

ஐந்தாவதான வாமன அவதாரத்தில் அவர் மாணி (பிரம்மச்சாரிய) யாகச் சென்றாதாலும், ஆறாவதான பரசுராம அவதாரத்தில் நித்திய பிரம்மச்சாரியாக இருந்ததாலும் திருமகள் பற்றிக் கூறப்படவில்லை. ஏழாவது அவதாரமான இராமாவதாரத்தில் அவள் ஜனக புத்ரியாகத் தோன்றி ராமபிரானை மணந்தாள். அப்போது அவளுக்கு, சீதா, ஜானகி, மைதிலி, வைதேகி, ராகவி, முதலான பெயர்கள் வழங்கின. ஸ்ரீ ராமக்ஷேத்திரமான மதுராந்தகத்தில் அவள் ஜனகவல்லி எனும் பெயரில் தனிச் சந்நிதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். எட்டாவது அவதாரமான பலராம அவதாரத்தில் லட்சுமி, ரேவதி என்னும் பெயரில் மகனாகத் தோன்றினான். கிருஷ்ணக்ஷேத்திரங்களில் திருமகள் ருக்மிணி எனும் பெயரில் அவருடன் வீற்றிருக்கிறாள். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆலயத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்பார்த்தசாரதி கோலத்தில் நிற்க அவருக்கு வலப்புறம் பெரிய வடிவில் ருக்குமணியைக் காண்கிறோம்.

பத்தாவது அவதாரம் கல்கி எனப்படும் ஹயவதன அவதாரமாகும். இந்த அவதாரத்தில் ஞானவல்லியான வித்யாலட்சுமியுடன் திருமால் காட்சியளிக்கின்றார். இவரை லட்சுமி ஹயக்ரீவர் என்று அழைக்கின்றார்.

சென்னை அஷ்ட லட்சுமி ஆலயம்

சென்னையில் திருவான்மியூருக்கு அருகில் ஓடைக்குப்பம் என்னும் இடத்தில் கடற்கரை யோரமாக இந்த ஆலயம் அமைந்துள்ளது. அலைகடலில் பிறந்த திருமகளுக்கு அலைகடல் ஓரத்தில் ஆலயம் அமைந்தது மிகப் பொருத்தமாகும்.

இந்த ஆலயத்தின் மேலுள்ளது அஷ்டாங்க விமானம். ஆயிரக் கணக்கான பசுக் கூட்டங்கள் நிறைந்திருக்கும் இடத்திலோ, வற்றாது நீர் நிறைந்திருக்கும் இடத்திலோதான் அஷ்டாங்க விமானம் உள்ள கோயில் அமைக்க வேண்டும் என்பது சாஸ்திரம் வேதத்தின் வேர் ஆன 'ஓம்' என்ற ஓங்கார ஒலி சமுத்திரத்தினால் சதா எழும்பிக் கொண்டே இருக்கும் இந்த இடம் அதனால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கடலை நோக்கி மகாலக்ஷ்மியும், ஸ்ரீமந் நாராயணனும் புது மாப்பிள்ளை பெண்போல கல்யாண கோலத்தில் நிற்கிறார்கள். இவர்களைத் தரிசித்து விட்டு பிரதக்ஷிணமாக வந்தால், தெற்கே ஆதிலக்ஷ்மி, மேற்கில் தானிய்லக்ஷ்மி, வடக்கில் தைரிய லக்ஷ்மி மூவரையும் தரிசிக்கலாம்.

மீண்டும் மகாலக்ஷ்மி சந்நிதிக்குள் சென்று இடது கைப் படிக்கட்டுகள் வழியாக இரண்டாவது தளத்துக்குச் செல்லலாம். இந்த தளத்தில் கிழக்கு நோக்கி கஜலக்ஷ்மி, தெற்கு நோக்கி சந்தான லக்ஷ்மி, மேற்கு நோக்கி விஜயலக்ஷ்மி, வடக்கு நோக்கி வித்யா லக்ஷ்மி காட்சி தருகிறார்கள்.

அங்கேயிருந்து மூன்றாவது தளத்திற்குச் செல்லலாம். அங்கே கிழக்கே பார்த்தபடி தனலக்ஷ்மி தனிமையில் இருக்கிறாள். பொருளை சேர்க்க எவ்வளவு சிரமப்பட வேண்டும் என்பதை இரண்டு மாடிகளில் ஏறி தனலக்ஷ்மியை தரிசிப்பதன் மூலம் உணர்த்துகிறார்கள் போலிருக்கிறது.

ஒன்றன் மேல் ஒன்றாக மூன்று தளங்கள் இருப்பது இக்கோயிலின் தனிச் சிறப்பு இந்த ஆலயத்தில் சங்க நிதிக்கும், பதும நிதிக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது மற்றொரு விசேஷம்.

மகாலக்ஷ்மி சந்நிதிக்கு முன்னால் உள்ள பிரதான மேடையின் மேல் கோயிலைப் போலவே மூன்று தளங்கள் உள்ள மண்டபம் கட்டி அந்தந்த தளங்களுடன் இணைக்கவிருக்கிறார்கள். இதில் ஏறிச் சென்று அவரவர் இஷ்ட லக்ஷ்மி உள்ள பிரகாரத்திற்குச் சென்று தரிசிக்கலாம்.

பெசண்ட்நகர் அஷ்டலக்ஷ்மி கோயிலில் பிரபலமாகிவிட்டது. லக்ஷ்மியுடன் இணைந்த நாராயணன் இங்கே நாயகன். சுனாமியால் பொங்கிய கடலலைகள் கரையைக் கடந்தாலும் இக்கோயிலை நெருங்காமல் பின்வாங்கிய அதிசயத்திலிருந்தே அஷ்டலக்ஷ்மிகளின் மகிமையை உணரலாம். மாடியேறி தரிசிக்கும்படியான புதுமையான கட்டட நுணுக்கம் கொண்ட கோயில். அஷ்டலக்ஷ்மி களின் அருளையும் ஒரு சேரப் பெற்றுவிட்டால் அவனியில் அல்லல் ஏது?

நாச்சியார் கோயில் வஞ்சுளவல்லி

வைஷ்ணவக் கோவில்களில் அம்பிகைக்கு பிரதான்யம் உள்ள சந்நிதிகள் இரண்டு. ஒன்று நாச்சியார் கோயில், மற்றொன்று திருவெள்ளறை.

வஞ்சுளவல்லி என்கிற மேதாவி முனிவரின பெண் மீது விஷ்ணு காதல் கொள்கிறார். அத்தவத்தில் எல்லாக் காரியங்களிலும் அக்ரஸ்தானம் தன்மகள் வஞ்சுளநாயகி நாச்சியாருக்கே தரவேண்டும் என்கிற நிபந்தனையின் பேரில் முனிவர் தன் பெண்ணை மணம் செய்து கொடுக்கிறார். இதனால்தான் நறையூர், நாச்சியார் கோயிலாக மாறிவிட்டது. கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் பாதையில் ஆறு மைல் தூரத்தில் இருக்கிறது இத்தலம். இங்கு பெருமாள் இரண்டே கைகளுடன் வஞ்சுளவல்லியுடன் மட்டும் காட்சியளிக்கிறார். தனக்குத்தான் முக்கியத்துவம் என்பதை காட்டுவதுபோல வஞ்சுளவல்லி ஒரு அடி முன்னதாகவே எட்டி எடுத்து வைத்துக் காணப்படுகிறாள். தாயாருக்குத் தனி சந்நிதி கிடையாது.

திருவெள்ளறை லட்சுமி

திருச்சி மாவட்டத்தில் (துறையூர் திருச்சிராப்பள்ளிக்கு செல்லும் வழியில்) உள்ளது. திருவெள்ளறை லக்ஷ்மி தவம் செய்து தனக்கு முக்கியத்துவம் பெற்றுக் கொண்ட தலம். பெருமாள் பெயர் புண்டரீகாக்ஷன், பத்து அடிக்குமேல் உயரம் நின்ற திருக்கோலம். ஆனாலும் தாயாருக்குத்தான் இங்கு முதலில் பூஜை. இந்த சந்நிதிகளை எல்லாம் வீடுகளுக்கு 100 அடி உயரே இருக்கும் படி கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள குளம் ஒன்று மிக விசித்திரமானது. ஸ்வஸ்திகா அமைப்பில் உள்ளது, இதன் பெயர் மாமியார் நாட்டுப் பெண் குளம். மாமியார் குளிப்பதை மருமகளும், மருமகள் குளிப்பதை மாமியாரும் காண முடியாத படியான படித்துறை உள்ள குளம் இது.

நின்ற கோலத்தில் - லட்சுமி (தரங்கம்பாடி & ஸ்ரீவில்லிபுத்தூர்)

எல்லா ஆலயங்களிலும் தாயார் தனியாகவுள்ள சந்நிதிகளில் அமர்ந்த திருக்கோலத்தில்தான் காண முடியும். ஆனால் ஒரே ஒரு சந்நிதியில் தாயார் நின்ற கோலத்தில் காணப்படுகிறாள். மாயவரம் தரங்கம்படி பாதையில் தலைச்சங்காடு என்ற ஒரு தலம் இருக்கிறது. இதன் அசல் பெயர் தலைசங்க நாண் மதியம் என்பதாகும். தாயார் தலைச்சங்க நாச்சியார் - செங்கமலவல்லி - நின்ற கோலத்தில் காணப்படுகிறாள்.

வைஷ்ணவத் தலங்களில் நின்றபடி சேவை சாதிக்கும் மற்றொரு பெண்மணி ஆண்டாள். ஸ்ரீ வில்லிபுத்தூரின் இறைவன் வடபத்திர சாயிதான் என்றாலும் முக்கியத்துவமெல்லாம் ஆண்டாளுக்குத்தான் மற்ற எல்லா வைஷ்ணவ ஆலயங்களிலும் ஆண்டாளுக்குத் தனி சந்நிதி. ஆனால் இங்கு நிறை நிலையிலுள்ள ரங்கநாதனுடனும், கருடனுடனும் சேர்ந்தே சர்வாலங்கார பக்ஷிதையாக ஆண்டாள் காட்சி தருகிறாள்.

தேன்கூடு அமைந்த சந்நிதியில் லட்சுமி: (திருக்கண்ணமங்கை)

கண்ணமங்கையில் (திருவாரூருக்கு மேற்கே நான்கு மைல்) அபிஷேகவல்லித் தாயார் சந்நிதியில் ஒரு பெரிய தேன்கூடு காணப்படுகிறது. இக்கூடு எப்போது கட்டப்பட்டது என்பதைச் சொல்வார் யாருமில்லை, முனிவர்கள் தேனீ ரூபத்தில் இருந்து பெருமாளையும் தாயாரையும் வழிபட்டு வருவதாகக் கூறுகிறார்கள், தேன் கூட்டுக்கும் பூஜை உண்டு.

மலையடிவாரத்தில் திருச்சானூர் தாயார்: (பெரிய திருமேனி)

மலை மீது கணவன் வேங்கடவனை இருக்கச் செய்து தனித்து வாழும் அலர்மேலுமங்கைத் தாயார் சந்நிதி கீழ்த்திருப்பதிக்கருகில் திருச்சானூர் என்ற இடத்தில் உள்ளது. இந்தத் தெய்வத் தம்பதிகள் பற்றிப் பேசப்படும் கதைகள் அனந்தம்.

★ குறிப்பு : இன்னும் வைணவத்தலங்கள் பாடல் பெற்றதும் பாடல் பெறாததும் ஆலயங்களில் உள்ள மகாலட்சுமி திருமேனி எராளம் ஆகும். இங்கு சிலவே கொடுக்கப்பட்டுள்ளன.


ஸ்ரீ தனலக்ஷ்மி
ஸ்ரீ வித்யா லக்ஷ்மி
ஸ்ரீ ஆதிலக்ஷ்மி
ஸ்ரீ விஜய லக்ஷ்மி
ஸ்ரீ தான்ய லக்ஷ்மி
ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன்
ஸ்ரீ சந்தான லக்ஷ்மி
ஸ்ரீ தைர்ய லக்ஷ்மி
ஸ்ரீ கெஜ லக்ஷ்மி

அஷ்டலட்சுமிகள்-சென்னை அஷ்டலட்சுமி ஆலயத்தில்

வடசென்னையில் யதிராஜவல்லி

வடசென்னை ஆச்சாரப்பன் தெருவில் (அந்த நாளைய கொத்தவால் சாவடி பகுதி) ஆதிகேசவப் பெருமாள், கோயில் கொண்டு அருள் பாலிக்கிறார். தாயார் பெயர் - யதிராஜவல்லி. ராமானுஜருக்கு, தன் பெயரிலேயே இடமளித்து அவருடைய புகழ்சிறக்க விளங்குகிறாள் அன்னை. ஆமாம். ராமானுஜருக்கு 'யதிராஜர்' என்னும் ஒரு பெயர் உண்டு. அன்னை யதிராஜவல்லி, 'உண்மையான ஒரு குருவின் வழி காட்டல் மூலம் என்னை தியானித்தால், நீ எண்ணிய எண்ணமெல்லாம் ஈடேறும்' என்று சொல்லும் வகையில்தான் நம் குருவின் பெயரைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டிருக்கிறார்.

திருமால் திருமலைமீது நிற்கிறார். அவர் மனைவி அலமேலுமங்கையோ மலையடிவாரத்திலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள திருச்சானூரில் இருக்கிறாள். இப்படி இவர்கள் பிரிந்திருப்பானேன்? மணப்பெண் அலர்மேலுமங்கை கணவன் வீட்டிற்கு வரும்போது நிறைய ஸ்ரீ தனம் எல்லாம் கொண்டுவந்திருக்கிறாள். ஆனால் ஒரே ஒரு பொருள் கொண்டு வரவில்லையாம். அதுதான் கருவேப்பிலைக் கொத்து அதற்காக மணமகன், அவளை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார். அவளும் வீம்பு குறையாமல் தன் பிறந்த அகத்துக்குள் வந்து தங்கியவள் தான் புருஷன் வீட்டுக்குத் திரும்பவேயில்லை. ஆனால் புருஷனுடைய வீராப்பு எத்தனை நாளைக்கு? இப்போது ஒவ்வொரு இரவிலும் அவர் மலையிலிருந்து கீழே இறங்கி மனைவி வீட்டிற்கு நடக்கிறார். விடிவதற்குள் மலைக்குத் திரும்பி விடுகிறார். அலர்மேலு மங்கை உட்கார்ந்த திருக்கோலத்தில் அழகே உருவாக சேவை சாதிக்கிறாள்.

தொட்ட கட்டவல்லி மகாலட்சுமி

மைசூர் மாநிலத்தில் ஹாஸனுக்கு 14 மைலிலுள்ள தொட்ட கட்டவல்லி என்ற இடத்தில் மகாலக்ஷ்மியின் ஆலயம் இருக்கிறது. நான்கு அறைகளுள்ள இந்த அபூர்வ ஹொய்சாலா ஆலய அமைப்பே ஒரு நூதனமாகும். இங்கே சரஸ்வதிக்கும் ஒரு சந்நிதியுள்ளது. சிவனும் விஷ்ணுவும் எதிர் எதிராக கோயில் கொண்டு உள்ளனர். மகாலக்ஷ்மி நின்ற நிலையில் காணப்படுகிறாள் மிகவும் அழகான உருவம். நான்கு கைகளில் சங்கு, சக்கரம், கதை, தாமரை வைத்திருக்கிறாள். அம்மாதிரி கோலத்தில் வேறு எங்கேயுமே மகாலக்ஷ்மி கிடையாது.

ஹொய்சாளர் கட்டிய நடனமாடும் லட்சுமி

மைசூர் மாநிலத்தில் ஹாஸன் ஜில்லாவில் சென்னராயப் பட்டினத்திற்கு 12 மைலிலுள்ள நூக்கிஹல்லியின் ஹொய்சாள மன்னர்கள் கட்டிய கோயிலில் லக்ஷ்மிதேவி நடனமாடும் தோற்றம் அமைந்திருக்கிறது. இதை செய்தவர் மாலிம்பா என்கிற பிரபல சிற்பி. இவருக்கு எல்லா கடவுளையும் ஆடிப்பார்க்க ஆசைபோலிருக்கிறது. இவரால் உருவாக்கப்பட்ட கணபதியும், சரஸ்வதியும் கூட நடனமாடுகின்றனர்.

ஹொய்சாளர் கோவில்களில் நாட்டிய கணபதியும் நடன சரஸ்வதியும் காணப்படுவது சகஜம். ஆனால் நடனமாடும் லக்ஷ்மியை (எட்டு கைகளுடன்) காணவேண்டும் என்றால் இக்கோவிலுக்குத் தான் வரவேண்டும்.

மும்பாய் மகாலட்சுமி

கல்கத்தாவைக் காளி எப்படி தன் சொந்த இடமாக்கிக் கொண்டாளோ அதேபோல் மகாலக்ஷ்மி பம்பாயைத் தன் சொந்த இடமாக்கிக் கொண்டிருக்கிறாள். இல்லையேல் செல்வம் கொழிக்கும் சீமான்கள் அங்கு மலிந்திருப்பானேன்?

மகாராஷ்டிரத்தில் கோலாப்பூரிலுள்ள மகாலக்ஷ்மி கோவில் மிகப் பிரசித்தி பெற்றது. இது ஒரு சக்திபீடம். கோலாப்பூரில் தனிக் கோவில் கொண்டிருந்தாலும் நிறைந்த புகழுடனும் மிக்க அருளுடனும் அவள் வாழ்வது மும்பாயில்தான். அங்கே அவளுக்கென்று ஒரு தனிக் கோயில் அவள் பெயராலேயே ஒரு நகர்புறம், ரயில்வே நிலையம், ரேஸ் கோர்ஸ் எல்லாம்,

மகாலக்ஷ்மி ஆலயம் ஒரு பங்களா மாதிரி காட்சி அளிக்கிறது. மூன்று முகமுள்ள தேவியைக் காணலாம். நடுவிலுள்ள முகம் மகா லக்ஷ்மியுடையது. ஒரு பக்கம் மகா காளியின் முகமும், மற்றொரு பக்கம் மகா சரஸ்வதியின் முகமும் காணப்படுகிறது. முகத்தைத் தவிர மற்ற பாகங்களைத் துணியால் மறைத்திருக்கிறார்கள்.

இந்த இடத்திற்கருகில் ‘‘வொலி காஸ்வே’’ என்றொரு பாலம் கட்டியிருக்கின்றனர் இதைக் கட்டியபோதெல்லாம் இடிந்து போய்க்கொண்டே இருந்ததாம். பல தடவை முயன்றும் கட்டி முடிக்க முடியவில்லை. இச்சமயத்தில் பிரபு என்று பட்டம் பெற்ற ஒருவரது கனவில் மகாலக்ஷ்மி தோன்றி தானும் தன் துணைவியார்களும் கடலில் அமிழ்ந்து கிடப்பதாகவும், தங்களை வெளிக் கொணர்ந்து கோவில் அமைத்தால் பாலம் கட்ட முடியும்



மஹா காளி **மஹா லட்சுமி** **மஹா சரஸ்வதி**

மும்பை மகாலட்சுமி கோயில்

என்று தெரிவித்தாளாம். அந்தப் பிரபுதான் இந்த அம்மனைக் கண்டெடுத்து ஆலயத்தை நிர்மாணித்து அப்பாலத்தையும் கட்டியிருக்கிறார். இக்கோயில் கி.பி. 1761-ல் கட்டப்பட்டது.

பிச்சையிட்ட லட்சுமி (உத்தமர் கோயில்)

பார்வதி பிக்ஷையிட்டு அன்னபூரணியானாள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். திருச்சிக்கு வடக்கே 5 மைலிலுள்ள உத்தமர் கோயில் அல்லது பிக்ஷாண்டார் கோயிலுக்குச் சென்றாள் லக்ஷ்மி தேவி பிக்ஷையிட்ட பெருமையை உணரமுடியும். தாயாருக்குப் பூரணவல்லி தாயார் என்ற திருநாமம், இங்கே மும்மூர்த்திகளுக்கும் சந்நிதிகள் உண்டு. சிவன் கபாலம் ஏந்தி பிக்ஷைக்குச் சென்ற போது முதன் முதலில் லக்ஷ்மி தேவியிடம் வந்திருக்கிறார். பிக்ஷையிட்டதும் கபாலம் நிரம்பிவிட்டது. அதன் காரணமாகவே அவளுக்குப் பூரணவல்லி என்று பெயர் ஏற்பட்டுள்ளது.

ஏரிகாத்த ராமர்கோயிலில் தனிச் சன்னதி

ராமர் கோயில்களில் சீதாதேவி ராம லக்ஷ்மணருடன் தான் காட்சியளிப்பாள். ஆனால் மதுராந்தகம் ஏரி காத்த ராமர் கோயிலில் ஜனகவல்லி என்ற பெயருள்ள சீதா தேவிக்கு தனி சந்நிதியுள்து. பிளேஸ் என்ற வெள்ளைக்கார கலெக்டர் இங்கு கோயிலின் முன் மண்டபத்தைக் கட்டியிருக்கிறார்.

திருக்கண்ணமங்கை

தஞ்சை ஜில்லாவில் நன்னிலம் அருகிலுள்ள திருக்கண்ணபுரத்தில் பெருமாளுக்கு நான்கு தேவிகள். ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள், பத்மினி எனப்படும். வலைய நாச்சியார் (மீனவப் பெண்) இத் தேவியார் தனி சந்நிதி கிடையாது. மூலக் கிரகத்தில் சௌரிராஜன் பக்கத்திற்கு இந்நால்வரும் காணப்படுகின்றனர்.

ஸ்ரீரங்கத்தில் பக்தைகள்

ஸ்ரீரங்கத்தில் சயனித்துள்ள ரங்கநாதருடன் தேவிகள் யாரும் கிடையாது. ஸ்ரீரங்க நாயகிதான் பட்டமகிரிஷி அவருக்கத் தனிச் சந்நிதி. இவரைத் தேடிக்கொண்டுதான் ரங்கநாதர் இங்கு வருகிறார். ரங்கநாதருக்கு இங்கு பல மனைவிகள், ரங்கனைக் காதலித்து மணந்த துலுக்க நாச்சியாருக்கு ஸ்ரீரங்கம் கோயிலிலேயே தனிச் சந்நிதி உள்ளது. ஆகவே ரங்கநாதனுக்கு ரொட்டியும் வெண்ணெயும் கூட நைவேத்தியம் செய்யப்படுகிறது. மேலக்கோட்டையிலும் ஒரு துலுக்க நாச்சியார் இருக்கிறார். இவள் டில்லி பாதுஷாவின் மகள். இறைவனைக் காதலித்து மணந்தவள்.

சுல்தான் மகளின்பெயர் வரநந்தினி. மூலவரின் கால்களுக்கிடையில் அவள் தலை தெரிகிறது.

திருத்தவத்துறை (லால்குடி)

லக்ஷ்மிதேவி தவமிருந்து திருமாலைக் கணவராகப் பெற்ற இடம் திருத்தவத்துறை. இதை இப்போது லால்குடி என்று அழைக்கின்றனர். நாமக்கல்லில் நாமகிரி தாயாருக்கு ஸ்தல நாயகன் நரசிம்மருக்கு ஒரு மாத்திரை அதிகமான பிராபல்யம், இவளும் இங்கு தவமிருந்ததாகவே வரலாறு. இந்த அம்பிகைக்கு ஸ்ரீ ஹரி என்றும் பெயர். அதாவது மகாவிஷ்ணுவுடன் அபின்னமாக இருப்பவள் என அர்த்தம்.

சென்னை காலப்பேட்டை - பெருந்தேவி



காலாடிப் பேட்டைக்கு, தல நாயகி பெருந்தேவி வந்ததே பெரிய கதை. கிழக்கிந்திய கம்பெனியில் துபாஷ் வேலை பார்த்த வீரராகவாச்சாரியார், வரதராஜப் பெருமாளை தினசரி காஞ்சிக்குச் சென்று வழிபட்டு வந்தார். அவருடைய பக்தி கண்டு வியந்த ஆங்கிலேய கலெக்டர் கெல்லட், அவருக்காக திருவொற்றியூர் பகுதியில் வரதராஜப் பெருமாள் கோயிலை நிர்மாணித்துக் கொடுத்தார். தலைவன் கல்யாண வரதராஜனுடன் துணையாய் கூடவே வந்துவிட்டாள் பெருந்தேவி. (கெல்லப்பேட்டை தான் இப்போது காலாடிப் பேட்டையாகிவிட்டது) தாயார் பெயரில் மட்டும் பெருந்தேவி அல்ல; அருள்புரிந்து அரவணைத்துக் காப்பதிலும் பெரியதேவிதான்!



திருநீர்மலை - அனிமா மலர் மங்கை

திருநீர்மலையில் திருவருள் புரிந்து வருகிறாள், திருமகளாம் அனிமா மலர்மங்கை. இத்தலத்தின் நாயகன் நீர்வண்ணப் பெருமாள். மலர் மங்கை, தன் குளிர்ப் பார்வையால் பக்தர்களின் துயரென்னும் வெக்கையை விரட்டுகிறாள். இத்தலத்தில், கோயில் பிராகாரத்தில் நிறைய திருமண ஜோடிகளைப் பார்க்கலாம். ஆமாம், தாயாரின் திருவருளாலும், ஆசியாலும் இங்கே மணமுடிக்கும் இளம் ஜோடிகள் ஏராளம்.

இலங்கையில்

சீதைக்கென்று ஒரு தனிக் கோயில் இலங்கையிலுள்ளது. இராவணன் ஆண்ட இலங்கை கடலில் மூழ்கிவிட்டது என்று சிலர் கூறிய போதிலும் ''இராவணண் எல்லா'' (இராவணண் குகை) ''சீதா வாகா'' (சீதை ஆறு) ஆகியவை நுவார்எலியா பக்கலில் உள்ளன. முதலாம் ராஜசிம்மன் என்ற இலங்கை அரசன் அந்த இடத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டானாம். பிறகு போர்த்துகீசியர் காலத்தில் இக்கோயில் சின்னாபின்ன மாக்கப்பட்டு விட்டது இந்த இடத்தை ''சீதா எலியா'' (சீதையின் ஜோதி) என்று அழைக்கின்றனர். அழகான நிலப்பரப்பு. பல விதமான மரங்களும், ஓடைகளும், நீர்வீழ்ச்சிகளும் பசுமையான புல்வெளிகளும் இவ்விடத்தை அழகு செய்கின்றன. நுவார் எலியா செல்லும் ரஸ்தாவில் தரை மட்டத்துக்குக் கீழ் பள்ளத்தில் சீதை அம்மன் கோயில் உள்ளது. இங்குதான் சீதை வைக்கப்பட்டிருந்த அசோகவனம் இருந்ததாம். பக்கத்திலுள்ள ஹக்கால தாவர இயல் பூங்காவில் மிகப் பெரிய அசோக மரங்களைக் காணலாம். இக்கோயில் சமீப காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். செங்கல்லும், கருங்கல்லும், சுண்ணாம்பும், தகரமும் போட்டுக் கட்டப்பட்டுள்ளன. கோவிலுக்குப் பின்னால் ஒரு சிறு ஓடை ஓடுகின்றது. ஓரிடத்தில் ஓடை பூமிக்குள் மறைந்து மீண்டும் வெளிவருகிறது. பக்கத்தில் உள்ள மரத்தின் தழைகளைப் பறித்து ஓடையில் போட்டால் அவை உள்ளே சென்று விடுகின்றன. சுமார் ஐம்பது அடி நீளமுள்ள இப்பாதாள வழி தங்களுடைய மனத்தில் உள்ள எண்ணங்கள் பலிதம் அடையுமா அடையாதா என்று கண்டுபிடிக்க உதவுகின்றன. இந்த ஓடையில் புஷ்பத்தைப் போட்டு ஆவலுடன் வெளிவருவதை எதிர்பார்த்து நிற்கின்றனர் சிலர்.

பத்ரிநாத் மகாலட்சுமி

பத்ரிநாத்தில் மகாலக்ஷ்மிக்கு தனி ஆலயமே உள்ளது. தென் பிராகாரத்தில் வடக்கே பார்த்த சந்நிதி. காளக்கிராக ரூபத்தில் தேவி இருந்தபோதிலும் பெரிய சிலைபோல அலங்காரம் செய்கிறார்கள். ஒரு கை தாமரை மலர்: ஒரு கை அபயஸ்தம்:ஒன்றில் ஜபமாலை. மற்றொன்று விஷ்ணுவைப் போல தொடையில் உள்ளது முன்னூர் என்பது திண்டிவனத்திலிருந்து 14 மைலிலுள்ளது. அம்பிகை பெயர் பெருந்தேவி. ஆனால் சந்நிதி தனியாக இல்லை. இங்குள்ள வைஷ்ணவி அழகே உருவானவள்; சங்கு, சக்கரம், பத்மம் தொடையில் ஒரு கை இப்படிக் காட்சியளிக்கிறாள்.

காஞ்சியில் அருபலட்சுமி

காஞ்சி காமாக்ஷி கோவிலில் அருப லக்ஷ்மியை தரிசிக்கலாம். மகாலக்ஷ்மிக்கு, தான் மிகவும் அழகுடையவள் என்ற கர்வம் ஏற்பட்டதாம். ஒருநாள் தன் கணவர் மகாவிஷ்ணு அழகையே பரிகசிக்க அவர் சாபமிடுகிறார். அந்தச் சாபம் நீங்க காமகோட்டத்தை அடைந்து தேவியை நோக்கித் தவம் புரிகிறாள். காமாக்ஷியின் குங்குமம் நிர்மால்ய பிரசாத ஸ்பரிசத்தால் தன் சுயரூபம் பெறுகிறாள் என்பது கதை.



ஸ்ரீ வைஷ்ணவி, வடதிருமுல்லைவாயில்

6A

சென்னையில் ஸ்ரீ வைஷ்ணவி தேவி: (வடதிருமுல்லை வாயில்)

சேருங்கள்! ஒன்றாக எல்லாருமாய்
என் திருவழகைப் பாருங்கள்
வகலிபுதவந்த்யாம் ஸித்தலக்ஷ்மீம் நமாமி ||

(இ-ள்.) அபயம் வரதம் என்னும் இருமுத்திரைகளையும் இருகைகளிலும் பெற்றிருப்பவளும், மற்ற இருகைகளில் தாமரை மலர்களை வைத்திருப்பவளும், தாமரை மலரை வாஸஸ்ஸ் தல்மாக உடையவளும், ரத்நங்களால் அமைக்கப் பெற்ற தாடங்கத்தை (காதணி) யுடையவளும், அருணைனைப் போல் (சூரியன் ரதசாரதி) சிவந்து மேனியையுடையவளும், அச்யுதனான மஹாவிஷ்ணுவின் ப்ரிய நாயகியும், தேவர்களனைவராலும் வணங்கப்பட்ட வளுமான ஸித்த லக்ஷ்மியை வணங்குகிறேன்.

பூதேவி தியானம்

த்விபுஜாம் த்ரிநேத்ராம்ச காண்டமகுடான் விதாம்|
ரக்தமால்யாம் பரதராம்ச்யா மாமம்புஜலோசனாம்||
ஸர்வாபரணஸம்யுக்தாம் தக்ஷஹஸ்தோத்பலாம் ச்ரியம்|
ஹேமயக்ஞோபவீ தாம் பூதேவீமாச்ர யேஸதா||

(இ- ள்.) இரண்டு கைகளையும், மூன்று கண்களையும் முடையவளும், கரண்ட மகுடத்தைத் தரித்திருப்பவளும், சிவப்பு நிற ஆடையும், மாலையும் அணிந்திருப்பவளும் கருமை நிறங்களைகொண்ட மேனியை உடையவளும், தாமரை மலர் போன்ற அகன்ற அழகான கண்களை உடையவளும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும் வலது கையில் நீலோத்பல மலரை உடையவளும், பொன்னாலான பூணூலை அணிந்திருப்பவளும், ஐஸ்வர்யத்தை உடையவளுமான பூதேவியை வணங்குகின்றேன்.



பாக்யலட்சுமி



லட்சுமி

பூமிதேவீ - ஒப்பிலியப்பன் கோவில்
(மூலத்தானத்தில்)
திருநாகேஸ்வரம்



திருமகள் / ஸ்ரீதேவி



பூதேவி

வேறு வகையில் – அஷ்டலட்சுமிகளின் தியானங்கள்

1. ஆதிலெக்ஷ்மி

வராபயாலக்ருத பாணிபத்மாம் பத்மேஸ்திதாம் தண்ட த்ருதாப்ஜமாலாம்
பார்ஸ்வத்வயே பாசுர தீப சக்தித்வாயாஞ்ஜிதாம் நௌமியாஹம் ஆதி லெக்ஷ்மீம்

வரம் அபயம் தங்கும் திருக்கரத்தினாளாய், தாமரை மலர் மாலை அணிந்து கழுத்தினாய், இருபக்கங்களிலும் இரு தீபசக்திகளால் அலங்கரிக்கப்பட்டவளாய், தாமரை மலரில் வீற்றிருப்பாள் ஆரி லெக்ஷ்மீ.

2. ஸந்தான லெக்ஷ்மி

ஸந்தான்லெக்ஷ்மீம் ஜல பூர்ணகும்ப கட்கேததாபீ திஸிசு கராப்ஜேஹி
தாவஹந்தீம் த்ருததீப சக்திஹித்வந்தோப ஷ்டாம் ப்ரபஜே அப்ஜநிஷ்டாம்

ஜலம் நிறைந்த குடம், கத்தி, அபயம், சிசு இவைகளை நான்கு கரங்களில் தரித்தவளும், இரண்டு தீப சக்திகளால் அலங்கரிக்கப்பட்டவளும், தாமரை மலரில் வீற்றிருப்பவளும் ஸந்தாநலக்ஷ்மீ எனப்படும்.

3. கஜ லெக்ஷ்மி

கஜஸ்ரியம் நௌமிடி கரைஸரோஜே வராபயே சாபி ஸதாவஹந்திம்
கஜோத்தமாப்யாம் ஜல பூர்ணஹேமகும்ப த்வயோனாப்பிய அபிஷிஞ்யமானாம்

இரண்டு கைகளில் இரு தாமரை மலர்களையும், இரண்டு கைகளில் வராபயங்களையும் தாங்கிக் கொண்டிருப்பவளும் யானைகளால் அபிஷேகம் செய்விக்கப்படுகின்றவளும் கஜலெக்ஷ்மி எனப்படுவாள் .

4. தனலெக்ஷ்மி

சங்கம்ச சக்ரம் கடபத்மசாப ஸரான்கரண்டம் சததா ப்யஞ்ச
ஸமுஜ்வலை: பாணிதலைர்ததானம் ஸேவேஸ்வர்ணாம் தன தாம் ச லக்ஷ்மீம்!

சங்ம் சக்ரம் குடம் தாமரை மலர் வில் அம்பு கூடைஅபயம் இவற்றைத் தாங்கும் எண் கரத்தினளும் தங்கம் போன்ற திருமேனியுடையவளும் தன லக்ஷ்மி என்றழைக்கப்படுகின்றாள்.



தான்ய லட்சுமி (வேறுவகை)

5. தான்யலெக்ஷ்மி

வராபயே பங்கஜமிக்ஷ்க்ஷிதண்டம் கரைர் சதுர்பிர்தததிமுபாஸே
ஸால்யாதிஸஸ்யை: கதளித்ருமைச்சாசவிருத்தாம் ஸ்சுபைர் தோயைகரீம் ஸ்ரீயம்ச !

வரம் அபயம் தாமரை மலர் கரும்பு இவைகளைத் தரிக்கும் நான்கு திருக்கரமுளையவளாயும், சம்பாப்பயிர் வாழை மரங்கள் முதலியவற்றில் சூழப்பட்டவளாயும் தான்யச் செல்வத்தை அளிப்பவளாயும் இருப்பவள் தான்ய லெக்ஷ்மியாவாள்.

6. ராஜ்ய லெக்ஷ்மி

சக்ரம் ச சங்கம் வரதாபயேசா பாசாங்குசைர் சாப்யஸி கேடகேஜா !
ஹஸ்தைர் த்தானாம்ந்நிருபரூம் ஹிம்ஹாஸனஸ் தாம் விஜயாம்ஸ்மராமி!

சக்ரம், சங்கம், வரம், அபயம், பாசம், அங்கும் கத்தி கேடயம் இவற்றை எட்டுக் கரங்களால் தரிக்கின்றவளும், ராஜசிம்ஹம் உடையவறும், சிம்மாஸனத்தில் வீற்றிருப்பவளும், விஜயா என்ற பெயர் கொண்டவளும் , ராஜ்ய லக்ஷ்மி என்று அழைக்கப்படுகின்றாள்.

7. ஸௌபாக்கிய லெக்ஷ்மி

அம்போஜயுக்மம் வரதாப யேசா ஹஸ்தைர் வஹந்தீம் கஜயுக்ம பூஜ்யாம்!
ஸீசுக்ல வஸ்த்ராம் கமலாஸனஸ்தாம் ஸௌபாக்ய லெக்ஷ்மீம் ஸததம்ஸ்மராமி!

இரண்டு தாமரை மலர்களையும் வர அபயங்களையும் தாங்குகின்ற நாற்கர த்தினாளாய், இரண்டு யானைகளால் பூஜிக்கப்படுகின்றவளாய், வெண்ணிறப் பட்டாடை தரித்துக் கொண்டிருப்பவளாய், தாமரை மலரில் வீற்றிருப்பவளே ஸௌபாக்கிய லெக்ஷ்மியாகும்.

8. வீர லெக்ஷ்மி

வராபயே சாகசரளச சங்கசக்ரே ததா சூலகபால கேச,
ஹஸ்தைர் த்தானாம் கனகோஜ்வலாஸ்கீம் தாம் வீர லெக்ஷ்மீம் ஹ்ருதி பாவயாமி!

ர

வரம், அபயம், வில், அம்பு, சங்கம் , சக்ரம், சூலம் கபாலம் இவற்றைத் தரித்திருப்பவளும், பொன் திகழும் திருமேனியுடையவளும் வீரலெக்ஷ்மி எனப்படுகின்றாள்.

மேற்கூறிய இந்த அஷ்டலெக்ஷ்மீக்களும் குழந்தைப்பேறு, யானை, குதிரை முதலிய வாஹனம், தனம், தான்யம், ராஜ்யம், மங்களம், வெற்றி இவைகளைத் தன்னை வழிபடும் பக்தர்களுக்கு அருளுவார்கள்.



சந்தான லட்சுமி (வேறுவகை)

அஷ்டாதசபுஜ மகாலட்சுமியின் தோற்றம்

(18 கரங்கள் கொண்டவள்)

மஹிஷன் அரியனை :-

ஸர்வாந் தேவான் விநிர்ஜித்ய மஹேந்த்ரோபூந் மஹாஸீர: |
மஹிஷ: ஸ்வஸ்ய வீர்யேண ஸீர்யஸ்ய சசினஸ்ததா || (1)

அக்னேர் வாயோர் யமஸ்யாபி நிருதேர் வருணஸ்ய ச |
அதிகாரன் ஸ்வயம் சக்தோ தத்தே வரமதோத்தத: || (2)

பலயுகம் தவம் செய்து தேவர் எல்லோரையும் ஜயித்து மஹாசுரனாகிய மஹிஷன் மஹேந்திரனானான். தன்னுடைய பலத்தினாரும் சூரியன் சந்திரன், சந்திரன், அக்னி, வாயு, யமன் நிருதி வருணன் இவர்களுடைய அதிகாரங்களையும் வரம்பெற்ற மதத்தினால் தான் சக்தனாய் இருந்து கொண்டு ஏற்றான்.

ப்ருஹஸ்பதி முகா : ஸேந்த்ரா : ஸர்வே திவௌகஸ : |
மனுஷ்யா இவ பூலோகசரா ஜக்முச் சதுர்முகம் || (3)

பரஹ்மாணம் ச புரஸ்க்ருத்ய ஹரீசௌ சரணம் யயு: |
மஹிஷஸீர வ்ருத்தாந்தம் தமயோஸ்தே ஸம்ன்யவேதயன் || (4)

இந்திரனுடன் பிரஹஸ்பதி முதலிய வருந்திய எல்லா தேவரும் மனுஷ்யர்போல் பூவுலகில் திரிபவராய் பிரம்மதேவனை அடைந்தனர். பிரம்மாவை முன்னிட்டுக்கொண்டு சிவனையும் விஷ்ணுவையும் சரணடைந்தனர். . அவ்விருவர்களிடமும் அவர்கள் மஹிஷாஸீரனுடைய விருத்தாந்தங்களை தேரிவித்தனர்.

விதினா ச ஹரீசாப்யாம் ஸஹிதா பலபிந்முகா: |
க்ருத்வா யோதன மத்யுக்ரம் தாருணம் தோமஹர்ஷணம் || (5)

மஹிஷாஸீர பக்னாஸ்தே பபூவ: வித்ருதா சிச: |
வரமத்தம் ஹி மஹிஷம் ஜேதும் க: ப்ரபவவேத் யுதி || (6)

பிரமனுடனும் விஷ்ணு ருத்ரன் சேர்ந்த இந்திரனாதியான தேவர்கள் பயங்கரமான ரோமம் சிலிர்க்குமு உக்ரமான சண்டைசெய்த மஹிஷனால் மடக்கப்பட்டவர்களாய் திசைகள் தோறும் ஓடினர். வர பலம் கொண்ட மஹிஷனை யுத்தத்தில் எவர் ஜயிப்பர்?

★ ''ஸ்ரீ தசமகா வித்யா'' : கவி-நியாய மீமாம்ஸ சிரோமணி திருவெண்காடு **T.K.** முத்துஸ்வாமி சாஸ்திரிகள்

ப்ரஹ்மேசேனாச்யுதா தேவா: புனரேவே சஸங்பத:|
மஹிஷஸ்ய வினாசார்தம் மந்த்தயாம்சக்ரிரே ரஹ:|| (7)

பராம்பா வரணாம்போஜ ஸ்மரணேன வினா ஸீரா:|
உபாயம் நஹி பச்யாமி ம்ஹத்யாம் புனராபதி || (8)

பதமின்யாது வினாதைத்யோ ஹ்யவத்யொ விதிவாக்யத: |
தஸ்யாபிஹனனே சக்தா காமின்யபி ந த்ருச்யதே : || (9)

பராசக்த்யா சக்தயோஹி தயா 1மாஸீ ஸமர்பிதா: |
தாபிர் வயம் சக்திமந்த : ப்ரவ்ருத்தா:ஸ்வீயக்ர்மணி || (10)

அஸ்மாகம் யதி சக்தியம்சை: நிர்மிதா காமினீ கவேத்|
கா்சித் தயா பவேத் வத்ய: மஹிஷோ வரதர்பித: || (11)

இத்யுவாச மஹாவிஷ்ணு: ஸம்சிந்த்ய ஸஹஸா வச: |
ஆஸந் தேவா ஸ்ததா த்ருப்தா : தச்சாபி மேனிரே || (12)

பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலிய தேவர்கள் மீண்டும் கூடி மஹிஷனைக் கொல்ல ரகஸியமாய் மந்திராலோசனை செய்தனர். தேவர்களோ ! பராசக்தியின் திருவடித் தாமரையை நினைப்பதைத் தவிர பெரும் ஆபத்தில் வேறு உபாயம் ஒன்றும் தெரியவில்லை. பிரம்மாவின் வரத்தால் ஒரு அழகிய பெண்ணைத் தவிர அசுரன் மற்றவரால் இறக்கமாட்டான் . அவனைக் கொல்லும் சக்தி படைத்த பெண்ணும் நமக்குத் தேரியவில்லை. அந்தப் பராசக்தியினால் பல சக்திளால் நாமும் திறமையுள்ளவர்களாய் நம் காரியங்களில் ஈடுபடுகின்றோம். அந்த நம் சக்திகளின் அம்சங்களினால் ஒரு பெண் சிருஷ்டிக்கபடுவாளானால் அந்தப் பெண்ணால் , வரத்தினால் அகந்தை கொண்ட மஹிஷன் கொல்லப்படுவான்" என்று யோசித்த மஹாவிஷ்ணு கூறினார் . தேவர்களும் திருப்தியடைந்தனர். அதுவே பொருத்தம் என்றும் நினைத்தனர்.

பக்தயா பரமயாயுக்தா: ஏகாக்ரமனஸ : ஸீரா :|
புவநேசீம் ஜகத்தாத்ரீம் ஸ்முபசக்ரிரே|| (13)

புவனேச்யாம் ப்ஸன்னாயாம் கிமனாப்ய மிஹாமரை:|
தத்க்ஷணாத் ப்ரஹ்மணோ வக்ராத் ஜ்யோதி ராவிரபூக் மஹத்|| (14)

மனோஹரம் ச ஸந்த்யாப்ர பாடலத்யுதி ஸமத்யுதி|
சங்கஸ்ய தனோர் ஜாதம் தேஜி : ச்வேதம் சுபாக்ருதி|| (15)

விஷ்ணோ : சரீராத் ஸீமஹத் நீலரத்ன ஸமத்யு |
இந்த்ரஸ்யாபி தனோர் ஜாதம் சித்ரவர்ணம் ச பாஸீரம் || (16)

குபேர யம வன்ஹயாதி சரீரேப்ய : ததஸ்தத: நி|
தத்தத்தேஹ த்யுதிஸமான்யாஸன் தேஜாம்ஸி ததத்க்ஷணாத்|| (17)

ஏகத்வம் ப்ராப்ய வை தானி தேஜாம்ஸி ஸ்வர்கவாஸினாம் |
அதிலாவண்ய ஸம்பன்ன காமினீ ரூபதாம் தது: || (18)

ஒன்றிய மனத்தினராகிய தேவர்கள் மிகவும் பக்தி கொண்டவர்களாய் ஜகன் மாதாவான புவனேச்வரியைத் துதிக்க ஆரம்பித்தனர். புவனேச்வரீ திருப்தியடைந்து விட்டால் தேவர்களுக்குக் கிடைக்கதென்ன? அந்நேரத்தில் பிரம்மனுடைய முகத்தினின்றும் அழகியதும் , அந்திவானம் போன்ற சிவந்ததும் இனியதுமாகிய ஓர் பெரும் ஒளி எழுந்தது. சங்கருடைய உடலிலிருந்து அழகிய வெண்மையான ஒளியும் , விஷ்ணு சரீரத்தினின்று நிலமணி போன்ற வர்ணமுடைய ஒளியும், குபேரன் , யமன் , அக்னி இவர்கள் சரீரத்தினின்று அவர்களுடைய உடலின் நிறத்துக்கொத்த வாறும் ஒளிகள் உண்டாயின. தேவர்களுடைய அவ்வொளிகள் எல்லாம் ஒன்றாகி மிக அழகு நிறைந்த பெண்ணின் உருவத்தை பெற்றன.

ஸாது ஸௌந்தர்ய பாதோதி: தததீ மோஹனாக்ருதிம் |
ஸரங்வதேவசரைரேதம்தா பபூவ வரவர்ணினீ || (19)

எல்லாம் தேவர் உடலினின்றும் வெளிவந்த அந்தப் பெண் மோஹமையடயச் செய்யும் உருவத்தைத் தாங்குகின்றவளாய் ஸௌந்தர்யக் கடலாய் இருந்தாள்.

ஏஷா ஸர்வைர் மஹாலக்ஷ்மீனாம்னா லோககே ப்ரகீத்யதே|
லக்ஷ்மமீகிலசின் ஹாநி தான்யஸ்யாஸ்து மஹாந்தி வை || (20)

ஸர்வாஸாம் தேவதானாம் து த்ருச்யந்தே யேன தேன ஸா|
மஹாலக்ஷ்மீதி மஹிதா தத்தே க்யாதாபிதாம் ஸ்வத:|| (21)

உலகில் இவள் எல்லோராலும் மஹாலக்ஷ்மீ என்று கூறப்படுகின்றாள். லக்ஷ்மி என்றால் அடையாளம். எல்லா தேவர்களுடைய பெரும் அடையாளங்கள் இவளிடம் காணப்படுகின்றதால் இவள் மஹாலக்ஷ்மீ என்ற சிறப்புமிக்க பிரஸித்தமான பெயரைத் தாங்குகின்றாள்.

குணத்ராயவதாம்லோககே ஸர்வேஷாம் து திவௌகஸாம் |
சக்திப்ய : ஸம்ப்ரஜாதத்வாத் த்ரிகுணேதி ச கீயதே || (22)

மாஸ்யாச்வினே க்ருஷ்ண பக்ஷசதுர்தச்யா மியம் புன: |
ஆவிர்பபூவ புரத : தேவானாமிதி கம்யதே || (23)

உலகில் முக்குணமுள்ள எல்லா தேவர்களுடைய சக்திளினின்றும் உண்டான காரணத்தால் இவளை "மஙரகுணா" என்றும் கூறிகின்றனர். புரட்டாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்தசி திதியில் இந்த பராசக்தி தேவர்களுக்கு எதிரில் தோன்றினாள்.



பதினெட்டு கரங்களுடைய பத்மாசன மகாலட்சுமி

அஜாப்யேஷா கருணா்யா ஜாதேவ புவி லக்ஷ்யதே |
நித்யாயா: கில மாயாய: ஜனனம் வித்யதே கதம் || (24)

அசரீராபி தேவ்யோஷா ஸசரீரேவ த்ருச்யதே |
சூலாகனாம் ரக்ஷணார்தாய ஸம்ஹாரா்ய ஸுரத்விஷாம் || (25)

நித்யமாய் உள்ள மாயைக்கு ஜனனம் ஏது? ஆயினும் தேவர்கள் மீதுள்ள கருணையினால் பிறவியற்றவளாயிருந்த போதிலும் பிறவியுள்ளவள்போல் காணப்படுகின்றாள். லோக ரக்ஷணத்திற்காகவும் அசுரர்களைக் கொல்லுவதற்காகவும் சரீரம் இல்லாதவளாயினும் இத்தேவி சரீரம் உள்ளவள் போல் காணப்படுகின்றாள்.

சைவம் தேஜோ முகமபூத் யாம்யேனாஸன் சிரோருஹா: |
வன்ஹேச்ச தேஜஸா ஹ்யாஸன் த்ரீண்யஸ்யா லோசனான்யபி || (26)

ஸந்த்யாயா ஸ்தேஜஸா தீர்கா: ப்ருவ ச்சாபஸமா: சுபா: |
சாந்த்ராம் தேஜ : ஸ்தனயுகம் மத்யம் சைந்த்ரமபூச் சுபம் || (27)

ப்ராஜாபத்யேன தந்தாச்ச கௌபேரேண ச நாஸிகா |
வாயவ்வேயன ச்ருதியுகம் ஸமஜாயத ஸுந்தரம் || (28)

ஓஷ்டௌ குமாராருணயோ: ஸமபூதாம் ச தேஜஸா |
அஷ்டாதசாபி தஸ்யாஸ்து பாஹவ: பரிகாஸமா: || (29)

வைஷ்ணவேணைவ மஹஸா ஜாதக வைரிவதாய து |
வஸூனாம் தேஜஸாங்குல்ய: ததூரு வாருணேசன ச || (30)

நித்ம்பஸ் தேஜஸா ப்ருத்வ்யா: ப்ருதுலோதி மசூனாஹர |
ப்ரம்ஹணஸ்தேஜஸா பாதௌ அருணாப்ஜஸமௌ சுபௌ || (31)

இப்பராசக்திக்கு சிவதேஜஸ் முகமாகவும், யமனின் தேஜஸ் சிகையாகவும், அக்னியின் தேஜஸ் மூன்று கண்களாகவும், சந்தியையின் தேஜஸ் நீண்ட அழகிய விற்போன்ற புருவங்களாகவும் சந்திர தேஜஸ் ஸ்தனங்களாகவும், குபேர தேஜஸ் மூக்காகவும், வாயு தேஜஸ் காதுகளாகவும், குமாரன், அருணன் இவர்களுடைய தேஜஸ் உதடுகளாகவும், விஷ்ஸவின் தேஜஸ் தாழ்ப்பாள் போன்ற பருத்த 18 கைகளாகவும், வசுக்களுடையை தேஜஸ் விரல்களாகவும், வருண தேஜஸ் தொடைகளாகவும், பூமியின் தேஜஸ் பின்புறமாகவும், பிரம்மனின் தேஜஸ் சிவந்த தாமரை போன்ற இணையடிகளாகவும் ஆயின.

யஸ்மாதேவம் ஸர்வதேவ தேஜோபிர் புவி நிர்மிதா | (32)
தஸ்மாதேஷா ஸர்வதேவமயீத்யேவா பிதீயதே ||

உலகில் எல்லா தேவர்களுடைய தேஜஸ்களால் இவள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதால் ''ஸர்வ தேவமயீ'' என்று கூறப்படுகின்றாள்.

ஏதாம் விலோக்ய முதிதா: சங்கராத்யா: ஸுரேச்வரா: |
ஆயுதானி ததுஸ்தஸ்யை மஹிஷஸ்ய வதார்தின: || (33)

பினாகபாணி: பரததௌ சூலம் சக்ரம் ச சார்ங்கப்ருத் |
வஹ்னிப்ரசேதஸௌ சக்திசங்கௌ தததுருத்தமௌ || (34)

இந்த்ரோ வஜ்ரம், தனுர்வாயு: கண்டாமைராவதோ கஜ: |
பாசம் ச நிருருதி: தண்டம் யமோ ப்ரம்ஹா கமண்டுலும் || (35)

ப்ரஜாபதிச்சாக்ஷமாலாம் கால: கட்கம் ச சர்ம ச |
விச்வகர்மாது பரசும் ஜலதி: பங்கஜம் சுபம் || (36)

தனாதிப: பானபாத்ரம் பாணம் கந்தவஹஸ் ததா |
ஹிமவான் வாஹனம் ப்ராதாத் ஸிம்ஹம் ஸர்வஸுராக்ருதிம் || (37)

நிஜரச்மீன் த தௌ ஸூர்ய: தத்வபுர் த்யுதிபோஷகான்: |
அன்யே ச வஸ்த்ராபரணஹாராதீன் ப்ரதது: சுபான் || (38)

பூஷணைராயுதைர் திவ்யை: ரச்மிபிச் சாதிபாஸுரா |
சுசுபே ஸா மஹாலக்ஷ்மீ: அஷ்டாதச புஜோஜ்வலா || (39)

இந்த சக்தியைப் பார்த்து சங்கரர் முதலிய தேவர்கள் மஹிஷவதத்தை விரும்பியவர்களாள் அவளிடம் ஆயுதங்களை அளித்தனர். சிவன் சூலத்தையும், விஷ்ணு சக்ரத்தையும், அக்னியும் வருணனும் சக்தியையும், இந்திரன் வஜ்ரத்தையும், வாயு வில்லையும், ஐராவதம் மணியையும், நிருநிருதி பாசத்தையும், யமன் தண்டத்தையும், பிரம்மா கமண்டுலுவையும், காலன் கத்தி கேடயம் இவைகளையும், ஸாகரம் தாமரை மலரையும், குபேரன் பான பாத்திரத்தையும், வாயு பாணத்தையும், ஹிமவான் ஸர்வ தேவாக்ருதியான ஸிம்ஹ வாஹனத்தையும், சூரியன் தேவியின் உடலிலுள்ள ஒளி, சுடர் விட தன் கிரணங்களையும், மற்றையோர் வஸ்திரம் ஆபரணம் ஹாரம் முதலியவற்றையும் கொடுத்தனர். ஆபரணங்களினாலும் திவ்யாயுதங்களாலும் ஒளியினாலும் 18 கைகள் கொண்ட அந்த மஹாலக்ஷ்மீ மிகவும் பிரகாசித்தாள்.

(பின்னர் மகிஷாசுர சம்ஹாரம் செய்து எல்லோரையும் ரட்சிக்கின்றாள்)

அஷ்ட லட்சுமிகளின் உண்மைப் பொருள்

(தத்துவம்)

தென்னிந்திய மரபில் அனைத்துப் பெரிய தெய்வங்களும் எண்பேர் உருவம் கொண்டு அன்பர்களுக்கு அருள்பாலிப்பதாகப் பூஜாபத்தி நூல்கள் கூறுகின்றன. இந்த எட்டு உருவங்களையும் அஷ்ட மூர்த்தங்கள் என்றழைக்கின்றனர்.

சிவபெருமான் நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டு வடிவம் கொண்டு அருள்பாலிப்பதாகச் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. மகாவிஷ்ணு எட்டுவடிவம் கொண்டு அருள் பாலிப்பதை வைணவ பூஜாபத்தி நூல்கள் குறிக்கின்றன.

முருகன், ஜயந்தன், அக்னிசிகன், கிருத்திகாபுத்ரன், பூதபதி, சேனானி, குகன் ஹேமசூலன் விசாலாட்சன் என்ற எண்வடிவங்களையும் விநாயகர், விசாலாட்சர், விசுவரூபர், அட்சயர், மதவிப்பிரமர், உன்மத்தர், லளிதர், பீமர், தீக்ஷணதம்ஷ்டரர் என்ற எட்டுவடிவங்களையும் கொண்டு அருள்பாலிப்பதாகப் பூஜாபத்ததி நூல்கள் குறிக்கின்றன.

இதுபோன்றே மகாலட்சுமியும் எட்டுவடிவங்களைத் தாங்கி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். இந்த வடிவங்கள் முறையே தனலட்சுமி, தான்யலட்சுமி, தைர்ய லட்சுமி, விஜயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலட்சுமி, வித்யாலட்சுமி என்று அழைக்கப்படுகின்றனர். இந்த அஷ்டலட்சுமிகளின் வடிவங்களை ஒரு சேர அமைத்து வழிபடும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது.

திருமகள் குபேரனோடு தொடர்புடைய எட்டு கருவூலங்களுக்கு தலைமைத் தெய்வமாக விளங்குகிறாள் என்று மார்க்கண்டேய புராணம் கூறுகிறது. இந்த எட்டு கருவூலங்களையும் எட்டு திருவுருவங்களுடன் அவள் காக்கிறாள். இந்த எட்டு உருவங்களே அஷ்டலட்சுமிகள் என்று போற்றப்படுகின்றன.

எவர், செல்வம், ஞானம், உணவு, மனவுறுதி, புகழ், வீரம், நல்ல புதல்வர்கள், விரும்பியதை விரைவாக முடிக்கும் ஆற்றல் ஆகிய எட்டையும் பெற்றிருக்கின்றாரோ அவரே மிகுந்த மகிழ்ச்சியுடன் குறைவில்லாமல் வாழ்பவராவார். இந்த எட்டே அஷ்டஐஸ்வர்யம் என்று போற்றப்படுகிறது. இவற்றை அன்பர்களுக்கு அருள்வதற்காகத் திருமகள் எண்வடிவம் கொண்டு அருள்புரிகிறாள். இந்த எட்டு திருவுருவங்களையும் சேர்த்து அஷ்டலட்சுமிகள் என்று போற்றுகின்றோம்.

பூரணகும்பங்களில் இந்த எட்டு வடிவங்களையும் அமைத்துள்ளனர். இக்குடங்கள் அஷ்டலட்சுமி கடம் என்றழைக்கப்படுகின்றன.

சிவாலயங்களிலுள்ள அம்பிகை சந்நிதியின் மண்டபத் தூண்களில் அஷ்டலட்சுமிகளின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். திருவண்ணாமலை உண்ணாமுலைநாயகி சந்நிதி இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் மற்றும் செட்டிநாட்டிலுள்ள அனேக ஆலயங்களில் உள்ள தூண்களில் அஷ்டலட்சுமி வடிவங்கள் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளன.

சிவபெருமான் வீதிகளில் பவனிவரும் போது அஷ்டலட்சுமிகள் வெண்கவரி வீசிவருகின்றார். என்று சிவமகாபுராணம் கூறுகிறது. சிவாலயத்தேர்களின் நான்கு வாயிலிலும் வாயிலுக்கு இருவர் வீதம் அஷ்டலட்சுமிகள் கவரி வீசும் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளனர்.

பொருளியல் நூலான அர்த்த சாஸ்திரத்தில் சாணக்கியர் பாக்யலட்சுமி, தான்யலட்சுமி, காருண்யலட்சுமி, ஸத்யலட்சுமி, கீர்த்திலட்சுமி, சௌம்யலட்சுமி, சாம்ராஜ்யலட்சுமி எனும் எட்டு லட்சுமிகளின் பெயர்களைக் குறித்து இவர்கள் எண்மரும் அன்பர்களிடம் நீங்காது நிலை பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

திருமகள் அஷ்டலட்சுமி வடிவில் திருவாரூர், ஸ்ரீ வாஞ்சியம், வைகல், திருக்கோழம்பம், திருநின்றியூர், மாயூரம், திருமருகல், திருப்புகலூர், ஆகிய எட்டு தலங்களில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டாள். இவை அட்டலட்சுமி தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த எட்டு தலங்களிலும் சிவனையும், பரிவாரத்தில் விளங்கும் திருமகளையும் வழிபடுபவர்களுக்கு அஷ்டலட்சுமிகளின் பூரணமான அருள் கிடைக்கும் என்று கூறுகின்றனர்.



உலகில் தேவையான பொருட்களை வாங்கவும், விற்கவும் உபயோகப்படுவது பணமாகும். ஆதியில் அது பொற்காசுகளாகவும் பொற்கட்டிகளாகவும் புழங்கியது. பொற்காசுகளுக்கு தனம் என்பது பெயராயிற்று. நாளடைவில் பொற்கட்டிகளுக்குப் பதில் அதை ஆபரணங்களாகவும், காசுகளாகவும், செய்து வைத்தனர். இவற்றை மகாலட்சுமியாகப் போற்றி வழிபட்டனர். அந்நிலையில் அவள் தனலட்சுமி என்று அழைக்கப்படுகிறாள். அவள் இக்கோலத்தில் தாமரை மீது அமர்ந்து மேற்கரங்களில் தாமரை மலர்களை ஏந்தியுள்ளாள். கீழ்வலது கரத்தால் அபய முத்திரையைக் காட்டி இடது கரத்தால் மடிமீது வைத்துள்ள பணப்பெட்டியை அணைத்தவாறு காட்சியளிக்கிறாள். தனலட்சுமியின் வடிவத்தைப் பொற்காசுகளில் அச்சிடும் வழக்கம் நெடுங்காலமாக உள்ளது.

பணம் காசு நிறைந்தவர்களை தனவந்தர்கள் என்று அழைக்கின்றனர். (இதற்கு தனத்தை வந்திப்பவர்கள் அதாவது பூசிப்பவர்கள் என்பது பொருள்) தனலட்சுமியைச் சுவர்ணலட்சுமி எனவும் அழைக்கின்றனர்.

ஆதியில் வளமைக்குத் தெய்வமாக இருந்த லட்சுமி பின்னாளில் வியாபாரத்திற்கும் வாணிபத்திற்கும் உரிய தெய்வமானாள். இரண்டிலும் நாணயப்புழக்கம் இருப்பதால் வணிகர்கள் தனலட்சுமியைப் பெரிதும் போற்றினர். இவர்கள் இவளை வாணிஜா, வாணிஜ்யஸ்ரீ என்றழைத்தனர். ஆதியில் கிடைத்த தனலட்சுமியின் உருவங்களில் அவளுடன் பணப்பெட்டகம், காசுகள் நிறைந்த கிண்ணம் ஆகியன இடம் பெற்றிருந்தன.

தான்யலட்சுமி



வாழ்க்கை நன்கு நடைபெற செல்வம், வேண்டிருப்பதைப் போலவே உயிர்கள் வாழ்வதற்கு நீரும் உணவும் அவசியமாகிறது. உணவு சமைப்பதற்கு ஆதாரமாக இருப்பவை தானியங்களாகும். எனவே தானியங்களையும் மகாலட்சுமியாகவே போற்றுகிறோம். இந்நிலையில் அவள் தான்யலட்சுமி என்று அழைக்கப்படுகிறாள். வீடுகளில் தங்கத்தைப் போலவே தானியமும் பெருகி இருக்க வேண்டும். அறுவடைக்காலங்களில் தானியலட்சுமியை இல்லத்திற்கு வரவேற்கும் வகையில் தானியக் கதிர்களை வீட்டுவாசலில் கட்டிவைக்கின்றனர். கலையழகுடன் கூம்புபோலவும், கூடுபோலவும் கதிர்களைப் பின்னி தொங்கவிடுகின்றனர். தானியங்கள் சேகரித்து வைத்துள்ள இடத்தை லட்சுமிவாசம் என்றழைக்கின்றனர்.

இந்த திருவுருவத்தில் அவள் மேற்கரங்களில் தாமரை மலர்களையும் முன்கரங்களில் அபயவரத முத்திரைகளையும் நெற்கதிர் கரும்பு ஆகியவற்றையும் தாங்கிக் காட்சியளிக்கின்றாள்.

இவள் ஆறுபருவங்களிலும் தானியங்கள் விளைவித்து கொடுப்பதை உணர்த்தும் வகையில் ஆறுகரங்களுடன் திகழ்கிறாள் என்பர்.

தானியங்கள் வளர்வதற்கு ஈரமும் உரமும் அவசியம். அந்த இரண்டுமாக அவள் இருக்கிறாள். இதையொட்டி ஸ்ரீசூக்தத்தில் ஆர்த்ரா (ஈரத்தன்மை உடையவள்) கர்ஷிணி (ஈரமாக உள்ள பசுஞ்சாணியில் உறைபவள்) என்று அழைக்கப்படுகிறாள். பயிர்களுக்கு ஊட்டத்தை தந்து வளத்தைப் பெருக்குவதால் புஷ்டி, வர்த்திகா என்றும் குறிக்கப்படுகிறாள். ஆதியில் அவள் வேளாண்மை செய்யும் வேளாளர்களின் கடவுளாக இருந்தாள். வேளாளர்களைக் காப்பவள் என்று ஸ்ரீசூக்தம் கூறுகிறது. இவள் பயிர்த் தொழிலின் அதிபதியாவாள். இவள் தாவரங்களின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கிறாள். ஸ்ரீசூக்தம் எனும் நூல் லட்சுமியை நெல்லுக்கும் தானியங்களுக்கும் அதிபதியாக இருக்கிறாள் என்பதால் தாண்டூளி, தான்யராஜினி என்று குறிக்கிறது. நெற்கதிர் கட்டுகளுக்கு தாண்டூளி என்பது பெயர்.

ஆதாரம்: - ''ஐஸ்வர்ய மகாலட்சுமி'' - பூசை ஆட்சிலிங்கம்



"ஸ்ரீ மகாலட்சுமி"

BANK OF SOWRASHTIRA

Bombay - 1988

Hg. 4 ft. Kg. 150

Made :-

S. Devasenapathy Sthapathy Sons

Swamimalai.

"கருடன்"

இடம் – பெங்களூர்

உயரம் 2.5 அடி, எடை 85 கிலோ

தயாரித்தவர்கள் :

S. தேவசேனாபதி & சன்ஸ்

சுவாமிமலை

20 ஆம் நூற்றாண்டுச் சிற்பம்.



தைர்யலட்சுமி



மனிதன் உண்பதற்காகவும் பொருளைத் தேடவும், தானியங்களையும் விளைவிக்கிறான். விளைப்பதும் அதைக் காப்பதும் எளிதல்ல. விளையும் பயிரை நோய், விலங்குகள், பறவைகள் முதலியவற்றிடமிருந்து பாதுகாக்க வேண்டும். விளைந்தபின் அவற்றைப் பகைவர்கள் கொள்ளையிட்டுக் கொண்டு போய் விடாமல் காக்க வேண்டும். ஆகவே பயிர்களை பாதுகாக்க வீரமும், மனஉறுதியும் படைத்திருக்க வேண்டும். மன உறுதி அற்றவரால் செல்வத்தைத் தேடவும், காக்கவும் அனுபவிக்கவும் முடியாது.

மன உறுதியே தைர்யம் என்று அழைக்கப்படுகிறது. உறுதியுள்ளவர் மனதில் மகாலட்சுமி தைர்யலட்சுமி என்ற பெயரில் வீற்றிருக்கின்றாள். மன உறுதி படைத்தவன். தனக்கென ஏவலர். காவலர், உடனாளர் முதலியவர்களுடன் சுகமாக வாழ்கிறான். அவனுள்ளத்தில் வீற்றிருக்கும் தைரியலட்சுமியை சாம்ராஜ்ய லட்சுமி என்றும் அழைப்பர். அவள் சிம்மாசனத்தில் அமர்ந்து செங்கோலேந்தியவாறு காட்சியளிக்கின்றாள். மேற்கரங்களில் தாமரை மலர்களைத் தாங்கியுள்ளாள்.

தைர்யமுள்ளவளே மிகப்பெரிய சாம்ராஜ்யங்களைத் தோற்றுவிக்கின்றான். எல்லா லட்சுமிகளிலும் தைர்யலட்சுமியே உயர்ந்தவள். ஒருவருக்கு எந்த லட்சுமியின் அருள் இருந்தாலும், தைர்யலட்சுமியின் அருள் இல்லாவிட்டால் அவருக்கு மற்றவர்களின் அருளால் பயனில்லை. எனவே தைர்யலட்சுமியை ராஜ்யஸ்ரீ என அழைக்கின்றனர். இவளை நீண்ட பட்டாடை கொண்டவளாகச் சித்தரிக்கின்றனர்.

வீரலட்சுமி



மகாலட்சுமி வீரவனிதையாக கோலாசுரனிடம் போரிட்டு அவனை வீழ்த்தும் காட்சியை இங்கே காண்கிறோம். வீரலட்சுமி சிம்மத்தின் மீது வில், வாள் அம்பு, கேடயம் ஏந்திக் காட்சியளிக்கிறாள். இவளை வெற்றித் திருமகள் என்றழைக்கின்றனர்.

தைர்யம் என்பது மனத்தின் உறுதிப்பாடு. அந்த உறுதியினால் கலங்காத மனமும் அளவிலாத வலிமையும் உண்டாகின்றன. அந்த ஆற்றலே வீரமாக வெளிப்படுகின்றன. வீரமுள்ளவர்களின் மனதில் மகாலட்சுமி வீரலட்சுமியாக விளங்குகின்றாள். வீரமுள்ளவனே தனது நாட்டைக்காக்கிறான். அவனுடைய வாளுக்கும் தோளுக்கும் அஞ்சியே பகைவர்கள் அடங்கி ஒழுங்காக நடந்து கொள்கின்றனர். பகைவர் இல்லாமையால் நாட்டில் அன்பும் சமாதானமும் தழைக்கின்றது. வீரமுள்ளவளே உயிர்களுக்குக் காவலாக விளங்குகிறான்.

மாவீரர்களின் தோளிலும் மார்பிலும் அவர்களுடைய வாளிலும் மகாலட்சுமி வீரத்திருமகளாக வீற்றிருக்கிறாள் என்று புராணங்களும் தோத்திர நூல்களும் புகழ்கின்றன. சோழமன்னர்கள் தங்களது புகழை நெடும்பாடலாக ஆலயச் சுவர்களில் கல்வெட்டுக்களாகப் பொறித்து வைத்துள்ளனர். இவை மெய்க்கீர்த்திகள் என்றழைக்கப்படுகின்றன. இவற்றில் இவள் வீரமாது, ஜெயமகள், வெற்றிமகள் எனப்பலவாறு அழைக்கப்படுகிறாள்.

வீரத்தால் விளைவது வெற்றியாகும் வெற்றியை நல்கும் வீரலட்சுமியை வெற்றித்திருமகள் ஜெயலட்சுமி என்றழைக்கிறோம். துர்க்கம் என்பதற்கு கோட்டை என்பது பொருளாகும். உயிர்களுக்கு கோட்டை போல் காவலாக இருப்பதால் அவள் துர்க்காலட்சுமி என்றும் அழைக்கப்படுகிறாள். வட இந்திய மாமன்னர்களாகிய சந்திரகுப்தர் - குமாரதேவி ஆகியோர் வெளியிட்ட நாணயங்களில் வீரலட்சுமி சிங்க வாகனத்தில் விளங்குவதைக் காண்கிறோம்.

சந்தான லட்சுமி



ஒருவன் வீரம் விளைத்து அதிகாரம் செலுத்தித் தன்னைச் சார்ந்தவர்களுடன் தான் சுகமாக வாழ்ந்திருந்தால் மட்டும் போதாது. அவனுடைய வம்சத்தையும் மாடு, மனை, கன்று, காலிகளையும் விருத்தி செய்ய வேண்டும். உலகத்தினை விருத்தி செய்யும் மகாலட்சுமி சந்தானலட்சுமி என்று அழைக்கப்படுகிறாள்.

சந்தானம் என்பதற்குத் தொடர்புபடுத்துதல் என்பது பொருளாகும். உயிர்களைச் செல்வச் செழிப்புடன் தொடர்புகொள்ள வைத்து இன்பம் அடையச் செய்வதால் மகாலட்சுமியைச் சந்தான லட்சுமி என்றழைக்கின்றனர்.

சந்தானலட்சுமி காமன், சாமன் என்னும் இரண்டு குழந்தைகளுடன் காட்சியளிக்கிறாள். காமன் உயிர்களிடத்தில் ஆசையையும் வேட்கையையும் தோற்றுவிக்கிறான். சாமன் அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ளத் துணை செய்கிறான். திருப்பாவையில் ஆண்டாள், காமனையும் சாமனையும் தொழுது தன்னை கண்ணனுடன் கூட்டி வைக்க வேண்டுவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

இரண்டு குழந்தைகளை மடியில் வைத்திருக்கும் கோலத்தில் சந்தானலட்சுமியை அமைத்து வழிபடுகின்றனர். இவளை வணங்குவதால் வம்சவிருத்தி உண்டாகும் என்பது பெரியோர் வாக்கு.

சிலர் இவளுடன் நிற்கும் ஹரீதி எனும் துணைப்பெண் தெய்வம் குழந்தையை ஏந்தியிருப்பதாகக் குறித்துள்ளனர்.

வடமதுரையில் கிடைத்துள்ள குஷாணர் காலத்திய கற்சிலையில் தாமரை மலர் ஏந்தியிருக்கும் லட்சுமியுடன் பழம் ஏந்திய மணிபத்ரர். குழந்தையை வைத்துக் கொண்டுள்ள ஹரீதி எனும் சேடிப்பெண், குபேரன் ஆகியோர் ஒரே பீடத்தில் வடிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ சூக்தத்தில் சிக்லீதர் என்பவர் திருமகளின் மகனாகக் கூறப்பட்டுள்ளார். அவருடன் தன்வீட்டில் லட்சுமியுடன் வசிக்க வேண்டுமென்றும் தண்ணீருடன் உணவுப் பொருள்களையும் நிறைவாக தரவேண்டும் என்றும் வேண்டப்படுகிறது. தமிழில் உள்ள அஷ்டலட்சுமி துதியில் சிக்லீதருக்கும் வணக்கம் சொல்லப்பட்டுள்ளது.

விஜயலட்சுமி



விஜயம் என்பதற்கு நாலாதிசைகளிலும் பயணம் செய்வது என்பது பொருள். வீரப் போரிட்டு வெற்றியை பெறவும், பகைவர்களை அடக்கி வைக்கவும் வீரர்கள், திக்விஜயம் புரிகிறார்கள். ஒருவன் திசையெட்டும் சென்று வீரம் விளைப்பதால் அவனுடைய புகழ் பரவுகிறது. புகழ் ஒன்றே மனிதனின் மரணத்திக்குப் பின்னும் நிலை பெற்றிருக்கிறது. உண்மையில் அதுவே நிலையானது வீரனின் வெற்றி விஜயத்திற்கு முன்பாக லட்சுமி தனது சேனையுடன் செல்கிறாள். அந்த வீரனின் புகழை திசையெங்கும் நிலை பெறச் செய்கிறாள்.

போர் வீரர்கள் மட்டுமின்றி ஆத்மாவை உணர்ந்த ஞானவீரர்களும் பல இடங்களுக்கும் சென்றும் தனது கொள்கைகளை நிலைநாட்டுகின்றனர். அந்த திக்விஜயத்தால் அவர்களுடைய புகழ் உலகில் பரவி நிலைபெற்றிருக்கிறது.

எண்திசை மதிக்கவரும் புகழை உயிர்களுக்கு அளிக்கும் மகாலட்சமி கீர்த்திலட்சுமி, விஜயலட்சுமி என்றழைக்கப்படுகின்றாள். தமிழில் புகழ்மங்கை, இசைமங்கை, எனப்பலவாறு குறிக்கின்றனர். இவள் குதிரைமீது அமர்ந்து பயணம் செய்கிறாள். இவளுக்கு முன்னும் பின்னுமாக அனேக பெண்கள் வெற்றிச் சின்னங்களை ஏந்தியவாறு விருதுகளைக் கூறிக்கொண்டும் இசைக் கருவிகளை முழங்கிக் கொண்டும் செல்கின்றனர். சோழர்கால கல்வெட்டுக்களில் இவள் விஜயமங்கை, புகழ்மாது. திசையனைத்தும் இசை பரப்பும் திருமாது என்று பலவாறு குறிக்கப்பட்டுள்ளாள்.

புகழ் மங்கையான லட்சுமி, குதிரையில் பவனி வருவதால் அஸ்வாருடா, பரிமேல், அழகிய பாவை என்று இலக்கியங்களில் போற்றப்படுகிறாள். பொன்மயமான குதிரை இவளுடனேயே பிறந்ததாகும். விஜயலட்சுமி தேரில் பவனிவருவதாகவும், கூறுகின்றனர். பெரிய ரதங்கள், மகாலட்சுமியின் திருவுருவங்களாகவே போற்றப்படுகின்றன.

வித்யாலட்சுமி



செல்வத்தைச் சேர்ப்பது அதைக் கட்டிக் காப்பது. அதை நல்வழியில் செலவிடுவது யாவற்றிற்கும் அடிப்படையாக இருப்பது அறிவு எனப்படும் ஞானமாகும். இந்த அடிப்படை அறிவாக விளங்கபவள் ஞானலட்சமி, வித்யாலட்சுமி என்று அழைக்கப்படுகிறாள். இவள் ஏடும் எழுத்தாணியும் கொண்டவள். உயிர்களுக்கு அறிவை வழங்கி அவை இன்பத்தில் திளைத்திருக்க அருள்புரிபவள். இவளை ஞானத்திரு மகள் என்றும் போற்றுகின்றனர்.

வைணவமரபில் திருமால் முதலில் எல்லாக் கலைகளையும் திருமகளுக்கே உபதேசித்தார். அவள் வழியாகவே ஞானபரம்பரை தொடர்ந்து வருகிறது. இதன்படி அவளே முதல் ஞான குருவாகத் திகழ் வதைக் காண்கிறோம். இவள் ஞானஸ்ரீ. வித்யாஸ்ரீ என்றும் போற்றப்படுகிறாள்.

வித்தைகளின் முடிவு பிரம்மத்தில் லயித்திருப்பதே என்பதால் வித்யாலட்சுமி பிரம்மஸ்ரீ எனப்பட்டாள். யோகிகளிடையே அவள் பிரம்ம ஸ்ரீயாக விளங்குகிறாள். கல்வியை விரும்புபவர்கள் தசமியன்று பிரம்ம ஸ்ரீயை வெண்தாமரை மலர்களைக் கொண்டு அர்ச்சிக்க வேண்டுமென்று பரமசம்ஹிதா எனும் நூல் கூறுகிறது.

உத்திரமேரூர் சுந்தரவரதராஜர் ஆலயத்திலுள்ள சிற்பத்தில் லட்சுமி பிரம்மஸ்ரீயாக அமைக்கப்பட்டுள்ளாள். இதில் மேலே இரண்டு யானைகள் நீராட்ட அட்சமாலை கமண்டலம் புத்தகம் ஆகியவற்றை ஏந்தி பிரம்மஸ்ரீயாக வித்யாலட்சுமி தாமரை மலரில் அமர்ந்துள்ளாள்.

கஜலட்சுமி



திருமகளின் எட்டாவது வடிவம் கஜலட்சுமி ஆகும். எட்டுதிசைகளுக்கு உரிய யானைகள் நீராட்ட அவள் தாமரை மலரில் வீற்றிருக்கின்றாள். விஷ்ணு புராணம் இவள் கடலிலிருந்து வெளிப்பட்டதும் திசை யானைகள் எண் திசையிலிருந்தும் பொற்குடங்களில் தூயநீரை ஏந்தி வந்து நீராட்டின என்று கூறுகிறது. யானைகள் நீராட்ட நடுவில் வீற்றிருப்பதால் இவளை கஜலட்சுமி என்று அழைக்கின்றனர். நடைமுறையில் இரண்டு யானைகள் நீராட்டுவது போல் அமைத்துள்ளனர்.

இவள் விரும்பியதை விரும்பியவாறு அளிப்பதால் காம்யக்ஷி (காம்யம் விரும்புதல்) என்று அழைக்கப்படுகிறாள். இவளை விளக்கில் நிலைப்படுத்தி வணங்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகின்றது. விளக்கில் திருவாசிக்கு (பிரபைக்கு) நடுவே கஜலட்சுமி வடிவத்தை அமைக்கின்றனர். இந்த விளக்கிற்குக் காமாட்சி விளக்கு என்பது பெயர். விரும்பியதை அளிக்கும் தேவியாக இருப்பதால் வீட்டின் நிலைப் படிகளில் இவளுடைய திருவுருவத்தை அமைக்கின்றனர். இப்படி அமைப்பதின் மூலம் வீட்டின் உரிமையாளர்கள் விரும்பியதை விரும்பியவாறு நிறைவாக அளித்து வீட்டில் அமைதியை நிலவச் செய்கிறாள். இவளைச் சாந்தலட்சுமி, தயாலட்சுமி, சுதந்திரலட்சுமி என்று பலவாறு போற்றுகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சங்க இலக்கியங்களில் கஜலட்சுமியைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

கஜலட்சுமியை மிகப்பழங்காலத்திலிருந்தே போற்றி வழிபட்டு வந்துள்ளனர். கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த (மராட்டிய மாநில பிதல்கோரா குகைக்கோயிலில்) இவளுடைய சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ சூக்தம் அவள் யானைகளின் பிளிறலால் மகிழ்வதாகக் கூறுகிறது. பழங்காசுகளில் அவள் கஜலட்சுமியாக் பொறிக்கப்பட்டுள்ளாள்.

நடைமுறையில் மேற்கரங்களில் தாமரை மலர்களையும் கீழ்க்கரங்களில் அபயவரத முத்திரைகளையும் தாங்கி இருபுறமும் யானைகள் நீராட்டத் தாமரை மலரில் வீற்றிருக்கும் லட்சுமியை கஜலட்சுமி என்று நாம் அழைக்கின்றோம்.

வடநாட்டில் கண்டெடுக்கப்பட்ட சில முத்திரைகளில் இவள்மேற்கரங்களில் தாமரை மலர்களுக்குப் பதிலாக சங்கு, பறவை, ஆகியவற்றை ஏந்தியுள்ளாள். யானைகள் சங்கின் மீதும் பறவையின் மீதும் நீரைப் பொழிகின்றன. (பறவை என்பது மயில் அல்லது கிளியை குறிக்கின்றது) தென்னிந்தியாவில் உள்ள பல ஆலயங்களில் லட்சுமியின் மேற்கரங்களில் உள்ள தாமரை மலர்களில் கிளிகள் வீற்றிருப்பதைக் காண்கிறோம்.

"எழில்மிகு அஷ்டாதசபுஜமகாலட்சுமி துர்க்கை"



இடம் : துர்க்கா ஆலயம் - பெங்களூர் லே அவுட்
3½ அடி உயரம் - 2004. சிங்க வாகனத்துடன்
(நன்றி : படம் உதவி / சிலை ஆக்கம் - சுவாமிமலை T. இராமலிங்கம் ஸ்தபதி - நிர்வாகி
சௌத் இன்டியன் ஆர்ட் சென்டர்)

அன்னைக்குரிய முத்திரைகள், ஆயுதங்கள், வாகனங்கள் (பொது)

(சிவபெருமானின் இடப்பாகத்தே விளங்கும் சக்தியே - மகாகாளி (துர்க்கா), மகாலட்சுமி,
மகா சரசுவதியாக விளங்குவதோடு ஏனைய சக்திஸ்வரூபமாகவும் விளங்குவதால்
இப்பகுதி பொதுவாக அமைந்துள்ளது)

கருவிகளின் அழகு

கருவிகள் ★ (ஆயுதங்கள்) கருவிகளாக இருந்த காலத்திலே காரியப்பாட்டிற்கு வேண்டிய உருவும், தகுதியும் உடையனவாக இருந்தன. அவற்றில் ஆடம்பரமும், அணியழகும் அடி வைக்கத் தொடங்கிய காலத்து எத்தனையோ இழைப்பு வேலைகளும், கொடிக்கருக்கு வேலைகளும், சிற்ப சித்திர வேலைப்பாடுகளும் கலந்துவிட்டன. அதனால் அவை ஆயுதங்களோ? அல்லது அணியா? என்று கூட அறிய முடியாத நிலை நமக்கு ஏற்பட்டது. அவ்வண்ணமே (ஆயுதங்களை) போர்க்கருவிகளை மக்கள் கையாண்ட காலத்துக் கருவிகளாகவே இருந்தன. மன்னர்களும் மக்களும் கையாளுவனவற்றில் சித்திரம் கலந்தன. இறைவன், இறைவி இவர்களின் கரங்களில் இருப்பன என்றும் காட்சிப் பொருள்களாகவே இருப்பதால் அவை இன்றும் அழகுப் பொருள்களாகவே ஆயின.

பலகருவிகள்

கல்லுக்கு உயிர் கொடுத்து, கற்பனைக்கு உறைவிடமாக்கி கலைத் தெய்வத்தின் கருணையினை விளக்கம் பெறச் செய்த பல்லவர்கள், சாளுக்கியர்கள், சோழர்கள், பாண்டியர்கள், சேரர்கள், ஹொய்சாளர்கள், புத்த, சமண காலத்தவர்கள் யாவரும் அமைத்த சிற்பங்கள் அழகின் செறிவாகவே அமைகின்றன எனலாம். அவ்வகையில் சிற்பங்களில் கரங்களில் பல்வேறு முத்திரைகளும் ஆயுதங்களம் (கருவிகளும்) உள்ளன. இதில் தொழிற்கருவிகள், போர்க்கருவிகள், இசைக்கருவிகள், அனுக்கிரக கருவிகள் போன்றவையும் விளங்கம். அவ்வகையில் பல நிலைகளில் விளங்கும் சக்தி தேவியின் கரங்களில் ஒளிவிடுகின்ற முத்திரைகள், ஆயுதங்கள், இசைக்கருவிகளையும் மற்றும் திருமுடி அலங்காரங்கள் ஆசன பேதங்கள், அணிகலன்களையும் இப்பகுதியில் காணலாம்.

சின்முத்திரை (ஞானமுத்திரை)

பெருவிரலானது உள்ளங்கையை விட்டு விலகி முன்பக்கமாக நீண்டு வளைந்து நிற்க, சுட்டு விரலானது கீழ்நோக்கி வளைந்து பெருவிரலின் நுனியைத் தொட்டு நிற்கும்படி விளங்கும். மற்ற நடுவிரலும், அணிவிரலும், சிறு விரலும் அவ்விரண்டு விரல்களையும் விட்டு நீங்கித் தனியே மேல் நோக்கி நிமிர்ந்து விளங்கும். இதனைச் சின்முத்திரை என்றும் ஞானமுத்திரை என்றும் விளக்குவர். மும்மலங்கள் நீங்கி இறைவனோடு சேர்தல் என்பதனை உணர்த்துவதாம்.

அபயகரம்

கையின் சுட்டுவிரல், நடுவிரல், அணிவிரல், சிறுவிரல் ஆகிய நான்கினையும் ஒருசேர அமைத்து, கைக்கும் சமஉயரத்தில் மேல் நோக்கிச் செங்குத்தாக நிறுத்தி, பெருவிரலைச் சுட்டு விரலோடு சேர்த்து மேல் நோக்குமாறு அமைத்துப் பிடிக்கும் கரலட்சணத்திற்கு அபயகரம் என்று பெயர். அதனை அருட்கரம் எனவும் கூறுவர்.

சிற்பங்களில் விளங்கும் ஆயுதங்கள் (தனித்த நிலையில்)

1. பாசம்
2. அங்குசம்
3. தந்தம்
4. வேதாளம்
5. சக்தி
6. அம்பு
7. வில்
8. சக்கரம்
9. கத்தி
10. கேடகம்
11. சம்மட்டி
12. கதை
13. நாகபாசம்
14. சூலம்


1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14


15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29

15. குந்தாலி
16. மழு
17. கொடி
18. தண்டம்
19. கமண்டலம்
20. பரசு
21. கரும்புவில்
22. சங்கம்
23. புஷ்பபாணம்
24. கோடரி
25. ஜபமாலை
26. சாமரம்
27. கட்டுவாங்கம்
28. தீ அகல்
29. வீணை

வரதகரம்

முற்கூறிய அபயகரத்தைக் கீழ்நோக்கியவாறும், உள்ளங்கை வெளி நோக்கியவாறும் அமைத்துக் காட்டினால் அது ''வரதகரம்'' ஆகும். வரதகரம் - கொடுக்கும் (செல்வம்) கரமாகும்.

எழுத்தாணி (எழுதுகோல்)

பனை ஓலையில் எழுத உதவும் கருவி எழுத்தாணி. ஒருபக்கம் ஊசி போன்ற கூர்மையும் மறுபக்கம் கத்தி போன்ற அமைப்பும் உடையது. அல்லது கூர்மை மட்டுமிருக்கும்.

சுவடி (புத்தகம் - ஏடு)

ஆதிகாலத்தில் ஓலைகளிலும், பட்டைகளிலும், துணிகளிலும், பாறைகளிலும் எழுதிவந்தனர். இதில் பனையினது ஓலை எழுதுவதற்கு ஏற்றதாகவும் கொண்டு செல்வதற்கு சுலபமாகவும் இருந்தது. இதனையே தெய்வத்தின் கரங்களில் திகழச் செய்தனர்.

வீணை (வீணா)

இது ஓர் இசைக்கருவி. தளர்ந்த உள்ளங்களுக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. பண்டைய காலங்களில் போர்க்காலங்களில் தளர்ந்த படைவீரர்களுக்கு உணர்ச்சியூட்டப் பயன்பட்டது. அம்பிகையும் (சரசுவதி). தட்சிணாமூர்த்தியும் வீணையினைக் கொண்டு விளங்குவார்கள். வீணையினை சிவனார் கொண்டு விளங்கும்போது வீணாதர தட்சிணாமூர்த்தி என்று வீணையினை முன்னதாக வைத்துப் போற்றுவர்.

ஆதர்சா (கண்ணாடி)

இடக்கரத்தில் வட்டவடிவில் அல்லது செவ்வக வடிவில் அமைவது. மூலத்தானத்தில் உள்ள திருவுருவத்திற்கு நேராக செம்பிலோ அல்லது பித்தளை உலோகத்திலோ பெரிய அளவில் செய்து வைக்கப்பட்டிருக்கும். இது அழகினை எடுத்துக் காட்டுவதால் இதனை மங்களப் பொருள் வரிசையில் வைத்து எண்ணுவர். காலம் என்பதும் ஓர் கண்ணாடி போன்றதாகும்.

அட்சமாலை (ஜபமாலை)

உருத்திராக்க மணிகள் (காய்கள்) ஸ்படிக மணிகள், தாமரைக்காய் மணிகள் இவைகளைக் கோத்து அணிவதும், அல்லது ஜபம் செய்ய கரங்களில் வைத்துக் கொள்வதும் உண்டு. 108 மணிகள், 54 மணிகள் என்ற முறையில் அட்ச மாலைகளை அமைப்பதுண்டு. யோகிகள், தட்சிணாமூர்த்தி, சித்தர்கள், சரசுவதி, பிரமன் முதலானோர் கரங்களில் திகழும். பழமையான திருவுருவங்களில் ஓர் ஆயுதம் போல அமைந்திருந்தது.

பத்மம் (தாமரை)

சிரசில் சகஸ்ரதளமெனும் ஆயிரம் இதழ்த் தாமரை உள்ளது என்று யோகிகள் கூறுவர். தாமரையினை ஞானத்திற்கு ஒப்பிடுவர். இது இறைத் திருமேனிகள் கரங்களிலும் ஆசனமாகவும் அமைந்து விளங்கும். இதில் வெண்தாமரை, செந்தாமரை என்ற இருவகைகள் உண்டு. உத்தமமான பூக்களில் சிறந்தது இதுவேயாகும்.

கண்டா (மணி)

1. மணி, பரநாதத்தை எழுப்புவதால் ஆணவ இருள் அகன்று ஆன்மாக்கள் உய்தி பெறுகின்றன. (படைத்தல்) பூஜா காலங்களில் மணி கொண்டு நிகழ்த்தச் செய்தல் சிறந்தது. 2. போர்க்காலங்களில் மிக உயர் அதிர் ஒலி அலைகளை எழுப்புதலால் எதிரிகளை அழிக்கும் கருவியாக உபயோகப்படுவதாம். (ஒடுக்கல்) 3. காலதத்துவத்தைக் கட்டுப்படுத்தும் அடையாளக் குறியாயயும் பயன்படுகிறது.

★குறிப்பு : முத்திரை ஆயுதங்கள், கரங்கள், அணிகலன்கள் பற்றிய விபரங்களை இவ்வாதீன வெளியீடுகளான - கணபதி, முருகன், தட்சிணாமூர்த்தி - முதற்பாகம், இரண்டாம்பாகம், சோமாஸ்கந்தர், சண்டேசுவரர். மகாசிவசக்தி நூல்களிலும் காணலாம். இந்நூலில் முத்திரை, ஆயுதம், வாகனம் பொதுவாக உள்ளதால் அன்பர்கள் மகாலட்சுக்குரியது மட்டும் நன்கறிந்து தெளிக. இந்நூலில் காணும் வரை கோட்டுப்படம் தியானங்களில் உள்ளதைக் காண்க.

செல்வ நலம் தரும் ஸ்ரீ பெருந்தேவித் தாயார்

11


VYAKHYANA
TANKA
SUCHI
ABHAYA
SUCHI
JNANA
PATAKA
URUHASTHA
GAJA
VISMAYA


AGNI
KATYAVALAMBITA
DANDA
KATAKAMUKHA
SIMHAKARNA.
PUSHPA
VAJRA
GHANTA
LR
PADMA

கர்த்தரி

இது இரும்பினால் ஆக்கப்படுவதாகும். இரு கத்திகளை உடையது போல விளங்கினாலும், இரண்டும் சேர்ந்து உராய்வதால் பொருட்களைத் துண்டித்துவிடும். இதனை வாழ்க்கையின் முடிச்சை வெட்டுவதற்காக இறைவி கொண்டுள்ளாள் என்பது தத்துவம். ஆன்மாக்களின் பாசவலையினை வெட்டி நீக்குதல்.

அங்குசம்

இது இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும், குத்தியடக்கக்கூடிய ஒரு கூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருகப் பெற்றிருக்கும். யானையை அடக்க உதவும் கருவி, அடங்காமல் திரியும் மனத்தினை அடக்கி, அமைதி நெறியில் செல்வதற்காக அமைந்த கருவி.

ஸ்ருக்

வேள்வியின் (யாகம்) போது பயன்படும் கரண்டி போன்று விளங்குவது. இதனைக் கருங்காலி மரத்தால் செய்தல் வேண்டும். காம்பு நீண்டும் வேல் போன்ற அமைப்பில் குழிப்பகுதியும், நுனி சிறுத்தும் உள்ளது. திருக்கோயில்களில் காணலாம். பிரமனின் கரத்தில் எப்போதும் விளங்குவது.

ஸ்ருவம்

இதுவும் யாகம் செய்யும்போது பயன்படுவது. ஸ்ருக் தொடர்ந்தாற்போன்று பயன்படுவது போல இல்லாமல் நீண்ட இடைவெளிவிட்டே இதனைப் பயன்படுத்துவர். இதனைப் பூவரசு மரத்தினால் செய்தல் வேண்டும். ஸ்ருக்கை விடப் பெரியது. அதிகமாக நெய்யை வைத்துக் கொண்டு பூர்ணாகுதி செய்யும்போது ஸ்ருக்குடன் இணைந்து செயல்படும், இதன் முனையில் சிம்மம், ரிஷபம், அன்னம் முதலியவற்றின் தலை உருவங்கள் அமையும்.

பாசம் (கயிறு)

பகைவர்களின் கைகளையும் கால்களையும் கட்டப் பயன்படுவது. ஒன்று, இரண்டு, மூன்று கயிறுகள் சேர்ந்து எளிதில் அவிழ்க்கக்கூடியதாக அமையும். (நார்வகையில் அமைவதும் உண்டு). நாகங்களே கயிறு போன்று பின்னிக் கொண்டு கரங்களில் திகழ்வதும் ஒருமுறை. அதற்கு நாகபாசம் எனப்பெயர்.

திரிசூலம் (சூலம்)

இது மூன்று நுனிகளையுடையது. சிவபெருமானுக்குச் சிறப்பாக உள்ள ஆயுதம். கருவறையிலும் பழைய முறையில் எஃகு இரும்பாற் செய்யப்பெற்றது. நீளமான மரக்கொம்பிற் கோக்கப் பெற்றிருக்கும். பராசக்தி மற்றும் இதர தேவியினரது கரங்களில் திகழும்.

கபாலம்

சிறு சட்டி போன்று (மடக்குபோல) உள்ளங்கையில் காணப்படுவதாகும். சிவன் மற்றும் அம்பிகையின் கரங்களில் திகழ்வது. மண்டை ஓட்டினைக் கபாலமாக் கொள்வதும் உண்டு.

சிந்தா (ஞானம்)

இதனை எரிசுடராயோ அன்றிச் சின்முத்திரையாயோ உருவகப்படுத்தல் மரபு.

தநுசு (வில் - பினாகம் - கரும்புவில்)

இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில் சிலையென்னும் மரம் முதலான வளையக்கூடிய நார் மரத்தால் செய்யப்பெறுவது. இந்த வில்லினது இருதலையிலும் தோல் அல்லது நார்க்கயிற்றால் இயன்று நாண் கட்டப் பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக் கட்டி அதன் நடுவில் அம்பை வைத்து எய்வது வழக்கம். எவ்வளவுக்கெவ்வளவு வில்லின் வலுவும், நாணின் உறுதியும் இபத்து விடுபவன் வன்மையும் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அமோகம் ஆகிய அம்பின் வேகமும் தைக்கும் வன்மையும் மிகம். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம். விடப்படும் அம்புகளின் தலைப்பகுதி சூரியன், சந்திரன், வஜ்ஜிரம், சூலம், சக்தி போன்ற வடிவங்களில் அமையும்,


PADMA
SULA.
JAPAMALA


SARPA

நாகாஸ்திரம், பிரம்மாஸ்திரம் ஆகியன எண்ணிலா சக்தி படைத்தவைகளாம். கரும்பு வில்லாக அமைந்தால் அம்பானது புஷ்பபாணமாக அமையும். இங்கு சரசுவதி தேவியின் கரத்திலும், மகாதிரிபுரசுந்தரி கரத்திலும் (மன்மதனுக்கும் உரியது) விளங்குவது இதுவேயாகும்.

புஷ்பபாணம் (சரம்)

இது கரும்பு வில்லை வளைத்து அதில் வைத்து எரியப்பெறும் கருவி. (பொதுவாக அம்பின் தலைப்பகுதி கூர்மையாக அமையும். நுனி இரும்பினாலும், அடிப்பகுதி கழியிற் செருகியும்வைத்திருப்பர்). தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களாலியன்ற பாணம். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வான். போக நிலையில் மற்ற தெய்வங்களும் தாங்குவதுண்டு.

தண்டம்

இது நீளமான கைத்தடி. மரத்தாலானது. தண்டாயுதபாணி, சண்டேசுவரர் இவர்களின் திருஉருவில் காணலாம். நேர்வழியில் அனைவரும் செல்ல ஒழுங்குபடுத்தும் கருவி. யோகதண்டம் என்பது கரத்தைத் தாங்குவதாகவும், ஜப மாலையை வைத்துக் கொள்ள வசதியாகவும் அமைந்த கவட்டைப் போன்றது.

குண்டிகை (நீர்க்கெண்டி-கமண்டலம்)

நீர் வைத்துக்கொள்ள உதவும் கலம். ஒரு மரத்தின் காயால் இயன்றது. முனிவர்களும், கிரகஸ்தர்களும் இறைவழிபாட்டில் வைத்துக் கொள்வர். தெய்வத் திருவுருவங்களில் அமையும் குண்டிகையானது மேல் வளையமும் மூன்கும் அமைந்திருக்காது. சில திருமேனிகளில் மூக்கு மட்டுமே இருக்கும். இது கும்பத்தின் சாயலாக இருக்கும்.

கும்பம்

பூர்ணகும்பம். நிறைகுடம். இதுவும் பரப்பிரம்மங் காட்டும் அடையாளக் குறி.

லாங்கலா

இது விலங்குகளின் வாலுருவில் தோலாலமைந்த கருவி. சத்தியின் அகடிதகடனா சாமர்த்தியம் என்னும் சிறு பொருளினையும் பேரழிவுப் படையாக்கும் ஆற்றலின் அறிகுறியாக நிற்பது.

சாபம் (வில்)

உபநிடதங்கள் மனதை வில்லாக உருவகிக்கின்றன. எனவே மனத்தை வளைக்கும் ஆற்றல் சக்தியாலேயே விளையும் என்பதைக் காட்டும் அறிகுறியாகும்.

வியன்

இது வடமொழியில் ''விஸ்மயம்'' எனப்படும். ஆகாயத்தை நோக்கிய விரிந்த கரத்தால் குறிக்கப்படும். உலகனைத்தும் அடக்கியும் ஒடுக்கியும் ஆளும் ஆற்றலை இது காட்டும்.

சரம் (சரா-அம்பு)

வில்லின் நாணிலிருந்து செல்லும் கருவியே சரம் (சரா) ஆகும். இதில் பலவகைகள் உண்டு.

சுகம்

கிளி. இது பற்றற்றும்; பற்றுற்றும் உள்ள இருவகை ஆன்மாக்களையும் சுட்டி, ஆன்மகோடிகள் அனைத்தும் இறையாற்றலிற் கட்டுண்டவை எனக் காட்டும்.

முசலா

இது இரும்பினால் அமைந்த உலக்கையாகும். இது மரத்தினால் செய்யப்பட்டு இருபுறத்திலும் இரும்புப் பூண்கள் பொருத்தப்பட்டிருக்கும். இரும்பினால் செய்யப்பட்ட முசலா எத்துணைப் படையையும் விரட்டியடிக்கும் வல்லமையுடையதாம்.


Pasa
Gada
Srnga
Sula
Ankusa



உத்பலா (மலர்)

இது ஆன்மாவைப் பற்றியுள்ள வாசனைகளை (கந்தங்கள்) குறிப்பதாம். பொதுவாக நீலோற்பல மலராய் உருவகம் செய்யப்படும். ஆன்மாக்களின் மலவாசனை நீக்கம் சத்தியின் கரங்களில் உள்ளது என்பதைக் காட்டும்.

வியூகஹக (வளைந்த தடி)

இந்த ஆயுதம் மரத்தினால் ஆன வளைந்த தடி போன்று இருப்பது. இதனை ஒரு பொருளின் மீது வீசினால் அப்பொருளைத் தாக்கி வீழ்த்தி வீசியவர் கைக்கே திரும்ப வந்து சேரும். ஆஸ்திரேலியப் பழங்குடியினர் பயன்படுத்தும் பூமராங் என்ற ஆயுதம் இவ்வகையைச் சார்ந்தது.



கல்பவல்லீ

இலைகளொடும் பூக்களுடனும் கூடிய கொடி. இது தநு, கரண, புவன போகங்களைச் சத்தியின் திருவருளே தரும் என்பதைக் காட்டும் அறிகுறியாம்.

சங்கு

இது விஷ்ணுவுக்குரிய ஆயுதம். இருப்பினும் சரசுவதியானவள் விஷ்ணுவுக்கு உரியவளாவாள். வெற்றியை அறிவிக்கும் கருவி. பகைவர்கள் இதன் ஒலி கேட்டதுமே ஒடுங்கி அடங்கச் செய்யும் அச்சக் கருவியுமாம். இதில் பல வடிவங்கள் உள்ளன.

சக்கரம்

இது திருமாலுக்கு உரிய சிறப்பான கருவி. துர்க்கையினது கரத்திலும் திகழும். இதன் அமைப்பு அனைவருக்கும் தெரிந்ததே. இதில் இருவகையுண்டு. ஒன்று தேருருளைப் போன்றது. மற்றது வளையம் போன்றது. இதனை அழகுப் பொருளாகவும் போர்க்கருவியாகவும் கொள்வர். இதில் சாதாரண நிலை மற்றும் பிரயோக நிலையும் உண்டு.

குடாரம்

வளைகோடரி அல்லது துரட்டி. இது ஓதுவோர் மனத்தில் உள்ள ஐயந்திரிபு ஆம் குற்றங்களை நீக்குதல் சிற்சத்தியின் ஆற்றலே என்பதைக் காட்டும்.

அபசாலா (நீண்ட மரத்தடி - கம்பு)

அபசாலா என்பது நீண்ட மரத்துத் தடியாகும். (சாலா என்பது மிக வயிரம் வாய்ந்த மரம். இமயமலை அடிவாரத்தில் வளர்வது) பகைவர்கள் சுற்றிலும் வளைத்தாலும் அபசாலாவினால் சுழற்றி அவர்களை விரட்டச் செய்யும்.

முயா

இது தார்க்குச்சி போன்றதொரு ஆயுதம். கையில் அடக்கமாக வைத்திருக்கும் தடிமனான குச்சியின் முனைவினைக் கூர்மைப்படுத்தி வைத்துக்கொண்டு போர்க்காலத்திற்கும், நிலம் தோண்டவும் பயன்படுவது.

சக்தியின் வாகனங்கள்

அம்பிகையின் உற்சவக் காலங்களில் மூலப்பிம்பத்திற்குரிய உற்சவத் திருமேனியினை சர்வாபரணங்களால் அலங்கரித்து இப்பெருமாட்டியை சிம்மம், யாளி, கேடகம், சூரியபிறை, சந்திரபிரபை, ரிஷபம், யானை, கற்பக விருட்சம், காமதேனு, பத்மம்ப, குதிரை, கிளி, அன்னம், மயில், பெண்பூதம்,

பர்வதமலை, பல்லக்கு, படிசட்டம், வெள்ளிரதம், தங்கரதம், திருத்தேர் முதலானவற்றில் (வாகனங்களில்) சகலவிதமான வாத்ய கோஷங்களடன் பவனி வருதலை இன்றும் திருக்கோயில்களில் காணலாம்.

வைணவமுறையில் ''கருடசேவை'' என்பது சிறப்பான தரிசனம் என்பதால் கருடன் வாகனம் படங்களும் ''கருடி'' வாகனத்தில் மகாலட்சுமியும் இங்க இடம்பெறுகின்றன. ஹனுமந்த வாகனம் சில ஆலயங்களில் இருப்பதால் அதனையும் இதில் காணலாம். ஹனுமந்த வாகனத்திற்கு விளக்கம் (சிற்ப) இங்கு இடம் பெறவில்லை.



ரிஷப வாகனம்

★ குறிப்பு : சிவமஞ்சரி.- திருமாலீசர், பக்கம் - 922, பூசை, ஆட்சிலிங்கம்.

இடபாருடர் - கருடாருடர் ஒன்றாகக் காட்சி தருதல்

சிவபெருமான் பல ஊர்திகளில் பவனிவந்தாலும் அவருக்கே உரியதாக உள்ளது. வெள்விடை என்கிற காளைவாகனமாகம். அவர் பக்தர்களுக்குக் காட்சி தரும்போதெல்லாம் உமாதேவியுடன் வெள்ளை நிறக் காளைமீது தோன்றி அருள்பாலித்ததாகவே புராணங்கள் கூறுகின்றன. அதையொட்டி அன்பர்கள் சிவாலயத் திருவிழாக்களில் வெள்ளை நிற அல்லது வெள்ளியால் செய்த காளை வாகனத்தின மீது சிவபெருமானை எழுந்தரள வைத்து உலாவரச் செய்து கண்டகளிக்கின்றனர். பெருந்திருவிழாவில் இந்த ரிஷபவாகன சேவை எனப்படும் காட்சி தனியிடம் பெறுகின்றது.

இதனை யொத்ததாக, திருமால் ஆலயத்தில் கொண்டாடப்படும் விழாக்களில் திருமால் கருடவாகனத்தில் பவனி வந்து அன்பர்களுக்கு அருள்பாலிப்பதைக் காண்கிறோம். இதனைக் கருடசேவை என்று சிறப்பாகப் போற்றுகின்றனர்.

பெரும்பாலும் திருமால் ஆலயத்திலும் சிவாலயத்திலும் ஒருசேர விழாக்கள் கொண்டாடப்படுவதில்லை. அபூர்வமாகச் சில தலங்களில் சிவ, விஷ்ணு ஆலயங்களில் ஒரே நேரத்தில் விழாக்கள் கொண்டாடப்படுவதுடன், சிவனை இடப வாகனத்திலும், திருமாலை கருடவாகனத்திலும் எழுந்தருள வைத்து அலங்கரித்து ஒன்றாக நிறுத்தி தீபாராதனைச் செய்கின்றனர். இது சைவ வைணவ ஒற்றுமைக்கு சிறந்த பாலமாக அமைகின்றது.

சென்னையை அடுத்து பொன்னேரியில் இந்த அற்புதவிழா நடைபெறுகிறது. பொன்னேரிக்கு மேற்கிலுள்ள ஆயர்பாடி என்ற இடத்தில் கரிகிருஷ்ணப் பெருமாள் என்கிற திருமால் ஆலயம் அமைந்துள்ளது. கிழக்கில் கும்மங்கலம் (கும்பமுனி மங்கலம்) என்னுமிடத்தில் அகத்தீசுவரர் ஆலயம் உள்ளது.

சித்ரா பௌர்ணமியில் ஆயர்பாடிப் பெருமாள் கருடவாகனத்திலும் கும்பமுனிமங்கலம் அகத்தீசுவரர் இடபவாகனத்திலும் ஊரைவலம் வந்து ஊரின் மையத்திலுள்ள கடைவீதியில் எதிரெதிராக நிற்க இருவருக்கும் ஏககாலத்தில் தீபாராதனை நடைபெறுகிறது.

இவ்வூர்த் தலபுராணத்தின்படி அகத்திய முனிவரும், பரத்து வாசரும் ஒன்றாகத் தவம் செய்தனர். அவர்களுக்குக் காட்சியளிப்பதற்காகச் சிவன் உமாதேவியுடன் இடபவாகனத்திலும் திருமால் கருட வாகனத்திலும் இங்கு தோன்றினர். இரண்டு முனிவர்களும் ஒரே நேரத்தில் சிவனையும் திருமாலையும் தரிசித்து மகிழ்ந்தனர். அதனை நினைவு கூறும் வகையில் இந்த விழா கொண்டாடப்படுகிறது என்று கூறப்படுகிறது. சந்திப்பு உற்சவம் என்ற இந்த விழாவில் ஏராளமான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

சுசீந்திரம் தாணுமாலய சுவாமி ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு பிரதோஷ விழாவிலும் சிறியதாக அமைந்த இடப வாகனத்தில் சிவனும், கருட வாக்னத்தில் திருமாலும் இணைந்து ஆலயப்பிராகாரத்தில் பவ்னி வருகின்றனர். இப்படி இரண்டு மூர்த்திகளும் பிரதோஷ வேளையில் இணைந்து பவனி வருவதை வேறெந்த தவத்திலும் காணமுடியவில்லை.

குமரி மாவட்டத்திலுள்ள திருவிதாங்கோடு என்னும் தலத்தில் பெரிய சிவாலயம் உள்ளது. இதனுள் தெற்கிடம் வடக்கிடம் என்ற இரண்டு பகுதிகள் உள்ளன. வடக்கிடத்தில் சிவபெருமானும் தெற்கிடத்தில் திருமாலும் கோயில் கொண்டுள்ளார். இங்கு மார்கழி மாதத்தில் இரண்டு சந்நிதிகளும் கொடியேற்றள்பட்டு விழா நடைபெறுகிறது. விழாவில் அரியும், அரனும் இரண்டு யானைகளில் ஒன்றாக பிராகாரத்தில் வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இடபம்

(இடப வாகனம் சிவனுக்குரியதும் அம்பிகைக்கு உரியதுமாகும். சிவபெருமானே எல்லாவுமாக விளங்குகின்றார் என்பதால் இப்பகுதியில் இடபவாகன லட்சனம் முன்னதாக அமைகிறது)

1-21/2. இப்பொழுது, இடபத்தினிலக்கணமானது; முறையுடன் நன்கு கூறப்படுகின்றது. இவ்விடபமானது, ஈசனுக்கு எதிர்முகமாக பீடத்திலோ பத்மபீடத்திலோ நிறுவத்தக்கதாம். மேலும், இவ்விடபத்தை விமானத்திலும் மண்டபத்திலும் நான்கு வாயில்களின் மேற்புறத்திலும் அமைக்கவேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் இடபமானது; வாயிலினுயரத்திற்குச் சமவுயரமுடையதானால் சிரேஷ்டமாகும், மூன்று பாகவுயரமுடையதானால் நடுத்தரமாகும். இரண்டு பாகவுயரமுடையதானால் அதமமாகும். இவ்வாறு இடபத்தினுயரம் மூன்றுவிதமாம்.

3-41/2. ஒரு அடி தொடங்கி, ஒவ்வொரு அடி கூட்டுவதனால் ஒன்பது அடிமுடிவாகவுள்ள உயரம்; முறையே அதமம் மத்யமம் உத்தமம் எனப்படும் மூன்றுவகைத்த மூன்றாம் இருபத்தைந்து அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்கலங்கள் கூட்டுவதனால் முப்பத்தொன்று அங்குல முடிவு வரையுள்ள பேதங்களில்; எது சுபமான ஆயாதிகளுக்குப் பொருத்தமானதோ அது ஏற்கத்தக்கதாம்.

5-7. விருஷபத்தின் உற்சவ விக்ரஹத்தின் உயரமானது; பேரத்தினுயரத்திற்குச் சமமானால் சிரேஷ்டமெனவும், காதின் முடிவளவானால் நடுத்தரமெனவும், பாஹுவின் முடிவளவானால் அதமம் எனவும் கூறப்பட்டிருக்கின்றது. அல்லது; பீடத்தின் நீளத்தில் மூன்றுபாகம் கொண்டதாகவோ, பீடத்தினகலத்திற்குச் சமமாகவோ, பீடத்தினகலத்தில் மூன்று பாகமுடையதாகவோ விருஷபத்தினுயரம் இருக்குமானால், இம்மூன்றும் முறையே உத்தம மத்யம அதமமெனப்படும். இந்த இடபத்தின் அளவு, நின்ற நிலையில் பாதம் முதல் உஷ்ணீஷம் முடிய அறியத்தக்கது.

8. இந்த இடபத்தை நின்ற நிலையிலோ படுத்தநிலையிலோ, உலோகத்தினாலாவது சிலையினாலாவது மரத்தினாலாவது சுண்ணாம்பினாலாவது மண்கூட்டத்தினாலாவவது சுக்கானினாலாவது செய்யலாம்.

9. சில்பிசிரேஷ்டன் இதனை கனமாகவோ அவ்வாறல்லாததாகவோ செய்யலாம். இவ்வாறு விருஷபத்தினுயரம் ஐம்பதங்கலமுடையதாம்.

10-12. தலையின் நுனி பாகத்திலிருந்து (கொம்பு நீங்கலாக) கழுத்தின் அக்ரபாகம் முடிவாக பத்து அங்குலங்கள். அதன் கீழே கழுத்தினுயரம், எட்டு அங்குலங்கள், அதன் கீழே துரடையின் முடிவுவரை, பதினாறு அங்கலங்களாம். துடையின் நீளம் ஆறு அங்குலங்களாம். முழங்காலின் உயரம் இரண்டங்குலங்கள், கண்டங்களால் உயரத்தில் துடைக்குச் சமமானதாகும். (அதாவது ஆறு அங்குலவுயரமுடையது). குளம்பினுயரம், இரண்டங்குலமாகும். கழுத்திலிருந்து வால்முடிவுவரை நாற்பதங்குல நீளமாகும்.

13-18. கொம்பின் நீளம் நான்கு அங்குலங்களாம். கொம்பின் அகலம் மூன்று அங்கலங்கள். கொம்புநுனியினகலம், அதனிலெட்டிலொருபாகமாகும். நெற்றியினகலம் ஒன்பதங்குலங்களாம். முகத்தினகலம் ஐந்தங்கலங்கள். முகத்தினுயரமும், அதற்குச் சமமானதே. கண்ணின் நீளம் இரண்டங்குலங்கள். அரையங்கலத்திற்குமேல் அதனுயரமாகும். இருபுறமும் விழியின் நிர்கமம் (வெளிநீளம்) அரையங்குலமாம். இரு கண்களினிடையில் முகத்தின் நீளம் எட்டு அங்கலங்களெனக் கருதப்பட்டிருக்கின்றது. அதனின்றும் பொட்டுக்குழி ஆறு அங்குலங்களெனக் கூறப்படுகின்றது. கொம்புகளின் நடுயிடைவெளி நான்கு அங்கலங்களாம். நெற்றியினுயரமும், அவ்வாறே நேத்திராந்தத்திலிருந்து நேத்திரமூல முடிவுவரையுள்ளயிடை வெளி நான்கு அங்குலங்களாகும். காதின அடிப்பாகம் இரண்டு அங்குலங்களாம். அகலமும் அதற்குச் சமமானதே. நடுவினகலம் நான்கு அங்குலங்கள். நுனியினகலம் ஓரங்குலமாகும். சுற்றளவு அரையங்குலமாம்.

19-23. மூக்கின் நீளம் ஒன்றரையங்குலமெனக் கூறப்பட்டிருக்கின்றது. மூக்கின ஓட்டையின் அகலம் ஒரு அங்குலமாகம். மூக்கின் அக்ரபாகம் ஐந்து அங்குல நீளமுடையதாகும். மேல் உதடு மூன்று அங்குல நீளமுடையது. கீழுதடு மூன்றங்குல நீளமுடையது. நாக்கின் நீள் மூன்றங்கலங்களாம். அதன் அகலம் இரண்டங்குலமாகும். அதன்

கனம் ஓரங்குலமாகம். மேற்கபத்தினகலம் ஐந்தங்கலங்களாகும். அடிக்கழுத்தினகலம் மூன்றங்குலங்கள். பின் கழுத்தின் மூலத்தில் கனம் எட்டு அங்குலங்கள். அக்ர (நுனி) பாகத்தில் ஆறு அங்கலங்கள். தோளில் (கழுத்தில்)திமிலின் அகலம் ஆறு அங்குலங்கள் அதனுயரம் நான்கு அங்கலங்கள். கழுத்திலுள்ள துப்பட்டியின் மூலம் நடுநுனிகளின் அகலம் முறையே, நான்கு மூன்று இரண்டு அங்குலங்களாம்.

24-25. ஆங்கு கழுத்திற்கு முன்பு எட்டு அங்குல கனத்தில் பிம்பத்தைச் செய்யவேண்டும். (இது மாமிசச்சதை). இதனடியினகலம் இரண்டங்குலம். இருதயத்திலிருந்து சந்திவரையில் அதனுயரம், பதினோரங்குலங்கள். பிருதிஷ்டத்தினுயரம் பதினான்கு அங்குலங்கள். பிருஷ்டத்தினகலம் பன்னிரண்டு அங்குலங்கள்.

26-27. பின்புறத்துத் துடைகளின் அடிப்புறத்தினகலம், பத்து அங்குலங்களாகும். நடுவினகலம்,எட்டு அங்குலங்களாம். நுனியினகலம், நான்கு அங்குலங்களாம். துடையின் நீளம், ஐந்து அங்குலங்கள், முழங்காலினுயரம், இரண்டங்குலங்கள். கண்டங்காலின் நீளம், ஐந்து அங்குலங்கள். குளம்பினுயரம், இரண்டங்குலங்கள்.

28-31. முழங்காலின் சுற்றளவு, மூன்றரையங்குலங்களெனக் கூறப்பட்டிருக்கின்றது. குளம்பின் நீளம் இரண்டங்குலங்களாகும். வாலின் அடிப்புறம் இரண்டங்குல அளவுள்ளதாம். பின்புறத்துத் துடைகளிரண்டின் நடுவில், வயிற்றைச் சார்ந்து, அண்டகோசமும் ஆண்குறியுமிருக்க வேண்டும். தோளின் அகலம் ஆறு அங்குலங்கள். அதற்கு கீழுள்ள துடையின் அகலமும், அடிப்பாகத்தில் நான்கு அங்குலங்களெனவும் நுனிபாகத்தில் மூன்றரையங்குலங்களெனவும் கூறப்பட்டிருக்கின்றது. முழங்காலினகலம் மூன்றங்குலங்கள். கண்டங்கலின் அகலமும், அவ்வாறே. (மூன்றங்குலங்கள் அகன்றது அடிப்புறத்தில்). கண்டேங்காலின் நடுப்பாகம், இரண்டரையங்குலங்கள் அகன்றது. அக்குளம்புகளுள்ள நுனிபாகமோ, அதற்குச் சமமானது. (நுனிக்கண்டங்காலினகலம் இரண்டங்குலங்களெனக் கருத்து.) எஞ்சியவற்றை யுக்தியுடனிணைந்ததாகச் செய்ய வேண்டும். இடபத்தை வெண்ணிறத்துடன் சோபிக்கின்றதாக நிறுவவேண்டும்.

32. பரமமங்களமான இந்த விருஷபத்தை; வெண்ணிறங்கொண்டதாகவும்; கொம்புகளில் கருநிறங்கொண்டதாகவும், நான்கு கால்களின் குளம்புகளிலும் வாலின் மயிரிலும் புகைநிறமுடையதாகவும், இரு காதுகளிலும் வெளிர்சென்னிறங்கொண்டதாகவும் அமைக்க வேண்டும்.

33-34. மேலும்; கொம்பைச் சார்ந்த பொட்டுப் பிரதேசத்தில் நன்கு செந்நிறங்கொண்ட சிறந்த மலர் மாலையுடையதாகவும், கழுத்தில் ருத்ராக்ஷங்களாலாகிய மாலைகளையுடையதாகவும் புரசம்பூக்களாலாகிய மாலைகளையுடையதாகவும், முதுகின்மேல் விரித்த புலித்தோலினாலழகியதாகவும் செய்ய வேண்டும், வண்டுகளும் பன்றிகளும் திகழும் நெற்றிப்பட்டத்தில் பிரகாசிக்கும் இலை கொடிகள் போன்ற பல ரத்தினங்களால் சோபிக்கின்றதாகவும்; காதுகளிலும் உடலிலும் இருபுறங்களிலும் சாமரங்களுடன் கூடியதாகவும்; பாதங்களில் தண்டை முதலிய அணிகளுடன் கூடியதாகவும் செய்ய வேண்டும்.

கருடன்

(கருடன் வாகனம், கருடி வாகனம் என்று இருவகை உண்டு. கருடிவாகனம் உள்ள ஆலயத்தையும் காணலாம்)

1. இப்பொழுது பக்ஷியரசனான கருடனின் அளவும் இலக்கணமும் கூறப்படுகின்றது. இந்த கருடவிக்ரஹமானது, மூலபேரத்திற்குச் சமவுயரமுடையதாக இருக்கலாம். அல்லது, முக்கால் பங்கு உயரமுடையதாகவோ அரைப்பங்கு உயரமுடையதாகவோ இருக்கலாம்.

★ ஆதாரம் : தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு - ''ஸ்ரீமானசாரம்'' 62 ஆவது அத்தியாயம். இன்னும் பல சிற்ப நூல்களில் சுருக்கமாக உள்ளன.



படிச்சட்டம்



சிம்ஹவாகனம்

நந்திதேவர் வாகனம்

2. அல்லது; உத்ஸவவிக்ரஹத்ததிற்குச் சமவுயரமுடையதாகவோ அரைப்பங்கு கூடிய உயரமுடையதாகவோ, இரண்டு பங்கு உயரமுடையதாகவோ, மூன்று பங்கு உயரமுடையதாகவோ, மூன்றரைப்பங்கு உயரமுடையதாகவோ, நான்கு பங்கு உயரமுடையதாகவோ இருக்கலாம். (யாளிகள், கருடன், துவார பாலகர்கள் - (ஜயன், விஜயன்), வாசுகி, திருவாட்சியில் தசாவதாரங்கள், சங்கு, சக்கரம், ஸ்ரீதேவி, ஸ்ரீவிஷ்ணு, பூதேவி-அபூர்வமான சிற்பத்தொகுதி)

3. இவ்வாறு கூறப்பட்ட ஒன்பதுவகைத்த உயர அளவும்; முறையே மும்மூன்றும், உத்தம-மத்யம-அதம மென மூன்று பிரிவுகள் கொண்டதாகும். அந்த அந்த பேரங்களின் அளவில் முப்பதாவது அம்சம் தொடங்கி ஒவ்வொரு அம்சமாகக் கூட்டுதலால்;

4. நூற்றுஇருபத்தைந்து அம்சங்கள் முடிவுவரையுள்ள, எந்த அம்சத்தில் சுலபமான ஆயாதிகள் பொருந்துகின்றனவோ; அஃதே ஏற்றமானமாகும். அல்லது அங்குலமானத்தாலும் கருடபிம்பத்தின் உயரத்தைக் கல்பிக்கலாம்.

5. ஒரு அங்குலம் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுவதனால், நூற்று இருபத்திமூன்று அங்குலங்கள் முடிவுவரையுள்ள எந்த அளவையும் ஏற்றதாகக் கொள்ளலாம். இந்த வகையில் அளவிற்கு ஆயாதிகளைச் செய்ய வேண்டியதில்லை. (இருபத்தியெட்டு அங்குலங்கள் தொடங்கி யென்றிருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது).

6. இவ்வாறு; பறவையரசனான கருடனுக்கமைந்துள்ள பீடத்தின் அளவினாலும், கருடனின் உயரத்தை அளக்கலாம். அதாவது; பீடத்தின் அகலத்திற்குச் சமமான உயரமுடையது, அரைப்பங்கு அதிகம் உயரமுடையது, முக்காற்பங்கு அதிகம் உயரமுடையது;

7. இரண்டு மடங்க உயரமுடையது, அதனினும் காற்பங்கு அதிகம் உயரமுடையது, அரைப்பங்கு அதிகம் உயரமுடையது, முக்காற்பங்கு அதிகம் உயரமுடையது, மூன்று மடங்கு உயரமுடையது, அதனினும் காற்பங்கு அதிகம் உயரமுடையது என,

8. இவ்வாறு பீடத்தின் அகலத்தைக்கொண்டு ஏற்படும் கருடனின் உயரம், உன்பதுவகைத்ததாகும். இவைகளில் முறையே உத்தம மத்யம அதமங்களைச் செய்து கொள்ளவேண்டும். பீடத்தின் நீளத்தைக் கொண்டும் கருடவிக்ரஹத்தின் உயரத்தைக் கொள்ளலாம். அதாவது; பீடத்தின் நீளத்திற்குச் சமமான உயரமுடையதாகவோ முக்கால் உயரமுடையதாகவோ, அரைப்பங்கு உயரமுடையதாகவோ,

9. கருடனின் உயரத்தைக் கூறுகின்றனர். இம்மூன்றும் முறையே, உத்தம மத்யம அதமமெனக் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வகைகளில் சுபாயாதிகளைச் செய்யக்கூடாது. அம்சங்களைக் கொண்டு அளவிடும்போழ்தே அவைகளைச் செய்ய வேண்டும்.

10. இந்த கருடவிக்ரஹமானது; நின்றநிலையில் உள்ளதாகவோ, உட்கார்ந்த நிலையிலுள்ளதாகவோ, இங்குமங்கும் செல்லும் இயல்புடையதாகவோ இருக்கலாம். ஆனால் முறைப்படியிருக்கவேண்டும். உச்சித்தலையிலிருந்து பாதம் வரையுள்ள யாதாமொரு அளவு ஏற்கப்பட்டதோ;

11. அந்த அந்த அளவுகொண்டு நிறுவலாமென்று சிலர்; மூலபேரத்தின் வசமாக அளவுகொள்ளலாமெனச் சிலர், ஆகவே, இவ்விரண்டுவிதமும் உத்ஸவவிக்ரத்திலென்றறியவும். இவ்வாறு உத்ஸவவிக்ரஹவிஷயத்தில் அங்குலமானமும், அம்சமானமும் கூறப்பட்டது.

★ ஆதாரம் : ''மானசாரம்'' - நூல், 61 ஆவது அத்தியாயம், த.ச.ம, நூலகம் வெளியீடு - தஞ்சாவூர்



(யாளிகள், கருடன், துவார பாலகர்கள் - (ஜயன், விஜயன்), ஆதிசேஷன், திருவாட்சியில் தசாவதாரங்கள், சங்கு , சக்கரம், ஸ்ரீதேவி, ஸ்ரீவிஷ்ணு, பூதேவி - அபூர்வமான சிற்பத்தொகுதி)

Varadaraja, Locality not known second half of the 19th Century A.D.

★Ref : "Bronzes of South India" - By - P.R. Srinivasan

12. இவ்வாறாகிய அளவை ஏற்று, எவ்வாறு முன்கூறியதுபோலாகுமோ; அவ்வாறே சில்பி சிரேஷ்டன், மூலவிக்ரஹத்தையோ, உத்ஸவவிக்ரஹத்தையோ செய்ய வேண்டும்.

13. எந்த ஆயாதி ஷட்வர்கம் கூறப்பட்டதோ; அதனிலக்கணம் இப்போது கூறப்படுகின்றது. எல்லா வாஹனங்களுடையவம் அந்த ஆயாதிகள் எவ்வாறிருக்க வேண்டுமோ; அம்முறையும் அவ்வாறே கூறப்படுகின்றது.

14. எவ்வாறெனில்; வாகனங்களின் உயரத்தில் முறையே, விருத்தி ஹாநி இவற்றால் ஆயாதிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். கீழ்க்கண்ட முறையில் கருடனையும், அன்னத்தையும், இடபத்தையும், சிங்கத்தையும் அறிந்து கொள்ளவும்.

15. எட்டினாலே பெருக்கப்பட்டு, பன்னிரண்டால் வகுக்கப்பட்டது, ஆயமாகும். ஒன்பதினால் பெருக்கப்பட்டு, பத்தினால் வகுக்கப்பட்டது வ்யயமாகும்.

16. மூன்றினால் பெருக்கப்பட்டு, எட்டினால் வகுக்கப்பட்டது, யோனியாகும். எட்டினால் பெருக்கப்பட்டு, இருபத்தியேழால் வகுக்கப்பட்டது, ருக்ஷமாகும்.

17. ஒன்பதினால் பெருக்கப்பட்டு, ஏழினால் வகுக்கப்பட்டது, வாரமாகும், நான்கினால் பெருக்கப்பட்டு, ஒன்பதினால் வகுக்கப்பட்டது, அம்சமாகும்.

18. அவ்வாறு பெருக்கி, வகுக்கப்பட்டு, அதனின்றும் எஞ்சியதானது, ஆயாதிஷட்வர்க்கமாகும். இவ்வாறு ஆயாதிஷட்வர்க்கமனைத்தையும் செய்விக்க வேண்டும். ஆயம் அதிகமாகவும் வ்யயமற்றதாகவும் இருப்பது உத்தமமாகும். ஆயம் குறைந்து வ்யயம் அதிகமானால், சிலாக்யமல்ல.

19. யோநிகளுள்; த்வஜம், சிங்கம், காளை, யானையென்பன; சுபங்களெனக் கருதப்பட்டனவாம். இவைகளுக்குள்ளேயும்; சிங்கத்திற்கு யானையெனும் யோநியும், யானைக்குச் சிங்கமெனும் யோநியும், அசுபமாகும். ஆகவே இவைகளொன்றுக்கொன்று அதனைத் தவிர்க்க வேண்டும்.

20. அவ்வாறே, நக்ஷத்திரங்களும், விபத்து ப்ரத்யரம் நிதனம் அற்றவைகளாக இருக்க வேண்டும். அவைகளே சுபமாம். தினங்களுள்; சனி, ஞாயிறு, செவ்வாய்களைத் தவிர்க்க வேண்டும். மற்றவைகளே சுபமானவைகளாம்.

21. இவ்வாறு அம்சங்களுள்; திருடன், அதனம், நபும்ஸகன், பிரேஷ்யன் இவைகளை விலக்கிவிட வேண்டும். இம்முறையே ஆயாதிகளைச் செய்ய வேண்டும். இனி அங்கமானம் கூறப்படுகின்றது.

22. கருடன் விஷயத்தில் உத்தமநவதாளம் ஏற்றதாகும். இந்த கருடனின் துங்கத்தில்; கேசாந்தம் நான்கு அங்குலங்களாம். முகம், பன்னிரண்டு அங்குலங்களாம். கழுத்து, நான்கு அங்குலங்களாம். இருதயம் பன்னிரண்டு அங்குலங்களாம். வயிறு, பன்னிரண்டு அங்கலங்களாம். ஆண்குறி முடிய, பன்னிரண்டு அங்குலங்களாம். துடை, இருபத்தினான்கு அங்குலங்களாம். முழங்கால் நான்கு அங்கலங்களாம். கண்டங்கால் இருபத்தினான்கு அங்குலங்களாம். பாதத்தினுயரம், நான்கு அங்குலங்களாம். இம்முறையே நவதாளம் ஏற்றதாகும்.

23. பாததலத்தின் நீளம், பதினைந்து அங்குலங்களாம்.

24. முகத்தின் நீளத்தில் இரண்டு மடங்கு கொண்டவை பாஹுக்கள், முழங்கை, இரண்டங்குல நீளமுடையதாகும். முழங்கைக்குமுன் மணிக்கட்டுவரையுள்ள பிரகோஷ்டத்தின் நீளம், பதினெட்டு அங்குலங்களாம். இவ்வாறு பெரியோரான வித்வான்களால் கூறப்பட்டிருக்கின்றது.



யாளி வாகனம்



மயில் வாகனம்



அன்ன வாகனம்

25. இந்த நவதாளத்தில், அவயவங்களின் அகலம் கூறப்படுகின்றது. கழுத்து எட்டு அங்குலங்கள் அகலமுடையது. இரண்டு பாஹுக்களின் இடையிலுள்ள அகலமானது, இருபது அங்குலங்களாகும். மார்பினகலம், பதினேழு அங்குலங்களாம். வயிற்றினகலம், பன்னிரண்டு அங்குலங்களாம். தொப்புளுக்குக் கீழேயுள்ள அடிவயிற்றினகலமும், பன்னிரண்டு அங்குலங்களேயாகும்.

26. அந்த அடிவயிற்றின் கீழேயுள்ள இடுப்பின், அகலம் பதினேழு அங்கலங்களுடையதாகும். சமவட்டமான துடைகளினகலமானது, அடித்துடையின் பன்னிரண்டு அங்குலங்களாம். முழங்கால், அகலத்தில் எட்டு அங்குலங்களுடையதாகும். கண்டங்காலி னடிப்புறம், அகலத்தில் எட்டு அங்கலங்களுடையதாகும். அவ்வாறே ; கண்டங்காலின் நடுவினகலம், ஆறு அங்குலங்களாகும். குல்பமெனும் நள்கையினகலம், நான்கு அங்குலங்களுடையதாகும்.

27. பாதத்தின் அகலம், ஐந்து அங்குலங்களர்ம். அதன் கட்டைவிரலின் நீளம், மூன்று அங்குலங்களாகும். கட்டைவிரலுக்கு அடுத்த விரலின் நீளமும், அதற்குச் சமமாகவே கூறப்பட்டிருப்பதை ஊகித்துக்கொள்ள வேண்டும். மற்றைய இரண்டு விரல்களும், நகத்தின் மூலத்திற்குச் சமமான நீளமுடையவை. மற்றொன்றாகிய சிறுவிரல்களில் நான்காவதும், அவ்வாறே தனது முன்விரலின் நகமூலத்திற்குச் சமமான நீளமுடையதாம். இவ்வாறாகிய இந்த அளவானது, மனிதனுக்குப் போலும் சில்பி வித்வான்களால் கூறப்பட்டிருக்கின்றது.

அன்னம்

அன்னப்பறவையின் உயரமானது; பிதாமஹனின் உயரத்திற்குச் சமவுயரமுடையதாகவோ அல்லது இரண்டிலொன்று மூன்றிலொன்று பங்கு உயரமுடையதாகவோ கூறப்பட்டிருக்கின்றது. இவை முறையே, உத்தம மத்யம அதமமெனக் கருதப்பட்டிருக்கின்றன. அன்னத்தின் உயரமானது, த்விதாளத்தின் உத்தமமானத்தால் (இருபத்தெட்டு அங்குலங்களால்) பங்குகள் கொண்டதாக ஆகும்.

அன்னப்பறவையின் சிரத்தின் உயரம் நான்கு அங்குலங்களாம். கழுத்தினுயரம், எட்டு அங்கலங்களாம். மார்பினுயரம் பதினொரு அங்கலங்களாம். அதன் கீழே துடைகளின் நீளம்;

ஒன்றரை அங்கலமாம். முழங்காலினுயரம், ஓரங்கலமெனக் கூறப்பட்டிருக்கின்றது. கண்டங்காலின் நீளம் துடையினுயரத்திற்குச் சமமானதாம். காலின் பாதத்தினுயரம், ஓரங்குலமாம்.

முகத்தின் நீளம், மூன்று அங்குலங்களாம். தலையின் பின்புறத்தில் இரண்டங்குலங்கள், முகத்தினகலம், நான்கு அங்குலங்கள், அடிக்கழுத்து, பதினோரு அங்குலங்கள்.

கழுத்தினகலம், கீழ்முதல் நுனிவரை முறையே குறைந்திருப்பதாகம். அக்கழுத்து இரண்டு முகங்களுடன் கூடியதாகும். வயிற்றினகலம், எட்டு அங்கலங்களாம். மார்பின் பிரதேசம், அதற்குச் சமமாகும்.

அதற்குமேலே, புச்சத்தின் (வாலின்) மூலம் முதல் நீளம்; பதினாறு அங்குலங்களாம். கண்ணினகலம், ஐந்தங்குலங்கள், இறக்கையின் நீளம், எட்டு அங்குலங்களாம்.

இறக்கைகளின் அகலம், இரண்டு அங்குலங்களாம். நுனியினகலம், ஒரு அங்குலமாகும். அதன் கனம் ஓரங்குலமாகும். பாஹுவின் நீளம், எட்டு அங்குலங்களாம்.

முழங்கை, ஓரங்குலமாகும், கரங்களின் முன் நீளம், ஆறு அங்குலங்களாகம். பறவையின் கரங்கள் இரண்டும், இறக்கையினுள்ளே நுழைந்தவைகளாகவும், கலப்பை வடிவம் கொண்டவைகளாகவும் இருப்பன.

★ குறிப்பு : இந்த கருடவாகன லட்சணம் 61ஆவது அத்தியாயத்தில் 28ஆவது சுலோகம் முதல் 57 சுலோகம் முடிய மூலகிரந்தம் தெளிவுபடாததாக உள்ளமையால் இதற்குமேல் மொழிபெயர்க்கப்படவில்லை என்று ஷ தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டில் காட்டப்பட்டுள்ளது.



பெரிய திருவடி
எனப்படும் கருடன்

நாச்சியார் கோவில் சீனிவாசப் பெருமாள்
கோயிலில் நடந்த கல்கருட சேவைத்
திருவிழாவில் கல்கருடன் சந்நிதியிலிருந்து
மண்டபத்திற்கு எழுந்தருளுதல்.

★ ஆதாரம்: ''ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்'' ஹம்ஸலக்ஷணமெனும் அறுபதாவது அத்தியாயம் தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு

அடித்துடையின் அகலம், இரண்டரை அங்குலங்களாம். இத்துடையினடிபாகம், நன்கு வட்டவடிவமாயிருப்பதாகும். அத்துடைகளின் நுனிபாகத்தினகலம், ஒன்றரையங்குலமாகும். முழங்காலின் அகலம், கால் அங்குலமாகம். (ஒன்றேகால் அங்குலமாம்)

கண்டங்காலின் அகலம், ஓரங்குலமாகும், அடித்தலத்தின் அகலம். இரண்டு அங்குலங்களாம். முன் பாகத்திலுள்ள நடுவிரலின் நீளம், நான்கு அங்குலங்களாம்.

அதன் பக்கத்திலுள்ள விரல்களிரண்டும், இரண்டங்குல நீளமுடையவைகளாம். காலின் பின்புறத்திலுள்ள மூலாங்குலத்தின் (ஆதாரவிரலின்) நீளம். இரண்டங்குலங்களெனக் கூறப்படுகின்றது.

முன்னேயுள்ள நடுவிரலின் அகலம், ஓரங்குலமாகும். பின்புறமுள்ள விரலின் (ஆதாரவிரலின்) முடிச்சுடன் கூடிய அகலம், ஒன்றரை அங்குலமாகும். மற்ற விரல்களோ, முக்காலங்குலம் அகலமுடையவை.

வாயின் நீளம், மூன்றங்குலங்களாம். அதனகலம், ஓரங்குலமாகம். கண்ணின் நீளம், அரையங்கலமாகும். அகலத்தை யுக்தியுடன் இணைக்க வேண்டும்.

16. முகத்தின் நீளத்தில் அதன் நடுபாகத்தில், அறிஞன் கண்களைச் செய்யவேண்டும். கர்ணசூத்திரம் இரண்டு யவையளவும், அதற்கு அடுத்தாற்போல கண்ணின் நீளமும் இருக்கவேண்டும். (கண்ணின் நீளத்திற்கு அடுத்தாற்போல, இரண்டு யவையளவு கண்ட சூத்ரம் இருக்க வேண்டும்)

தலைக்குமேலே, கொண்டையின் உயரம்; இரண்டு அங்குலங்களாம். அதன் கனம் ஓரங்கலமாம். அதன் நீளம், ஆறு அங்குலங்களாகும். இக்கொண்டை சிரத்தின் பின்புற முடிவு முடிய உள்ளதாகும்.

இக்கொண்டையின் அகலம், நான்கு அங்குலங்களாகும். எஞ்சியவற்றை யுக்தியுடன் இணைக்க வேண்டும். இந்த அன்னப்பறவையின், முழுவுடலும் வெண்ணிறமுடையதாகவும்; இரு பாதங்களும் செந்நிறமுடையவைகளாகவும்; இருக்க வேண்டும்.

அதன் மூக்கு தங்கநிறம் கொண்டதாகும். இவ்வாறு பிரமனின் வாகனத்தைச் செய்ய வேண்டும். எல்லாவிதமான மூர்த்திகளுக்கும், ஊஞ்சல் வாஹனத்தையும் செய்யலாம்.

இவ்வாறு, அன்னப்பறவையானது; புச்சத்தில் இறக்கைகளுடன் கூடியதாகவும், பின்புறக் கழுத்தில் இலைபோன்ற கொண்டையுடன் கூடியதாகவும், தொங்கும் வயிற்றில் பல வண்ணங்கொண்ட இறகுகளுடன் கூடியதாகவும், இருக்க வேண்டும். இவ்வாறு அணிகளுடன் கூடிய அன்னத்தை அழகியதாகச் செய்யவேண்டும்.

தேவர்களுடையவும், அந்தணர்களுடையவும், அரசர்களுடையவும் பங்களாவில்; மேலேயுள்ள பிரஸ்தாதேசத்திலும், விட்டங்களிலும், இல்லங்களின் கழுத்துப்பிரதேசத்தில் நாற்புறமும்; பஞ்சரங்களுடனும் கூண்டுகளுடனும், வரிசையான அன்னங்களாகிய அணியை, யுக்தியுடன் செய்யவேண்டும்.

சிங்கம்

1-2. ஸிம்ஹம் என்பது தேவர்களுக்கு வாகனமாயிருப்பது. ஆகவே அதனிலக்கணம் இப்பொழுது கூறப்படுகின்றது. உச்சித்தலையிலிருந்து நகம் முடிவாக சிங்கத்தின் துங்கம் (உயரம்) இருபத்தைந்து அங்குலங்களாம். நெற்றியின் மேற்புறமான உச்சித்தலை, இரண்டங்குலவுயரமுடையது. முகத்தின் நீளம் ஏழு
அதனின்றும் கால் ஆறு அங்குலவுயரம்.
அங்குலங்கள். மேல் உதடு பத்து அங்குல நீளமுடையது.

3-6. சிங்கத்தின் உதட்டின் முடிவிலிருந்து வாலின் முடிவுவரையுள்ள நீளம், பதினைந்து அங்குலங்கள். பின்
கால் ஐந்து அங்குல நீளமுடையது. இதனை யுக்தியுடன் இணைக்கவேண்டும். கன்னங்களின் முடிவுவரையுள்ள
முகத்தினகலம், ஒன்பது அங்குலங்களாகும். இது ஒரு காதுகளின் மூலத்திலிருந்து
கூறப்பட்டது. முகத்தினகலம் எவ்வளவோ, அதற்குச்சமமானது நெற்றியின் விஸ்தாரம். முகத்தினகலம் ஐந்து
அங்குலங்கள். நெற்றியினுயரம் ஓரங்குலம். புருவத்தினுயரம் அதற்குச் சமமானதாம். கண்விழியினுயரம்



பைராகிமடம்

சரஸ்வதி அலங்காரம்

ஊஞ்சல் ஸேவை

கஜலக்ஷ்மி அலங்காரம்

சந்தான லக்ஷ்மி அலங்காரம்

சேஷவாகனம்

கிளிவாகனம்

கருடஸேவை

பெண்கருடவாஹனம்

ஹனுமந்த வாகனம்

அன்னையாம் மகாலட்சுமி அழகுத் திருக்கோலம்

(சென்னை-71, சௌகார்பேட்டை, முத்தையாமுதலித்தெருவில் உள்ள பைராகிமடம் ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் ஆலய தாயாரின் பலநிலைத் திருக்கோலம்) - நன்றி கோபுர தரிசனம் ஜனவரி - 2006

12A

ஓரங்குலமாகும். மூக்கின் மூலம் ஓரங்குலமாகம். அகலம் அதற்குச் சமமாகும். மூக்கின்புடம் (ஒவ்வொரு பகுதியும்) அரையங்குலமாகும்.

7-8. நேத்திரஸூத்திரத்திற்குக் கீழே இரண்டங்குலங்கள் நீக்கி, முன்கூறப்பட்ட முகத்தின் நீளத்தை ஐந்தங்குலங்கள் செய்யவேண்டும். அந்தபாகத்தினுயரம் அரையங்கலமாகம். இதற்குக் கீழே அரையங்குலத்திற்கப்பால், கீழுதடு ஒரு அங்கலவுயரம் கொண்டதாகும். அக்ஷிஸூத்திரத்திற்கு ஒரு அங்குல முடிவிற்றொடங்கி, மேலுதட்டைக் கல்பிக்க வேண்டும்.

9-11. கன்னம் இரண்டங்குலமுடையதாம். காதின் நீளம் ஓரங்குலமாகும். காதினகலம் அரையங்குலம். காதின் அடிப்புறமும் அதற்குச் சமமானதே. பற்களின் நீளம் ஓரங்குலமாகம். அதனடிப்புறத்தினகலம் அதனிற்பாதியாம். பற்களின் முன்பாதி அரைச்சந்திரனைப் போன்றதாம். இவ்வாறு ஆறு பற்களைச் செய்விக்கவேண்டும். அவ்வாறே புரமென்று கூறப்பட்ட இரத்தம் பீரிடும் ஜன்னலைச் செய்யவேண்டும். நாக்கின் நீளம் மூன்றங்குலங்களாம். அதனகலம் ஓரங்குலமாகும்.

12-13. சிங்கத்தின் நாக்கின் கனம் அரையங்குலமாகும். மூக்கின் கனமும் அதற்குச் சமமானதேயாம். இரு கண்களின் இடைவெளியினகலம் ஓரங்குலமெனக் கூறப்படுகின்றது. சிங்கத்தின் மூக்கின் அடியிலும் முகத்தின் நுனியிலும் காதினடியிலும் கன்னத்திலும் இலைகொடி முதலியவற்றுடன் கூடியதாகச் செய்வது, ஸிம்மவக்திரமெனக் கருதப்பட்டிருக்கின்றது.

14-16. இந்த சிங்கத்தின் முகப்பிரதேசத்தில், அறிஞன் பிரமரத்தை (சுருண்டமயிர்க்கத்தைகளை)ச் செய்யவேண்டும். தோள்களில் ஸ்தனங்களின் பாதிவரையில் தொங்கும் பிடரிமயிர்களால் சூழப்பட்டதாகச் செய்யவேண்டும். மார்பைச் சார்ந்த பரப்பளவு ஒன்பதங்குலங்களெனக் கூறப்பட்டிருக்கின்றது. காலினகலம் மூன்றங்குலங்களாம். அதன் நீளம் ஐந்தங்குலங்கள். பாததலத்தின் அகலம் மூன்றங்குலங்கள். இது நீளத்தில் அரையங்குலம் அதிகமாகம். சிங்கத்தின் நான்கு கால்களையும், புலியின் கால்களைப்போல் வடிவங்கொண்டவைகளாகச் செய்ய வேண்டும்.

17-19. முதுகின் அகலம் பத்து அங்குலங்கள். அதனுயரம் ஆறு அங்குலங்கள். துடையினகலம் ஐந்து அங்குலங்கள். துடையின் நீளம் பத்து அங்குலங்கள். வயிற்றின் அகலம் ஐந்து அங்குலங்கள். அதன் கனமும் அதற்குச் சமமானதே. வாலின் நீளம் ஸிம்மத்தினுயரத்திற்குச் சமமானதாம். அதனகலம் ஓரங்குலமாகும். வால் அடியிலிருந்து நுனி அரையங்கலமாயிருக்க வேண்டும். அடியிலிருந்து முறையே குறைந்திருக்க வேண்டும். வாலின் நுனியில் மயிர்களுடன் கூடியிருக்கவேண்டும். அண்டத்தின் நீளம் மூன்று அங்குலங்களாம்.

20-22. சிங்கத்தன் அண்டகோசத்தின் அடிப்புறத்தின் அகலம் ஓரங்குலமாகம். நுனியினகலம் மூன்றங்குலங்களாம். ஆண்குறியின் நீளம் மூன்றங்குலங்களாம். அதனகலம் அரை அங்குலமாகும். சிங்கத்தை வெண்ணிறங்கொண்டதாக அமைக்கவேண்டும். பிடரியைச் செந்நிறங்கொண்டதாகச் செய்யவேண்டும். கழுத்தினட்புறத்திலும் வாயிலும் காதினுட்புறத்திலும் கருஞ்சிவப்பு நிறமுடையதாயிருக்க வேண்டும். அதனுடைய நகம் பிறைச்சந்திரன் வடிவங்கொண்ட்தாயிருக்க வேண்டும். பற்களின் வடிவமும் அவ்வாறே.

23. இவ்வாறு சிங்கத்தின் வடிவம் அழகிய முறையில் கூறப்பட்டது. இதனை தேவர்களுக்கு வாகனமாகக கல்பிக்க வேண்டும். முன்பு கூறியதெவ்வாறோ; அவ்வாறே அளவனைத்தும் அறியத்தக்கதாம். இதனைப் படுத்த நிலையிலோ நின்ற நிலையிலோ உட்கார்ந்த நிலையிலோ அமைக்கலாம்.

★ **ஆதாரம்** : ஸ்ரீ மானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில் ஸிம்மலக்ஷணமெனும் அறுபத்திமூன்றாவது அத்தியாயம் - தஞ்சை சரசுவதி மகால்

★ **வெளியீடு** : ''மானசாரம்'' - இந்நூலின் மூலம் கிரந்தலிபியில் உள்ளது. இங்கு விளக்கம் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.

வைணவ ஆலயங்களில் மகாலட்சுமியின் திருப்பெயர்கள்

108 திவ்ய தேசங்களில் மகாலெட்சுமி பல்வேறு நிலைகளில் பல திருப்பெயர்கள் கொண்டு அருள் வழங்குகின்றாள். ஆனால் சிவனாலயங்களில் வாயு மூலையில் திகபம் இவள் கஜலெட்சுமி என்ற திருப்பெயர் மட்டும் நிலவுதலைக் காணலாம். மேலும் கஜலெட்சுமி சுதைச் சிற்பமாகவும், அதை ஒட்டினாற் போன்று சிலா ரூபமாகவும் சில ஆலயங்களில் காணப்படும் சிவன் மற்றும் திருமால் ஆலயங்களில் வாசல் (நிலை) மற்றும் நுழை வாயிலின் மேற்பகுதியில் கஜலெட்சுமி காட்சி கொடுப்பாள். இங்கு விஷ்ணு ஆலயங்களில் இவளது மூலஸ்தான திருமேனிக்கு உரிய திருப்பெயர்கள் இடம் பெறுகின்றன. உற்சவத் திருமேனிக்கு வேறு பலபெயர்கள் விளங்குகின்றன.

சோழ நாட்டுத் திருப்பதிகள்	40
பாண்டி நாட்டுத் திருப்பதிகள்	18
மலை நாட்டுத் திருப்பதிகள்	13
நடு நாட்டுத் திருப்பதிகள்	13
தொண்டை நாட்டுத் திருப்பதிகள்	22
வட நாட்டுத் திருப்பதிகள்	12
திருநாட்டுத் திருப்பதி	01
ஆக திருப்பதிகள்	108

	ஊர்	**மகாலெட்சுமி திருப்பெயர்கள்**
1.	திருவரங்கம்	ஸ்ரீரங்க நாயகி
2.	திரு உறையூர்	கமலவல்லி நாச்சியார்
3.	தஞ்சை மாமணிக்கோயில்	செங்கமல வல்லி
4.	திரு அன்பில்	அழகியவல்லி நாச்சியார்
5.	திருக்கரம்பனூர்	பூர்ணவல்லி
6.	திருவெள்ளறை	செண்பகவல்லி
7.	திருப்புள்ளபூதங்குடி	பொற்றாமரையாள்/ஹேமாம் புஜவல்லி
8.	கோவிலடி	இந்திராதேவி

9.	திரு ஆதனூர்	பார்கவி
10.	தேரழுந்தூர்	செங்கமலவல்லி
11.	திருச்சிறுபுலியூர்	திருமாமகள் நாச்சியார்
12.	திருச்சேறை	ஸார நாயகி/பஞ்ச லட்சுமி
13.	தலைச்சங்காடு	தலைச்சங்க நாச்சியார்
14.	திருக்குடந்தை	கோமளவல்லி/படிதாண்டாப்பத்தினி
15.	திருக்கண்டியூர்	கமலவல்லி நாச்சியார்
16.	ஒப்பிலியப்பன் கோயில்	பூமி நாச்சியார் (சுவாமி சன்னிதியில் வலப்புறம் மண்டியிட்டு இருப்பாள்)
17.	திருக்கண்ணபுரம்	கண்ணபுர நாயகி
18.	திருவாலி - திருநகரி	பூர்ணவல்லி(அம்ருதவல்லி)
19.	திருநாகை	சௌந்தர்ய வல்லி
20.	நாச்சியார்கோவில்	வஞ்சுளவல்லி/ நம்பிக்கை நாச்சியார்
21.	நாதன்கோயில்	செண்பகவல்லி
22.	திருவிந்தளூர்	பரிமளரங்கநாயகி
23.	தில்லை திருச்சித்திரக்கூடம்	புண்டரீக வல்லி
24.	சீர்காழி	லோகநாயகி
25.	திருக்கூடலூர்/ ஆடுதுறை பெருமாள் கோயில்	பத்மாஸனி/புஷ்பவல்லி
26.	திருக்கண்ணங்குடி	லோகநாயகி
27.	திருக்கண்ணமங்கை	ஸ்ரீ அபிடேகவல்லி
28.	கபிஸ்தலம்	ரமாமணி வல்லி
29.	திருவெள்ளியங்குடி	மரகதவல்லி
30.	மணிமாடக் கோவில் (திருநாங்கூர்)	புண்டரிகவல்லித் தாயார்
31.	திருவைகுந்த விண்ணகரம்	வைகுந்த வல்லி
32.	திரு அரிமேய விண்ணகரம்	அம்ருத கடவல்லி
33.	திருத்தேவனார்தொகை	கடல் மகள் நாச்சியார்
34.	திருவண்புருடோத்தமம் (திருநாங்கூர்)	புருஷோத்தம நாயகி
35.	திருப்பொன்செய்கோயில் (திருநாங்கூர்)	அல்லிமாமலர் நாச்சியார்
36.	திருத்தெற்றியம்பலம் (திருநாங்கூர்)	செங்கமல வல்லி
37.	திருமாணிக்கூடம் (திருநாங்கூர்)	திருமாமகள்
38.	திருக்காவாளம்பாடி (திருநாங்கூர்)	மடவரல் மங்கை
39.	திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்)	அலர்மேல் மங்கை
40.	திருப்பார்த்தன்பள்ளி (திருநாங்கூர்)	தாமரை நாயகி

★ ஆதாரம் : ''வைணவ திவ்ய தேசங்கள் 108'' - திரு தேவராஜன் அவர்கள்
T.S.S.M - U.G. 6021, 6022 - Thanjavur (19.1.2006) - படி எடுத்த நாள்



திருவகீந்திரபுரம் - ஸ்ரீ பார்கவித்தாயார் / மகாலட்சுமி
(மூலத்தானம் மற்றும் உற்சவி)

41. திருமாலிருஞ் சோலை	சுந்தரவல்லி
42. திருக்கோஷ்டியூர்	திருமாமகள் நாச்சியார்
43. திருமெய்யம்	உய்யவந்த நாச்சியார்/உஜ்ஜீவனத் தாயார்
44. திருப்புல்லாணீ	கல்யாணவல்லீ
45. திருத்தண்கால் (திருத்தண்காலூர்)	செங்கமத்தாயார்
46. திருமோகூர்	மோகூர் வல்லீ/மோஹனவல்லி
47. திருக்கூடல் (மதுரை)	வகுளவல்லீ நாச்சியார்
48. ஸ்ரீவில்லிபுத்தூர்	ஸ்ரீ ஆண்டாள்
49. ஆழ்வார் திருநகரி	ஆதி நாத வல்லீ
50. திருத்தொலை வல்லி மங்கலம் (இரட்டைத்திருப்பதி)	உபயநாச்சியார்கள்/கருந்தடங்கண்ணி
51. திருவரமங்கை என்னும் வானமாமலை	திருவரமங்கை கத்தாயார்
52. தென்திருப்பேறை	குழைக்காது வல்லீ நாச்சியார்
53. ஸ்ரீவைகுண்டம்	வைகுந்தவல்லீ
54. திருப்புளிங்குடி	மலர்மகள் நாச்சியார்/பூமகள் நாச்சியார்
55. ஸ்ரீவர குணமங்கை	வரகுணவல்லித் தாயார்
56. திருக்குளந்தை (பெருங்குளம்)	குளந்தைவல்லித்தாயார்/கமலாவதி
57. திருக்குறுங்கடி	குறுங்குடிவல்லி நாச்சியார்
58. திருக்கோளூர்	குமுதவல்லி, கோளூர் வல்லி
59. திருவனந்தபுரம்	ஸ்ரீ ஹரிலக்ஷ்மி
60. திருவண்பரிசாரம் (திருப்பதிசாரம்)	கமலவல்லி நாச்சியார்
61. திருக்காட்கரை (த்ரிக்காக்கரா)	பெருஞ்செல்வநாயகி / வாத்ஸல்ய வல்லீ
62. திருமூழிக் களம் (மூழிக்குளம்)	மதுரவேணி நாச்சியார்
63. திருப்புலியூர்	பொற்கொடி நாச்சியார்
64. திருச்செங்குன்றூர்	செங்கமலவல்லி
65. திருநாவாய்	மலர்மங்கை நாச்சியார்
66. திருவல்லவாழ் (திருவல்லா)	செல்வத் திருக்கொழுந்து நாச்சியார்
67. திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)	கமலவல்லி நாச்சியார்
68. திருவாட்டாறு (திருவட்டாறு)	மரகத வல்லி நாச்சியார்
69. திருவித்துவக்கோடு (திருமிட்டக்கோடு)	வித்துவக்கோட்டு வல்லி
70. திருக்கடித்தானம் (திருக்கோடித்தானம்)	கற்பக வல்லி
71. திருவாறன் விளை (ஆரமுளா)	பத்மாஸனி நாச்சியார்
72. திருவயிந்திபரம்	ஹேமாம்புஜ வல்லித் தாயார்
73. திருக்கோவலூர்	பூங்கோவல் நாச்சியார்
74. திருக்கச்சி அத்திகிரி	பொருந்தேவித்தாயார் / மகாதேவி
75. திரு அஷ்டபுஜம்	அலர் மேல் மங்கை / பத்மாஸனி
76. திருத்தண்கா	மரகதவல்லி

77. திருவேளுக்கை	வேளுக்கை வல்லி/அம்ருதவல்லி
78. திருப்பாடகம் (பாண்டவர் தூதர் சன்னிதி)	ருக்மணி, சத்யபாமா
79. திருநீரகம்	நிலமங்கை வல்லி
80. திருநிலாத்திங்கள் துண்டம்	நேர் ஒருவரில்லா வல்லி
81. திருவூரகம் (உலகளந்த பெருமாள் கோயில்)	அமுதவல்லி நாச்சியார்
82. திருவெஃகா	கோமளவல்லி நாச்சியார்
83. திருக்காரகம்	பத்மாமணி நாச்சியார்
84. திருக்கார்வானம்	கமலவல்லி நாச்சியார்
85. திருக்கள்வனூர்	அஞ்சலை நாச்சியார்
86. திருப்பவள வண்ணம்	பவளவல்லி
87. பரமேஸ்வர விண்ணகரம் (வைகுண்ட பெருமாள் சன்னிதி)	வைகுந்த வல்லி
88. திருபுட்குழி	மரகதவல்லி
89. திருநின்றவூர் (தின்னனூர்)	என்னைப் பெற்ற தாயார்
90. திருவள்ளூர் (திருஎவ்வுள்ளூர்)	வசுமதி என்கிற கனவல்லித்தாயார்
91. திருநீர்மலை	அணிமாமலர் மங்கை
92. திருவெடவெந்தை (திருவடந்தை)	கோமளவல்லி நாச்சியார்
93. திருக்கடல் மல்லை (மகாபலிபுரம்)	நிலமங்கைத் தாயார்
94. திருவல்லிக் கேணீ	ஸ்ரீ வேத வல்லித் தாயார்
95. திருக்கடிகை (சோளிங்கிபுரம்)	அம்ருதவல்லி
96. திருவேங்கடம் (திருமலை)	அலர்மேல் மங்கை
97. திருச்சிங்கவேள் குன்றம் என்னும் அஹோபிலம்	அம்ருத வல்லி/செஞ்சுலவல்லி/லட்சுமி பிராட்டியார்
98. திரு அயோத்தி	சீதாப்பிராட்டியார்
99. நைமி சாரண்யம்	ஸ்ரீ ஹரிலெட்சுமி என்கிற புண்டரிகவல்லி
100. சாளக்கிராமம்	ஸ்ரீ தேவி நாச்சியார்
101. திருவதரியாஸ்ரமம் (பத்ரிநாதர்)	அரவிந்த வல்லி
102. திருக்கண்டம் என்னும் கடிநகர்	புண்டரிக வல்லி
103. திருப்பிரிதி	பரிமளவல்லி நாச்சியார்
104. வடமதுரை	சத்யபாமா நாச்சியார்
105. திருத்துவாரகை	கல்யாண நாச்சியார் (லக்ஷ்மி ஸ்ரீ)
106. திருவாய்ப்பாடி (கோகுலம்)	ருக்மணி சத்யபாமா பிராட்டியர்கள்
107. திருப்பாற்கடல்	கடல் மகள் நாச்சியா, பூமா தேவித்தாயார்
108. திருப்பரமபதம் (திரு நாடு, வைகுந்த பரம்)	ஸ்ரீதேவி, பூதேவி, நீளதேவி



சிங்கபுரத்து - ஸ்ரீ அமிர்தவல்லித் தாயார் / மகாலட்சுமி

(மூலத்தானம் மற்றும் உற்சவி)

மகாலட்சுமி விரும்பி விளங்கும் விருட்சங்கள்

(தெய்வீகம், தாவரவியல் மற்றும் மருத்துவப்பார்வையில்)



''பில்வ நிலையாயை நம:'' என்று லக்ஷ்மி அஷ்டோத்திரத்தில் 78வது நாமாவளியாக வருவது அனைவருக்கும் தெரியும். வில்வதளத்தில் ஸ்ரீ லக்ஷ்மி தேவி வாஸம் செய்வதால் தான் இப்படி நாமாவளி வருகிறது. வில்வ தளத்தில் லக்ஷ்மி தேவி வசிப்பதால் வில்வ மரத்திற்கு ஸ்ரீ விருக்ஷம் என்ற பெயர் ஏற்பட்டது. வில்வத்தில் லக்ஷ்மி வாஸம் செய்வதால் அடியார்கள் செல்வங்களையெல்லாம் இறைவன திருவடிகளிலேயே அர்ப்பணித்து விட்டு அவன் திருவருளை மட்டுமே வேண்டுகிற நிலையை 'வில்வ' அர்ச்சனை காட்டுகிறது. வில்வ அர்ச்சனை நமது பாவங்களை போக்கிக் கொள்ள ஒரு முக்கியமான வழிமுறையாகும். வில்வமரம் நம் நாடு முழுவதிலும் குறிப்பாக இமயமலை சரிவிலுள்ள காடுகளில் அதிகமாகக் காணப்படுகிறது. மற்றும் வில்வ மரங்களை அனேகமான சிவன் கோயில்களில் ஸம்ஸ்கிருதத்தில் 'பில்வம்' என்றும், ஆங்கிலத்தில் **"BAEL FRUIT"** என்றும் தமிழில் 'வில்வம்' என்றும் அழைக்கப்படுகிறது.

சிவபெருமானுக்கு முக்கிய பத்ரமாக 'வில்வம்' உபயோகிக்கப்படுகிறது. பல சிவன் கோயில்களில் தல விருட்சமாக வில்வமே உள்ளது.

வில்வ பத்ரத்தில் மூன்றுவிதம்

வில்வத்தின் பெருமை பழைய சாஸ்திரங்களில் விளக்கமாக உள்ளது. மூன்று இலைகள் உள்ள வில்வம் சிவபெருமான் ஏந்தியுள்ள திரிசூலத்தின் வடிவத்தையும் மற்றும் இறைவனின் முக்கண்களையும் காட்டுகிற விதமாக அமைந்துள்ளது. வில்வ தளங்களில் மூன்று விதங்கள் உள்ளன. அவை சில மரங்களில் மூன்று தளங்களாகவும் மற்றும் ஐந்து, ஏழு தளங்களாகவும் அமைந்து மூன்று விதங்களாக உள்ளது. வில்வதளம் சில மரங்களில் வட்டமாகவும், சில மரங்களில் நீண்டும் இருக்கும். வில்வ மரங்களில் ஏழு தளங்களை கொண்டவைகளைப் பார்ப்பது மிக மிக அரிதாகும். (ஒரேயொரு வில்வ தளத்தினால் இறைவனை அர்ச்சித்தாலே நூறாயிரம் தங்கப் பூக்களால் அர்ச்சித்த பலன் உண்டாகும்)

வில்வ பத்ர பூஜா பலன்

வில்வ பத்ரத்தால் ஈசனை அர்ச்சித்து வழிபடுவது நமது பாவங்களை போக்கிக் கொள்ள ஒரு முக்கியமான வழியாகும். ஒரு வில்வ தளத்தை ஈசனுக்கு அர்ச்சிப்பதின் மூலமாக ஸகல பாவங்களும் விலகி நன்மைகள் பல

★ ஆதாரம் : ஆதீன சமய மாத இதழ் ''மெய்கண்டார்'' ஏப்ரல் - 2006 - ''வில்வபத்திரத்தின் பூஜா பலனும் மருத்துவ குணமும்,''.

பெறமுடியும். ஒரேயொரு வில்வதளம் மட்டுமே நூறாயிரம் தங்கப் பூக்களை அர்ச்சித்த பலன் ஏற்படுகிறது. பிரதோஷ காலத்தில் சிவலிங்கத்தை வில்வ பத்ரத்தால் ஸகஸ்ரநாமார்ச்சனை செய்வது மிகவும் விசேஷமான பலன்களைக் கொடுக்கும். எவ்வாறு கணபதிக்கு அருகம்புல்லும், வன்னி பத்ரமமும், முருகனுக்கு வருக்ஷியும், கதிர்பச்சை பத்ரமும், மஹாவிஷ்ணுவுக்கு துளசியும், தாமரையும் தேவிக்கு ஜாதிமுல்லையும், கரவீர பத்ரமும் போல பரமேஸ்வரனுக்கு தும்பை மலரும், மந்தாரை மலரும் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக 'வில்வபத்ரம்' தான் மிகவும் விசேஷமானதாகும். மந்த்ர சாஸ்த்திரப்படி லக்ஷ்மி கணபதி, த்ரைலோக்ய கணபதி, மோஹன கணபதி மற்றும் மஹாலக்ஷ்மி யந்திரங்கள் செய்யும் போது அவற்றை வில்வ மரப்பலகையில் வரைந்து பூஜை செய்வது மிகவும் மஹத்தான பலனைக் கொடுக்கும். அதர்வண வேதத்தில் வில்வத்தைப் பற்றி 108 வில்வ ஸூக்தங்கள் உள்ளன. மஹாசிவராத்திரி அன்று வில்வ பத்ரங்களைக் கொடுத்து திருக்கோயில்களில் வழிபாடு செய்தால் எல்லாத் துன்பங்களும் விலகி அனைத்து நலன்களும் உண்டாகும்.

நியமங்கள்

உடல் சுத்தியோடு, உள்ள சுத்தமும் கொண்டு சிவநாமத்தைச் சொல்லிக்கொண்டு வில்வதளங்களை பூஜைக்காக மட்டும் பறிக்க வேண்டும். தளம் பறிக்கும்போது, ''நமஸ்த்தே பில்வ தரவே'' என்றும் கூறலாம். பூச்சிகள் அரித்த பத்ரம், விலை கொடுத்து வாங்கிய பத்ரம் பூஜைக்கு அவ்வளவு உகந்தவை ஆகா. சிவாலயங்களில் உள்ள மரங்களில் வில்வ தளம் எடுத்தால் அதை வீட்டிற்குச் கொண்டு வந்து பூஜைக்கு பயன்படுத்துவது முறையாகாது.

வில்வ பத்ரத்திற்கு பழமை மற்றும் நிர்மால்ய தோஷம் கிடையாது. வில்வ தளத்தை மாதப்பிறப்பு, அமாவாசை போன்ற தர்பண தினங்கள், சோமவாரம், பௌர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, நவமி போன்ற நாட்களில் எடுக்கக்கூடாது.

வீட்டில் வளர்ப்பதின் பலன்கள்

வில்வ மரங்களை வீட்டுக் கொல்லைகளில் வளர்ப்பது அவ்வளவு விசேஷம் இல்லை. கொல்லை வேலியோரங்களில் வளர்க்கலாம். வாசல் பக்கங்களில் வளர்க்கலாம். வீட்டிலுள்ள வில்வ மரங்களை தினசரி பூஜித்தால் நல்லது. வில்வ மரம் வீட்டில் வளர்ப்பதால் அசுவமேதயாகம் செய்த பலன் கிடைக்கும் எனப் புராணங்கள் கூறுகின்றன. மற்றும் ஆயிரக்கணக்கான நபர்களுக்கு அன்னதானம் செய்த புண்ணியம் கிடைக்கும் எனவும், காசி முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள அனைத்து சிவசேக்ஷத்திரங்களையும் வழிபட்ட பலன் கிடைக்கும் என்றும் கூறுகின்றன.

வில்வக் கன்றுகளை வீட்டிலேயே வளர்த்து அதை மற்றவர்கள் வீட்டிலேயே வளர்ப்பதற்குக் கொடுத்தால் மிகவும் அதிகமான பலன்தரும். அதிலும் நன்றாக வளர்ப்பவர்களாகப் பார்த்து தான் கொடுக்க வேண்டும்.

மருத்துவ குணங்கள்

வைத்திய முறையிலும் சிறந்த மூலிகையாகவும் வில்வம் உபயோகப்படுகிறது. வில்வ மரத்திலுள்ள இலை, பிஞ்சு, காய், பழம், பால், கசிந்துள்ள பிசின், மரப்பட்டை, மரம், வேர் போன்ற அனைத்து பாகங்களும் மருத்துவ குணங்கள் உள்ளவை.

1. வில்வ இலையுடன் ஜீரகம், மிளகு, சுக்கு, சேர்த்து கஷாயம் வைத்து சாப்பிட்டால் குடல் சம்மந்தமான புண்கள் வாந்தி குமட்டல் போன்ற தொல்லைகள் நீங்கும்.

★ மருந்தாகும் மூலிகைகள்: - டாக்டர் இரா. கண்ணன் (வில்வம், நெல்லி, துளசி) இரண்டாம் பகுதி. இவ்விருட்சங்கள் பற்றி இன்னும் பல மருத்துவக் குறிப்புகள் வைத்திய நூல்களில் காணப்படுகின்றன. அவைகள் தனி நூலாக பின்னர் வெளிவரும்.

2. இதன் இலைச்சாறுடன் சேர்த்து மிளகை அரைத்துக் கொடுத்தால் ஜுரம் குறையும்.

3. சற்று கசப்பும், துவர்ப்பும் கொண்ட இதன் இலை வீர்யம் வாய்ந்த கல்பம் தயாரிக்கப் பயன்படுகிறது. வில்வ காயை வெயிலில் உலர்த்தி பின்னர் நெருப்பில் வேகவைத்து கருக்கி, பொடி செய்து உப்பு சேர்த்து பல்பொடியாக உபயோகிக்க பல் ஈறு வீக்கம், பல்ரத்தம், பல்வலி குணமாகும்.

4. இதன் பசுந்தளிர்களை செப்புப் பாத்திரத்தில் ஜலம் விட்டு ஒருநாள் நன்கு ஊறவைத்து அருந்தினால் உடல் வெப்பம், பித்த ரோகங்கள், பெண்களுக்கு ஏற்படும் நோய்கள் குணமாகும்.

5. முற்காலத்தில் யோகிகளும், முனிவர்களும் தினசரி வெறும் வயிற்றில் வில்வ இலைகளை உட்கொண்டு வில்வச் சாற்றை நேரிடையாக நாடி, நரம்புகளில் வியாபிக்கச் செய்து உடல் தளர்ச்சி, நரை, மூப்பு இவைவராமல் இளமையோடு பல ஆண்டு காலம் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

6. வில்வ பழத்தில் அனேக உலோக சத்துக்கள் உள்ளதால் வில்பழம், வில்வ பிசின், மாங்கொட்டை பருப்பு, ஜாதிக்காய், சிறிது ஆபின் சேர்த்து சூரணமாக்கி தினசரி சிறிதளவு சாப்பிட்டு வந்தால் நாள்பட்ட சீதபேதி நீங்கும். இப்படி செய்வது வில்வ பஞ்சகம் என்று பெயர்.

7. வில்வவேரை பொடிசெய்து கஷாயமாக காய்ச்சி தினசரி சாப்பிட்டால் தேஜஸைக் கொடுக்கும்.

8. வில்வ வேர் மற்றும் சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிபத்திரி, ஜீரகம் இவைகளை வறுத்துத் தூளாக்கி தேன் நெய் சேர்த்து லேகியமாகத் தயார் செய்து காலை, மாலை உட்கொண்டால் அஜீரணம், பசியின்மை, வாந்தி, காமாலை போன்றவைகள் நீங்கும்.

வில்வ மரத்தின் உள்ள பகுதிகளை தகுந்த முறையில் பயன்படுத்தி வாழ்வை அனைவரும் வளமையாக மாற்றுங்கள்.

வில்வமரம் காய்க்க ஆரம்பித்த பிறகு தான் தளங்களை எடுத்து அர்ச்சித்தால் விசேஷம்.

பல சிவாலயங்களில் இறைவனுக்கே வில்வவனேஸ்வரர் என்ற பெயர் உள்ளது. திருக்கடவூர் போன்ற தலங்கள் 'வில்வ வனம்' என்று அழைக்கப்படுகிறது.

வில்வத்தின் வேறு பெயர்

கூவிளம், கூவிளை, சிவத்துருமம், நின்மலி, மாலூரம்.

தாவரவியல் பெயர் : Aegle Marmelos, Family Name Rutaceae

பயன்படும் உறுப்பு : இலை, பூ, பிஞ்சு, காய், பேர்

பரவல் எல்லை: இமயமலையின் அடிவாரத்தில் இருந்து ஜீலம், பலுசிஸ்தானம் கீழ்ப்பகுதி வரையிலும், தீபகற்பத்தின் தெற்குப்பகுதியிலும் பரந்து விரிந்து காணப்படுகிறது.

வளரியல்பு : இலையுதிர் மரவகையைச் சேர்ந்தது. கனி தொடர்வன. முட்கள் காணப்படும். 15 மீ வரை உயரும்.

பொதுப் பண்புகள்: இலை கூட்டிலை மூவிலை அல்லது ஐந்து இலை கொண்டது. கூட்டிலையின் சிறிய இலைகள் நீள் வட்டமானது. ஈட்டி வடிவமானது. இலைப் பரப்பு வழவழப்பாக ஒளிரும் தன்மை உடையது. இலையடி ஆப்ப வடிவமானது, அல்லது உருண்டையாக இருக்கும்.

★ குறிப்பு: வில்வத்தின் காய், கனி, இலை, வேர் முதலானவைகளை ஊறுகாய், குடிநீர், தைலம் ஆகிய எந்தவிதமாகிலும் செய்து உட்கொள்ள அது உடலிற்கு அழகைக் கொடுக்கும். மயக்கம், குழறிப் பேசும் தன்மை இவற்றை நீக்கும்.

இலை விளிம்பு இடைவெளிகளில் வெட்டப்பட்டிருக்கும். இலை நுனி விரிந்திருக்கும் அல்லது பிளவுற்ற இருக்கும். சில சமயம் நீண்டு அரச இலைபோல் வளர்ந்திருக்கும். பூக்கள் ஐந்தங்க மலர் வகையைச் சேர்ந்தது. தெளிவில்லாத தட்டைத் தகடு கொண்டது. மகரந்தத் தாள்கள் எண்ணற்றவை. கனி பெரி வகையைச் சேர்ந்தது. கட்டைத் தன்மை கொண்டது. விதைகள் பல அகலத்தைக் காட்டிலும் நீளம் அதிகம்.

செய்கை: இலை வியர்வைப் பெருக்கி, காமம் பெருக்கி, வெப்பகற்றி, பூ, பிஞ்சு, காய் முதலியவைகள் துவர்ப்பு செரிப்புண்டாக்கி, பசித்தூண்டி பழம் - துவர்ப்பு. மலகாரி, பசித்தீத்தூண்டி. வேரும் பிசினும் காமவர்த்தகி ஆண்மை பெருக்கியாகவும் செயல்படும்.

குணமும் பயன்களும் : தேவலோகத்து விருட்சங்கள் ஐந்து. அதில் வில்வமும் ஒன்று. **"மானசீகத் தீட்சைக்கு வன்னி மரத்தையும், பார்வை தீட்சைக்கு பாதிரி மரத்தையும், ஸ்பரிசத் தீட்சைக்கு வில்வ மரத்தையும்"** நமது முன்னோர்கள் ஸ்தல விருட்சமாக்கி திருப்பாதிரி புலியூர். காளஹஸ்தி, திருநள்ளாறு என்ற புண்ணிய ஸ்தலங்களை உண்டாக்கியுள்ளனர்.

வில்வத்தளிர் எல்லா வகை மேகத்தையும், பூ மந்தத்தையும், பிஞ்சு குன்மத்தையும், பழம் கண்ணிருளையும், பிசின் விந்து வெண்ணீர்க் குகைளையும் நீக்கும்.

வேர், குன்மம், வாத பித்த கப குற்றத்தில் உண்டாகும் கேடு, சோகை, கபத்தினால் உண்டான நீர் வேட்கை, சுரம், நீரேற்றம், முப்பிணி, உடல்கடுப்பு இவைகளை நீக்கும்.

வில்வ மரத்தின இலை, பூ, பிஞ்சு காய், வேர் அனைத்தும் மருத்துவப் பண்புடையது.

பொதுப் பண்புகள்: வில்வதளிரை வதக்கிச் சூட்டுடன் கண் இமைகளில் ஒற்றடம் வைக்க கண்வலி, கண் சிவப்பு, அரித்தல் குணமாகும். இதன் பூ மந்தத்தைக் குணப்படுத்தும்.

காயுடன் இஞ்சி, சோம்பு நசுக்கி குடிநீரிட்டு வழங்க மூலநோய் நாளடைவில் குணப்படும்.

வில்வ வேர்க் குடிநீருடன் தேன் சேர்த்து அருந்த கொடிய முப்பிணியும், வாந்தியும் தீரும்.

இலைக் குடிநீர், வயிற்றுக் கடுப்பு, மேகவாயு இவற்றைப் போக்கும். இலைச்சாற்றுடன் மிளகுத்தூள் சேர்த்துக் கொடுக்க சோகை காமாலை தீரும். இலைச் சாற்றுடன் தேன் சேர்த்துக் கொடுக்க மூக்கு நீர் பாய்தலும், சுரமும் போகும்.

இலையை வதக்கி அதைப் போட்டு குடிநீர் செய்து 21 நாட்கள் தொடர்ந்து காலையும், மாலையும் 100 மி.லி. அளவு குடிக்க எல்லாவிதமான பித்த ரோகங்களும் குணமாகும்.

வில்வப் பழச் சதையைக் கொண்டு, சர்க்கரை சேர்த்து சர்பத் செய்யும் முறையும் உண்டு. இது உடலுக்கு பலத்தைக் கொடுக்கும். வில்வப் பழம் பேதியை நிறுத்துகின்ற குணத்தையும், அதே சமயம் மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு மலத்தை இளக்கும் குணத்தையும் பெற்றுள்ளது.

வில்வ வேரை 10-15மி.கி. எடுத்து நன்றாக இடித்து 100மி.லி. தண்ணீரில் நன்றாகக் கொதிக்க வைத்து பசும்பாலில் சேர்த்து தினமும் காலை வேளையில் குடித்து வர, தேவையில்லாத விந்து வெளியேற்றத்தைத் தடுத்து, விந்துவைப் பெருக்கும். ஆண்மையை அதிகரிக்கும்.

சித்த மருத்துவத்தில் வில்வத்தை முதலாகக் கொண்டு வில்வத்தைலம், வில்வாதி லேகியம், வில்வப்பழ மணப்பாகு ஆகிய பல மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

நெல்லி



வேறு பெயர்கள் : அருநெல்லி, நெல்லி, முள்ளி, ஆமலகம், ஆலகம், ஆம்பல், ஆமரிகம், தாத்தாரி, தாத்திரி, கோரங்கம், மிருதுபலா, மீதுநந்து

தாவரவியல் பெயர் : PHYLLANTHUS EMBLICA, FAMILY NAME EUPHORBIACEAE

பயன்படும் உறுப்புகள் : இலை, பட்டை, காய், பழம், காய்ந்த பழம், பூ.

பரவல் எல்லை : இந்தியாவில் எங்கும் காணக்கிடைக்கும். 800 மீட்டர் உயரம் வரை மலைகளில் விளையும். தென்னிந்தியாவில் அதிகமாகக் கிடைக்கும். இதில் கருநெல்லி, அருநெல்லி என இரண்டு இனங்கள் உள்ளது.

வளரியல்பு :இலையுதிர் மர வகையைச் சேர்ந்தது. இலைகள் நீண்டு இருக்கும் அகலம் குறைவானது.

பொதுப் பண்புகள் : இலைகளின் அடிப்பகுதி குறுக்கப்பட்டதாக இருக்கும் அல்லது இதய வடிவம் அமைந்ததைப் போலத் தோன்றும். நுனி கூர்மையாக இருக்கும். இலையடி செதில் மிகச் சிறியதாக நீண்டு இருக்கும். பூக்கள் இலைக் கோணங்களில் கொத்தாக இருக்கும். ஆண் பூக்களும், பெண் பூக்களும் கலந்து இருக்கும். இல்லையெனில் மேல் பகுதியில் இருப்பவை ஆண் பூக்களாகவும், கீழ் பகுதியில் உள்ளவை பெண் பூக்களாகவும் இருக்கும். பெண் பூக்களின் எண்ணிக்கை ஆண் பூக்களின் எண்ணிக்கையை விடக் குறைவு. பூவிதழ்கள் ஆறு. தலைகீழ் ஈட்டி வடிவமானது. மகரந்தக் கேசரங்கள் மூன்று இணைந்திருக்கும். இணைக்கும் பகுதி சேர்ந்து கூர்மையாக இருக்கம். செங்குத்தாக வெடிக்கும்.

தட்டை தகடின் (Disc) சுரப்பிகளின் எண்ணிக்கை ஆறு. பெண் பூக்களின் பூவிதழ்கள் ஆறு. இணைந்து இருக்கும். ஆனால், ஒன்றின் மேல் ஒன்றாக அமைந்திருக்காது. தலைகீழ் ஈட்டி வடிவமானதாக இருக்கும். குறுக்கப்பட்டதாக அகலம் குறைவானதாக இருக்கும்.

கனி ட்ரூப் வகையைச் சேர்ந்தது. வெடியாக்கனி. பலவீனப்பட்டதாக இருக்கும். உருண்டை வடிவானது, சதைப் பற்றுள்ளது. சாறு இருக்கும். விதைகள் மூன்று கோணங்கள் உடையது. விதையுறைக் கடினமாக இருக்கும்.

செய்கை : இலை, பட்டை, காய்ந்த பழம் துவர்ப்பியாகச் செயல்படும். பூ குளிர்ச்சியுண்டாக்கி மலத்தை இளக்கும். பழமும் சிறுநீரைப் பெருக்கி, மலகாரியாகவும், சீதளகாரியாகவும் செயல்படும்.

குணமும் பயனும் : இது காயகற்ப மூலிகையில் முக்கியமானது. இதன் பொருட்டே அன்று அதியமான ஔவைக்கு கொடுத்து சரித்திரத்தில் சான்றாக நின்கின்றார். இதன் சிறப்பை பின் வரும் சத்துக்களில் விவரம் தெளிவுறுத்துகிறது.

மாவுச் சத்து	14 கி
புரதச் சத்து	0.4 கி
கொழுப்புச் சத்து	0.5கி
பாஸ்பரஸ்	21 மி.கி
கால்ஷியம்	15 மி.கி
இரும்புச் சத்து	2 மி.கி

வைட்டமின் பி1	28 மி.கி.
வைட்டமின் சி	720 மி.கி.
நியாசின்	0.4 மி.கி.
கலோரிகள்	60

வேறு எந்த காய்கனியிலும் இதிலுள்ள வைட்டமின் சி அளவைப்போல் பெற இயலாது. ஒரு நெல்லிக் காயில் முப்பது ஆரஞ்சுப் பழங்களில் உள்ள வைட்டமின் 'சி' சத்து உள்ளது.

இதில் உள்ள வைட்டமின் சி அதிக சூட்டினால் அழியும் தன்மையைப் பெற்றது. ஆகவே துவையல், ஊறுகாய் போன்றவற்றினால் இதன் சத்துக்களை முழுமையாகப் பெறலாம். இல்லையெனில் இதன் சாறை எடுத்து அதில் உப்பிட்டு காற்றுப் புகாத புட்டியில் வைக்க நீண்ட நாள் கெடாமல் இருக்கும் இதன் வேர் பட்டை, இலை, பூ, காய், விதை என்று சகல உறுப்பும் மருத்துவத்தில் பயன்படுகிறது.

பித்தம், கபம் சம்பந்தமான நோய்கள், மூக்கடைப்பு, பீனிசம், வாய், நீர், சுரப்பு, வாந்தி, மயக்கம், தலை சுற்றல், மலக்கட்டு, என்புருக்கி நோய் போன்ற இளைப்பு நோய்கள் ஆகியவற்றில் இது உபயோகப்படுகின்றது. நுரையீரலுக்கு வலுவைத் தந்து கபப் பிணிகளைப் போக்குவதில் சிறப்புடையது. மற்றும் கல்லீரல், மண்ணீரல் குருதி மண்டலம், அன்னமய கோசம் போன்றவைகளில் இதன் பணி மிகவும் போற்றத் தக்கதாகிறது.

பயன்கள் : நெல்லிக்காயைத் துவையல் செய்து உண்ண சுவையின்மை, வாந்தி, ஓக்காளம் போன்றவை தீரும். நெல்லிக்காய் எளிதில் கிடைக்கும் காலங்களில் இலேகியம், எண்ணெய் போன்றவையாகச் செய்து கொள்ளுதல் நலம். தைல முறைகள் பல இருப்பினும், நெல்லிச்சாறு, சம அளவு தேங்காய் எண்ணெய் அல்லது எள் எண்ணெய் சேர்த்து எரித்து உபயோகித்தல் எளிது. சில வேளைகளில் நெல்லிக்காய்த் துண்டுகளை எண்ணெய்யுடன் கலந்து, புட்டியிலிட்டு மூடி, வெய்யிலிலிட எண்ணெய் முழுவதும் கருமையான பின், வடிகட்டி உபயோகிக்கலாம்.

இது பச்சையாகக் கிடைக்காத போது, காய வைத்த வற்றலாகச் செய்து உபயோகப்படுத்துவதும் உண்டு. இதுவே நெல்லி முள்ளி எனப்படும்.

இதன் இலைக் கொழுந்து ஒரு கைப்பிடி அளவிற்கு எடுத்து, அரைத்து மோரில் கலந்து சீதக் கழிச்சர் உள்ளவர்களுக்கு கொடுக்கலாம்.

என்புருக்கி, நீண்ட நாள் நுரையீரல் தாபிதப் பாதிப்பு (Chronic Bronchitis) உள்ளவர்கள், இதன் சாறு ஒரு தேக்கரண்டியுடன், தேன் சமனளவு சேர்த்து தினமும் உட்கொள்ள நல்ல பயனைப் பெறலாம்.

பெரு நெல்லி வயிறு சம்பந்தப்பட்ட ஓக்களம், பேதி, சீதபேதி, சோகை, மேகத்தால் ஏற்படும் நீர் தாரை, நோய்கள், நீரிழிவு நோய் ஆகியவற்றிற்கு மிகவும் நல்லது. இதனுடைய இலைகளும், வேரும் மஞ்சள் காமாலைக்கு நல்லது. திரிபலாவில் ஒன்று. இத்துடன் கடுக்காய் தோல், தான்றிக்காய் தோல் சேர்த்து சூரணித்து புண்களை கழுவவும், பல் ஈறிலிருந்து குருதி வடிதலுக்கு பல்பொடியாகவும் பயன்படுத்த அவை நீங்கும்.

நெல்லிக்காயைத் தைலமாகச் செய்து உபயோகிக்க கண் எரிச்சல், இள நரை, முடி உதிரல் ஆகியவை நீங்கும்.

சித்த மருத்துவத்தில் இதனை முதலாகக் கொண்டு நெல்லிக்காய் லேகியம், நெல்லிக்காய் தைலம், நெல்லி முள்ளி குடிநீர் முதலியவை தயாரிக்கப்படுகின்றன.

தாமரை



வேறு பெயர்கள் : கமலம், அரவிந்தம், பங்கஜம், பதுமம்

தாவரவியல் பெயர் : NELUMBO NUCIFERA FAMILY NAME NYMPHAEACEAE

பயன்படும் உறுப்பு : பூ, விதை, கிழங்கு, பூவிதழ், வேர், மகரந்தத் தாள்கள்.

வளரியல்பு : கொடி வகையான இது நீர் நிறைந்த இடங்களில் வளரும் இயல்புடையது. இதன் இலைகள் வட்ட வடிவமாகப் பெரிதாகக் காணப்படும். இதன் பூக்கள் வெண்மை, சென்மை, நீலம், மஞ்சள் முதலிய நிறங்களில் காணப்படுகிறது. இதன் நிறத்தைக் கொண்டே இதன் பெயர் நிர்ணயிக்கப்படுகிறது. பூவிற்கு நல்ல மணம் உண்டு. இந்துக்கள் இப்பூவை புனிதமாகக் கருதுகிறார்கள்.

செய்கை : தாமரை உடலில் உள்ள உஷ்ணத்தை அகற்றி குளிர்ச்சியை உண்டாக்கும். துவர்ப்புச்சுவை உடையதாகவும், கோழையை அகற்றும் செயலையும் செய்கிறது. தாமரைக் கிழங்கு உடம்பின் உள்ளே இருக்கின்ற சூட்டை அகற்றக்கூடியது. விதை நம் உடலை உரமாக்கும்.

பயன்கள் : தாமரைப் பூவை இடித்து சாறு எடுத்து, குறிப்பிட்ட அளவு உள்ளுக்குக் கொடுத்து வர கழிச்சல், காலரா, ஈரலில் ஏற்படும் நோய்கள், சுரம் முதலியவை நீங்கும். தாமரைப் பூச்சாறு இதயத்திற்கு சிறந்த வன்மையைத் தரும்.

தாமரையின் பூச்சாற்றை இருமலுக்கும், ரத்த மூலத்திற்கும், சீத பேதிக்கும் பெண்ணுக்கு ஏற்படும் அதிக ரத்தப்போக்கிற்கும் காலை, மாலை இருவேளை இருபது முதல் முப்பது மில்லி. வரை தரலாம். பலன் தெரியும்.

தாமரைப் பூவிலிருந்து செய்யப்படுகின்ற சர்பத்தைத் தொடர்ந்து அருந்தி வந்தால் ரத்தமூலம், ரத்த பேதி, ஈரல் நோய்கள் போன்றவை குணமாகும்.

வெண் தாமரைப்பூவை முறைப்படி குடிநீரிட்டு அருந்தி வர மூளைக்கு வன்மையைத் தரும். இக்குடிநீருடன் தேன் சேர்த்து அருந்தி வர அதிகரித்த ரத்த அழுத்தம் குறையும்.

வெண் தாமரையின் தண்டை ஒடித்து நல்லெண்ணையில் போட்டு காய்ச்சி, பக்குவத்தில் வடித்து அத்தைலத்தை தலையில் தேய்த்து வர கண்ணுக்கும், உடலுக்கும் குளிர்ச்சி தரும்.

தாமரைப் பூவிதழை தேன் அல்லது வெண்ணெய் அல்லது சர்க்கரையுடன் கலந்து குறிப்பிட்ட அளவு உள்ளுக்குக் கொடுத்து வர ரத்த மூலம் நிற்கும்.

தாமரைப் பூ இதழுடன், நல்ல மிளகைச் சேர்த்து அரைத்து குறிப்பிட்ட அளவு உள்ளுக்குக் கொடுத்து வர, நல்ல பாம்புக்கடி விஷம், தேள் கடி நஞ்சு தீரும். இதனை கடிவாயிலும் பூசி வரலாம்.

தாமரை மலரில் உள்ள தேன் கண் நோய்க்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

தாமரைப் பூவின் மகரந்தத்துடன் தேன் அல்லது சர்க்கரை கலந்து தினமும் காலையில் பத்தியத்துடன் உண்டு வந்தால் ஆண்மை பெருகும். காது மந்தம் நீங்கும்.

சுரம் அதிகமாகக் காயும்போது தாமரையின் பெரிய இலைகளை எடுத்து படுக்கையாக அமைத்து அதில் படுக்க வைத்தால், சுரம் குறைவதுடன் உடம்பிலுள்ள எரிச்சலும் நீங்கும்.

தாமரை இலையை அரைத்து அதனுடன் சந்தனத்தையும் இழைத்துக் கலந்து உடலில் தேய்த்து வர தேக அனல், உடம்பெரிச்சல் தீரும்.

பித்த சுரத்திற்கு தாமரையின் இலை, பூ, தண்டு, வேர் இவற்றை இடித்து முறைப்படி குடிநீரிட்டு அருந்தி வரலாம்.

தாமரை விதையைப் பொடித்து ஒன்று முதல் இரண்டு கிராம் அளவு நீருடன் கலந்து அருந்தி வர உடல் வலுப் பெறும்.

வாந்தி, விக்கல் உடையவர்கள் தாமரை விதையை தேனில் இழைத்து, நாவில் தடவி வர நிற்கும்.

தாமரை விதையைப் பொடித்து, வெளிப்பியோகமாக பயன்படுத்த தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும்.

துளசி



தமிழகத்தின் சிறப்பே தெய்வீக மூலிகைகள் அமைந்திருப்பதுதான். சிவபெருமானுக்கு வில்வத்தையும், விநாயகருக்கு அறுகம்புல்லையும், பராசக்திக்கு வேம்புவையும், விஷ்ணுவிற்கு துளசியையும் வைத்து வழிபடுவது வழக்கம்.

வேறு பெயர்கள் : திருத்துழாய், மாலலங்கல், விஷ்ணுப்பிரியா, பிருந்தா, திவ்யா, பிரியா

தாவரவியல் பெயர் : OCIMUM SANCTUM FAMILY NAME LABIATAE

பயன்படும் உறுப்பு : இலை, விதை.

வளரும் இடம் : இந்தியாவில் சாதாரணமாக எங்கும் வளருகிறது.

வளரியல்பு : இது சிறுசெடி வகையைச் சேர்ந்தது. சுமார் இரண்டு முதல் மூன்று அடி உயரம்வரை வளருகின்ற மணமுள்ள கருந்துளசி, செந்துளசி, நற்றுளசி, நாய்துளசி, நிலத்துளசி, கல்துளசி, முள் துளசி என இதில் பல வகைகள் உள்ளன. கருந்துளசியே அதிக மருத்துவ பயன் உடையது.

நல்லதுளசியின் இலை பச்சை நிறமாகவும், கிளைகள் சாம்பல் கலந்த வெண்மை நிறமுடையதாகவும் இருக்கும். பூக்கதிர்கள் சாம்பல் பூத்து பசுமை நிறமாகவும், இருக்கும். காய்ந்த பின்னர் அவை சருகாக உதிர்ந்து விடும்.

கருந்துளசியின் இலை, கிளை, தண்டு முதலியவை கருமை கலந்த பசுமை நிறமாகவும், கதிர்கள் சிவப்பு கலந்த நீல நிறமாகவும் இருக்கும்.

செய்கை : துளசி நம் உடலிலே வெப்பத்தை உண்டாக்கி கோழையை அகற்றி உடலின் உள்ளே இருக்கின்ற வெப்பத்தை ஆற்றக்கூடிய தன்மை உடையது. வியர்வையை அதிகமாகப் பெருக்கக்கூடிய குணமும் இதற்கு உண்டு.

பயன்கள் : சிறு குழந்தைகளுக்கு உண்டாகும் சளி, இருமல் முதலியவைகளுக்கு துளசிச் சாற்றுடன் சிறிது தேன் கலந்து கொடுத்து வரலாம்.

உடம்பில் ஏற்படுகின்ற கொப்புளங்களுக்கு துளசி இலையை நீர்விட்டு அரைத்து பூசி வந்தால் அவை எளிதில் குணமாகும்.

சரும நோய்களுக்கு துளசிச் சாறு ஒரு சிறந்த நிவாரணி.

மழைக்காலத்தில் துளசி இலையை தேநீர் போலக் காய்ச்சி குடித்து வந்தால் மலேரியா, விஷக் காய்ச்சல் முதலிய நோய்கள் வராது. தொண்டையில் புண் ஏற்பட்டு துன்பப்படுகிறவர்கள் துளசி இலைக் கஷாயத்தைக் குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். துளசி இலை ஊறிய நீரிலும் வாய் கொப்பளித்து வரலாம்.

பேன் தொல்லை நீங்க துளசியை இடித்து சாறு எடுத்து அத்துடன் சம அளவு எலுமிச்சை சாறு கலந்து வாரம் ஒருமுறை தலையில் தேய்த்து ஒரு மணி நேரம் கழித்துக் குளித்து வர பேன், பொடுகு தொல்லை நீங்கும்.

வயிற்றில் பெருகிய கிருமிகளை அழிப்பதற்கு ஒரு பிடி துளசியுடன் 9 மிளகு நசுக்கிப் போட்டு 2 டம்ளர் தண்ணீர் விட்டு ஒரு டம்ளராக வற்றக் காய்ச்சி அந்நீரை அருந்தி வர வேண்டும்.

துளசி இலையை இடித்துப் பிழிந்த சாற்றுடன் சிறிதளவு கற்பூரம் கலந்து பல்வலி உள்ள இடத்தில் பூசி வர வலி குறையும்.

சிறு குழந்தைகளுக்கு உண்டாகும் கக்குவான் இருமலுக்கு துளசியின் பூங்கொத்துடன் வசம்பு, திப்பிலி சம அளவு எடுத்து நன்கு உலர்த்திப் பொடி செய்து, தேவையான அளவு தேனில் கலந்து கொடுத்து வர, சளி எளிதில் வெளியாகும்.

வெட்டுக் காயங்களுக்கு துளசி இலைச் சாற்றைப் பூசி வந்தால் அவை விரைவில் குணமாகும்.

ஆண்மையைப் பெருக்க துளசி விதையைப் பொடித்து 7மி.கி. அளவு வெற்றிலையுடன் கலந்து தாம்பூலமாகத் தரித்து வர வேண்டும்.

துளசி இலையைச் சாறாகபோ அல்லது கஷாயமாகவோ அருந்தி வந்தால் இதயம் வலுவடையும். இத்துடன் மருதம்பட்டையையும் சேர்த்து கஷாயமிட்டும் அருந்தலாம்.

வீடுகளில் துளசி இலைக் கொத்துகளை கட்டி வைத்தாலும், வீட்டைச் சுற்றிலும் ஆங்காங்கே துளசிச் செடிகளை வளர்த்தாலும் கொசுக்கள் வராது.

துளசி இலை ஊறிய நீரை மலேரியா காய்ச்சலுக்கும், அதன் காரணமாக உண்டான வயிற்றுக் கோளாறுகளுக்கும் அருந்தி வரலாம். குழந்தைகளுக்கு ஏற்படும் கல்லீரல் நோய்களுக்கும் வழங்கி வரலாம்.

துளசிக்கு ஏராளமான மருத்துவ குணங்கள் உள்ளன. துளசி இலை நல்ல நரம்பு உரமாக்கியாகச் செயல்படுவதோடு, ஞாபகசக்தியையும் வளர்க்கிறது.

துளசி மணிமாலை அணிவதால் அதிலிருந்து மின் அதிர்வுகள் ஏற்பட்டு நம்மை பல நோயிலிருந்து காக்கின்றது. நோய்க் கிருமிகள் எளிதில் தாக்காமல் நம்மைப் பாதுகாக்கவும் செய்கின்றது.

துளசி அஷ்டோத்ர நாமாவளி

1. துளஸ்யை 2. பாவந்யை 3. பூஜ்யாயை 4. வ்ருந்தாவநநிவாஸிந்யை 5. ஜ்ஞாநதாத்ர்யை 6. ஜ்ஞாநமய்யை 7. நிர்மலாயை 8. ஸர்வபூஜிதாயை 9. ஸத்யை 10. பதிவ்ரதாயை 11. வ்ருந்தாயை 12. க்ஷீராப்திமதநோத்பவாயை 13. க்ருஷ்ணவர்ணாயை 14. ரோக ஹந்த்ர்யை 15. த்ரிவர்ணாயை

★ குறிப்பு : ஒவ்வொரு நாமாவளிக்கு முன் ''ஓம்'' என்றும் கடைசியில் நம: (நமஹ) என்றும் உச்சரிக்க வேண்டும். (உ-ம் ---- ஓம் துளஸ்யை நம:)

16. ஸர்வகாமதாயை 17. லக்ஷ்மீஸக்யை 18. நித்யஶுத்தாயை 19. ஸுதத்யை 20. பூமிபாவந்யை
21. ஹரித்யாநைக நிரதாயை 22. ஹரிபாத க்ருதாலயாயை 23. பவித்ர ரூபிண்யை 24. தந்யாயை
25. ஸுகந்திந்யை 26. அம்ருதோத்பவாயை 27. ஸுருபாரோக்யதாயை 28. துஷ்டாயை 29. ஶுக்தி த்ரிதயரூபிண்யை
30. தேவ்யை 31. தேவர்ஷிஸம்ஸ்துத்யாயை 32. காந்தாயை 33. விஷ்ணுமந:ப்ரியாயை
34. பூதவேதால வீதிக்ந்யை 35. மஹாபாதகநாஶுந்யை 36. மநோரத்பரதாயை 37. மேதாயை 38. காந்தாயை 39.
விஜயதாயிந்யை 40. இங்க சக்ர கதாபத்ம தாரிண்யை 41. காம ரூபிண்யை42. அபவர்கப்ரதாயை
43. ஶயாமாயை 44. க்ருஶமத்யாயை 45. ஸுகேஸிந்யை 46. வைகுண்ட வாஸிந்யை 47. நந்தாயை
48. பிம்போஷ்ட்யை 49. கோகில ஸ்வராயை 50. கபிலாயை 51. நிம்நகா ஜந்ம பூம்யை 52. ஆயுஷ்ய தாயிந்யை 53.
வநரூபாயை 54. துக்க நாஸிந்யை 55. அவிகாராயை 56. சதுர்புஜாயை 57. கருத்மத்வாஹநாயை
58. ஶாந்தாயை 59. தாந்தாயை 60. விக்ந நிவாரிண்யை 61. ஸ்ரீ விஷ்ணு மூலிகாயை 62. புஷ்ட்யைட
63. த்ரிவர்க பலதாயிந்யை 64. மஹாஶக்த்யை 65. மஹா மாயாயை 66. லக்ஷ்மீ வாணீஸுபூஜிதாயை
67. ஸுமங்கல்யர்சந ப்ரீதாயை 68. ஸௌமங்கல்ய விவர்திந்யை 69. சாதுர்மாஸ்யோத்ஸவாராத்யாயை
70. விஷ்ணு ஸாந்நித்ய தாயிந்யை 71. உத்தாந த்வாதஸீ பூஜ்யாயை 72. ஸர்வ தேவ ப்ரபூஜிதாயை 73. கோபீ ரதி
ப்ரதாயை 74. நித்யாயை 75. நிர்குணாயை 76. பார்வதீ ப்ரியாயை 77. அபம்ருத்யுஹராயை
78. ராதாப்ரியாயை 79. ம்ருக விலோசநாயை 80. அம்லாநாயை 81. ஹம்ஸ கமநாயை 82. கமலாஸந வந்திதாயை
83. பூலோக வாஸிந்யை 84. ஶுத்தாயை 85. ராமக்ருஷ்ணாதி பூஜிதாயை 86. ஸீதாபூஜ்யாயை
87 ராமமந:ப்ரியாயை 88. தந்தநஸம்ஸ்த்திதாயை 89. ஸர்வதீர்த்தமய்யை 90. முக்தாயை 91. லோகஸ்ருஷ்டி
விதாயிந்யை 92. ப்ராதர் த்ருஶயாயை 93. க்லாநி ஹந்த்ர்யை 94. வைஷ்ணவ்யை 95. ஸர்வஸித்திதாயை
96. நாராயண்யை 97. ஸந்ததிதாயை 98. மூல ம்ருத்தாரி பாவந்யை 99. அஜோகவநிகாஸம்ஸ்த்தாயை
100. ஸீதாத்யாதாயை 101. நிராஶரயாயை 102. கோமதீ ஸரயூதீர ரோபிதாயை 103. குடிலாலகாயை 104 அபாத்ர
பக்ஷ்ய பாபக்ந்யை 105. தாநதோய விஶுத்திதாயை 106. ஶருதி தாரண ஸுப்ரீதாயை 107. ஶுபாயை 108.
ஸர்வேஷ்டதாயிந்யை.

மன்னார்குடி- செங்கமலத்தாயார்



நாச்சியார்கோயில் தாயார்

TULASI
THE SYMBOL OF DEVOTION

"Namstulasi Kalyani namo Vishnupriye shubhe,
Namo mokshaprade devi. namo sampatpradayike"
Salutation to Tulasi, giver of happiness!
We bow to Vishnupriya, the benign and auspicious!
O Goddess, giver of liberation, we salute Thee!
Giver of all riches, we ow to Thee!

TULASI means matchless, without peer, the best. One of the many synonyms of Tulasi I; Vishnupriya, beloved of Vishnu, the Preserver of Creation.

Tulasi is equally associated with Krishna, who is of course an incarnation of Vishnu According to the Puranas Tulasi is also called Vrinda. And it is in Vrindavan (Brindavan), the forest where Tulasi grown abundantly that Lord Krishna plays divine melodies on His flute, entrancing the souls of the gopis and dances His eternal Dance of Delight with them.

As a matter of fact, no god could be worshipped or offered food without a leaf of Tulasi. Such is the distinguished honour given to Tulasi. In fact, our Indian culture presents a beautifully harmonious and intimate relationship between God, Man and Nature.

Traditionally, Tulasi is grown in every Hindu house. In fact, a small raised structure is built in the courtyard of a huse to enthrone this living symbol of the beloved of the gods. Members of the family not only water her daily but sprinkle kumkum over her and light an oil lamp, chanting mantras to invoke her benign presence and blessings.

Another member of the Tulasi family is Basil. This name is derived from the Latin basilicum, meaning royal. It is also used to designate, the sanctum sanctorum of a Roman Catholic Church, where the altar is placed.

It is interesting to note that just as Tulasi signifies devotion, Basil which is more outstanding in its fragrant expression is called "the joy of union with the Divine" by the Mother. There is a third member of the Tulasi family sacred to the Jains which the Mother has named "Discipline".

Thick Tulasi stems are carved into beads which are strung together and used for japa-repetition of a sacred name or mantra - in order to fix the consciousness on the deity of one's choice and to invoke the presence.

It is said that the fire lit of the wood of Tulasi twigs purifies the atmosphere. It is often used in the funeral pyre.

As a matter of fact Tulasi is so valuable that all the parts of this plant are used for medicinal purposes, some of which may be mentioned here:

1. Thirty to hundred leaves, crushed and taken with fresh curd or honey early in the morning removes constipation.

The Traditional Stand for the Tulasi plant.

2. To relieve any kind of congestion in the chest, cold or cough, a decoction is made of tulasi leaves, ginger and black pepper. This can be taken

The Five-fingered Shankh (Conch-shell) - an emblem of Lord Vishnu.

with an equal quantity of lemon juice.

3. The juice of the leaves is used for ear-ache and tooth-ache.

4. Some of the experts claim to cure practically all diseases like indigestion, acidity, diabetes, nausea, kidney trouble, arthritis, skin diseases, muscular pain, fever, etc.

5. Tulasi plant is considered to be a repellent against mosquitoes and other insects. It may be even used as an antidote for snake or scorpion venom.

Well, nothing is more rewarding than observing the Tulasi plant itself. No matter how much we read about it the actual contact with the living plant teaches us more than can be expressed by words. There are so many ways of developing this contact. Notice the soil around the Tulasi plant. Find out what are the other plants that like to grow near it. Note the smell of the dried flower spikes containing the seeds. It is different from that of the fresh leaves. Try the taste of different varieties of Tulasi plant and observe its effect.

Observe too the minute flowers opening around ten o'clock in the morning.

The most important thing is not what the others say about a plant but what you yourself feel and discover about it, by being open to its influence and effect upon you.

★ **Ref : "Sacred Trees And Plants of India"** - Tulasi the symbol of Devotion - Essay written by richard pearson - இக்கட்டுரை ஸ்ரீ சுந்ரராஜப்பெருமாள் கோயில் மகா சம்பரோக்ஷண மலரில் கிடைக்கப் பெற்றது - கோலாலம்பூர்.

பூரணவல்லித் தாயார் – உத்தமர் கோயில்

GARUDAN - ICONOGRAPHY

இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்பேவாயிலின் மீது கஜலட்சுமியை அமைக்கும் வழக்கம் பாரததேசம் முழுவதிலும் நிலவியதை அறகிறோம். தென்னகத்திலும் இவ்வழக்கம் இருந்ததைச் சங்கப்பாடல்கள் குறிக்கின்றன. சங்க இலக்கியமான பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான நெடுநல்வாடையின் உரையில், ''நடுவில் திருவும் இரண்டு புறத்தேயும் இரண்டு செங்கழுநீர் பூக்களை ஏந்தியவாறுள்ள பெண்யானைகளைப் பண்ணி'' என்று திருநிலையாகிய வாசல் அமைக்கப்படுவது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

கலித்தொகையில் ''வரிநுதல் எழில் வேழம் பூநீர், மேல் சொரிதர புரிநெகிழ் தாமரை மலர்க்கண் திருநயந்திருத்தன்ன'' (வரியோடிய நெற்றியைக் கொண்ட அழகிய யானை பூவையும் நீரையும் சொரியத் தாமரைமலர் மீது லட்சுமிதேவி வீற்றிருந்தது போல) என்று வரும் உவமைத் தொடரைக் காண்கிறோம்.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையில் இரண்டானை பக்கத்தே நின்று நீரைச் சொரிய நடுவே தாமரைப்பூவிலே இருந்த திருமகள் என்று குறித்துள்ளதைக் காண்கிறோம். மேலும் அனேக தொடர்களால் வாயிலின் மீது மகாலட்சமி பொறித்திருந்ததைச் சங்கநூல்கள் குறிக்கின்றன.

வாயிலின் மீது கஜலட்சுமியின் திருவுருவத்தை அமைக்கும் வழக்கம் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

சிவாலயங்களில் மகாலட்சுமி :

சிவாலயத்திலுள்ள பரிவாரங்களில் ஒருத்தியாக மகாலட்சுமி விளங்குகின்றாள். இவளுக்குரிய திசை வடமேற்கு முனையாகும். இங்கு இவள் கிழக்கு நோக்கியவாறு வீற்றிருக்கின்றாள். இவளுக்கு இரண்டு புறமும் யானைகள் இருக்கின்றன. சிலசிற்பங்களில் யானைகள் நீராட்டுவது போலவும் சில சிற்பங்களில் கவரிகளைக் கொண்டு வீசுவதுபோலவும் அமைக்கப்பட்டுள்ளன.

மகாலட்சுமி சில தலங்களில் தாமரை மலர்மீது பதமாசனத்திலும், சில தலங்களில் இரண்டு கால்களையும் தொங்கவிட்டவாறும் அமர்ந்திருக்கின்றாள். சில தலங்களில் அவளுக்கு நேர்எதிரில் வாசல் அமைக்காமல் ஜன்னலை அமைத்துள்ளனர். பெரும்பான்மையான தலங்களில் அவள் கதைவடிவமாகவே அமைக்கப்பட்டிருக்கின்றாள்.

பின்னாளில் அவள் திருவுருவை அமைத்தவர்கள் கற்சிலையாக மாற்றியமைத்துள்ளனர்.

தீபாவளியன்று இவளுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. பெருந்திருவிழாக்கள்,கும்பாபிஷேகம் முதலியவற்றிற்கு முன்பாகத் தனபூசை என்ற பெயரில் மகாலட்சுமிக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யும் வழக்கம் உள்ளது. இதனால் அந்த விழாக்களுக்கான பொருள் வரவு மிகுதியாக இருக்கும் என்று உறுதியாக நம்புகின்றனர்.

மகாட்சுமிதீர்த்தங்கள்:

திருமகள் சிவபூசைசெய்யவும் நீராடி மகிழவும் அமைத்த தீர்த்தங்கள் லட்சமி தீர்த்தங்கள் என்று பெயர் பெறுகின்றன. திருப்பரங்குன்றம், பனையூர், வலம்புரம், திருப்புத்தூர், காஞ்சீபுரம், இராமேசுவரம் முதலிய பலதலங்களில் லட்சுமிதீர்த்தங்களைக் காண்கிறோம். இவற்றில் முதன்மை பெற்றது திருவாரூர் திருக்குளமாகும். இது அவள் பெயரால் கம்லாலயம் என்றழைக்கப்படுகிறது.

திருநின்றியூரில் ஆலயத்திற்கு தெற்கில் அமைந்துள்ள தீர்த்தம் மகாலட்சுமி தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. திருமழபாடியில் அம்பிகை சந்நிதிக்கெதிரில் மகாலட்சுமி தீர்த்தம் அமைந்துள்ளது. இங்கு அம்பிகை சிவபெருமானை சோமஸ் கந்தராக வழிபட்டாள் என்று கூறப்படுகிறது.

இவற்றையொத்ததாக திருமாகறல் மாகறலீசுவரர் ஆலயத்திற்கு எதிரிலும், கடிகுளம் கற்பகனார்கோயிலிலும் இன்னம அநேக தலங்களிலும் லட்சுமி தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் மூழ்கிச் சிவபெருமானை வழிபட்டால் செல்வம் பெருகும் என்று நம்புகின்றனர்.

நந்தவன லட்சுமி:

பொதுவாகச் சிவாலயங்களின் (வாயுதிக்காகிய) வடமேற்க மூலையில் கிழக்கு நோக்கியவாறு லட்சுமியை அமைப்பதே முறையாகும். என்றாலும், திருக்கொள்ளம் பூதூரில், நந்தவனத்தின் மையத்தில் மகாலட்சுமிக்கென தனி ஆலயம் உள்ளது. இந்த அமைப்பு வேறெங்கும் இல்லை.

திருமகளிசர் (மகாலெட்சுமிர்):

உலகிலுள்ள அனைவரும் விரும்புவது செல்வமாகும். செல்வம் பூமியாகவும், மாடாகவும், மனையாகவும் பலபொருளில் விளங்கி மனிதர்களுக்குப் பெருமை சேர்க்கின்றது. அத்தகைய பொருள் செல்வத்திற்கு அதிபதியாக இருப்பவள் திருமகளாகிய மகாலட்சுமி இந்தியசமயங்கள் அனைத்திலும் மகாலட்சுமி தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றன.

மகாலட்சுமி சிவபெருமானின் தங்கையாவாள். அவள் சிவனடியார்க்குத் தானாகவே வந்து உதவுகின்றாள். என்று தமிழ்த் திருமுறை கூறுகிறது. சிவபெருமானுக்கு உரிய வில்வ மரத்தடியிலேயே லட்சுமி நீங்காது வாசம் செய்கிறாள். மேலும் அவள் அனேக ஸ்தலங்களில் சிவபூஜை செய்து மகிழ்கிறாள்.

சைவர்களின் தலைமைத் தலமான திருவாரூர் மகாலட்சுமி சிவனைப் பூசித்தப் பெருந்தலமாகும். இது லட்சுமியின் வேறுபெயரான கமலா என்ற பெயரால் கமலை, கமலாலயம் எனப் பலவாறு அழைக்கப்படுகிறது. சிவாலயங்களிலுள்ள பரிவார தேவதைகளில் ஒருத்தியாக மகாலட்சமி விளங்குவதைத் தென்னக மெங்கம் காண்கிறோம்.

லட்சுமியின் அருளாலும் கமலாம்பிகை உடனாய ஆரூர்ப் பெருமானின் அருளினாலும் அன்பர்கள் சகல செல்வயோகத்துடன் வாழ்வர்.

ராமேசுவரத்து மகாலட்சுமி தீர்த்தம் :

இராமேசுவரம் இராமநாத சுவாமி ஆலயத்தின் (அனுப்பு மண்டபத்தினை ஒட்டி அழகியகுளமாக மகாலட்சுமி தீர்த்தம் அமைந்துள்ளது. இதன் கரையில் மகாலட்சுமிக்கென தனிச் சிற்றாலயம் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதில் மூழ்கி தன்னையும் இராமநாதப் பெருமானையும் வணங்குபவர்களுக்கு மகாலட்சுமி ஐஸ்வர்யத்தை வழங்குகிறாள் என்பது நம்பிக்கையாகும். தருமராஜன் இதில் மூழ்கிச் சகல ஐஸ்வர்யங்களையும் பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. மேலும் இக்கோயிலுள்ள சுக்கிரவார மண்டபத்தில் தூண்களில் அஷ்டலட்சுமிகளையும் காண்கிறோம். லட்சுமிதேவி சீதையாக அவதரித்திருந்த போது அமைத்து வழிபட்ட சீதா தீர்த்தமும் இத்தலத்தில் உள்ளது.

ஸ்தானம் - இயல்பு - பயன் :

அஷ்ட லட்சுமி விலாசம்	**ஸ்தானம்**	**இயல்பு**	**பயன்**
ஆதிலட்சுமி	உச்சி	காரணஊக்கி	ஜெனனம்
தான்யலட்சமி	வலதுபுஜம்	ஜீவ உணர்வு	பசியாற்றுவித்தல்
தைர்ய லட்சமி	நெஞ்சுக்குழி	ஜீவ இயக்கம்	புரட்சி/புதுயுகம்
கெஜ லட்சுமி	பிடரி/சிறுமூளை	ஜீவ அறிவு/ அபிவிருத்தி	பெருமை
சந்தான லட்சுமி	வலது தொடை	ஜீவ சகோதரத்துவம்	பாசம்/பொதுவுடமை
விஜயலட்சுமி	வினை தண்டுவடம்	ஜீவ அமைப்பிற்கு	வீரம்/ விவேகம்
வித்யாலட்சமி	பெருமூளை	ஜீவ விலாசம்	பயிற்சி/பக்குவம்
தனலட்சுமி	வலது உள்ளங்கை (வரவு) இடது உள்ளங்கை (செலவு)	மகிழ்வித்தல்	ஜீவனுக்கு செழிப்பு
மகாலட்சுமி	மனம்/கண்	கருணை	மன்னிக்கும் குணம்

திருமுறைகளில் திருமகள் :

தமிழ்மறையான தேவாரத்துள் திருஞானசம்பந்தப்பெருமான் ஏறத்தாழ ஐம்பது இடங்களில் மகாலட்சுமியைப் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றார். இவற்றில் திருமகள் பூமகள், அலர்ாள், பங்கயமங்கை, பொன், மலராள், செய்யாள், தூமலராள், வானோர்சீர் என்பன குறிப்பிடத்தக்க பெயர்களாகும். சிவாலயங்களையும், தேவாரத்தை ஓதுபவர்களையும் லட்சுமிதேவி உடனிருந்து காக்கின்றாள் என்பது அவர் கருத்தாகும். சில தலங்களை லட்சுமிதேவியின் இருப்பிடமாகவே சொல்லியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (எ.து.) வேதாரண்யத்தை மலர்மகள் நிலவிய மறைவனம் என்று குறிக்கின்றார். திருமாலின் மார்பில் நீங்காது உறைவதைப் போலவே தேவாரத்தைப் பாடுபவர்களின் மார்பிலும், சிவனைத்தியானிப்பவர் மார்பிலும் உறைகின்றாள் என்கிறார்.

அப்பரடிகள் திருமகளைச் சிவபெருமான் தோற்றுவித்த திருமாலுக்கு அளித்தார் என்பதை ''செய்யவளை மாலுக்கீந்த சிவனவன் காண்'' என்று குறிக்கின்றார். திருமகள் சிவபூசைசெய்து கொண்டேயிருக்கின்றாள் என்பதைத் திருவாலங்காட்டுப் பதிகத்தில் ''செய்யாள் வழிபட நின்றார் தாமே'' என்கிறார்.

★ ''அஷ்டலட்சுமியும் அனுபவ உண்மைகளும்'' - வள்ளல் சண்முகம் - 1997 (2/28-நூலககோடு எண்)



திருமகள்
(தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளது)

16A

மேலும் சிவபெருமானின் திருவடிகளாகிய தாமரைமலரில் இலக்குமி நீங்காது உறைகிறாள். இதனைத் ''திருமகளுக்குச் செந்தாமரையாம் அடி'' என்றும் குறிக்கின்றார்.

சுந்தரர் திருமகளை, திருமாமகள், செம்பொன், அலராள் என்று பலபெயர்களால் குறிப்பதுடன் (திருச்சுழியற்) பெருமானை வழிபடுபவரைப் அவள் நீங்காது பிரியாதிருக்கின்றாள் என்றும் குறித்து மகிழ்கின்றார்.

சங்க லட்சுமி :

வலம்புரிச் சங்கிற்கு லட்சுமிவாசம் என்பது பெயர். பொன், வெள்ளி, அல்லது பித்தளையால் செய்யப்பட்ட ஆமைவடிவமான பீடத்தின் மீது வலம்புரிச் சங்கை வைத்து அதனுள் லட்சமி வடிவம் பொறித்த பொற்காசை இட்டு வழிபடுகின்றனர். ஆமை வடிவமான பீடம் உறுதிமிக்க நிலையான ஆசனமாகக் கொள்ளப்படுகிறது. அதன்மீது மகாலட்சுமி சங்க வடிவமாக விளங்குகின்றாள். அவளுடைய அருளாக அதில் இடப்படும் பொற்காசு கருதப்படுகிறது. பலருடைய வீட்டில் இப்படி சங்கு வடிவில் லட்சமிதேவி வணங்கப்படுகிறாள். சங்கின் ஒலியில் மகாலட்சுமி வீற்றிருக்கிறாள். இதையொட்டி மங்கலச் சடங்குகளில் திருச்சங்கு முழங்குகிறது. ஆண்டாள் மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத என்ற திருமணத்தின் போது சங்கு முழங்கியதைக் குறிக்கின்றாள். சங்கு திருமகளைப் போல் கடலில் பிறந்ததால் அவளாகவே போற்றப்படுகிறதென்பர்.

திருத்தாலி:

மங்கலப் பெண்கள் அணிந்து கொள்ளும் திருத்தாலி சௌபாக்ய லட்சுமியின் வடிவமாகும். இதனால் தாலிக்கு திருமாங்கல்யம் என்ற பெயர் உண்டாயிற்று தாலியில் மகாலட்சுமியின் உருவம் அமைந்த பொட்டையும் சேர்த்துக் கொள்வர். இதற்கு மகாலட்சுமி பொட்டு என்பது பெயர்.

தானம் :

வியாபாரம், தொழில் முதலியவற்றில் ஏற்படும் போட்டி பொறாமைகள் தொலைய சிவந்த ஆடைகளைத் தானம் செய்ய வேண்டும். சிவப்புப்படை, சோளிகளை உரிய மந்திரங்களுடன் கன்னிப் பெண்களுக்கு தானமளிப்பதால் எதிரிகள் தொலைவர். சுமங்கலிகளுக்குத் தர கண்ணேறு. போட்டிகள் குறையும் வசிய சக்தி உண்டாகும். ஆலயங்களில் உள்ள அம்பிகைக்கு சார்த்த மன அமைதி உண்டாகும்.

மணமகளான மகாலட்சுமி:

இந்தியத் திருமணங்கள் பலவற்றில் மணமகளை மகாலட்சுமியாக கருதுகின்றனர். வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் வாழும் பல குடும்பங்களில் அமுதகலசம் போன்ற ஒரு பாத்திரத்தை திருமணப் பெண்ணின் கையில் கொடுத்திருப்பதைக் காணலாம். திருமண மந்திரங்களில் மணமகனை மகாவிஷ்ணுவாகவும் மணமகளை மகாலட்சுமியாகவும் உருவகப்படுத்தும் மந்திரங்களைக் காண்கிறோம்.

சங்கநிதி - பதுமநிதி:

மகாலட்சுமியின் அருள்பெற்றவர்களில் முதன்மையானவன் யட்சராஜனான குபேரன் ஆவான். இவனிடம் நவநிதிகள் குவிந்துள்ளன. இவற்றில் முக்கியமானவை சங்கநிதியும் பத்மநிதியும் ஆகும். ஆலயங்களின் வாயிலில் சங்கநிதியையும், பத்மநிதியையும் யக்ஷ வடிவங்களில் அமைத்திருப்பதைக் காணலாம்.

கனவில் தோன்றும் தீப லட்சுமி :

தீபம் ஏந்திய பெண் அல்லது மகாலட்சுமி நமது வீட்டிற்குள் வருவதுபோல் கனவுகண்டால் இல்லத்தில் பெரும் செல்வமுண்டாகும். இராமாயணத்தில் அசோகவனத்தில் சிறையிருந்த சீதையிடம் திரிசடை என்பவள் அவளுக்கு நன்மை யுண்டாக்கத்தக்க பல கனவுகளைத் தான் கண்டதாகக் கூறுகின்றாள். அவற்றிலொன்றாக ஆயிரம் தீபங்களைக் கொண்ட ஒரு பெரிய திருவிளக்கேந்தியவளாக திருமகள் இராவணனின் அரண்மனையிலிருந்து வெளியேவந்து வீபீஷணனின் அரண்மனைக்குள் சென்றாள் என்று கூறுகின்றாள். இதன் பயனாக இராவணன் மாண்டு விபீஷணன் இலங்கைக்கு அரசனானான் என்பர்.

மெய்கீர்த்தியில் :

வீரர்களின் தோளில் திருமகள் வீரலட்சுமியாகவும், ஜெயலட்சுமியாகவும் விளங்குகின்றாள். சோழர்காலக் கல்வெட்டுகள் கூறும் மெய்க்கீர்த்திகளில் அரசனின் தோளில் லட்சுமி குடிகொண்டிருப்பதை வீர ஜெயமாது வெல்புயத்திருப்ப என்றும், வெற்றித் திருமகள் வெல்புயத்திருப்ப (வீர, விஜய லட்சுமியின் தோளில் இருக்கும் படியாக) என்றும் பலவாறு குறிக்கப்பட்டிருக்கின்றன.

வாயிலில் :

வீட்டின் வாயிலில் லட்சுமி ஐந்து வடிவங்களில் வீற்றிருக்கின்றான். தலைவால்களை அமைக்கும் அளவுகளில் பஞ்சலட்சுமி லட்சணம் என்ற அளவு உள்ளது. விழா நாட்களில் தலைவாயில் மாவிலைத்தோரணம் கட்டுதல், பெரிய மாலைகளை அணிவித்தல் முதலியவற்றால் லட்சுமி மகிழ்ந்து அருள் புரிகிறாள்.

வெள்ளிக்கிழமையில்:

வெள்ளிக்கிழமை மாலையில் தாமரை வடிவிலான லட்சமி கோலம் போட்டு அதன்மீது ஐந்துமுக குத்துவிளக்கை ஏற்றி அதில் லட்சுமியை ஆவாகனம் செய்து தாமரைப் பூக்களால் பன்னிரு பெயர்களைக் கூறி அர்ச்சனை செய்து வந்தால் திருமகள் அருள் விரைவில் கிடைக்கும். இப்படி செய்யும் கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும்.

வில்வமரத்தில் :

வில்வ மரம் மகாலட்சுமியுடன் தோன்றியது. அந்த மரத்தில் லட்சுமி வசிப்பதால் அதற்கு லட்சுமி வாசம் என்று பெயர். வில்வமரத்தடியில் தாமரைத் தண்டு நூலிட்டு நெய்விளக்கேற்றி வழிபடச் செல்வம் உண்டாகிப் பெருகும்.

அனைத்துச் செல்வங்கள் :

உலகிலுள்ள அனைத்து செல்வங்களும் மகாலட்சுமியின் வடிவங்களேயாகும். அவளை விளைபொருட்களில் தான்யலட்சுமி. வீரர்களிடத்தில், வீரலட்சமி அரசர்களிடத்தில் சாம்ராஜ்யலட்சுமி பசுக்கூட்டத்தில் கோலலட்சுமி என்று அனேக பெயர்களில் உலகம் முழுவதிலும் நிறைந்திருக்கிறாள்.

தாமரை மலரில் :

தாமரையில் விரும்பி உறைவதால் தாமரையாள் பத்மா, பத்மவாசினி, பத்மினி, நளினி, நளினாசனி, கமலவல்லி, கமலினி, கமலா, நாண்மலராள், சரோஜா சரோஜாசனா என்று பல்வேறு தாமரைப்பெயர்களில் அவளை இலக்கியங்கள் குறிக்கின்றன.

கோலங்கள் :

வீட்டுவாயிலில் இடும் கோலங்கள் யாவும் மகாலட்சுமியின் யந்திரவடிவங்களேயாகும். அதில் அவள் கிரகலட்சுமியாக இருந்து நல்லவற்றை வரவேற்று, வீரலட்சுமியாக இருந்து தீமைகளை ஓட்டுகிறாள். கோலங்களுக்குக் காவிதீட்டுதல் நடுவில், சாண உருண்டை வைத்து அதன்மீது பூவைத்தல் யாவும் லட்சுமியைப் போற்றுவதேயாகும்.

வீரர்களிடம் :

வீரர்களிடத்தில் வீரலட்சுமியாக இருப்பதைப் போலவே கோழைகளிடத்தில் அதைர்யலட்சுமியாக இருக்கிறாள். பணக்காரர்களிடத்தில் ஐஸ்வர்யலட்சுமியாக, இருப்பதைப் போலவே வறிஞர்களிடத்தில் தரித்திலட்சுமியாக இருக்கிறாள். இப்படி ஒன்றுக்கொன்று எதிர்எதிர் நிலையிலும் அவள் போற்றப்படுகிறாள். அதர்வண வேதத்தில் ஒரே சமயம் நன்மையும் தீமையும் புரியும் இரண்டு வடிவங்களில் காட்சியளிக்கிறாள் என்ற குறிப்பு உள்ளது.

பாலும் தேனும் :

திருமகள் தேனையும் பசும்பாலையும் விரும்புகின்றாள். தாமரைமலர்களைப் பாலிலும் தேனிலும் தோய்த்து ஹோமத்தில் இடுகின்றனர்.

லட்சுமிதந்திரம் :

மகாலட்சுமியை வழிபடும பூஜை முறைகளை விளக்கும் நூல் லட்சமி தந்திரம் ஆகும். இதில் லட்சுமி தேவியின் யந்திரங்கள். ஆவரண தேவதைகள் மந்திரங்கள் வழிபாட்டு முறைகள் ஆகியவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

நந்தவனங்கள்:

பூத்துக் குலுங்கும் பூம்பொழில்களும் நந்தவனங்களும் லட்சுமியின் இருப்பிடங்களாகும். அவள் பூமகள், மலர்மகள், என்பதற்கேற்ப மலர்களை விரும்பிச் சூடுபவளாகவும், மலர்ச்சோலைகளில் வசிப்பவளாகவும் இருக்கிறாள். சதகநூல்கள் அவள் கடம்பமலர்களிலும், பூஞ்சோலைகளிலும் வீற்றிருக்கின்றாள் என்று கூறுகின்றன. இதைக் குறிக்கும் வகையில் திருக்கொள்ளம்பூதூர் வில்வாரண்யேசுவரர் ஆலய நந்தவனத்தில் மகாலட்சுமிக்கு ஆலயம் அமைந்திருக்கக் காணலாம்.

தீபங்கள்:

புதிய சக்திகளைப் பெற ஒன்பது தீபங்களை ஏற்றி வழிபடும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. இதனை தத்தம் சமயக் கொள்கைக்கேற்ப பல பெயர்களால் அழைக்கின்றனர். நடுவில் மகாலட்சுமியையும் சுற்றி எட்டு திக்கில் எட்டு லட்சுமிகளையும் குறிக்கும் வகையில் ஒன்பது தீபங்களை ஏற்றி வழிபட வாழ்வில் சகல ஐஸ்வர்யங்களும் உண்டாகும்.

கஜபூஜை :

யானைகள் செல்வத்தின் அடையாளமாகும். யானையை லட்சுமியாகப் போற்றுகின்றனர். பூஜைகளின் தொடக்கத்தில் செய்யப்படும் கஜபூஜையால் மகிழும் மகாலட்சமி அவ்விடத்தில் பரிவாரங்களுடன் எழுந்தருள்கிறாள் என்று நம்புகின்றனர். அவள் யானையின் பிளிறலால் மகிழ்வதால், பூஜையில் யானையைப் பிளிறச் செய்கின்றனர்.



மகுடலட்சுமி:

அரசாங்கத்திற்கும் அதை ஆளும் அரசனுக்கும் உரிய சின்னமாக விளங்குவது திருமுடி என்று சொல்லப்படும் மகுடமாகும். அரசுரிமை பெறுவதைப் பட்டம் சூடுதல் என்றழைக்கின்றனர். இவ்வேளையில் திருமகளின் வடிவமான திருமுடி அரசனின் தலையில் சூட்டப்படும். இவ்விழாவை பட்டாபிஷேக விழா, முடிபுனைவிழா, முடிசூட்டுவிழா என்று பலவாறு அழைக்கின்றனர். மகாலட்சுமியின் இருப்பிடங்களில் அரசமுடியும் ஒன்றாகும். இதில் அவள் இருக்கும் வரையில் தான் அரசன் சிறப்பாக ஆளமுடியும். இதை விட்டு நீங்கிவிட்டால் நாட்டில் துன்பமும் வறுமையும் சூழும். இதனால் லட்சுமியை மகுடலட்சமி என்று கூறுவர்.

செல்வராஜனான குபேரனின் மகுடத்தில் லட்சுமி நீங்காது வாசம் புரிகின்றாள். இதை நினைவூட்டும் வகையில் குபேரனின் திருவுருவங்களில் அமையும் கிரீடத்தில் கஜலட்சுமியின் திருஉருவம் பொறிக்கப்படுகிறது. காஞ்சீபுரம் ஜ்வரஹரேசுவரர் ஆலயத்தில் குபேரனின் பெரிய கல்திருமேனி உள்ளது. அவன் மகுடத்தில் கஜலட்சுமி அமைந்திருக்கிறாள்.



Sridevi : Stone : Mahabalipuram

(குடைவரைச் சிற்பம் - மகாபலிபுரம்)

குபேரலட்சுமி:

ஸ்ரீ சூக்தத்தின் ஏழாம் பாடல் மகாலட்சுமி தேவசகாவான குபேரனோடு வீற்றிருப்பவள் என்று கூறுகிறது. குபேரன் இந்திரனின் தோழன் என்பதால் தேவசகா எனப்படுகிறான். அவளிடம் குபேரன், சீர்த்தி, மணிபத்திரன் ஆகியோருடன் எழுந்தருள வேண்டுமென்று வேண்டப்படுகிறது.

மூன்று காலங்களில்:

காலையில் லட்சுமி வராக மூர்த்தியையும் நண்பகலில் லட்சுமி நாராயணரையும் மாலையில் லட்சுமி நரசிம்மரையும் வணங்கிவர லட்சுமி கடாக்ஷம் உண்டாகும். தடைகள் விலகி பொருள் வரவு மேம்பட்டு சுகம் உண்டாகும்.

பஞ்சலட்சமிப் பொருட்கள்:

பால், தேன், தாமரை தானியக் கதிர், நாணயங்கள் ஆகிய ஐந்தும் பஞ்சலட்சுமியின் அடையாளங்களாகும். இவற்றை தானமாக அளிக்க லட்சுமி மகிழ்கிறாள். குழந்தைகளுக்குப் பாலும் ஆலயங்களுக்கு தாமரையும் பெண்களுக்குத் தேனையும் ஆடவர்களுக்கு நாணயங்களையும், பறவைகளுக்கு தானியக் கதிரையும் வழங்கி வர அதிஷ்டம் உண்டாகும்.

ராஜ்யஸ்ரீ:

மாபெரும் மன்னர்கள் சாம்ராஜ்ய மகாலட்சுமியின் அருள்பெற்றவர்களாக போற்றப்படுகின்றனர். திருமகள் அருள் பெற்ற அரசர்களை மக்கள் திருமாலின் அவதாரமாகவே போற்றினர். திருவுடை மன்னரைக் காணும் போதெல்லாம் திருமாலைக் கண்டேனே என்ற ஆழ்வார் அருளிச் செய்திருப்பது. இங்கே எண்ணத்தக்கதாகும். வீரர்களின் தோள்களிலும், வாள்களிலும் தைர்யலட்சுமி பிரகாசிக்கிறாள். உன்னதமான மனோதைர்யத்தினாலேயே மன்னர்கள் மாபெரும் சாம்ராஜ்யங்களை உருவாக்கி அவற்றைக் காப்பதுடன் பகைவர்களை அடக்கி அரசாள்கின்றனர். தனது மனோதைர்யத்தினாலேயே கடல் கடந்து சென்று போரிட்டு வெற்றிபெற்றுத் தனது சாம்ராஜ்யங்களை விரிவுபடுத்தி உள்ளனர்.

மோட்சலட்சுமி:

அரசர்களுக்குச் சாம்ராஜ்யம் பூ மண்டலத்தில் இருப்பதைப் போலவே ஞானிகளின் மோட்சசாம்ராஜ்யம் பரவெளியில் நிலைபெற்றுள்ளது. மனோதைர்யம் உலக விவகாரங்களில் பிரகாசிக்கும் போது அளவற்ற ஆற்றலைத் தந்து வெற்றியையும், சுகபோகங்களையும் தருகிறது. இந்த தைர்யத்தால் வீரம் வெளிப்பட்டு சாம்ராஜ்யங்கள் நிறுவப்படுகின்றன. மனோதைர்யம் ஞானவான்களிடம் பிரகாசிக்கும் போது மோட்ச சாம்ராஜ்யத்திற்குத் திறவு கோலாகிறது. ஞானிகள் வைராக்கிய திடசித்தத்தால் கடுமையான தவயோக சாதனைகளைச் செய்கின்றனர். உலகப்பற்று எனும் மாயா பாசங்களை ஞானவாளால் வெட்டித் தள்ளி இறுதியில் எல்லையற்ற இன்ப வீடாகிய மோட்சத்தை அடைகின்றனர். இதற்கு உதவும் வைராக்ய மனோன்மணியான மகாலட்சுமி முத்திலட்சுமி (மோட்சலட்சுமி) எனப்படுகிறாள்.

மன அமைதிக்கு:

மனம் அடிக்கடி சஞ்சலப்பட்டு துன்பம் உண்டானால் அதை நீக்க சந்திரனை வழிபடவேண்டும். சந்திரன் மகாலட்சுமியின் சகோதரன். வீரலட்சுமியின் அருளால் மனோதைர்யம் உண்டாவதுடன் மன அமைதியும் உண்டாகும். பானகத்தை லட்சுமி நரசிம்மருக்கு நிவேதனம் செய்து அன்பர்களுக்கு அளித்தால் பயம் விலகும்.

அன்னலட்சுமி:

தான்யங்களை உண்பதற்காகப் பக்குவப்படுத்திச் சமைக்கின்றனர். சமைக்கப்பட்ட உணவை அன்னலட்சுமி என்று அழைக்கின்றோம். இவள் உயிர்களுக்குப் போதும் என்ற மனநிறைவை வார்த்தைகளால் வெளியிடச்

★ நன்றி : இப்பகுதி யாவும், 1. அரம்பையீசுவரர், 2. ஸ்ரீ மகாலட்சுமி, 3. திருமாமகள், 4. ஐஸ்வர்ய மகாலட்சுமி நூல்.

செய்வதால் அன்னபூரணி என்று அழைக்கப்படுகிறாள். இந்நிலையில் சிங்கவாகனத்தில் அன்ன பாத்திரம் சட்டுவத்துடன் காட்சியளிக்கின்றாள். பண்டைக்கால மன்னர்கள் வெளியிட்டுள்ள காசுகளில் அன்னலட்சுமி அட்சய பாத்திரத்துடன் சிங்கத்தின் மீது காட்சியளிக்கின்றாள்.

திருமால் ஆலயங்களில் திருவமுது சமைக்கும் இடமான மடைப்பள்ளியில் திருமகள் அன்னலட்சுமியாக வீற்றிருக்கின்றாள். இவள் தன் கையாலேயே உணவைச் சமைத்து பெருமாளுக்கு அமுதூட்ட இங்கு வீற்றிருக்கிறாள் என்பர். இவளை மடைப்பள்ளி நாச்சியார் என அழைக்கின்றனர். திருவமுது சமைக்கப்பட்டதும் இவள் முன்வைத்து அனுமதி பெற்ற பிறகே பெருமாளைத் திருக்கண்டருளச் செய்வது வழக்கம் என்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

உணவை வீணாக்கக் கூடாது. பிண்ணாக்கு போன்ற சக்தியற்ற உணவுப் பொருட்களை உண்ணக் கூடாது. வயிற்றில் பாதி உணவு, கால்பங்கு நீர், கால்பங்கு காற்று இருப்பதுபோல் பார்த்துக் கொள்ள வேண்டும். வேளை தவறி உண்ணுவதைத் தவிர்க்க வேண்டும். சுத்தமான உணவையே உண்ண வேண்டும். விரத காலங்களில் வெளியிடங்களில் சாப்பிடக்கூடாது.

நாணயங்களில் லட்சுமி :

மகாலட்சுமி செல்வத்தின் அதிபதி, காசுகளில் (நாணயங்களில்) அவளுடைய உருவத்தை அமைக்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. பழங்கால இந்திய நாணயங்கள் பலவற்றில் லட்சுமியின் பல்வேறு வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. கங்க அரசனான (கஜ்பெய்தன்) கஜேஷ்டா என்பவனுடைய நாணயத்தில் இருபுறமும் யானைகள் நீராட்ட லட்சுமி தாமரை மலரில் வீற்றிருக்கும் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. கி.மு. முதல் நூற்றாண்டில் அரசு செலுத்திய அயோத்தி அரசனான வாயுதேவன் விசாகதேவன் சிவதத்தனுடைய நாணயங்களில் கஜலட்சுமியின் பல்வேறு வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய இதே காலத்தில் வடமதுரையில் கண்டெடுக்கப்பட்ட கோமித்திரர், பிரம்மமித்திரர், கோசாதத்தர் முதலிய அரசர்களின் நாணயங்களிலும் லட்சுமியின் வடிவம் இடம் பெற்றுள்ளது. இந்தியாவில் மட்டுமின்றி அஸீஸஸ், இரண்டாம் ஆஸஸ், ஆகாமஸா முதலிய கிரேக்க அரசர்களின் நாணயங்களிலும் மகாலட்சுமி இடம் பெற்றிருந்தாள்.

இக்காலத்திலும் கால் சவரன், அரைசவரன் முதலிய தங்கக் காசுகளில் கஜலட்சுமியின் வடிவம் பொறிக்கப்படுகிறது. காசுமாலை எனப்படும் (காசுகளை வரிசையாகக் கோர்த்துப் பின்னிய) தங்க, வெள்ளி ஆபரணங்களில் இடம் பெற்றுள்ள காசுகளிலும் லட்சுமியின் வடிவம் அச்சிடப்படுகிறது.

வெள்ளிக் கிண்ணத்தில் காசுகள் :

வெள்ளிக்கிண்ணத்தில் காசுகளை நிறைத்து அதையே தனலட்சுமியாக வழிபடலாம். வணிகர்கள் இப்படி காசு நிரம்பிய கிண்ணத்தை தாமரை மலரால் வழிபட்டு அதிலிருந்து சில நாணயங்களை எடுத்துச் சென்று வியாபாரத்தைத் தொடங்க நிறைந்த லாபம் உண்டாகும். இரவில் சிலகாசுகளை கிண்ணத்தில் இட்டு அவளுக்கு நன்றி செலுத்தி வழிபட வேண்டும்.

திருமகளின் குமாரத்திகளான வள்ளி-தெய்வானை :

தென்னிந்திய புராணங்களின்படி லட்சுமிக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். ஒருமுறை திருமாலின் கண்களிலிருந்து இரண்டு நீர்த்துளிகள் தோன்றின. அவற்றில் தனது உருவம் பிரதிபலிப்பதைக் கண்ட திருமக அவ்வுருவங்களிலிருந்து இரண்டு பெண் குழந்தைகளைத் தோற்றுவித்தாள். அக்குழந்தைகள் அமுதவல்லி, சுந்தரவல்லி என்று அழைக்கப்பட்டனர். அவர்களோடு மகாலட்சுமி விளையாடி மகிழ்ந்தாள். ஐராவதம் அவளை மிகவும் அன்புடன் வளர்த்தது. அதனால் தெய்வானை என்றும் அழைக்கப்பட்டாள்.

சூரசம்காரத்திற்குப் பின்னர் ஒரு பஞ்சமிநாளில் மகாலட்சுமியின் ஆணைப்படி தெய்வானையை இந்திரன் முருகனுக்கு அளித்தான். மறுநாள் சஷ்டியன்று முருகனுக்கும் சஷ்டிதேவியாகிய தெய்வானை எனும் தேவ சேனாவுக்கும் திருமணம் நடைபெற்றது. இதையொட்டி கார்த்திகை மாதப் பஞ்சமி, ஸ்ரீ பஞ்சமி என்றும் சஷ்டி மகாதிதி என்றும் அழைக்கப்படுகின்றன.

திருமகள் அருளால் தோன்றிய மற்றோர் பெண்ணான சுந்தரவல்லி கடும் தவம்புரிந்தாள். மான் வடிவில் திகழ்ந்த திருமகளின் வயிற்றில் மீண்டும் பிறந்து வேடர்களால் வள்ளி என்று பெயர்சூட்டிவளர்க்கப்பட்டு முருக மூத்தவளான அமுதவல்லி தவத்தால் சஷ்டி தேவியானாள். ஆறுமுகம் படைத்த அவள் கார்த்திகேயனை நோக்கி மேலும் தவம் செய்தாள். அதன் பயனால் திருமகளுக்கே மீண்டும் மகளாகத் தோன்றினாள். அப்பெண்ணை திருமகள் அன்புடன் வளர்த்து பின்னர் இந்திரனுக்கு மகளாக அளித்தாள். அவன் அவளுக்கு தேவசேனா என்று பெயரிட்டு வளர்த்தான். கற்பக மரத்தின் கீழ் தெய்வயானையயானனைக் காதலித்து மணம் புரிந்து கொண்டாள். இப்படித் திருமகளின் இரண்டு பெண்களும் முருகனைத் திருமணம் புரிந்து கொண்டதால் அவள் முருகனின் மாமியாராகப போற்றப்படுகிறாள்.

திருமகளின் முதல் பெண்ணாகிய சஷ்டி தேவி குழந்தைகளின் கடவுளாகப் போற்றப்படுகிறாள். குழந்தைகளை நோய் நொடியிலிருந்து காப்பவள் என்று புராணங்கள் அவளைத்துதிக்கின்றன. இவளை லட்சுமி ஆசா, சினிவாலீ, குஹூ எனப்பலவாறு மகாபாரதம் அழைக்கிறது. யௌதேய குடியரசு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வெளியிட்ட வெள்ளி நாணயங்களில் ஒரு பக்கம் ஆறு தலைகளுடன் வேல்தாங்கிய கார்த்திகேயனாகிய முருகனையும் மறுபக்கத்தில் தாமரையில் நிற்கும் லட்சுமியையும் பொறித்துள்ளனர்.

அட்சர அப்யாசம் :

கல்வியின் பயன் பொருளையும் உணவையும் தேடுவதேயாகும். ஆதலால் குழந்தைகளுக்கு கல்வித் தொடக்கம் செய்யும்போது தானியத்தைப் பரப்பி அதில் பொற்காசால் ''அ'' என்று எழுதச் செய்கின்றனர். இதனால் திருமகளின் அருளுடன் கலைமகளின் அருளும் நிறைவாகக் கிடைக்கும் என்றும் நம்புகின்றனர்.

கோலபுர நாயகி:

மிகவும் சாந்தமானவளாகச் சித்தரிக்கப்படும் மகாலட்சுமி வேண்டியபோது வீரத்திருமகளாகவும் வடிவம் கொள்கிறாள். அவள் கோலாசூரனை அழித்ததைப் புராணங்கள் சிறப்புடன் பேசுகின்றன. பன்றிமுகம் கொண்ட அசுரனை அவனை உக்கிரமயமான போரில் கொன்றாள். இதையொட்டி மகாலட்சுமி அஷ்டகத்தில் கோலாசுர பயங்கரி என்று புகழப்படுகிறாள். தோற்றுமாண்டு விழும்போது அந்த அசுரன் திருமகளிடம் தாயே இப்பட்டினம் என் பெயரால் விளங்கவேண்டும். நீ இதில் நீங்காது வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள் பாலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அந்த நகரமே இந்நாளில் கோலாப்பூர் என்றழைக்கப்படுகிறது. இங்கு மகாலட்சுமி ஆலயம் சிறப்புடன் விளங்குகிறது. இதில் மகாலட்சுமி மற்ற தலங்களில் இருப்பது போல் இல்லாமல் வில், வாள், கேடயம், வில்வப்பழம் ஆகியவற்றுடன் காட்சியளிக்கிறாள். அவளுடைய உச்சியில் அழகிய சிவலிங்கம் உள்ளது. இந்நகருக்குச் செல்லும் இருப்புப்பாதை வண்டிகளில் ஒன்றுக்கு மகாலட்சுமி எக்ஸ்பிரஸ் என்பது பெயர்.

காசிக் கண்டத்தில் அகத்தியர், கொல்லாபுரத்திற்கு வந்து இவள்மீது லட்சுமி பஞ்சகத்தைப் பாடினார். என்றும் அதைக் கேட்ட திருமகள் அவருக்கு அளவற்ற செல்வத்தை அளித்தாள் என்றும் கூறப்பட்டுள்ளது.

குழந்தை பாக்கியம் கிடைக்க :

ஏழைக் குழந்தைகளுக்கு நல்லெண்ணையும் பாலும், அளிப்பது உயர்ந்த தருமமாகும். வாரத்தில் ஒரு நாளாவது சில குழந்தைகளுக்கு பால் அளிக்க வேண்டும். திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் காலையில் மகாலட்சுமிக்கு பால் நிவேதனம் செய்து குழந்தைகளுக்கு அளித்துவர வீட்டில் குழந்தைச் செல்வம் உண்டாகும். குழந்தைகளை நோய் அணுகாது.

கெட்ட கனவு நீங்க :

தொடர்ந்து கெட்ட கனவுகள் தோன்றினால் அரசமரம், தீர்த்தக்குளம், மலை ஆகியவற்றில் ஒன்றைச் சுற்றி வரவேண்டும். அப்படி செய்தால் அவை மீண்டும் தோன்றாது. வரும் தீங்குகளும் நன்மையாகவே முடியும். லட்சுமிபஞ்சகம், லட்சுமி அஷ்டகம் முதலிய ஏதாவது ஒரு தோத்திர நூலைப் பாராயணம் செய்ய வேண்டும்.

இனிப்பில் இருப்பவள் :

இனிப்புப் பொருட்களின் மீது மகாலட்சுமிக்கு மிகவும் பிரியம். திருமணங்கள், வேள்விச்சாலைகள் முதலானவை திருமகளின் இருப்பிடங்கள் என்பதால் அங்கு வரும் அன்பர்களுக்கு இனிப்புகளை வழங்க வேண்டும். திருமணங்களில் லட்டு கொடுப்பது திருமகள் அருள்பெறுவதைக் குறிப்பதாகும்.

ஸ்ரீ வத்ஸம் :



மகாலட்சுமியின் திருவடிவங்களில் ஒன்று ஸ்ரீவத்ஸமாகும். இதனைத் திருமறு என்றும் கூறுவர். ஆதியில் லட்சுமியின் வடிவத்திற்குப் பதில் இந்த குறியீட்டையே மக்கள் வணங்கி வந்தனர். பல இடங்கில் விசிரிப்பாறை என்ற பெயரில் இவை இன்றும் வணங்கப்படுகின்றன. இரண்டு யானைகளுக்கு இடையே அமைந்த இந்த குறியீட்டின் வளர்ச்சியே பின்னாளில் கஜலட்சுமியாக உருவம் பெற்றதென்பர். செங்கல்பட்டு மாவட்டம் கரிவேடு என்னுமூரில் கிராமதேவதை ஆலயத்தில் கல்லில் செய்யப்பட்ட ஸ்ரீவத்சங்கள் வழிபாட்டில் இன்றுமுள்ளன.

காலப்போக்கில் இதற்குப் பதிலாக முக்கோணத்தை அமைக்கும் வழக்கம் வந்துவிட்டது. திருமாலின் மார்பில் திருமகள் உறைவதைக் குறிக்கும் வகையில் திருமால் சிலைகளின் மார்பில் முக்கோணம் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அஷ்டமங்கலம் எனப்படும் எட்டு மங்கலப் பொருள்களில் ஒன்றாகவும் ஸ்ரீவத்சம் விளங்குகின்றது. கும்பாபிஷேகம் போன்ற பெரிய வழிபாடுகளில் அஷ்டமங்கலங்களை தேவப்பெண்கள் ஏந்தியிருப்பதாக ஓவியம் தீட்டி யாகசாலையில் வைத்து மந்திரப்பூர்வமாகப் பூசிப்பர். இந்த எட்டுமே திருமகளின் வடிவமாக இருந்தாலும் ஸ்ரீவத்சம் தனிச்சிறப்புடன் போற்றப்படுவதுடன் அதில் லட்சுமியின் வடிவமும் இடம் பெற்றுள்ளது.

அஷ்டமங்கலம் என்பது ஸ்வதிகம். வெண்கவரி (இரட்டைச் சாமரங்கள்), பூர்ணகும்பம், அடுக்குதீபம், இடபம், வலம்புரிச்சங்கு, ஸ்ரீவத்சம், குடை என்ற எட்டாகும். இவையாவுமே திருமகளின் இருப்பிடங்களாகும்.

நாகலட்சுமி:

நாகம் என்பது பாம்புகளுக்கும், யானைகளுக்கும் உள்ள பொது பெயராகும். பாதாள உலகில் நாகலோகத்தில் நாகர்களுடன் யானைகளும் வசிப்பதாகக் கூறப்படுகிறது. சூடான நாட்டுப் புராணங்களில் அனந்தபோகன் எனும் நாகமன்னனின் கண்ணீர்த் துளிகளில் இருந்து லட்சுமி பிறந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அவள் பிறந்ததும் அவளை யானைகள் திருமுழுக்காட்டின் கிருஹ்யசூத்திரம் எனும் நூல் ஸ்ரீலட்சுமியை நாகர்களும் தேவர்களும் புடைசூழ முன்னே வரவேண்டுமென்று வேண்டுகிறது. நாகங்களுக்கிடையேயும் லட்சுமியை வைத்தும் வணங்குகின்றனர். நாகலட்சுமி மலட்டுத்தன்மை நீக்கிப் புத்திரப்பேற்றை அளிப்பதாக நம்புகின்றனர்.

நாகபஞ்சமி வழிபாடு :

நாகபஞ்சமியன்று நாக வாகனத்தில் மகாலட்சுமியை அமர்த்தி பால் கொழுக்கட்டை பாயசம், முதலியவற்றைப் படைத்து நீலமணிகள், நீல ஆடைகள், ஆகியவற்றை தானம் செய்தால் புத்திரப்பேறு உண்டாகும். குழந்தைகளுக்கு அடிக்கடி நோய்வந்து துன்பப்படுத்தாது. அன்று குடசம்பங்கிப் பூக்களை இட்டுவழிபட குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும்.

பானகமும் நீர் மோரும் :

பானகமும், நீர்மோரும், தெய்வீகத்தன்மை கொண்டவை. இவை லட்சுமியோடு தொடர்புடையவை. பானகம் வெல்லத்தால் தயாரிக்கப்படுகிறது. பாலிலிருந்து பெற்ற மோருடன் கடலிலிருந்து பெற்ற உப்பைச் சேர்த்து நீர்மோர் தயாராகிறது. இவற்றை பக்தர்களுக்கு அளிக்கும்போது அவர்கள் மனமும் உடலும் குளிர்ச்சி அடைவதுபோல் நமது வாழ்விலும் இன்பம் உண்டாகும்.

தாமரைக்குளம் :

தாமரை மலர்கள் பூத்துக்குலுங்கும் பெரிய குளம் மகாலட்சுமியின் வடிவமாகும். இந்தக் குளத்தை வலம் வந்து இதிலுள்ள மீன்களுக்கு பொரி, அவல் முதலியவற்றை இட லட்சுமி கடாட்சம் உண்டாகும். மாலையில் ஐந்து அகல்களில் நெய்விளக்கேற்றி இந்தக் குளத்து நீரில் விட்டு வழிபட குலதெய்வங்களின் அருள் கிடைக்கும்.

பன்னீர் :

மங்கல நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் அங்கு வரும் எல்லோருக்கும் பன்னீர் தெளித்து. சந்தனத்துடன் பூவும் கொடுக்க வேண்டும். சந்தனம் திருமகளோடு பிறந்த ஐந்து மரங்களில் ஒன்றாகும். அவளை யானை துதிக்கையால் நீராட்டுவதை பன்னீர் தெளித்தல் குறிக்கிறது. இதனால் லட்சுமிதேவி அந்த நிகழ்ச்சியை நலம்பெறச் செய்கிறாள்.

மூன்று சந்திகளில் :

காலைச் சூரியனுக்கு நடுவில் வாணி சரஸ்வதியுடன் பிரம்மாவும், நண்பகல் சூரிய மண்டலத்தில் ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவியுடன் விஷ்ணுவும் மாலையில் சிவந்து காணப்படும். சூரியனில் உமாதேவியுடன் சிவபெருமானும் உள்ளனர். இவர்களை வழிபட்டுத் தியானிப்பதால் மனதில் உற்சாகமும் செயல்களில் சிறப்பும் மன அமைதியும் உண்டாகும்.

உப்பின்வடிவமானவள் :

உப்பு மகாலட்சுமியின் வடிவமாகும். அது கடலிலிருந்து அவளைப் போலவே பிறந்தது. வாழ்க்கை சிறக்க செல்வம் வேண்டுவது போல் உணவு சிறக்க உப்பு அவசியம். பணத்தைப் போலவே இரவில் உப்பை இரவலாகவோ, கடனாகவோ தருவதில்லை. கோயில்களில் உப்பை கொட்டக்கூடாது. உப்புடன் மிளகை இட்டு வைப்பது நல்லது.

கார்த்திகையும் மார்கழியும் :

குளிர்ச்சி மிகுந்த கார்த்திகையும், மார்கழியும் திருமகளுக்குரிய மாதங்களாகும். கார்த்திகை மாத பஞ்சமி ஸ்ரீபஞ்சமி என்று அழைக்கப்படுகிறது. இம்மாதங்களில் வீட்டுவாயிலில் இரண்டுபுறமும் அகல் விளக்கேற்றி வைக்க வேண்டும். இதனால் வீட்டில் செல்வநிலை உயருவதுடன் மன அமைதியும் உண்டாகும்.

மெழுகுதலும் கோலமும் :

வீட்டின் முற்றத்தில் சானத்தால் மெழுகுதல் கோலமிடுதல் அதில் பூக்களை வைத்தல் யாவும் மகாலட்சுமியை வீட்டிற்குள் வரவேற்கும் அமைப்பாகும். காலையில் தலைவாயிலைத் துடைத்து படியில் கோலமிட்டு இரண்டு புறமும் பூக்களை வைத்து லட்சுமியைத் துக்க வேண்டும்.

கிரகலட்சுமி:

அழகு, அறிவு, அடக்கம், ஒழுக்கம், பக்தி ஆகிய ஐந்தாலும் நிறையப் பெற்ற பெண்ணால் வீடு சிறப்படைகிறது. அவளால் மேன்மையும், புகழும், மகிழ்ச்சியும் உண்டாகின்றன. அவளிடத்தில் லட்சுமிவாசம் செய்கின்றாள். அவளைக் கிரகலட்சுமி என்று போற்றுகின்றனர். அவளால் மனையில் செல்வம் பெருகுகின்றது. வயல்களில் தான்யம் நிறைய விளைகின்றது. தொழுவத்தில் பசுக்கள் நிறைந்து பால் பெருகுகிறது. பல வளமும் நலமும் சேர்கின்றன என்று புராணங்கள் கூறுகின்றன.

வீட்டுக்குத் திருமணமாகி வரும் புதுமணப்பெண்ணை மகாலட்சுமியாகவே கொள்கின்றனர். அவளிடம் வீட்டில் வழிவழியாக ஏற்றப்பட்டுவரும் காமாட்சி விளக்கைக் கொடுத்து வரவேற்பது வழக்கம். சில இடங்களில் தானியங்கள் நிரம்பிய பாத்திரத்தை வாயிலில் வைத்திருப்பர். புதுமணப் பெண் வீட்டினுள் வரும்போது அவளுடைய வலது கால்பட்டு அப்பாத்திரத்திலுள்ள தான்யங்கள் வீட்டின் உள்ளே சிதறும்படிச் செய்வர். இது வரும் மருமகளால் அந்த வீட்டில் தானியங்கள் பெருக வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுவதாகும்.

கேரளாவில் நெல் தானியங்கள் நிறைந்த (பறை) பாத்திரத்தை வீட்டிற்குள்வரும் மண மகளிடம் கொடுப்பர். அவள் அதை எடுத்துச் சென்று வீட்டினுள் வைத்து விளக்கேற்றி வழிபடுவாள். இதன் மூலம் அவளால் வீட்டில் தான்யங்கள் நிறைவதுடன் ஒளியும் அமைதியும் உண்டாகும் என்று நம்புகின்றனர்.

அன்பர்களின் திருமேனியில் வீற்றிருக்கும் திருமகள் :

அர்த்த சாஸ்திரத்தில் சாணக்கியர் மனிதர்களின் உடலில் எட்டுவிதமான பெயர்களுடன் மகாலட்சுமி விளங்குகின்றாள் என்று குறித்துள்ளார். இதனை பூஜா பக்தி நூல்களில் இணைத்துக் கொண்டுள்ளனர். மகாசங்கல்பத்தின் போதும் ஆசீர்வாதத்தின் போதும் இடையே இந்தப் பாடலும் கூறப்படுகிறது. அது.

பத்ராப்ஜே பக்ய லக்ஷ்மி
கரதலகமலே சர்வதா தான்யலட்சுமி
த்தோர் தண்டே வீரலக்ஷ்மி
ஹ்ருதய ஸரஸஜே பூர்ணகாருண்யலக்ஷ்மி
ஜ்வாஹ்ரே ஸத்ய லக்ஷ்மி
ஸரச குணகண டம்பரே கீர்த்தி லக்ஷ்மி
ஸர்வாங்கே சௌம்ய லக்ஷ்மி
மம மனஸி ஸதா சர்வ சாம்ராஜ்ய லக்ஷ்மி

என்பதாகும். இதன் பொருள் பக்தர்களில் இருதய கமலத்தில் பாக்யலட்சுமியாகவும் கரங்களாகிய கமலமலர்களில் எல்லாவிதமான தான்ய லட்சுமியாகவும் வீரபுஜங்களில் வீரலட்சமியாகவும், இருதய கமலத்தில் நிறைவான கருணை சத்யலட்சுமியாகவும் மேலான குணங்களினால் கீர்த்திலட்சுமியாகவும் உடல் முழுவதிலும் அழகைக் கொடுக்கும் சௌம்யலட்சுமியாகவும் இருக்கும் லட்சுமி எனது மனதை விட்டு நீங்காத சர்வசாம் ராஜ்யலட்சுமியாகவும் விளங்குகின்றன.

12 திருநாமாக்கள் :

இடைவிடாத பொருள் வரவு. நிலையன உடல்நலம், அன்பான மனைவி, இதமாகப் பேசி நன்மையடையச் செய்யும் நண்பன். கீழ்படிந்து நடக்கும் மகன். செல்வத்தைத் தேடித் தரும் படிப்பு ஆகியவை இன்பத்தைத் தருவதாகும். இந்த ஆறையும் அடைந்தவன் ஸ்ரீ லட்சுமி யோகம் படைத்த வனாவான். இவற்றை அடைய மகாலட்சுமியின் பன்னிரெண்டு நாமங்களை மூன்று சந்திகளிலும் சொல்லி வணங்க வேண்டும்.

துவாதச நாமாக்கள் : (லட்சுமியின் 12 பெயர்கள்)

மகாலட்சுமியின் பெயர்களில் முதன்மையானது ஸ்ரீதேவி என்பதாகும். இதற்கு சகல ஐச்வர்யங்களுக்குப் உரிய தேவதையாக விளங்குபவன் என்பது பொருளாகும். இரண்டாவது பெயர் அம்ருதோத்பவா. (அமுதத்தோடு பிறந்தவள்), மூன்றாவது பெயர் கமலப்ரோக்தா (தாமரையில் இருப்பவள்), நான்காவது பெயர் சந்திரசோதரா (பாற்கடலில் சந்திரனுடன் பிறந்தவளாதலின் சந்திரனின் சகோதரி எனப்பட்டாள்). ஐந்தாவது பெயர் விஷ்ணு பத்னி

(எங்கும் வியாபித்து நிற்கம் விஷ்ணுவின் மனைவி), ஆறாவது பெயர் விஷ்ணு வல்லபா (விஷ்ணுவாகிய திருமாலின் சாமர்த்தியமாக இருப்பவள்), பெயர் வரத்தை வழங்குபவள் எட்டாவது பெயர் ஹரிவல்லபா (ஹரியாகிய திருமாலின் வலிமையாக இருப்பவள்) ஒன்பதாவது பெயர் சாரங்கிணப் ரோக்தா (சாரங்கம் என்ற வில்லை ஏந்துபவள்) பத்தாவது பெயர் தேவதேவிகா (தேவர்கள் அனைவருக்கும் தலைவியான மகாதேவியாக இருப்பவள். பதினொன்று பெரும் செல்வத்தைப் படைத்தவள் பன்னிரண்டாவது பெயர் லோக சுந்தரி (மூன்று உலகங்களிலும் காணமுடியாத பேரழகியாக விளங்குபவள் என்பதாகும்.

இதைத் தொடர்ந்து மேலும் மகாலட்சுமியின் பன்னிரண்டு திருப்பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றின் பொருளை இனிக்காணலாம். இறுதியில் இந்த 12 பெயர்களைச் சொல்வதால் உண்டாகும் பயனும் சொல்லப்பட்டுள்ளது.

1. ஸ்ரீ (செல்வத்தை உடையவள்) 2. பத்மா (தாமரையில் உள்ள செல்வியும்) 3. கமலா (தாமரை மலராக விளங்குபவளும்) 4. முகுந்த மஹிஷீ (முகுந்தநாகிய திருமாலின் மனைவியும்)5. லக்ஷ்மி (லக்ஷணங்களும் நிறைந்தவளும்) 6. திருலோகேஸ்வர (மூன்று உலகங்களின் தலைவியும்) 7. மா பெருமைக்குரியவள் 8. ஷீராப்திஸுதா (பெரிய பாற்கடலின் மகளாக இருப்பவளும்)9. விரிஞ்சஜனனி (பிரம்மனைப் பெற்று அதனால் உலகினைப் படைப்பவளும் 10. வித்யா (அறிவின் நுணுக்கமாக இருப்பவளும்) 11. ஸரோஜன்யாசனா (தாமரையை ஆசனமாக உடையவளும் 12. ஸர்வாபீஷ்டபலப்ரதா (சகல விருப்பங்களையும் நிறைவேற்றி வைப்பவளம்) என்கின்ற இந்த பன்னிரண்டு பெயர்களைச் சொல்லி மகாலட்சுமியை இடையறாது எப்போதும் துதிக்கின்றேன். அவள் சுகங்களையும், சகலசெல்வங்கள்ளையும் அடையச் செய்து எல்லா மங்கலங்களையும் அருள்கின்றாள்.

ஸ்ரீமகாலட்சுமி கவசத்தின் இறுதியிலும் மகாலட்சுமியின் பன்னிரண்டு பெயர்கள் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

மகாலட்சுமி பீடம்:

காசி நகரில் மகாலட்சமி பீடம் உள்ளது. அங்கு சித்தலட்சுமி ஆலயம் தாமரைப் பூவடிவில் இருந்ததாகக் காசிக்கண்டம் கூறுகிறது. அதனருகில் லட்சுமி குண்டம் என்ற தீர்த்தம் உள்ளது. ஐப்பசி மாத அஷ்டமியில் மஹாலட்சுமி பீடத்தை தாமரைப் பூக்களால் அர்ச்சித்து இனிப்புகளை வழங்கினால் லட்சுமி கடாட்சம் உண்டாகும். அவர்களை லட்சுமி பிரியாது இருப்பாள். காசியில் மஹாலட்சுமியால் பூசிக்கப்பட்ட லிங்கம் மஹாலட்சுமீசுவரர் எனும் பெயரில் உள்ளது.

மகாலெட்சுமியும் வில்வமும்:

வில்வமரக் காட்டில் லட்சுமி அவதாரம் செய்தாள் என்று கூறப்படுகிறது. சதஸ்ரநாமம் வில்வநிலையாயை (வில்வத்தில் நிலை பெற்றிருப்பவள்) என்று போற்றுகின்றது. வெள்ளிக்கிழமைகளில் லட்சுமியை வில்வத்தால் அர்ச்சிப்பவர்கள் சகல செல்வங்களையும் பெறுவார்கள். சதக நூல்களில் லட்சுமியின் இருப்பிடமாக வில்வமரமும் கூறப்பட்டுள்ளது. வில்வமரத்திற்கு லட்சுமி வாசம் என்பது பெயராகும்.

கயிலாயத்தில் :

மகா கயிலாயத்தில் அமைந்துள்ள சிவபெருமானின் கோயிலுக்கு எட்டு திசைகளிலும் எட்டுவாயில்கள் உள்ளன என்று சிவமகாபுராணம் கூறுகிறது. இவற்றில் நான்கு பெரும் திக்குகளான கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கியுள்ள மகாவாயில்களுக்கு முறையே ஸ்ரீதுவாரம், லட்சுமித்துவாரம் வாருணித்துவாரம், கீர்த்தித்துவாரம் என்ற பெயர்கள் வழங்குகின்றன. இதில் குறித்த ஸ்ரீ லட்சுமி வாருணி, கீர்த்தி ஆகியவை மகாலட்சுமியின் பல்வேறு பெயர்களாகும்.



பதினெட்டு கரங்களோடு அருளும் **ஸ்ரீ மகாலட்சுமி துர்க்கை** (வேறு வகை சுதைச் சிற்பம்)

செட்டி நாட்டில் :

செட்டிநாட்டுப் பகுதியில் அமைந்துள்ள வீடுகளில் திருநிலையை (நிலைப்பட்டியை) மிகுந்த வேலைப்பாடுகளுடன் அமைத்துள்ளனர். அதன் மேற்பகுதியில் கஜலட்சுமி உருவம் மிகுந்த கலைச்சிறப்புடன் திகழ்கிறது. கஜலட்சுமியுடன் இரபுறமும் கவரி வீசம் பெண்கள் ஆலவட்டம் வீசும் பெண்கள், ஆகியோரையும் அமைத்துள்ளனர்.

சிவாலய துவாரபூஜை :

சிவாலயங்களில் தினசரிப் பூஜையின் தொடக்கத்தில் செய்யப்படும் துவாரபூஜையில் வாயிற்படியின் மீதுள்ள மகாலட்சுமிக்குச் சிறப்புடன் பூஜை செய்யப்படுகிறது. குடமுழுக்கு விழாவின் போது அமைக்கப்படும் யாகசாலையின் நாற்புறவாயில்களின் மீதும் மகாலட்சுமியுடன் விநாயகர், சரஸ்வதி, ஆகியோரையும் அமைத்துச் சிறப்பான பூசைகள் செய்யப்படுகின்றன.

வீட்டுவாயில் :

வீட்டின் வாயிலில் லட்சுமி ஐந்து வடிவங்களில் வீற்றிருக்கின்றாள். தலைவாயில்களை அமைக்கும் அளவுகளில் பஞ்சலட்சுமி லட்சணம் என்ற அளவு உள்ளது. விழா நாட்களில் தலைவாயில் மாவிலைத்தோரணம் கட்டுதல், பெரிய மாலைகளை அணிவித்தல் முதலியவற்றால் லட்சுமி மகிழ்ந்து அருள் புரிகிறாள்.

வாகனயோகமும் விபத்து நீங்கவும் :

தேர்கள் லட்சுமியின் வடிவங்களாக இருப்பதால் தேரோட்டம் நடைபெறும் இடங்களுக்குச் சென்று தேர்ச் சக்கரங்களுக்கிடையில் சிதறு தேங்காயை உடைக்க வேண்டும். இப்படி வழிபடுபவர்களுக்கு வாகன யோகம் உண்டாவதுடன் விபத்துக்கள் ஏதுவும் ஏற்படாது. தேரோட்டதன்று விசிறிகளைத் தானமாக அளித்தால் வாழ்வில் வசந்தம் உண்டாகும்.

கிரகலட்சுமி:

பூஜிக்கத் தக்க மகாபாக்யமுள்ளவர்களாகவும், தூய்மையுள்ளவர்களாகவும் விளங்கும் பெண்கள் கிரகலட்சுமி என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களை வணங்குவதால் லட்சமியோகம் உண்டாகும். பக்தியுடன் தெய்வீகமாக விளங்கும் சுமங்கலிப் பெண்களை வணங்கி ஆசி பெற வேண்டும்.

ஜைன மற்றும் பௌத்த ஆலயங்களில் :

மிகுபொருள் விரும்பாமை, பொருட்பற்றின்மை ஆகிய கருத்துக்களில் உறுதிப்பாடுள்ள ஜைனசமய ஆலயங்களின் வாயிலின் மீது கஜலட்சுமி உருவமும் நிலைக்கால்களின் பக்கத்தில் சங்கநிதி, பத்மநிதி, ஆகியவற்றின் உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். பௌத்தசமய ஆலயங்களின் வாயில்களின் மீதும் திருமகள் வடிவங்கள் சிறப்புடன் அமைந்துள்ளன.

குலதெய்வ வழிபாடும் லெட்சுமிகடாட்சமும் :

குலத்தைப் காப்பது குலதெய்வங்களாகும். குலதெய்வத்தை வழிபடுவதால் துன்பம் நீங்கி இன்பமாகிய செல்வம் கைகூடும். சில குடும்பங்களுக்கு செல்லியம்மன் என்ற அம்பிகை குலதெய்வமாக விளங்கக்கூடும். செல்லியம்மன் என்பது செல்வ அம்மன் ஆகிய திருமகளே ஆகும்.

ஐஸ்வரிய மகாலட்சுமி : (குலதெய்வங்களின் அருள்கிடைக்க)

ஐஸ்வர்யம் என்பது உலகிலுள்ள செல்வங்களையும் குறிக்கும் சொல்லாகும். மகாலட்சுமி அனைத்து செல்வங்களுக்கும் அதிபதியாக இருப்பதால் ஐஸ்வர்ய மகாலட்சுமி என்றழைக்கப்படுகிறாள். பாற்கடலிலிருந்து மகாலட்சமி தோன்றிய போது அவளுடன் செல்வச் செழிப்பை நல்கும் அனேக பொருட்களும் தோன்றின. அவை அனைத்தையும் வழிபட்டுத் தேவர்கள் எடுத்துக் கொண்டனர். அந்த செல்வம் நல்கும் பொருட்களுடன் லட்சமிதேவி யின் உருவத்தை எழுதி வழிபடும் வழிபாடே ஐஸ்வர்ய மகாலட்சுமி வழிபாடாகும். நடைமுறையில் அனைத்து செல்வங்களின் உருவங்களையும் எழுத முடியாது என்பதால் ஐராவதம், காமதேனு, கற்பக விருட்சம், இந்திரன் தன்வந்திரி வாருணி, அப்சரஸ், ஆகிய உருவங்களை மட்டும் மகாலட்சுமியுடன் அமைத்து வழிபடுகின்றனர்.

இந்த நியையில் அவள் கன்யா லட்சுமியாகப் போற்றப்படுகிறாள். கடல் அலைகள் மீது ஐராவதம் படுத்திருக்கிறது. அதன் முதுகின் மீது மகாலட்சுமி மேற்கரங்களில் தாமரை மலர்களையும் கீழ்க்கரங்களில் அபயமுத்திரை அமுதகலசம் தாங்கி அமர்ந்துள்ளாள். அவளுடைய பாதத்தில் தேவர்கள் அர்ச்சித்த பொற்காசுகளும் மலர்களும் குவிந்துள்ளன.

அவளுக்குப் பின்புறம் மலர்கள் நிறைந்த கற்பக மரம் நிழல் பரப்புகிறது. இது வேண்டியவற்றை விரும்பியவாறு தரும் தெய்வீக மரமாகும். அவளுடைய வலப்புறம் செல்வதைக் காவல் புரிவதுடன் அச்சம் அகற்றி மகிழ்ச்சியை அளிக்கும் தேவியான விந்தியாவாசினி எனப்படும் துர்க்கை நிற்கின்றாள். அவளுக்கு வலப்புறம் மனமகிழ்ச்சியையும் இன்பகோகங்களையும் தரும் சந்திரன் நிற்கிறான். இவன் லட்சுமியை அன்புடன் வழிபடுபவர்களுக்கு மகிழ்ச்சியையும் இன்பபோகங்களையும் அளிக்கிறான். ஐஸ்வர்ய மகாலட்சுமியின் இடப்புறம் தேவப்பணிப் பெண்ணான அப்சரஸ் மணமாலையை ஏந்திவாறு நிற்கிறாள். (இந்த மணமாலையைச் சூட்டித்தான் திருமகள் பின்னாளில் திருமாலை மணக்கிறாள் அவள் உலகில் பருவமடைந்த ெண்களுக்கு விரைவில் திருமகள் அருளால் சுகமான வாழ்வு கிடைக்கும் என்பதைப் பார்வையாலேயே தெரிவிக்கிறாள். இவளுடைய இடப்புறம் தேவவைத்தியனான தன்வந்திரி நிற்கின்றனர். இவர் அன்பர்களின் நோய்நொடிகளைத் தீர்த்து வைப்பதுடன் துன்பங்கள் தாக்காமலும் பார்த்துக் கொள்கிறார். இவர்களுக்குப் பின்னணியில் காமதேனு எனும் தெய்வீகப் பசு உள்ளது. இது அன்பர்களுக்கு சுவையான உணவை வேண்டிய போது விரைந்து அளிக்கிறது. மேலும் தனிஉலகத்தைப் படைக்கும் ஆற்றல் பெற்றதாகவும் உள்ளது. இதற்கு இணையாக வலப்புறம் உச்சைச்வரஸ் எனும் குதிரை நிற்கிறது. இது நினைத்த இடத்திற்கு இமைக்கும் நேரத்தில் செல்லும் ஆற்றல் உடையதாகும்.

நினைத்த இடத்திற்கு விரைந்து செல்லும் ஆற்றல் வேண்டியதை விரும்பியவாறு பெறுதல், சுவையான உணவு நினைத்ததை முடிக்கும் ஆற்றல், எடுத்த காரியத்தை உறுதியுடன் நிறைவேற்றும சக்தி, தொடரும் வம்ச பரம்பரை, திருமணத்துடன் சுகமான வாழ்வு நோயற்ற அதிக பலமான உறுதிமிக்க உடல் ஆகியவற்றைப் பெறுவதற்காக ஐஸ்வர்ய மகாலட்சுமியை வழிப்டுகிறோம். இந்த வழிபாட்டினால் மகிழும் தேவி அன்பர்களுக்கு அவற்றை வழங்குகின்றாள்.

குலதெய்வங்களை மறந்து போனவர்கள். தமது குலதெய்வம் எதுவென்று தெரியாதவர்கள் இந்த ஐஸ்வர்ய மகாலட்சுமியை வழிபட்டுவர குலதெய்வங்களின் அருள் கிடைக்கும். வீடுகளில் உண்டாகும். காரியத்தடை திருமணத்தடை, நோய் நொடிகள், துக்கம் முதலியன மறைந்து சுகமான வாழ்வு செழிக்கும்.

பனைமரங்கள் (பூலோக கற்பக விருட்சம்) :

பனை மரங்கள் பூலோக கற்பக விருட்சங்கள் என்று போற்றப்படுகின்றன. அவற்றின் ஓலைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பெட்டிகள் பவித்ரமானவை. அதில் இனிப்புப் பொருட்களை வைத்து தானம் செய்தால் ஆயுள் பெருகும். நோய், நொடி இன்றி வாழலாம். அகாலமரணம் சம்பவிக்காது.

லட்சுமி நாராயணர் :

திருமால் பல்வேறு திருக்கோலங்கொண்டு அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார். அவற்றில் தனிச்சிறப்புடையது லட்சுமி நாராயணர் வடிவாகும். இதில் பெருமாள் வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடித்து சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றார். பின் கரங்களில் சங்கு சக்கரங்கள் உள்ளன. வலது முன்கை அபயமுத்திரை காட்டுகிறது. இடது கரத்தால் மடிமீது அமர்ந்துள்ள மகாலட்சுமியைத் தழுவியுள்ளார். மடியில் வீற்றிருக்கும் லட்சுமிதேவி வலது கரத்தில் தாமரை மலரையும் இடது கரத்தில் வரத முத்திரையையும் தாங்கியுள்ளார். சிறப்புமிக்க இவ்வடிவங்கள் அனேக ஆலயங்களில் புடைப்புச் சிற்பங்களாகவும், சுதைச் சிற்பங்களாகவும் இருக்கின்றன. சிலதலங்களில் இவர் இரண்டு கரங்களுடனம் காட்சியளிக்கின்றார். லட்சுமி நாராயணரைப் போன்றே லட்சுமி வராகர், லட்சுமி ஹயக்ரீவர் முதலிய திருமாலின் அவதார மூர்த்தங்களும் லட்சுமியுடன் அமைத்து வழிபடப்படுகின்றன.

திருவண்ணாமலையைச் சுற்றி அமைந்துள்ள பல ஊர்களில் லட்சுமி நாராயணர் ஆலயம் அமைந்துள்ளன.

குத்துவிளக்கு :

மகாலட்சுமியின் வடிவமான குத்து விளக்கின் ஐந்து சுடர்களும் பெண்களிடம் நிலைப்பெற்றிருக்க வேண்டிய அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசிதபுத்தி, சகிப்புத்தன்மை, ஆகியவற்றைக் குறிக்கின்றன. இவற்றை நிறைவாக கொண்டுள்ள பெண்ணே குலவிளக்கு என்று அழைக்கப்படுகிறாள். இவளால் குடும்பம் மேன்மை அடைகிறது.

தீபத்தின் சுடராய் விளங்கும் திருமகள் :

மலர்ச்சோலைகளில் திருமகள் விரும்பிவாழ்வதைப் போலவே தீபங்களிலும் வாழ்கிறாள். கூடர் விட்டுப் பிரகாசிக்கும் திருவிளக்குகளில் மகாலட்சுமியை நிலைப்படுத்திப் பூசை செய்கின்றனர். தினமும் மாலையில் பூசைமாடத்தில் விளக்கேற்றி திருமகளையும் இல்லுறை தெய்வங்களையும் அதில் இருப்பதாகப் போற்றி வழிபடுகின்றனர். பெரிய நிலை விளக்குகளின் உச்சியில் லட்சுமியின் திருவுருவம் அமைந்திருப்பதைக் காண்கிறோம். தங்கத்தால் விளக்குகளைச் செய்யும் போது அதில் திருமகளையும் சேர்த்து அமைக்கின்றனர்.

தீபம் ஏந்திய பெண் அல்லது மகாலட்சுமி நமது வீட்டிற்குள் வருவது போல் கனவுகண்டால் இல்லத்தில் பெரும்செல்வமுண்டாகும். இராமாயணத்தில் அசோகவனத்தில் சிறையிருந்த சீதையிடம் திரிசடை என்பவள் அவளுக்கு நன்மையுண்டாகத்தக்க பல கனவுகளைத்தான் கண்டதாகக் கூறுகின்றாள். அவற்றிலொன்றாக ஆயிரம் தீபங்களைக் கொண்ட ஒரு பெரிய திருவிளக்கை ஏந்தியவாறு திருமகள் இராவணின் அரண்மனைக்குள் சென்றாள் என்று கூறுகின்றாள். இதன் பயனாக ராவணன் மாண்டு விபீஷணன் இலங்கைக்கு அரசனானான்.

ஆலயங்களில் விளக்குகளை ஏந்திநிற்கும் பெண் வடிவங்களைக் காண்கிறோம். இவை பாவை விளக்குகள் என்றும் தீபலட்சுமிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இப்பெண்கள் செல்வச செழிப்புடன் இருப்பதைக் குறிக்கும் வகையில் ஏராளமான அணிமணிகளை அணிந்துள்ளனர். எப்போதும் சுகத்தில் திளைத்திருப்பதைக் குறிக்கும் வகையில் இவர்களுடைய தோள்களில் கிளிகள் (சுகங்கள்) அமைக்கப்பட்டுள்ளன.

காம்யம் என்பதற்கு விருப்பம் என்பது பொருள். விரும்பியதை விரும்பியவாறு அளிக்கும் பெண்தெய்வமான லட்சுமி காம்யக்ஷி எனப்பட்டாள். இதுவே காமாட்சி எனத் திரிந்து வழங்குகிறது. பெரிய பிரபையுள் கஜலட்சுமியைக் கொண்ட விளக்குகள் காமாட்சி விளக்குகள் என்று அழைக்கப்பட்டன. தமிழகத்தில் பெரும்பாலான வீடுகளில் தினமும் காமாட்சி விளக்கு ஏற்றப்படுவதைக் காண்கிறோம்.

17A

இந்த விளக்கு சாட்சி விளக்காகும். ஆதலின் அனைத்து சடங்குகளிலும் தானியங்களைப் பரப்பி அதன் மீது இவ்விளக்கை பூச்சூட்டி ஏற்றி வைக்கின்றனர். திருமணத்தின் போது மணமகன் மணமகள் கழுத்தில் தாலிகட்டும் போது மணமகனின் சகோதரி இதை மணமகளின் பின்புறம் கழுத்துக்கு நேராக ஏந்திநிற்பாள். இது தாலியில் இடப்படும் மூன்று முடிச்சுகளுக்குத் திருமகள் ஒளிவடிவ சாட்சியாக இருப்பதை உணர்த்துகிறதென்பர். திருமணம் மட்டுமின்றி அனைத்து சடங்குகளிலும் காமாட்சி விளக்கு முக்கியமான மங்கலப் பொருளாக இருக்கின்றது. இதனை பதிவிளக்கு, நந்தாவிளக்கு, நல்விளக்கு எனப் பலவாறு அழைக்கின்றனர்.

காலப்போக்கில் கஜலட்சுமிக்கு பதிலாக இதர தெய்வ உருவங்களையும் இவ்விளக்கில் அமைக்கத் தொடங்கிவிட்டனர்.

லட்சுமியே நீங்காது இரு :

செல்வம் மல்கும் செட்டில்நாட்டில் வாழ்ந்த புலவர்களில் நிறைமொழி மாந்தராக விளங்கியவர் பாடுவார் முத்தப்பர். இவர் திருவாயால் மொழிந்த எதுவும் அப்படியே நடந்தது. இவரை தெய்வப்புலவர் என்று அனைவரும் கொண்டாடினர். இவர் தன் இனத்தவர் அனைவரும் செல்வச் செழிப்புடன் வாழ வேண்டும் என்ற விரும்பி திருமகளிடம் நீ அவர்களைவிட்டு என்றைக்கும் நீங்காதிருக்க வேண்டும் என்று பாடினார். அவருடைய அருள் வாக்கில் மூன்று பாடல்கள் எழுந்தன. இவற்றிலொன்றான காடு வெட்டிப்போட்டு எனத் தொடங்கும் பாடல் அனைத்து நகரத்தாராலும் போற்றிக்கொண்டாடப்படுகிறது. இதனை வீடுச்சுவற்றில் எழுதிவைப்பது அந்நாளைய வழக்கமாகும். இப்போது அச்சிட்டு கண்ணாடி சட்டமிட்டு மாட்டியிருப்பதைக் காண்கிறோம். இதில் திருமகளை எங்களம்மா லட்சுமியே! என்று உரிமையுடன் அழைத்து என்றைக்கும் எங்களை நீங்காது இரு என்ற முத்தப்பர் வேண்டுதல் செய்வதைக் காணலாம். அப்பாடல்

''காடு வெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்-வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்காதிரு'' என்பதாகும்.

சிறுதெய்வவழிபாட்டில் மகாலட்சுமி :

மகாலட்சுமி எனும் பெயரில் பல சிறுதெய்வங்கள் உள்ளன. இப்பெண் தெய்வங்களுக்கும் திருமாலின் மார்பில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் மகாலட்சுமிக்கும் தொடர்பு இல்லை. பல்வேறு இனமக்களின் குலதெய்வங்களாகும். மண்மேல் தோன்றி வளர்ந்து தெய்வநிலையை அடைந்த பல பெண்கள் மகாலட்சுமியின் பெயரால் கோயில் கொண்டு அருள்பாலிக்கின்றனர். எடுத்துக்காட்டாக வடசென்னையில் மகாலட்சுமி ஆலயம் உள்ளது. இது சலவையாளர்களுக்கு உரியதாகும். இதில் அம்பிகையின் தலை மட்டுமே வைத்து வழிபடப்படுகிறது. திருச்சியை அடுத்த மேட்டு மகாதானபுரத்தில் பெரிய அளவிலான மகாலட்சுமி ஆலயம் உள்ளது. பரிவாரங்களுடன் அமைந்துள்ள இக்கோயில் இருபத்துநான்கு மனை தெலுங்கு செட்டியார்களுக்கும் குரும்பர்களுக்கும் உரியதாகும். இங்கு பக்தர்களின் தலையில் தேங்காய் அடித்து உடைக்கும் பிரார்த்தனை வழிபாடு உள்ளது. இவ்வட்டாரத்தில் அனேக மகாலட்சுமி ஆலயங்கள் உள்ளன. இவற்றில் குலத்தெய்வமான விளங்கும் இந்த பெண்கள் மகாலட்சுமி எனும் பெயரில் துர்க்கை வடிவில் விளங்கி அருள்பாலித்து வருகின்றனர்.

மங்களப் பொருட்கள்:

வளையல், கண்ணாடி, சீப்பு, கண்மை, மஞ்சள், குங்குமம், இவை சௌபாக்கிய சின்னங்களாகும். ஆண்டுக்கு ஒருமுறையாவது முறத்தில் தேங்காயுடன் இவற்றை வைத்து சுமங்கலிப் பெண்களுக்கு அளித்து வர இல்லத்தில் சௌபாக்கியம் பெருகும் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

17A

லட்சுமி சஹஸ்ரநாமத்தில் :

ஸ்ரீ க்ஷய: என்றால் ஐசுவரிய நாசம் என்று பொருள். அதையே திருப்பி படித்தால் யக்ஷ ஸ்ரீ என்று ஆகும். யக்ஷ ஸ்ரீ என்றால் குபேர ஸம்பத் என்று பொருள். இவ்வாறு லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

லக்ஷ்மி ஸ்வயம்வரம் :

विष्णोः सामर्थ्यरूपत्वात् विष्णुशक्तिः प्रगीयते என்று இந்த மஹாலக்ஷமீ விஷ்ணு சக்தியாகப் போற்றப்படுகின்றாள். இந்த லக்ஷ்மீயின் திருவருள் கிடைத்தால் தான் விஷ்ணுவின் திருவருள் நமக்குக் கிடைக்கும். இந்த லக்ஷ்மீயை புருஷகாரம் என்று உரைப்போர் பெரியோர்.

लक्ष्म्या सह हृषीकेशः देव्या कारणरूपया ।
रक्षकः सर्वसिद्धान्ते वेदान्तेषु च गीयते ॥

என்றபடி பக்தனுக்கு அருள்புரியும்படி பகவானை இவளே தூண்டுகின்றாள்.

"அமுதக் கடலிடை அமர்ந்த லக்ஷ்மி :

இந்த மஹாலக்ஷ்மீ அமிர்தக் கடலின் நடுவில் தேவ விருக்ஷங்காகிய கல்பதரு. பாரிஜாதம் முதலிய விக்ஷங்களின் நடுவில் மிக அழகிய மணிமயமான மண்டபத்தில் சிறப்பு மிக்க ரத்ன ஸிம்மாஸனத்தில் தாமரை மலரின் மீது அமர்ந்திருப்பாள். அன்னையைச் சுற்றிலும் தேவலோகத்து அழகிகள் சேவித்து நிற்பர்.

இவன் உலகங்களை அளித்த அன்னை. இவளே வெற்றி தருபவள் என்கிறது லக்ஷ்மீ ஸஹஸ்ரம்.

सुधोदधिसमुल्लसत्सुरतरु छटान्तर्गते
मनोजमणिमण्डपे महति रत्नसिंहासने ।
स्थितां मणि सरोरुहे त्रिदशसुन्दरी सेवित्तां
जयाय भवतीमहं जननि संततं चिन्तये ॥

இவர்களை லக்ஷ்மி வந்தடைவாள்:

நல்ல வீரம் நிறைந்தவர். சோம்பலற்றவர், தவமுடையவர், பயமற்றவர், ஈகையுடையோர், செல்வத்தை நன்கு அனுபவிப்பவர் இவர்களை நான் அடைகிறேன். என்கிறாள் லக்ஷ்மீ.

विर्यवन्तं त्वनलसं तपस्विन मकातरं ।
दातारं चापि मोवतारं युवत्या सेवामि तं नरं

இத்துடன் செந்தமிழ் எழுதிய ஏடு, வெற்றிலைப்பாக்கு, திருநீறு, பல்லக்கு, பொன்னாரம், ஆடை, கன்னி இவ்வெழுவரையும் தன்னை வந்தடைந்தபோது இரு கரங்களாலும் ஏற்க வேண்டும். இது லக்ஷ்மீ தங்க வழியாகும்.

"கஜலட்சுமி"

(நன்றி : குபேரன் சிற்பக் கலைக்கூடம் - சுவாமிமலை)

சிவனாலயத்தில் முப்பெரும் தேவிகள்

துர்க்கை

(வடக்கு கோஷ்டமாடத்தில் விளங்கும்

லட்சுமி

சரசுவதி

(சிவானாலயத்தின் உட்பிரகார வாயுமூலையில் இவ்விரு தேவியர்கள் விளங்குவார்கள்)

செந்தமிழடைகாய் நீறு சிவிகை பொன்னர மாடை
சுந்தரமான தோகை துலங்கமிவ் வகைகளேழும்
வந்தபோதிருகை ஏந்தி வாங்க லக்குமியுஞ்சேர்வாள்
அந்த நாளாகாவென்றால் அவனைவிட் டகலுவாளே.

காலையும் மாலையும் உறங்கக் கூடாது. இரவில் தயிர் சோறு சாப்பிடக்கூடாது. கூடத்தகாதவரோடு கூடக்கூடாது. இஞ்சி, நெல்லிக்காய், கீரை, பாவற்காய், கஞ்சி இவைகளையும் இரவில் சாப்பிடக்கூடாது.

காலை மாலை யுறங்குபவர், காரிகை
கோல மேனி குறைந்தபின் கூடுவர்
சாலி ராத்தயிர் சாதமொ டுண்புர்
மாலை நேரினும் மாது பிரிவளே
(மாலை நேரினும் = விஷ்ணுவுக்கு ஒப்பவராயிருப்பினும்)
இஞ்சி நெல்லி இலைக்கறி பாவற்காய்
கஞ்சி வெண்டயிர் கங்கு லருந்திடில்
பொஞ்சு பூமகள் போயுடன் மூத்தவள்
கொஞ்சிக் கொஞ்சி குலாவி நடப்பளே.

லக்ஷ்மிநிலைத்திருக்க :

இந்த மஹாலக்ஷ்மீ நிலைத்திருக்க ஸ்ரீ ஸூக்தத்தை எப்போதும் ஜபிக்கவேண்டும். உண்மையையே கூற வேண்டும. கிழக்கு முகமாய் உட்கார்ந்த சாப்பிட வேண்டும். முன்பாகவும் பிரியமாகவும் பேசவேண்டும். வஸ்திரமில்லாமல் ஜலத்தில் இறங்கக் கூடாது. எண்ணெய் தேய்த்துக்கொண்டு உணவருந்தக்கூடாது. பூமியை வீணாகக்கீறக்கூடாது. பில்வம், தும்பை பூ, தாமரைப் பூ இவைகளைத் தலையில் அணியக்கூடாது. தாண்டவும் கூடாது. தனியாக உப்பு எண்ணை இவைகளைச் சாப்பிடக் கூடாது. அபக்குடன் இருக்கக் கூடாது. அழுக்கடைந்த உணவை சாப்பிடவும் கூடாது.

श्रियो मन्त्रं जपेन्मन्त्री श्रीसूक्तानपि संजपेत् ।
भूयसीं श्रियमाकांक्षन् सत्यवादी भवेत्सदा ॥
प्रत्यगाशामुखेऽश्नीयान् स्थितः पूर्वंप्रियं वदेत् ।
नग्नो नावतरेदंभः तैलाभ्यक्तो न भक्षयेत्
नवृथा विलिखेद्भूमिं न बिल्वं द्रोणमंबुजं ।
धारयेन्मूर्धि नैवाघ्यात् लोणं तैलं च केवलं ।
मलिनो न भवेज्जातु कुत्सितान्नं न भक्षयेत् ॥
द्रोणपंकज बिल्वानि पद्भ्यां जातु न लंघयेत् ॥

⊠ இந்த குறியீடு போட்ட மேட்டர் தொடக்கத்திலிருக்கும் செய்திகள் யாவும் ஸ்ரீ தசமகாவித்யா''-நூலில் இருந்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர். திருவெண்காடு ஸ்ரீ T.K. முத்துஸ்வாமி சாஸ்திரிகள் - 1997 (நம்பர் 78 - 87)

ஸௌபாக்யலக்ஷ்மீ உபநிஷத் :

இந்த மஹாலக்ஷ்மியின் பெருமையை ஸௌபாக்ய லக்ஷ்மீ உபநிஷத் என்ற ஒரு உபநிஷத் அழகாக எடுத்துரைக்கின்றது. இந்த உபநிஷத்தில் ஓமென்ற பிரணவத்தை முன்னும் இடையில் லக்ஷ்மீ நாமாவையும் கடைசியில் நம: என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கூறி 32 மந்த்ரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ

1. லக்ஷ்மீ
2. வரதா
3. விஷ்ணுபத்னீ
4. வஸுப்ரதா
5. ஹிரண்யரூபா
6. ஸ்வர்ணமாலினி
7. ரஜதஸ்ரஜா
8. ஸ்வர்ணப்ரபா
9. ஸ்வர்ணப்ராகாரா
10. பத்மவாஸநீ
11. பத்மஹஸ்தா
12. பத்மப்ரியா
13. முக்தாலங்காரா
14. சந்த்ரா
15. ஸூர்யா
16. பில்வப்ரியா
17. ஈச்வரீ
18. புக்தி:
19. முக்தி:
20. விபூதி:
21. ருத்தி :
22. ஸம்ருத்தி
23. க்ருஷ்டி:
24. புஷ்டி:
25. தனதா
26. தனேச்வரீ
27. ச்ரத்தா
28. போகினீ
29. போகதா
30. தாத்ரீ
31. விதாத்ரீ
32. ஸ்ரீ:

இவைகளை ஓம் ஸ்ரீயை நம: ஓம் லக்ஷ்ம்யை நம: என்றவாறு சொல்லிக் கொள்ள வேண்டும்.

ஹ்ரீங்காரம் கூறும் ஆதிசக்தி:

இந்த ஸத்வகுணமுள்ள விஷ்ணுவின் சக்தியான மஹாலக்ஷ்மியே

सर्वस्याद्या महालक्ष्मीः वरेण्या शक्तिरुत्तमा

முப்பெருஞ் சக்திகளில் முதன்மையான சக்தியாய் கருதப்படுகின்ற இந்த மஹாலக்ஷ்மியே மஹிஷாஸுரனைக் கொல்வதற்காக, தேவர்களின் ப்ரார்த்தனைக் கிணக்க, சிவன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களின் தேஜஸ்களினின்றும் உதயமானாள். பல்வேறு ஆயுதங்களும் 18 கரங்களும் கொண்டு சிம்ம வாஹனமேறி மஹிஷனைக் கொன்று உலகங்களுக்கு மகிழ்ச்சியளித்தாள். இவளே ஹ்ரீம் என்ற மஹாமந்த்ரத்தின் பொருளாய் கூறப்பட்டிருக்கிறாள். இவளுடைய பெருமையை தேவீ பாகவதமும் ஸப்தசதீயும் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. இந்த மஹாலக்ஷ்மியை பல பிரம்மாண்டங்களிலுள்ள லக்ஷ்மீதேவிகளுக் கெல்லாம் ஸமஷ்டியாய் விளங்குகின்றாள். மந்த்ர சாஸ்திரங்களில் தசமஹாவித்யைகளில் இடம் பெற்றவளாய் உள்ளவளும் இந்த மஹாலக்ஷ்மியே. ஆகவே இந்த மஹாலக்ஷ்மீயின் அம்சமானவர்களே ஒவ்வொரு பிரம்மாண்டத்திலுமுள்ள விஷ்ணு சக்தியான லக்ஷ்மீக்கள் என்று தெரிகின்றது.

லக்ஷ்மீகாடாக்ஷம்:

தெய்வமான விஷ்ணுவின் மார்பில் உறையும் லக்ஷ்மீ உலக மக்களுக்கு ஸந்தானம், உலகைக் காக்கும் தெய்வமான விஷ்ணுவின் மார்பில் உறையும் லக்ஷ்மீ உலக மக்களுக்கு ஸந்தானம்,

உலகைக் காக்கும் தெய்வமான விஷ்ணுவின் மார்பில் உறையும் லக்ஷ்மீ உலக மக்களுக்கு ஸந்தானம், வாஹனம், தனம், தான்யம், ராஜ்யம், ஸௌபாக்யம், வெற்றி இவைகளை தன் திவ்ய கடாக்ஷத்தினால் அளிக்கின்றாள். அவளருளால்.தனம் கிடைக்கும். தனம் உள்ளவன் தானும் வாழ்ந்து பிறரும்வாழ உதவுகிறான்.

தனமுள்ளவனுக்கு புகழ், மக்களிடையே மரியாதை, மனத்திற்குகந்த வாழ்வு, அறிவுபெற வசதி, உடலிலே வனப்பு இவை எல்லாம் கிடைக்கின்றன. தர்மம் செய்து புண்ணியம் சம்பாதிப்பதற்கும் இல்லறத்தில் இன்பம் காண்பதற்கும் நியாயமாய் தேடிய பணமே உதவிபுரிகின்றது. குறைகள் பல இருப்பினும் தனம் அவைகளை மறைத்து குணங்காட்டும் சக்தியாய் இருக்கிறது. கற்றோரும் மற்றோரும் தனமுள்ளவனைச் சார்ந்தே வாழ வேண்டியிருக்கின்றது.

यस्यार्थाः तस्य मित्राणि यस्यार्थाः तस्य बान्धवाः
सर्वे गुणाः कांचनमाश्रयन्ति

என்ற பழமொழிகள் இதற்குச் சான்றாகும்.

பொருளில்லார்க்கு, இவ்வுலகில் இன்பமில்லை, மறுபிறவியில் இன்பமளிக்கும், புண்ணியம் சேர்வதில்லை. தேவையான கீர்த்தியில்லை. மனித குலத்தின் நடுவில் புகழில்லை. நினைத்த காரியத்தை முடிக்கவும் சக்தியில்லை. நல்லகதி பெறுவதற்கான வழியுமில்லை.

''பொருளில்லார்க் கின்பமில்லை புண்ணியமில்லை என்றும்
மறுவுறு கீர்தியில்லை மாந்தருட் பெருமையில்லை.
கருதிய கருமமில்லை கதிபெறுவழியுமில்லை
பெறுநிலத்திடை நடக்கும் பிணமெனப் படுவரன்றே''

என்கிறார் ஒரு கவி.

இந்த லக்ஷ்மீ கடாக்ஷத்தால் பெறும் பேறுகளை வேங்கடாத்வரீ என்ற பெரும் புலவர் லக்ஷ்மீ ஸஹஸ்ரம் என்ற நூலில்

शुचौ वंशे जन्म श्रुतिनयमतिर्मातरतुला
विकंपासंपत्तिः विशदमविगीता च कविता ।
प्रसक्तिर्दैत्यारौ हितपरमरमपत्यं शुभयशः
विवर्ताः सप्तामी ध्रुवमसदृशां तावकदृशा ॥

''மஹாலக்ஷ்மி'':

அனந்தகோடி பிரம்மாண்டங்களை ஈன்றெடுத்தவள். ஸ்ரீ புவனேசுவரீஜகன் மாதா. இவளைப் பராசக்தி என்றும், மஹா மாயா என்றம், பிரக்ருதி என்றும் தேவீ பாகவதம் அழைக்கும். ஸத்வம் ரஜஸ்தமஸ் என்ற முக்குணங்களின் கூட்டமாய் திகபம் மஹா மாயாபுவனேச்வரீ தேவியே உலகை ஆக்கும் போது ரஜோகுணங்கொண்டவளாய் ஸரஸ்வதி என்ற பெயர் கொண்டு ப்ரம்மதேவனின் சக்தியாய் திகழுகின்றாள். உலகைக் காக்கும்போது ஸத்துவ குணங்கொண்டவளாய் லக்ஷ்மீ என்று பெயர் பெற்று விஷ்ணுவின் சக்தியாய் விளங்குகின்றாள். உலகை அழிக்கும் போது தாமஸ குணத்துடன் கூடியவளாய் பார்வதீ என்ற பெயர் தாங்கி ஈசுவரனின் சக்தியாய் அமைகிறாள்.

அம்மா! நற்குடிப் பிறப்பும், வேதங்களிலும் தர்க்க சாஸ்திரத்திலும் நுண்ணறிவும், அழியாத ஸம்பத்தும், குற்றமற்ற கவிதையும், விஷ்ணுவினிடத்தில் ஈடுபாடும், அன்மிக்க தனயனும், நற்கீர்த்தியும் உன் இணையற்ற திருநோக்கின் விளைவுகளே'' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

அதே கவி ''கடாக்ஷ ஸ்தபம்'' என்ற மற்றொரு பகுதியில்

क्ष्माकुमारि क्षणमीक्षणं ते यदृच्छया न्यस्यसि यत्र जन्तौ ।
स ईक्षणानां त्रयमष्टकं वा सहस्रकं वा सहसादधाति ॥

वीक्षितानि तव वारिधिकन्ये यत्र पालितजगन्ति लगन्ति ।
चित्रमत्र स परत्र देही देही शब्दमपहाय चकास्ति ॥

அம்மா! எதிர்பாராதவிதமாக உன் பார்வை எவன்மீது விழுகின்றதோ, அவன் முக்கண்ணானாகவோ, எண் கண்ணனாகவோ, ஆயிரம் கண்கள் உடையவனாகவோ, ஆகிவிடுகின்றான். (அதாவது ருத்ரனாகவோ பிரம்மதேவனாகவோ இந்திரனாகவோ இருக்கும் பாக்யம் பெற்றுவிடுகிறான்). அம்மா! உலகைக் காக்கும் உன் திருநோக்கு எவன் மீது விழுகின்றதோ அவன் இம்மையிலும் மறுமையிலும் ''தேஹி'' என்ற சொல்லுக்கு ஆளாகாமல் விளங்குகின்றான். (தேஹி=என்றால் கொடு என்றும். சரீர முடையவன் என்றும் பொருள். உன் திருவருள் பெற்றவருக்கு பிறரிடம் யாசகம் கேட்காதவாறு செல்வமளித்து விடுகிறாய். அவ்வாறே மறுபிறவி எடுக்காதவாறு முக்தியும் கொடுத்து விடுகின்றாய் என்பது கருத்து).

ஸ்ரீ :

இந்த மஹாலக்ஷ்மீயை ஸ்ரீ என்று அழைக்கின்றோம். எல்லோரும் இவளை வந்தடைகின்றனர் என்பதனாலேயே இவளுக்கு ஸ்ரீ என்று பெயர் வந்தது. ஸ்ரீ என்ற இந்த சொல் மங்களத்தைக் குறிக்கின்றது. அதனால் மஹா கவிகள் சிலர் தம் நூல்களில் முதல் சுலோகங்களை மங்கள சுலோகங்களை இந்த ஸ்ரீயை முதலில் வைத்து தொடங்கியிருக்கின்றனர். பாரவீ என்ற மஹாகவி **''श्रियः कुरूणामधिपस्य पालिनी''** என்றே தொடங்கியிருக்கிறார். இப்படி பல உதாரணங்களைக் காணலாம். மதிப்பு மிக்க தேவர்களுக்கும் மனிதருக்கும் அவரவர் பெயருக்கு. முன் ஸ்ரீயைச் சேர்த்தே சொல்வது நம் பழக்கமா இருப்பதிலிருந்தும் இந்த ஸ்ரீ என்ற சொல்லின் பெருமையை அறியலாம்.

ஹே லக்ஷ்மீயே! கணம் வர்ணம் இவைகளால் நேரிடும் தோஷங்கள் போவதற்கு வரமளிக்கும் அன்னையே! உன்னருளால் ஸ்ரீ என்ற சொல்லை கவிகள்காவியத்தின் முதலில் உபயோகின்றனர் என்று லஹ்மீ ஸஹஸ்ரத்தில் சிறப்பித்துரைத்திருக்கின்றார்.

ஸ்ரீ ஸூக்தம் :

இப்பெருமைமிக்க ஸ்ரீயுடன் கூடியதாய் லக்ஷ்மீயின் பெருமையை உணர்த்தும் வேதப் பகுதி ஸ்ரீ ஸூக்தம் என்பது வேதம் என்ற உத்யானத்தில் பாரிஜாத தரு போன்றது. வாக்குகளுக்கு அப்பாற்பட்ட லக்ஷ்மீயின் பெருமைகளை உணர ஸாதுக்களுக்கு ஸ்ரீ ஸூக்தம் கண்களாய் அமைந்திருக்கின்றது என்கிறார் வேங்கடாத்வரீ என்ற மஹாகவி.

वेदोद्याने पारिजातायमानं श्रीसूक्तं तत् जायतां श्रेयसे नः ।
पारे वाचां भासुरे त्वत्प्रभावे चक्षुष्मन्तो देवि येनैव सन्तः ॥

என்ற ச்லோகத்தால்

இந்த ஸ்ரீ ஸூக்கத்தில் லக்ஷ்மீ தன்னைவிட்டு அகலாது எப்போதும் இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்க படுகின்றது. இந்த லக்ஷ்மீயை உபாஸிப்பதற்கான வழியும் அதில் காட்டப்பட்டிருக்கிறது. அக்னியில் த்ரவியங்களைக் கொண்டு அதற்கான லக்ஷ்மீ மந்த்ரங்களால் ஸ்ரீ தேவியைக் குறித்து வேள்வி செய்வதே அவளை அடையச் சிறந்த வழி என்பதை

हिरण्यवर्णां हरिणीं सुवर्ण रजतस्रजां ।
चन्द्रां हिरण्मयीं लक्ष्मी जातवेदो म आवह ॥

''ஹே அக்னி பகவானே! பொன் போன்ற மேனியுடையவளும், பாபங்களை அழிப்பவளும், பொன் வெள்ளியாலான ஆபரணங்களை அணிந்து கொண்டிருப்பவளமான லக்ஷ்மீயை எனக்கு அருள் வழங்கும்படி இங்கே அழைத்தருளுவீராக'' என்பதனால் அறிந்து கொள்ளுகிறோம். மேலும்.

இந்த லக்ஷ்மீ பொன், பசுக்கள், குதிரைகள், உற்றார் இவர்களை அளிப்பவள், ரதங்கள், குதிரைகள், யானைகள் புடைசூழ வருபவள், தான் திருப்தியுடையவளாய் இருந்து கொண்டு பிறரை திருப்தி செய்விப்பவள். கீர்த்தியுள்ளவள்; தேவர்களால் சேவிக்கப் படுகின்றவள். உதாரகுண முள்ளவள், வில்வ விருக்ஷத்தைத் தவத்தினால் உண்டாக்கியவள், நல்லன செய்பவள், ஸர்வேசுவரீ, இவள் கர்த்தமரின் பெண்,

தாயார்/ லெட்சுமி

ஆண்டாள்

சிக்லீதர் என்பவர் இவள் பிள்ளை. இவள் கருணை மிக்கவள். இந்த ஜகன்மாதா மஹாலக்ஷ்மீ கீர்த்தியையும் செழிப்பையும் அளித்து, பசி, தாகம், தாரித்திரியம் இவைகளைத் தொலைத்து அருள் வழங்க வேண்டும் என்ற விபரங்கள் இந்த ஸ்ரீ ஸூக்தத்தினின்றும் விளங்குகின்றன.

மந்திர சாஸ்திரங்களில் :

இந்த லக்ஷ்மியின் தியானங்கள் மந்த்ர மஹார்ணவம், சாரதா திலகம் பிரபஞ்சசாரம், பிரபஞ்ச ஸாரஸங்க்ரஹம் முதலிய மந்த்ர சாஸ்திர நூல்களில் நிறையைக் கூறப்பட்டிருக்கின்றன. அதற்கான லக்ஷ்மீ மந்த்ரங்கள், பூஜா விதானங்கள் இவைகளும் விஸ்தாரமாய் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

புன்னை பிராட்டி :

திருவாரூர், லக்ஷ்மி வழிபட்டதலம், லக்ஷ்மி தேவியின் ஆலயம் இருக்கிறது. லக்ஷ்மி தேவி புன்னை மரத்தடியில் அவதரித்ததால் புன்னைப்பிராட்டி என்றும் பெயர்.

தாயார், ஆண்டாள் ஆகியோர் :

எல்லோருக்கும் தாயாக விளங்குபவர் இலக்குமி பிராட்டியார். அதனால் இவர் தாயார் என வழங்கப்படுகிறார். இலக்கியங்களில் திருமகள் என்று போற்றப்பெறுகிறார். திருமாலின் மார்பில் மரு அல்லது

ஸ்ரீவத்சமாகத் திகழ்பவரும் திருமகளே. திருமாலின் அருகில் நிற்கும் நிலையில் ஸ்ரீதேவி என அழைக்கப்படுகிறாள். தாயார் திருவுருவம் இந்திர திக்கான கிழக்குத் திசையை நோக்கி, நான்கு கரங்களுள் மேலிரண்டு கரங்களில் தாமரை மலர்களையும் கீழிரண்டு கரங்களில் அபய வரதமுத்திரைகளையும் ஏந்தித் தாமரை மலரில் வீற்றிருக்கின்றது. இதே நிலையில் அனைத்துத் திருமால் கோயில்களிலும் இவளது சந்நிதி விளங்குகிறது (ஆயர்பாடி கரிகிருட்டிணன் கோயிலில் மட்டும் தாயார் நின்ற வண்ணம் இருகரங்களுடன் அருள்பாலிக்கின்றார்). இப்பெருமாட்டி தாமரை மலரை மிகவும் விரும்பி அதில் உறைவதால் அலர்மேல் மங்கை என்ற பெயரும் இவருக்கு வழங்குகிறது.

ஆண்டாள் :

திருமாலின் மற்றொரு தேவி பூதேவியாவார். வானுலகச் செல்வமனைத்திற்கும் அதிபதியான திருமகளைப் போலப் பூமியில் உள்ள அனைத்துச் செல்வங்களுக்கும் அதிபதியான பூமிதேவியே பூதேவியாவார். பூமாதேவியை கோதை நாச்சியாராகப் பிறந்து சூடிக் கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாளாகித் திருமாலை மணந்தவர். ஆதலின் பூதேவிக்கு வடிவமாக ஆண்டாளையே கோயிலில் வைத்து வழிபடுகின்றனர்.

நீலாதேவி :

ஸ்ரீதேவி, பூதேவி தவிர நீலாதேவி என்ற ஒரு தேவியும் திருமாலுக்கு உள்ளார். மலையாள நாச்சியார், துலுக்க நாச்சியார் போன்றோர் அவ்வட்டாரங்களையொட்டி எழுந்த கதைகளுள் பலரும் இறைவனை ஆண்டாளைப்போன்று அடியொற்றி மணந்தனர். இவர்கள் இறைவன் மீது செலுத்திய அன்பின் நிலை கொண்டு இவர்களைக் கோயில்களில் ஏற்றி வைத்து வழிபட்டனர். இவர்களே துலுக்க நாச்சியார், மலையாள நாச்சியார் (உறையூர்ச் சேரகுலவல்லி) என்பவராவர்.

அவதாரங்களில் தேவியர் :

திருமால் அவதரித்த காலங்களிலெல்லாம் திருமகளும் உடன் அவதாரம் செய்தார். இராமனாக அவதரித்தபோது சீதையாகவும் கண்ணனாக அவதரித்தபோது உருக்குமணியாகவும் பிராட்டியாகவும் அவதரித்தார்.

அஷ்டபந்தனத்தில் அருளுபவள் :

கும்பாபிஷேகத்தில் அஷ்டபந்தனம் என்று ஒரு அம்சமுண்டு. இறைவன் அம்சமாகிய அஷ்ட மூர்த்தியின் அருள் பெற்று அணிமாதி அஷ்ட ஐஸ்வரியமும் சித்தியடைந்த நிலையில் ஞான கிரியா சக்தியாகும். சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தோன்றி பரம்பொருளின் ஆணையால் ஸாம்ராஜ்ய லட்சுமியும் அதிலிருந்து பயன்தரும் வகையில் அஷ்ட லட்சுமிகளாக உருக் கொண்டுள்ளதாக ஜபித்து ஆராதிப்பது அஷ்ட பந்தன சமர்ப்பணம்.

திருவண்ணாமலையில் :

திருவண்ணாமலை உண்ணாமுலை அம்பிகை சந்நிதியில் அஷ்ட லட்சுமிகளை தரிசிக்கலாம்.

திருவிடைமருதூரில் :

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி ஆலயத்தில் விளங்கும் ஸ்ரீ மூகாம்பிகை சந்நிதியின் கருப்பக்கிருக விமானம் காசியில் விளங்கும் ஸ்ரீ காசிவிசுவநாதர் ஆலய விமானம் போன்று உள்ளது. இவ்விமானத்தைச் சுற்றி அஷ்ட லட்சுமிகள் யாவரும் தாமரையில் அமர்ந்தவர்களாக காட்சி தருகின்றனர். விமானத்திற்கு **Gold Colour Paint** (தங்கக்கலர் ஆயில் பெயின்ட்) கொடுத்துள்ளதால் மிகுந்த எடுப்பாக உள்ளது. இது போன்ற அமைப்பு வேறு எந்த ஆலயத்திலும் காண்பது அரிது.

ஷோடச மகாலட்சுமிகள் :

ஸ்ரீரங்கத்திலுள்ள அம்மா மண்டபம் ரோடு புது அக்கிரகாரத்திலுள்ள அஷ்டலக்ஷ்மி மண்டபத்தில் ஷோடச லக்ஷ்மிகளையும் தரிசிக்கலாம்.

இதன் பிரதான வாசலுக்கு .ராஜ ராஜேஸ்வரி துவாரம். எனப்பெயர். எட்டுகோணமுள்ள விமானம் அமைந்துள்ளது.

எட்டு கோணங்களில் அஷ்ட லக்ஷ்மிகளை தரிசிக்கலாம். மூர்த்திகள் ஒவ்வொருவருக்கும் இரு கலைகள் வீதம் 16 கலைகளும் காட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மூர்த்திக்கும் இரண்டு கல்லகளைக் கொண்டு இரு பெயர்கள் உண்டு.

கிழக்கில் :

வித்யை, யசஸ் என்ற இரு கலைகள் உள்ள லக்ஷ்மி இவளுக்கு .வித்யா லக்ஷ்மி யசோ லக்ஷ்மி. என்று பெயர். வித்யா அதிஷ்டான தேவதையான சரஸ்வதியாகக் காட்சி தருகிறாள். ஜபமாலை, புத்தகம் வீணை வாசிக்கும் பாணி, ஹம்ஸ்மந்திரம் இரு ஹம்ஸங்கள் காணப்படுகின்றன. யானைகள் தாங்கும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறாள்.

தென் கிழக்கில் :

உள்ள லக்ஷ்மிக்கு தனலக்ஷ்மி, கஜலக்ஷ்மி என்று பெயர். இரு பக்கங்களிலும் யானைகள் மலர்களைச்சொரிகின்றன. கையிலுள்ள சங்கமும் தாமரையும் சங்கநிதி பதுமநிதியைக் குறிக்கின்றன. மற்றிரு கைகளில் ஒன்று அபயம். மற்றொன்றில் மாதுளம் பழம். தாமரை மலரில் வீற்றிருக்கிறாள்.

தெற்கில் :

உள்ள லக்ஷ்மிக்கு .சந்தான லக்ஷ்மி, தான்ய லக்ஷ்மி. என்ற பெயர்; இரு பக்கங்களிலும் குழந்தைகள். கைகளில் தானியக் கதிர், மாதுளம் பழம், அபய ஹஸ்தம். இவள் பதும பீடத்தில் அமர்ந்திருக்கிறாள்.

தென் மேற்கில் :

.தைரிய லக்ஷ்மி, சித்த லக்ஷ்மி. இவளுக்கு எட்டுகைகள். சாத்வீக ஆயுதமான சங்கமும், பத்மமும், கதையும், சக்கிரம், வில், அம்பு, மற்ற இரு கைகளில் அன்னபாத்திரமும் கரண்டியும் தரித்திருக்கிறாள். இரு பக்கமும் குதிரைகள்.

மேற்கில் :

.சாம்ராஜ்ய லக்ஷ்மி, மோக்ஷ லக்ஷ்மி. என்று பெயர். சிம்மாசனத்தில் அமர்ந்து கையில் செங்கோல் பிடித்திருக்கிறாள். மேலே வெண்குடை கையில் மாதுளம் பழம், யானைகள் கவரி வீசுகின்றன.

வட மேற்கில் :

.சௌரிய லக்ஷ்மி, வீர்ய லக்ஷ்மி. யுத்தத்திற்கு செல்லும் அவசரத்தில் கத்தி கேடயம் பரசு பாசம் முதலியவைகளைத் தரித்திருக்கிறாள். தாமரை மலர் ஆசனம். மூன்று கண்கள். இரு புறமும் குதிரைகள்.

வடக்கிலுள்ள :

தேவிக்கு .ஸ்ரீலக்ஷ்மி ஜயலக்ஷ்மி. என்று பெயர். மேல் இரு கைகளில் சங்கம், அமிருத கலசம். கீழ் இரு கைகளில் வில்வ தளம், கண்ணாடி. இருபுறமும் சங்கு ஊதுவதும் டமாரம் அடிப்பதும் வெற்றியைக் காட்டுகிறது.

வடகிழக்கில் :

.பிரசன்ன லக்ஷ்மி, சௌபாக்ய லக்ஷ்மி. இரு கைகளில் தாமரை மலர்கள். இரு கைகளில் தங்கக் கலசமும் மாதுளம் பழமும், யானைகள் அபிஷேகம் செய்கின்றன.

கருடர் :

பிரமதேவா புதல்வர் காசிபர், காசிபருக்கும் அவர் மனைவி கத்துருவுக்கும் தோன்றியவர்கள் அருணனும் கருடனும் ஆவர். அருணன் சூரியனுக்குத் தேரோட்டியாகப் பணிபுரிந்து வருகிறார்.

கத்துருவும் காசிபருடைய மற்றொரு மனைவியாகிய விந்தையும் தம்முள் அழகிற் சிறந்தவர் எவர் என்பது பற்றிப் பூசலிட்டுக் கொண்டார்கள். காசிபர் கத்துருவே அழகிற் சிறந்தவள் என்றார். இதற்கேற்ப விந்தை கத்துருவுக்கு அடிமையானாள். இந்திரன் உலகத்திலிருந்து அமுதக் கலசத்தைக் கொணர்ந்தால் ''உன் அடிமைத் தன்மையை நீக்குவேன்'' என்றாள் கத்துரு. விந்தை, தன் புதல்வனான கருடனை அனுப்பி அமுதக் கலசத்தைக் கொணரச் செய்து தன் அடிமைத் தன்மையை நீக்கிக் கொண்டாள். கருடர் திருமாலுக்கு ஊர் தியாகிச் சிவபெருமான் அருளால் சிறந்த வளமையும் பெற்றார். கருடர் இந்திரனை வென்று வந்ததற்காகத் திருமால் அவரைத் தமது வாகனமாக ஏற்றுக் கொண்டார். அதனால் அவருக்குப் பெரிய திருவடி என்னும் பெயரும் உண்டு.

கருடர், கருடாழ்வார் என்றும் கருத்தமன் என்றும் அழைக்கப்பெறுகின்றார். 'விரி நீல சிறகு வியன்மார்பன்' எனத் தமிழ் இலக்கியங்கள் இவரைப் போற்றுகின்றன. திருமாலின் கொடியிலும் கருடர் உருவம் விளங்குகின்றது.

கசேந்திர வரதர் சிற்பங்களில் திருமால் கருடர் மீது இவர்ந்து வருவதாகச் செதுக்கப்பட்டுள்ளன. எல்லாத் திருமால் கோயில்களிலும் கருவறையை நோக்கியவாறு கருடர் கைகூப்பி அஞ்சலி செய்யும் வடிவில் நின்றவண்ணம் சேவை சாதிக்கிறார். ஆனால் மதுராந்தகம் போன்ற இடங்களில் முழங்காலிட்டு அமர்ந்து கைகூப்பியவடிவில் உள்ளார்; திருவரங்கத்தில் பத்மாசனத்தில் வீற்றிருந்து அஞ்சலி செய்வது போல் சுதை வடிவில் எழுந்தருளியுள்ளார். திருவரங்கள் கோயிலுள்ள கருடர் திருவுருவம் தமிழகத்தில் மிகப்பெரிய வடிவம் ஆகும். இஃது அழகுற வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

திருமால் கோயில்களில் சிறப்பான வாகனம் கருட வாகனமாகும். கருட வாகனம் மரம், வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் செய்யப்படுகிறது. கருட வாகனத்தில் திருமால் எழுந்தருளி வருவதைக் கருடசேவை என்பர். சில கோயில்களில் பலமுறை கருடசேவை நடைபெறும். அவை ஆனிக் கருட சேவை, வைகாசிக் கருட சேவை, வைகுண்ட ஏகாதசிக் கருட சேவை என்பனவாகும்.

வைணவ ஆகமங்களில் மூன்றாம் நாள் காலை அல்லது ஐந்தாம் நாள் இரவு கருட வாகனசேவை விழா நடத்த விதிக்கப்பட்டுள்ளது. வைணவர்கள் வீட்டு நிலைப்படியை அலங்கரிக்கும் ஐந்து திருவடிவங்களில் (திருமண், சங்கு, சக்கரம், கருடர், அனுமர்) கருடர் வடிவமும் ஒன்றாகும். கருடனை பெரிய திருவடி என வைணவ சம்பிரதாயத்தில் கூறுவர். மகாலட்சுமி கருடி வாகனத்தில் (கருடி சேவை) சென்னையில் காட்சி கொடுக்கிறார். (இடம் - பைராகி மடம்)

★ ஆதாரம் : ''கோயிற்களஞ்சியம் - கோயில் அறிமுகம்'' - த.ப. - த.ப.க - வெளியீடு, - சி.ஆ.கோ.மு. முத்துசாமி பிள்ளை - 2002 (இ.ஆ.ப)



கருடிவாகனத்தில் தாயார்

சென்னை சௌகார் பேட்டை - ஜெனரல் முத்தையா தெருவில் உள்ள பைராகி மடம் திருவேங்கடமுடையான் ஆலயத்தில் விளங்கும் / லட்சமி/ தாயார் பெண் கருடனில் (கருடி) திருக்காட்சி அருளுதல்.

MAHALAKSHMI - BHUDEVI IN INDIAN ICONOGRAPHY



MAHALAKSHMI

Lakshmi, the goddess of prosperity, occurs in eight forms (ashta-lakshmi), although iconographic variations are few. Mahalakshmi, however, is essentially a tantrik deity with only a distant association with Vishnu, her conventional consort. She is a sakti, having a folk background and tribal involvements. She is represented with a sword in the right hand and a shield in the left; her two other hands carry conch and discus (again weapons of warfare, and emblems of Vishnu) or lotus flowers (emphasizing her Lakshmi aspect).

Conventionally regarded as the spouse of Vishnu, Lakshmi is the most celebrated goddess, being the patron-deity of Wealth and prosperity. Her worship is universal in the country. Undoubtedly of Vedic origin, she was worshipped widely even during the early Buddhist period (Sirima-devata). All the sects in India have adapted this divinity.

Her iconographic representation also is ancient; We find specimens even in the indus valley remains. She has all along been associated with the lotus flower (Kamala, padma); she is seated on it, she holds the flowers in her hands, and she wears the garland of these flowers. She is in fact named after this flower.

Her image is fairly uniformly stylized and has eight variant forms. She is of charming appearance, seated on a completely opened lotus, with four arms, carrying lotus buds in two



of them, the other two being in the abhaya amd varada postures. She is richly bejewelled and elegantly decorated. She is in fact the goddess of beauty and charm.

She is worshipped for domestic felicity and worldly prosperity. Her Mantra is : "Om Srim Klim Mahalakshmi ehyehi sarva-saubhagyam me dehi svaha".

Sri Mahalakshmi :

So far we have dealt with the images of Devi either as directly or indirectly associated with the cult of Siva. There is goddess-worship associated with the cult of Vishnu and Brahma as well. The goddess is here invariably looked upon as the consort of the god; and chief among Vishnu's consort is Lakshmi When the ocean of milk was churned for obtaining the ambrosials for the gods, many other valuable things came out from that ocean. The goddess of wealth Lakshmi, who became afterwards the consort of Vishnu, came out from that ocean then. Lakshmi is conceived to be treasured by her lord on the right side of his broad chest. She is known by several names, such as, Sri, Padma and Kamala. She is seated upon a padma and holds in each of her two hands a lotus. She is also adorned with a lotus garland. On either side is an elephant emptying water on her head from pots presented by attendant celestial maidens, (See Pls. CIX, CX and fig. 2, Pl. CXI). This goddess is of dark complexion according to the Vishnudharmottara. The Amsumadbhedagama describes her differently. According to it the colour of Lakshmi is to be golden yellow. She should wear golden ornaments set with rubies and other precious gems; in her ears there should be jewelled nakra-kundalas. The figure of Lakshmi has to be like that of a maiden who has just attained age and should be of very handsome appearance, with pretty eye-brows, eyes like the petals of a lotus, a full neck and a well developed waist. She should wear a bodice and be adorned with various ornaments on the head. In her right hand she should carry a lotus flower and in the left hand a bilva fruit; she should be draped in beautiful clothing and her back should be broad and attractive. The waist zone should be a broad belt of artistic workmanship and should heighten the effect of her natural beauty.

The Silparatna alone mentions that the colour of Lakshmi is white and further says that in her left hand she holds the lotus and in the right hand the bilva fruit. It adds that she wears a necklace of pearls and is attended by two maidens who are waving the chamara near her. She must be bathed with water taken out of two exactly similar vessels. The figure of Lakshmi should have only two hands when she is by the side of Vishnu. But when she is worshipped in a separate temple she should have four hands, (see fig. 1, Pl. CXI), and be seated upon a lotus of eight petals placed upon a simhasana. In one of the two right hands she should hold a lotus with a long

---

Ref : "Elements of Hindu Iconography" Vol-I, Part-II, 1971



[CX] - Sridevi : Stone : Ellora.



[CIX] - Sridevi : Stone : Mahabalipuram

stalk, and in the other a bilva fruit; the left hands should carry an amritaghata (a pot containing ambrosia) an a sankha respectively. Two elephants standing little her should pour from pots pure wate on her head for bathing her. On her head als there should be a lotus. She should be adorne with keyura and kankana.

In Karavira (the modern kolhapura) there is a temple dedicated exclusively to Mahalakshmi: it is therefore a very famous place of pilgrimage. The Visvakarma-sastra describes separately the figure of Mahalakshmi as found in this temple. She is represented as a small girl wearing various ornaments and looking very handsome. In her lower right hand is a patra (vessel), and in the upper right hand the gada named kaumodaki; in the lower left hand she holds a bilva fruit, and in the upper left hand the khetaka. On her head is a Linga, (See Pl. CXII). She has to be worshipped by those who are desirous of acquiring wealth.

Bhumi or Bhudevi :

It is conceived that Bhumi or Bhudevi, meaning the Goddess Earth, is also a consort of Vishnu. Possibly this association of the Goddess Earth with Vishnu is due to his boar-incarnation. Bhumi or Bhudevi is said to be of a light green colour resembling that of the tender sprouts of the paddy plant. Her head has to be adorned with a karandamakuta; and she should be made to wear ornaments of all kinds and be dressed in yellow clothes. Bhumidevi should be sculptured as a woman with two hands in which she should carry either lotuses or mlotpalas. She may be either sitting or standing upon a padmapitha. This is the description of the goddess as she is found by the side of her lord Vishnu. The Purva-karanagama, however, gives a slightly different descripting of Bhudevi. She is said there to be of dark colour and to wear red clothes as well as a golden yajnopavita on her body. In the Vishnudharmottara. We have it stated that her complexion is white, that she had four arms and carries in her four hands a ratna - patra (a vessel containing vegetables), oshadhi-patra (a vessel containing medicinal herbs) and a lotus respectively. She should be seated upon the back of four diggajas or elephants of the quarters. This description is evidently that of the Goddess Earth when she is set up independently as a svayam-pradhana object of worship and represents fully poetically all the characteristics of the earth, as the producer of plants, gems etc.

In addition to Lakshmi and Bhudevi, there are other goddesses associated with Vishnu in relation to some of his other incarnations. For instance Sita was worshipped as the consort of Rama, and Rukmini, Satyabhama and Radha as the consorts of Krishna. Even Subhadra, the sister of Krishna, is associated with Vishnu wor hip at Jagannath.



Lakshmi : Stone : Madeyur.



Sridevi : Ivory : Trivandram

PLATE - [CXI]



Kollapura Mahalakshmi : Stone : Kothapur.

PLATE - [CXI]

18A

வேதங்களிலும் புராணங்களிலும் காணும் மகாலட்சுமி துதிகளின் தொகுப்பான ஸ்ரீ ஸூக்தம் (மூலம் : தேவநாகரி)

ஸ்ரீஸூக்தம் श्री सूक्तम्

ॐ ॥ हिर॑ण्यवर्णां॒ हरि॑णीं सु॒वर्ण॑रज॒तस्र॑जाम् । च॒न्द्रां
हि॒रण्म॑यीं ल॒क्ष्मीं जात॑वेदो म॒ आव॑ह ॥ तां म॒ आव॑ह॒ जात॑-
वेदो ल॒क्ष्मीमन॑पगा॒मिनी᳚म् । यस्यां॒ हिर॑ण्यं वि॒न्देयं॒ गामश्वं॒
पुरु॑षान॒हम् ॥ १-२ ॥

अ॒श्व॒पूर्वां र॑थम॒ध्यां ह॒स्तिना᳚दप्र॒बोधि॑नीम् । श्रियं॑
दे॒वीमुप॑ह्वये॒ श्रीर्मा᳚ दे॒वीर्जु॑षताम् ॥ कां॒ सो॒स्मि॒तां
हिर॑ण्यप्रा॒कारा॑मा॒र्द्रां ज्वल॑न्तीं तृ॒प्तां त॒र्पय॑न्तीम् । प॒द्मे॒ स्थि॒तां
प॒द्मव॑र्णां॒ तामि॒होप॑ह्वये॒ श्रियम् ॥ ३-४ ॥

च॒न्द्रां प्र॑भा॒सां य॒शसा॒ ज्वलं॑तीं॒ श्रियं॑ लो॒के
दे॒वजु॑ष्टामुदा॒राम् । तां प॒द्मिनी॑मीं॒ शर॑णम॒हं प्रप॑द्येऽल॒क्ष्मीर्मे॑ नश्यतां॒
त्वां॑ वृ॑णे ॥ आ॒दि॒त्यव॑र्णे॒ तप॒सोऽधि॑जा॒तो व॒नस्प॑ति॒स्तव॑ वृ॒क्षोऽथ

★ ஆதாரம் : ''வேத மந்திரங்கள்'' - ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை.

बि॒ल्वः । तस्य॒ फला᳚नि॒ तप॒सा नु॑दन्तु मा॒यान्त॑रा॒याश्च॑ बा॒ह्या अ॑ल॒क्ष्मीः ॥ ५-६ ॥

उपै॑तु॒ मां दे॑वस॒खः की॒र्तिश्च॒ मणि॑ना स॒ह । प्रा॒दु॒र्भू॑तोस्मि॑ राष्ट्रे॒ऽस्मिन् की॒र्तिमृ॑द्धिं द॒दातु॑ मे ॥ क्षुत्पि॑पा॒साम॑लां ज्ये॒ष्ठाम॑ल॒क्ष्मीं ना॑शया॒म्यह॑म् । अभू॑ति॒मस॑मृद्धिं॒ च सर्वां॒ निर्णु॑द मे॒ गृहा᳚त् ॥ ६-७ ॥

ग॒न्ध॒द्वा॒रां दु॑रा॒ध॒र्षां॒ नि॒त्यपु॑ष्टां करी॒षिणी᳚म् । ई॒श्वरीं॑ग् स॒र्वभू॑ता॒नां॒ ता॒मि॒होप॑ह्वये॒ श्रिय॑म् । मन॑सः॒ काम॑मा॒कू᳚तिं वा॒च॒स्स॒त्यम॑शीमहि । प॒शू॒नां रू॒पमन्न॑स्य॒ मयि॒ श्रीः श्र॑यतां॒ यश॑ः ॥ ८-१० ॥

क॒र्दमे॑न प्र॑जाभू॒ता म॒यि॒ संभ॑व क॒र्दम । श्रिय॑ं वा॒सय॑ मे कु॒ले मा॒तर॑ं प॒द्ममा॑लिनीम् ॥ आप॑ः सृ॒जन्तु॑ स्नि॒ग्धा॒नि॒ चि॒क्ली॒त व॑स मे॒ गृ॒हे । नि च॑ दे॒वीं मा॒तर॒ं श्रिय॑ं वा॒सय॑ मे कु॒ले ॥ ११-१२ ॥

आ॒र्द्रां पु॒ष्करि॑णीं पु॒ष्टिं पि॒ङ्ग॒लां प॑द्ममा॒लिनीम् । च॒न्द्रां हि॒रण्म॑यीं ल॒क्ष्मीं जात॑वेदो म॒ आव॑ह ॥ आ॒र्द्रां य॒: करि॑णीं य॒ष्टिं सु॒व॒र्णां हे॑ममा॒लिनीम् । सू॒र्यां हि॒रण्म॑यीं ल॒क्ष्मीं जःत॑वेदो म॒ आव॑ह । तां म॒ आव॑ह॒ जात॑वेदो ल॒क्ष्मीमन॑पगा॒मिनी᳚म् । यस्यां॒ हिर॑ण्यं॒ प्रभू॑तं॒ गावो॑ दा॒स्योऽश्वा᳚न्, वि॒न्देयं॒ पुरु॑षान॒हम् ॥ १३-१५ ॥

यः शुचि॒ः प्रय॑तो भू॒त्वा जु॒हुया᳚दाज्य॒ मन्व॑हम् । श्रिय॑ः प॒ञ्चद॑शर्चं॒ च श्री॒काम॑ः स॒ततं॒ जपे॑त् । आनन्द॒ः कर्द॒मश्च॒चैव चिक्लीत इति विश्रुता: । ऋषयस्ते त्रय: प्रोक्तास्स्वयं श्रीरेव देवता ॥ १६-१७ ॥

प॒द्मा॒न॒ने प॑द्म ऊ॒रू प॒द्माक्षी॑ प॒द्मसं॑भ॒वे । त्वं मां᳚ भ॒जस्व॑ प॒द्मा॒क्षी॒ ये॒न सौ᳚ख्यं ल॒भाम्य॑हम् ॥ अश्व॑दा॒यी गो॑दा॒यी॒ ध॒नदा॑यी म॒हाध॑ने । धनं॑ मे॒ जुष॑तां दे॒वि॒ स॒र्वका॑मांश्च॒ देहि॑ मे ॥ पुत्रपौ॒त्र धन॑ं धा॒न्यं ह॒स्त्यश्वा॑दिग॒वे र॑थम् । प्र॒जा॒नां भ॑वसि मा॒ता आ॒युष्म॑न्तं क॒रोतु॑ माम् ॥ १८-२० ॥



கமலாம்பிகை / லட்சுமி

धन॑म॒ग्निर्ध॑नं॒ वा॒युर्ध॑नं॒ सूर्यो॑ धनं॒ वसु॑ः । धन॒मिन्द्रो॑
बृह॒स्पति॒र्वरु॑णं॒ ध॒नम॒श्नु॑ ते ॥ २१ ॥

चन्द्राभां लक्ष्मीमीशानां सूर्याभां श्रियमीश्वरीम् ।
चन्द्रसूर्याग्निवर्णाभां श्रीमहालक्ष्मीमुपास्महे ॥ २२ ॥

वैन॑तेय॒ सोम॑ं पिब॒ सोम॑ं पिबतु वृत्र॒हा । सोमं॒ धन॑स्य सो॒मिनो॒
मह्यं॒ ददा॑तु सो॒मिन॑ः ॥ न क्रोधो न च॑ मात्स॒र्यं न लोभो॑ नाशु॒भा
म॑तिः । भव॑न्ति॒ कृत॑पुण्या॒नां भ॒क्तानां श्रीसू᳚क्तं ज॒पेत्स॑दा ॥ वर्ष॑न्तु॒
ते वि॑भाव॒रि॒ दि॒वो अ॑भ्रस्य॒ विद्यु॑तः । रोह॑न्तु॒ सर्व॑बी॒जा॒न्य॒व ब्र॑ह्म
द्वि॒षो ज॑हि ॥ २३-२५ ॥

पद्म॑प्रिये पद्मिनि पद्म॒हस्ते पद्मा॑लये पद्मदलाय॑ताक्षि ।
विश्व॑प्रिये॒ विष्णु मनो॑ऽनुकू॒ले त्वत्पा॑दप॒द्मं मयि॒ सन्नि॑धत्स्व ॥ २६ ॥

या सा॑ पद्मास॒नस्था विपुलकटितटी पद्मपत्रा॑यता॒क्षी ।
गम्भीरा व॑र्तना॒भिः स्तनभर नमिता शुभ्र वस्त्रोत्त॑री॒या ॥

लक्ष्मीर्दिव्यै र्गजेन्द्रैर्मणिगण खचितैस्स्नापिता हेमकुम्भैः ।
नित्यं सा पद्महस्ता मम वसंतु गृहे सर्वमाङ्गल्ययुक्ता ॥ २७ ॥

लक्ष्मीं क्षीरसमुद्र राजतनयां श्रीरङ्गधामेश्वरीम् । दासीभूतसमस्त देव वनितां लोकैक दीपांकुराम् । श्रीमन्मन्दकटाक्षलब्ध विभव ब्रह्मेन्द्रगङ्गाधरां । त्वां त्रैलोक्य कुटुम्बिनीं सरसिजां वन्दे मुकुन्दप्रियाम् ॥ २८ ॥

सिद्धलक्ष्मी मोक्षलक्ष्मी जयलक्ष्मीस्सरस्वती । श्रीलक्ष्मीर्वर लक्ष्मीश्च प्रसन्ना मम सर्वदा । वरांकुशौ पाशमभीतिमुद्रां करैर्वहन्तीं कमलासनस्थाम् । बालार्क कोटि प्रतिभां त्रिणेत्रां भजेहमाद्यां जगदीश्वरीं त्वाम् ॥ २९-३० ॥

सर्वमङ्गलमाङ्गल्ये शिवे सर्वार्थ साधिके । शरण्ये त्र्यम्बके देवि नारायणि नमोऽस्तु ते । नारायणि नमोऽस्तु ते । नारायणि नमोऽस्तु ते ॥ ३१ ॥

सरसिज-निलये सरो॑जह॒स्ते धवलतरांशुक गन्धमा᳚ल्य-शो॒भे । भगवति हरिवल्लभे॑ मनो॒ज्ञे त्रिभुवनभूतिकरि प्र॑सीद म॒ह्यम् ॥ ३२ ॥

विष्णु॑प॒त्नीं क्ष॑मां दे॒वीं॒ मा॒धवी᳚ माध॒वप्रि॑याम् । विष्णो᳚ः प्रि॒यस॑खीं दे॒वीं॒ न॒मा॒म्यच्यु॑तव॒ल्लभाम् ॥ ३३ ॥

ॐ म॒हा॒ल॒क्ष्मी च॑ वि॒द्महे॑ विष्णुप॒त्नी च॑ धीमहि । तन्नो॑ लक्ष्मीः प्रचो॒दया᳚त् ॐ ॥ ३४ ॥

श्री॒वर्च॑स्य॒मा॒यु॑ष्यमारो᳚ग्य॒मावि॑धा॒त् पव॑मानं मही॒यते᳚ । ध॒नं धा॒न्यं प॒शुं ब॒हुपु॑त्रला॒भं श॒तसं॑वत्स॒रं दी॒र्घमायु॑ः ॥ ऋणरोगादिदारिद्र्य॑पा॒पक्षु॑द॒पमृत्य॑वः । भय॑शो॒कम॑नस्ता॒पा न॒श्यन्तु॑ मम॒ सर्व॑दा ॥ ३५ ॥

श्रिये॑ जा॒त श्रि॒य आनि॑र्याय॒ श्रि॒यं वयो᳚ ज॒रितृभ्यो᳚ दधातु । श्रि॒यं वसा᳚ना अमृत॒त्वमा᳚य॒न् भज᳚न्ति स॒द्यः स॑वि॒ता वि॒दध्यू॑न् ॥ श्रिय॑ एवैनं तच्छ्रि॒यामा॑दधा॒ति ।

स॒न्त॒त॒मृ॒चा व॑षट्कृ॒त्यं सन्ध॑त्त॒ं संधी॑यते प्र॒जया प॒शुभिः ।
य ए॑वं वे॒द ॥ ३६-३७ ॥

ॐ म॒हा॒दे॒व्यै च॑ वि॒द्महे॑ विष्णुप॒त्नी च॑ धीमहि । तन्नो॑ लक्ष्मीः
प्रचो॒दया᳚त् ॥

ॐ शान्ति॒ः शान्ति॒ः शान्ति॑ः ॥

ASHTA - LAKSHMI


VIJAYA-LAKSHMI
MAHA-LAKSHMI
DHANA-LAKSHMI
VIRA-LAKSHMI
DHANYA-LAKSHMI
SANTANA-LAKSHMI
KAJA-LAKSHMI
ADI-LAKSHMI

அஷ்ட லட்சுமிகள்

ஸ்ரீ ஸூக்தமும் விளக்கமும்

வேதங்களிலும் புராணங்களிலும் காணப்படுகின்ற மகாலட்சுமி துதிகளின் தொகுப்பே ஸ்ரீஸூக்தம். இது தென்னாட்டில் மிகவும் பிரபலமானது. இதனைப் பாராயணம் செய்வது மகாலட்சுமியின் பரிபூரண அருளைப் பெற்றுத் தரும் என்பது நம்பிக்கை.

ஓம் ॥ ஹிர்ண்ய வர்ணாம் ஹரிணீம் ஸுவர்ண

ரஜதஸ்ர்ஜாம் । சந்த்ராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம்

ஜாத்வேதோ ம ஆவ்ஹ ॥ 1 ॥

1. அக்கினி தேவனே, பொன் நிறத்தவளும், பாவங்களைப் போக்குபவளும், பொன் வெள்ளி மாலைகளை அணிந்தவளும், நிலவு போன்றவளும், பொன் மயமானவளுமான மகாலட்சுமியை என்னிடம் எழுந்தருளச் செய்வாய்!

தாம் ம ஆவ்ஹ ஜாத்வேதோ லக்ஷ்மீ

மன்பகாமினீம் । யஸ்யாம் ஹிர்ண்யம் விந்தேயம்

காமச்வம் புர்ஷானஹம் ॥ 2 ॥

2. அக்கினிதேவனே, யாருடைய அருளால் நான் பொன்னையும் பசுக்களையும் குதிரைகளையும் உறவினரையும் பெறுவேனோ, அந்த மகாலட்சுமியை என்னிடம் எழுந்தருளச் செய்வாய், அவள் என்னிடமிருந்து விலகாதிருக்கச் செய்வாய்!

அச்வ பூர்வாம் ர்தமத்யாம் ஹஸ்திநாத

ப்ரபோதினீம் । ச்ரியம் தேவீமுப்ஹ்வயே ஸ்ரீர்மா தேவீர்

ஜுஷதாம் ॥ 3 ॥

3. முன்னால் குதிரைகள் நடுவில் ரதங்கள் புடைசூழ வருபவளும், யானைகளின் ஒலியைத் தன் வரவின் அறிகுறியாகக் கொண்டவளுமான ஸ்ரீதேவியை அழைக்கிறேன். திருமகளே. நீ என்னிடம் மகிழ்ந்து உறைவாய்!

காம் ஸோஸ்மிதாம் ஹிர்ண்ய ப்ராகாராமார்த்ராம்

ஜ்வல்ந்தீம் த்ருப்தாம் தர்ப்பய்ந்தீம் । பத்மே ஸ்திதாம்

பத்ம வ்ர்ணாம் தாமிஹோப்ஹ்வயே ச்ரியம் ॥ 4 ॥

★ ஆதாரம் : ''வேத மந்திரங்கள்'' - சுவாமி ஆசுதோஷானந்தர்- ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-600 004.

4. புன்முறுவல் தவழ்பவளும், பொன்கோட்டையில் உறைபவளும், கருணை நிறைந்தவளும், ஒளி பொருந்தியவளும், மகிழ்ச்சி நிறைந்தவளும், மகிழ்ச்சியைத் தருபவளும், தாமரையில் வீற்றிருப்பவளும், தாமரை நிறத்தவளும் ஆனவள் யாரோ அந்தத் திருமகளை இங்கே எழுந்தருளுமாறு பிரார்த்திக்கிறேன்!

சந்த்ராம் ப்ரபாஸாம் யசஸா ஜ்வலந்தீம் ச்ரியம்

லோகே தேவ ஜுஷ்ட்டாமுதாராம் । தாம் பத்மினீமீம்

சரணமஹம் ப்ரபத்யேऽலக்ஷ்மீர்மே நச்யதாம் த்வாம்

வ்ருணே ॥ 5 ॥

5. சந்திரனைப் போன்றவளும், ஒளிமிக்கவளும், தன் மகிமையால் சுடர்விட்டுப் பிரகாசிப்பவளும், தேவர்களால் வழிபடப் பெறுபவளும், கருணை மிக்கவளும், தாமரையைத் தாங்கியவளும், ஈம் என்ற பீஜமந்திரத்தின் பொருளாகத் திகழ்பவளுமான அந்த மகாலட்சுமியை நான் சரணடைகிறேன். தேவியே உன்னை வேண்டுகிறேன் - எனது வறுமை விலகுமாறு அருள்வாய்!

ஆதித்ய வர்ணே தபஸோऽதிஜாதோ

வனஸ்பதிஸ்தவ் வ்ருக்ஷோऽத பில்வ: । தஸ்ய

ஃபலானி தபஸா நுதந்து மாயாந்தராயாச்ச பாஹ்யா

அலக்ஷ்மீ: ॥ 6 ॥

6. சூரியன் நிறத்தவளே, காட்டிற்குத் தலைவனாகிய வில்லமரம் உன் தவத்தால் உண்டாயிற்று. அதன் பழங்கள் அறியாமையாகிய அகத் தடையையும், அமங்கலமாகிய புறத் தடையையும் உன் தவத்தாலேயே அழிக்கட்டும்!

உபைது மாம் தேவஸக: கீர்த்திச்ச மணினா ஸஹ ।

ப்ராதுர் பூதோऽஸ்மி ராஷ்ட்ரேऽஸ்மின் கீர்த்திம்ருத்திம்

ததாது மே ॥ 7 ॥

7. குபேரனும், புகழின் தேவனும் செல்வங்களுடன் என்னை நாடி வர வேண்டும். உன் அருள் நிறைந்த இந்த நாட்டில் பிறந்திருக்கிறேன். எனக்குப் பெருமையும் செல்வமும் தருவாய்!

க்ஷுத்பிபாஸாமலாம் ஜ்யேஷ்ட்டாமலக்ஷ்மீம்

நாசயாம்யஹம் । அபூதிமஸம்ருத்திம் ச ஸர்வாம்

நிர்ணுத மே க்ருஹாத் ॥ 8 ॥



ஆதிலக்ஷ்மீ

8. பசி தாகத்தினால் மெலிந்தவளும், ஸ்ரீதேவிக்கு முன்னால் பிறந்தவளுமான மூதேவியை நான் விலக்குகிறேன். என் வீட்டிலிருந்து எல்லா ஏழ்மையையும் வறுமையையும் அகற்றி அருள்வாய்!

கந்தத்வாராம் துராதர்ஷாம் நித்ய புஷ்டா
கரீஷிணீம் । ஈச்வரீகும் ஸர்வபூதானாம் தாமி-
ஹோபஹ்வயே ச்ரியம் ॥ 9 ॥

9. நறுமணத்தின் இருப்பிடமானவளும், வெல்லப்பட முடியாதவளும், என்றும் வலிமையைத் தருபவளும், எல்லாம் நிறைந்தவளும், எல்லா உயிர்களின் தலைவியுமான மகாலட்சுமியை இங்கே எழுந்தருளப் பிரார்த்திக்கிறேன்.

மனஸ: காமமாகூதிம் வாசஸ்ஸத்யமசீமஹி ।
பசூனாம் ரூபமன்னஸ்ய மயி ஸ்ரீ: ச்ரயதாம் யச: ॥ 10 ॥

10. திருமகளே, மனத்தில் எழுகின்ற நல்ல ஆசைகளையும், மகிழ்ச்சியையும், வாக்கில் உண்மையையும், பசுக்களின் நிறைவால் மற்றும் உணவின் நிறைவால் ஏற்படுகின்ற இன்பத்தையும் நான் அனுபவிக்க வேண்டும். எனக்கு கீர்த்தி உண்டாகட்டும்!

கர்தமேன ப்ரஜா பூதா மயி ஸம்பவ கர்தம । ச்ரியம்
வாஸய மே குலே மாதரம் பத்மமாலினீம் ॥ 11 ॥

11. கர்தம முனிவரே! உமக்கு மகளாகப் பிறந்த மகாலட்சுமி என்னிடம் வர வேண்டும். தாமரை மாலை அணிந்தவளும், செல்வத்தின் தலைவியும், அன்னையும் ஆகிய அவளை என் குலத்தில் தங்கச் செய்ய வேண்டும்!

ஆப: ஸ்ருஜந்து ஸ்னிக்தானி சிக்லீத வஸ மே
க்ருஹே । நி ச தேவீம் மாதரம் ச்ரியம் வாஸய மே
குலே ॥ 12 ॥

12. திருமகளின் மகனான சிக்லீதரே! தண்ணீர் நல்ல உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யட்டும். என் வீட்டில் நீங்கள் வசிக்க வேண்டும். தேவியும் உமது அன்னையுமான திருமகளை என் குலத்தில் வாழும்படி அருள வேண்டும்!

ஆர்த்ராம் புஷ்கரிணீம் புஷ்டிம் பிங்கலாம்
பத்மமாலினீம் । சந்த்ராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம்
ஜாதவேதோ ம ஆவஹ ॥ 13 ॥

13. அக்கினி தேவனே! கருணை மனத்தவளும், தாமரையில் உறைபவளும், உலகை உணவூட்டி வளர்ப்பவளும், குங்குமநிறத்தினளும், தாமரை மாலை அணிந்தவளும், பொன்மயமானவளுமான மகாலட்சுமியை என்னிடம் எழுந்தருளச் செய்ய வேண்டும்!

ஆர்த்ராம் ய: கரிணீம் யஷ்டிம் ஸுவர்ணாம்
ஹேமமாலினீம் | ஸூர்யாம் ஹிரண்ம்யீம் லக்ஷ்மீம்
ஜாதவேதோ ம ஆவ்ஹ || 14 ||

14. அக்கினி தேவனே! கருணை மனத்தவளும், கம்பீரமானவளும், செங்கோல் ஏந்தியவளும், அழகிய நிறத்தவளும், சூரியனைப் போல் பிரகாசிப்பவளும், பொன்மயமானவளுமான மகாலட்சுமியை என்னிடம் எழுந்தருளச் செய்ய வேண்டும்!

தாம் ம ஆவ்ஹ ஜாதவேதோ லக்ஷ்மீ-
மனபகாமினீம் | யஸ்யாம் ஹிரண்யம் ப்ரபூதம்
காவோ தாஸ்யோऽச்வான், விந்தேயம்

15. அக்கினி தேவனே! யாரால் ஏராளமான பொன்னும், பசுக்களும், பணிப்பெண்களும், குதிரைகளும், ஆட்களும் நான் பெறுவேனோ அந்தத் திருமகள் என்னை விட்டு விலகாதிருக்குமாறு செய்தருள வேண்டும்!

ய: சுசி: ப்ரயதோ பூத்வா ஜுஹுயாதாஜ்ய-
மன்வஹம் | ச்ரிய: பஞ்சதர்ச்சம் ச ஸ்ரீகாம: ஸததம்
ஜபேத் || 16 ||

16. யார் திருமகளின் அருளை வேண்டுகிறானோ, அவன் தூயவனாகவும் புலன்களை அடக்கியவனாகவும் இருந்துகொண்டு தினமும் நெய்யால் ஹோமம் செய்ய வேண்டும். திருமகளின் மேற்கண்ட பதினைந்து மந்திரங்களையும் எப்போதும் ஜபம் செய்யவேண்டும்.

ஆனந்த: கர்தமச்சைவ சிக்லீத இதி விச்ருதா: |
ரிஷயஸ்தே த்ரய: ப்ரோக்தாஸ்ஸ்வயம் ஸ்ரீரேவ
தேவதா || 17 ||

17. பிரபலமானவர்களும் முனிவர்களுமான ஆனந்தர், கர்தமர், சிக்லீதர் ஆகிய மூவரும் இந்த ஸூக்தத்தின் ரிஷிகள்; மகாலட்சுமியே தேவதை.

பத்மானனே பத்ம ஊரு பத்மாக்ஷீ பத்ம ஸம்பவே |

த்வம் மாம் பஜஸ்வ் பத்மாக்ஷீ யேன ஸௌச்யம்

லபாம்யஹம் || 18 ||

18. தாமரை போன்ற முகத்தவளே, தாமரை போன்ற கால்களை உடையவளே, தாமரை போன்ற கண்களை உடையவளே, தாமரையில் தோன்றியவளே, நான் எதனால் வளம் பெறுவேனோ அதை எனக்கு நீ அருள்வாய்!

அச்வதாயீ கோதாயீ தனதாயீ மஹாதனே | தனம் மே

ஜுஷ்தாம் தேவி ஸர்வ காமாம்ச்ச தேஹி மே || 19 ||

19. குதிரைகளைத் தருபவளும், பசுக்களைத் தருபவளும், செல்வத்தைத் தருபவளும், செல்வத்தின் தலைவியுமான மகாலட்சுமியே! எல்லா ஆசைகளும் நிறைவேறுவதால் வரும் இன்பத்தைத் தருகின்ற செல்வத்தை எனக்கு அருள்வாய்!

புத்ர பௌத்ர தனம் தான்யம் ஹஸ்த்யச்வாதி

கவே ரதம் | ப்ரஜானாம் பவஸி மாதா ஆயுஷ்மந்தம்

கரோது மாம் || 20 ||

20. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், செல்வம், தானியம், யானை, குதிரை, முதலியவையும் பசுக்கள், தேர்கள் எல்லாம் தருவாய்! மக்களுக்கு நீ தாயாக இருக்கிறாய். என்னை நீண்ட ஆயுள் உள்ளவனாக ஆக்குவாய்!

தனமக்னிர் தனம் வாயுர்தனம் ஸூர்யோ தனம்

வஸு: | தனமிந்த்ரோ ப்ருஹஸ்பதிர் வருணம்

தனமச்னு தே || 21 ||

21. அக்கினி தேவனும், வாயுதேவனும், சூரிய பகவானும், வசுக்களும், இந்திரனும், பிருகஸ்பதியும், வருணதேவனும் தத்தம் செல்வத்தை உன் அருளாலேயே அனுபவிக்கிறார்கள்.

சந்த்ராபாம் லக்ஷ்மீமீசானாம் ஸூர்யாபாம்

ச்ரியமீச்வரீம் | சந்த்ர ஸூர்யாக்னி வர்ணாபாம்

ஸ்ரீமஹாலக்ஷ்மீமுபாஸ்மஹே || 22 ||



கஜலக்ஷ்மி

22. சந்திரனைப் போல் குளிர்ந்து பிரகாசிப்பவளும், தெய்வங்களின் ஆற்றலாக விளங்குபவளும், சூரியனைப்போல் பிரகாசிப்பவளும், திருமகளும், தலைவியும், சந்திரன் சூரியன் அக்கினி ஆகிய மூவரையும் மகிமையாகக் கொண்டவளுமான ஸ்ரீ மகாலட்சுமியை வழிபடுகிறோம்!

வைனதேய ஸோமம் பிப ஸோமம் பிபது
வ்ருத்ரஹா | ஸோமம் தனஸ்ய ஸோமினோ மஹ்யம்
ததாது ஸோமின: || 23 ||

23. கருடனே! சோம ரசத்தைப் பருகு. விருத்திராசுரனைக் கொன்றவனான இந்திரன் சோம ரசத்தைப் பருகட்டும். சோமயாகம் செய்ய விரும்புகின்ற எனக்கு ஏராளமான செல்வத்தைத் தரட்டும்!

ந க்ரோதோ ந ச மாத்ஸர்யம் ந லோபோ நாசுபா
மதி: | பவந்தி க்ருத புண்யானாம் பக்தானாம் ஸ்ரீஸூக்தம்
ஜபேத்ஸதா || 24 ||

24. புண்ணியம் செய்த பக்தர்களுக்குக் கோபம் வருவதில்லை, பொறாமை வருவதில்லை, கருமித்தனம் வருவதில்லை, கெட்ட புத்தி வருவதில்லை. பக்தி பெறுவதற்காக அவர்கள் ஸ்ரீஸூக்தத்தை எப்போதும் ஜபிக்க வேண்டும்.

வர்ஷந்து தே விபாவரி திவோ அப்ரஸ்ய வித்யுத: |
ரோஹந்து ஸர்வ பீஜான்யவ ப்ரஹ்ம த்விஷோ
ஜஹி || 25 ||

25. உன் கருணையால் மேகங்கள் மின்னலுடன் இரவும் பகலும் மழை பொழியட்டும். எல்லா விதைகளும் நன்றாக முளைத்து வளரட்டும். கடவுளை நிந்திப்பவர்கள் விலகி விடட்டும்!

பத்மப்ரியே பத்மினி பத்மஹஸ்தே பத்மாலயே
பத்மதலாயதாக்ஷி | விச்வப்ரியே விஷ்ணு
மனோऽனுகூலே த்வத்பாத பத்மம் மயி
ஸன்னிதத்ஸ்வ || 26 ||



தைர்யலக்ஷ்மீ

26. தாமரையை விரும்புவளே, தாமரை மகளே, தாமரையைக் கையில் ஏந்தியவளே, தாமரையில் வீற்றிருப்பவளே, தாமரையிதழ் போன்ற அகன்ற கண்களை உடையவளே, உலகிற்குப் பிரியமானவளே, விஷ்ணுவின் மனத்திற்கு உகந்தவளே உனது திருவடித் தாமரைகளை என்மீது வைத்தருள்வாய்!

யா ஸா பத்மாஸனஸ்தா விபுல கடிதடீ பத்ம

பத்ராயதாக்ஷி । கம்பீராவர்த்தநாபி: ஸ்தனபர நமிதா

சுப்ரவஸ்த்ரோத்தரீயா ॥ லக்ஷ்மீர் திவ்யைர் கஜேந்த்ரைர்

மணிகண கசிதை: ஸ்னாபிதா ஹேம கும்பை: । நித்யம்

ஸா பத்மஹஸ்தா மம வஸது க்ருஹே ஸர்வ மாங்கல்ய

யுக்தா ॥ 27 ॥

27. யார் தாமரையில் வீற்றிருப்பவளோ, பருத்த பின் புறங்களை உடையவளோ, தாமரையிதழ் போன்ற கண்களை உடையவளோ, கம்பீரமான தொப்புள் உடையவளோர், மார்பகங்களின் பாரதத்தால் தலைகுனிந்தவளோ, வெண்ணிறமான ஆடையும் மேலாடையும் தரித்தவளோ, ரத்தினங்கள் பதித்த பொற்கலச நீரைக் கொண்டு தேவலோகத்தின் சிறந்த யானைகளால் அபிஷேகம் செய்யப்படுபவளோ, தாமரையைக் கையில் தாங்கியவளோ, எல்லா மங்கலமும் நிறைந்தவளோ அந்த மகாலட்சுமி என் வீட்டில் என்றென்றம் வசிக்க வேண்டும்!

லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்ர ராஜதனயாம் ஸ்ரீரங்க

தாமேச்வரீம் । தாஸீபூத ஸமஸ்த தேவ வனிதாம்

லோகைக தீபாங்குராம் । ஸ்ரீமன்மந்த கடாக்ஷ

லப்த விபவ ப்ரஹ்மேந்த்ர கங்காதராம் । த்வாம்

த்ரைலோக்ய குடும்பினீம் ஸரஸிஜாம் வந்தே

முகுந்தப்ரியாம் ॥ 28 ॥



சந்தானலக்ஷ்மி

28. அதிர்ஷ்டத்திற்கு இருப்பிடமானவளும், பாற்கடலரசனின் மகளும், ஸ்ரீரங்கத்தில்உறைகின்ற தேவியும், தேவலோகப் பெண்கள் அனைவரையும் பணிப்பெண்களாகக் கொண்டவளும், உலகிற்கு ஒரே தீபமாக இருப்பவளும், யாருடைய மென்மையான கடைக்கண் பார்வையைப் பெற்றதால் பிரம்மனும் இந்திரனும் சிவபெருமானும் பெருமை பெற்றார்களோ அவளும், மூன்று உலகங்களையும் குடும்பமாகக் கொண்டவளும், தாமரைக் குளத்தில் தோன்றியவளும், மகாவிஷ்ணுவுக்குப் பிரியமானவளுமான உன்னை வணங்குகிறேன்.

ஸித்த லக்ஷ்மீர் மோக்ஷ லக்ஷ்மீர் ஜயலக்ஷ்மீஸ்

ஸரஸ்வதீ | ஸ்ரீலக்ஷ்மீர் வரலக்ஷ்மீச்ச ப்ரஸன்னா மம

ஸர்வதா || 29 ||

29. நினைத்ததை நிறைவேற்றவல்ல ஸித்த லட்சுமியாகவும், முக்தியைத் தரவல்ல மோட்ச லட்சுமியாகவும், வெற்றியைத் தரவல்ல ஜய லட்சுமியாகவும், தாமரைக் குளத்தில் தோன்றியவளாகவும், செல்வத்தைத் தரவல்ல திருமகளாகவும், வரங்களைத் தரவல்ல வரலட்சுமியாகவும் இருக்கின்ற நீ எனக்கு எப்போதும் அருள் நிறைந்தவளாக இருப்பாய்.

வராங்குசௌ பாசமபீதி முத்ராம் கரைர்

வஹந்தீம் கமலாஸனஸ்தாம் | பாலார்க்க கோடி

ப்ரதிபாம் த்ரிணேத்ராம் பஜேஹமாத்யாம் ஜகதீச்வரீம்

த்வாம் || 30 ||

30. வரம் மற்றும் அபயமுத்திரைகளைக் கைகளில் தாங்கியவளும், பாசம் அங்குசம் ஆகிய ஆயுதங்களைக் கைகளில் தாங்கியவளும், தாமரையில் வீற்றிருப்பவளும், கோடி உதய சூரியப் பிரகாசம் பொருந்தியவளும், மூன்று கண்களை உடையவளும், ஆதிசக்தியும், உலகின் இறைவியுமான அவளை நான் துதிக்கிறேன்.

ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்த

ஸாதிகே | சரண்யே த்ர்யம்பகே தேவி நாராயணி

நமோ஽ஸ்து தே | நாராயணி நமோ஽ஸ்து தே | நாராயணி

நமோ஽ஸ்து தே || 31 ||



வித்யாலக்ஷ்மி

31. மங்கலம் அனைத்திற்கும் மங்கலமானவளே, மங்கலத்தைத் தருபவளே, எல்லா நன்மைகளையும் தருபவளே, சரணடைவதற்கு உரியவளே, மூன்று கண்களை உடையவளே, தேவீ, நாராயணீ உனக்கு நமஸ்காரம்.

ஸரஸிஜ நிலயே ஸரோஜ ஹஸ்தே
தவளதராம்சுக கந்தமால்ய சோபே | பகவதி
ஹரிவல்லபே மனோஜ்ஞே த்ரிபுவனபூதிகரி ப்ரஸீத
மஹ்யம் || 32 ||

32. தாமரையை இருப்பிடமாகக் கொண்டவளே, தாமரையைக் கையில் தாங்கியவளே, தூய வெள்ளாடையும் நறுமண மாலையும் அணிந்து அழகாய் விளங்குபவளே, பகவதீ, திருமாலின் துணைவியே, விருப்பங்களை அறிந்து நிறைவேற்றுபவளே, மூவுலகையும் வளமளித்துக் காப்பவளே எனக்கு அருள்புரிவாய்.

விஷ்ணுபத்னீம் க்ஷமாம் தேவீம் மாதவீம்
மாதவப்ரியாம் | விஷ்ணோ: ப்ரிய ஸகீம் தேவீம்
நமாம்யச்யுத வல்லபாம் || 33 ||

33. திருமாலின் தேவியும், பூமாதேவியாக இருப்பவளும், துளசிச்செடியாக இருப்பவளும், மாதவனுக்குப் பிரியமானவளும், அவனது மனத்திற்கு உகந்த துணைவியும், அவனுடன் இணைந்தவளுமான தேவியை வணங்குகிறேன்.

ஓம் || மஹாலக்ஷ்மீ ச வித்மஹே விஷ்ணுபத்னீ ச
தீமஹி | தன்னோ லக்ஷ்மீ: ப்ரசோதயாத் | ஓம் || 34 ||

34. மஹாலட்சுமியை அறிந்துகொள்வோம். திருமாலின் துணைவியான அவளை அதற்காக தியானிப்போம். அந்த லட்சுமி தேவி நம்மைத் தூண்டுவாளாக!

ஸ்ரீவர்ச்சஸ்யமாயுஷ்ய மாரோக்யமாவிதாத்
பவமானம் மஹீயதே | தனம் தான்யம் பசும் பஹு-
புத்ரலாபம் சதஸம்வத்ஸரம் தீர்கமாயு: | ரிண ரோகாதி
தாரித்ர்ய பாபக்ஷு-தபம்ருத்யவ: | பய சோக
மனஸ்தாபா நச்யந்து மம ஸர்வதா || 35 ||



தனலக்ஷ்மி

35. மகாலட்சுமியே, ஆற்றல், வளமான வாழ்க்கை, நல்ல உடல்நிலை இவற்றை எனக்குத் தந்தபடி எப்போதும் காற்று வீசட்டும், செல்வம், உணவுப்பொருட்கள், மிருகங்கள், பிள்ளைச் செல்வங்கள், நூறாண்டுகள் நீண்ட ஆயுள் எல்லாம் எனக்குக் கிடைக்கட்டும். கடன், நோய், வறுமை, பசி, அகால மரணம், பயம், கவலை, மனத்தின் துன்பங்கள் எல்லாம் ஒழியட்டும்!

ச்ரியே ஜாத ச்ரிய ஆனிர்யாய
ச்ரியம் வயோ ஜரித்ருப்யோ ததாது ।
ச்ரியம் வஸானா அம்ருதத்வமாயன்
பஜந்தி ஸத்ய: ஸவிதா விதத்யூன் ॥ 36 ॥

36. திருமகள் சேர்பவர்களுக்கு செல்வம் சேர்கிறது; ஐசுவரியமும் நீண்ட ஆயுளும் கிடைக்கிறது. அவர்கள் செல்வத்தில் திளைத்தபடி மரணமற்ற நிலையை அடைகிறார்கள். விரைவாக புகழையும் வெற்றியையும் அடைகிறார்கள்.

ச்ரிய் ஏவைனம் தச்ச்ரியாமாததாதி ।
ஸந்ததம்ருசா வஷட்க்ருத்யம்
ஸந்தத்தம் ஸந்தீயதே ப்ரஜயா பசுபி: ।
ய ஏவம் வேத ॥ 37 ॥

37. எல்லா நன்மையும் திருமகளேதான்-இவ்வாறு அறிபவன் திருமகளை அடைகிறான். மந்திரங்களுடன் யாகம் எப்போதும் செய்ய வேண்டும். அப்படி செய்பவனுக்கு மக்கட் செல்வமும் கால்நடைச் செல்வமும் கிடைக்கிறது. இவ்வாறு அறிய வேண்டும்.

ஓம் மஹா தேவ்யை ச வித்மஹே
விஷ்ணுபத்னீ ச தீமஹி ।
தன்னோ லக்ஷ்மீ: ப்ரசோதயாத் ॥
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

மகா தேவியான திருமகளை ஏற்றுக் கொள்வோம். திருமாலின் துணைவியான அவளை தியானிப்போம். அந்த லட்சுமிதேவி நம்மை நெறிப்படுத்த தூண்டுவாளாக.



தான்யலக்ஷ்மி



விஜயலக்ஷ்மீ

தேவி ஸூக்தத்தில் அஷ்டலட்சுமிகள்

1. தனலக்ஷ்மி :

யாதேவீ ஸர்வ பூதேஷு புஷ்டிரூபணே ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம.

எந்த தேவியானவள் ஸகல பிராணிகளிடமும் புஷ்டி (நிறைவு) உருவத்தில் உள்ளனளோ அந்த தனலக்ஷ்மியை நான் வணங்குகிறேன்.

2. வித்யா லக்ஷ்மி :

யாதேவீ ஸர்வ பூதேஷு புத்திரூபணே ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம.

எந்த தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் புத்தி உருவில் உள்ளனளோ அந்த வித்யா லக்ஷ்மியை நான் வணங்குகிறேன்.

3. தான்ய லக்ஷ்மி :

யாதேவீ ஸர்வ பூதேஷு க்ஷுதாரூபணே ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம.

எந்த தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் பசி (பசியை நீக்கும் தான்ய) உருவில் உள்ளனவோ அந்த தான்ய லக்ஷ்மியை நான் வணங்குகிறேன்.

4. வீர லக்ஷ்மி :

யாதேவீ ஸர்வ பூதேஷு த்ருதிரூபணே ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம.

எந்த தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் தைரிய உருவில் உள்ளனளோ அந்த வீர லக்ஷ்மியை நான் வணங்குகிறேன்.

5. ஸௌபாக்ய லக்ஷ்மி :

யாதேவீ ஸர்வ பூதேஷு துஷ்டிரூபணே ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம.

எந்த தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மகிழ்ச்சி உருவில் உள்ளனளோ, அந்த ஸௌபாக்ய லக்ஷ்மியை நான் வணங்குகிறேன்.

6. ஸந்தான லக்ஷ்மி :

யாதேவீ ஸர்வ பூதேஷு மாத்ருபணே ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம.

எந்த தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் தாய் உருவில் உள்ளனளோ அந்த ஸந்தான லக்ஷ்மியை நான் வணங்குகிறேன்.

7. காருண்ய லக்ஷ்மி :

யாதேவீ ஸர்வ பூதேஷு தயாருபணே ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம.

எந்த தேவியானவள் எல்லா உயிர்களிலும் தயையுருவில் உள்ளனளோ, அந்த காருண்ய லக்ஷ்மியை நான் வணங்குகிறேன்.

8. மகா லக்ஷ்மி :

யாதேவீ ஸர்வ பூதேஷு லக்ஷ்மீருபணே ஸம்ஸ்த்திதா
நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம.

எந்த தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் லக்ஷ்மியுருவில் உள்ளனளோ அந்த மஹாலக்ஷ்மியை நான் வணங்குகிறேன்.



MAHA LAKSHMI'S BOUNTY

மகாலட்சுமியின் தயாள குணம்



Lakshmi, goddess of affluence and abundance; calendear print

Lakshmi's Bounty

Lakshmi - goddess of affluence and abundance - represents the beautiful and bountiful aspect of Nature. As Bhoodevi, the earth-goddess, she nurtures life; as Shreedevi, the goddess of fortune, she bestows power, pleasure and prosperity on those who deserve her grace. To realise her, one must respect the laws of life and appreciate the wonders of existence.

This is her sacred narrative:

Prajapati Raises the Earth

In the beginning, there was water everywhere. There was nothing to ear, nowhere to live, Prajapati, the divine patriarch, father of the gods and demons, saw the plight of his children and invoked Devi.

The goddess whispered into his ear, "The earth lies trapped under the water. Raise it up."

Prajapati took the form of a mighty boar called Emusha, plunged into the sea and found the earth-goddess Bhoodevi on the ocean floor. Placing her on his snout, he gently raised her to the surface.

Prajapati then turned into Akupara, a giant turtle, and offered Bhoodevi a seat on his back.

★ Ref : "DEVI"- The mother goddess An Introduction - Devdutt Pattanaik.

Shreedevi Favours Bali

Bhoodevi as the goddess of grain; bronze idol from Andhra Pradesh

Seated on the celestial turtle, the earth-goddess nurtured life in her bountiful arms. She offered food and shelter to all.

The devas admired her beauty; the asuras craved her wealth. They fought many a battle over her. Finally, under the leadership of Bali, the asuras emerged triumphant.

Impressed by Bali's strength, the goddess came to him as **Shreedevi** and crowned him king of the earth. She offered him a throne, a footstool and held a parasol over his head.

Shreedevi's sacred white elephants turned into clouds and sprinkled life-bestowing rain upon the earth, watering fields and pastures, so that crops grew abundantly and cows gave plenty of milk. Everyone was happy with Bali as their king.

Vishnu's Three Steps

Lakshmi in her warrior manifestation riding an owl; North Indian sculpture

Power made Bali arrogant. He declared, "The earth belongs to me; I can give anyone anything he desires."

These words annoyed the earth-goddess; she belonged to nobody and certainly was not a commodity to be given away as a gift.

Indra, leader of the devas, meanwhile, bereft of Shreedevi's grace had been reduced to poverty. He approached Bali and begged for some land. To mock him, Bali pointed to Vishnu, the shortest of the gods, and said, "I shall give you as much land as this little one can cover in three strides."

As soon as Bali said this, Vishnu began to grow in size; he turned into a giant who strode across and claimed all of Bali's kingdom on two steps. With his third step, Vishnu shoved Bali into the nether region.

Vishnu thus wrested control of the earth for the gods.

The Fickle One

"The gods may lack strength, but they are intelligent. I shall go to them." So saying Shreedevi turned away from Bali and went to the gods. She blessed the gods with ruling majesty, material prosperity, physical health, bodily beauty and divine fortune.

Angry and bitter in defeat, the demons rasped, "Shreedevi is Chanchala, the fickle one. Once she favoured Bali; now she favours Indra. She is faithful to none."

"That is not true." said the goddess, " I am eternally faithful to he who does not abuse my gifts."

Vishnu's Detachment

Indra, the king of Gods; word carving from Kerala

Vishnu, who had conquered the earth for the gods, let Indra become king.

"Don't you want to be lord of the universe and enjoy the splendours of the cosmos?" asked Shreedevi.

"I desire nothing. By defeating the demon Bali, I have done my duty. I seek no reward for it."

These words of Vishnu pleased Shreedevi.

Indra Angers Bhoodevi and Shreedevi

The goddess said, "He who takes good care of the earth-goddess Bhoodevi, wins the affection of Shreedevi, goddess of fortune, and becomes king of the cosmos."

But Indra did not heed her words. Soon after being crowned king, the leader of the devas retired to the pleasure gardens. He drank wine, enjoyed song and dance and neglected his royal duties.

The earth, left ungoverned, was plundered. Bhoodevi's lamentations fell on deaf ears. This made Shreedevi very angry. She turned away from Indra.

Shreedevi Disappears

"Wealth and power corrupted the demon-king. Now, pleasure and comfort has weakened the god-king. Neither holds on to dharma for long. Neither deserves my grace." So saying, the goddess dissolved herself in the ocean of milk.

Instantly a gloom descended upon the world; it no longer reverberated with song and dance. Weapons lost their power, gems their sparkle, men their vigour. Cows did not give milk, fields became barren, trees bore neither flower nor fruit. The cosmos became a desolate place, bereft of joy and laughter.



Churning of the ocean ; contemporary illustration

Churning of the Ocean

The goddess's disappearance caused panic in three worlds.

"We must bring her back," said the gods.

"But how?" wondered the demons.

"By churning the ocean of milk," said Vishnu.

with Mandara, king of mountains, as the spindle and Akupara, king of turtles, as the base, the devas and the asuras created the cosmic churn. Using Vasuki, the king of ser pents, as the churning rope, they began churning the ocean of milk.



Rise of Lakshmi from the ocean of milk; Tanjore painting

Lakshmi Rises

The churn twisted and turned, the ocean frothed and fumed, waves roared and spewed foam in every direction. Aeons passed. Nothing emerged. But the gods and demons, determined to bring the goddess back, continued to churn.

Pleased by their efforts, the goddess finally emerged as Lakshmi, the desirable one, in all her splendour.

Seated on a dew-drenched lotus, dressed in red silk, bedecked in gold, she was the very embodiment of affluence, abundance and auspiciousness.

As she rose, rasa, Life giving sap, began flowing in every direction. The earth palpated with life. Joy filled the air.

The gods saluted her, the demons sang songs to her glory.

Sacred elephants who hold up the sky came from the eight quarters of the universe, raised their trunks and consecrated her with life-sustaining water.

Gifts of Prosperity

With Lakshmi came a cow called Kamadhenu with enough milk to feed the world for all eternity, a wishfulfilling gem called Chintamani and a tree called Kalpataru that bore every flower and fruit desirable. In her hand she held the basket of bounty; the Akshaya Patra overflowing with grain and gold.

Lakshmi revealed to Kubera, lord of the forest spirits called yakshas the locations of minerals, gems and secret treasures. She made nagas, the serpents, the keepers of earth's fertility.

0A



Kamadhenu: cow of prosperity;

From her being emerged her seven daughters, the sacred river-goddesses **Ganga, Yamuna, Sindhu, Narmada, Godavari, Krishna and Kaveri** who nourished the earth and supported life.

Gifts of Pleasure

